Koviloor Digital Library



2076
R65
SRS

அருட்கவி அருள்வாக்கு

திருப்புகழடிமை சண்முகதாசன்

Koviloor Digital Library

Koviloor Digital Library

3-V

ஓம் முருகா

புரட்சிப் பொன்மொழிகள்

(விரிவாக்கம்)

2076

வழங்கியவர்

அருள்வாக்கு, திருப்புகழடிமை

சண்முகதாச அடிகளார்

திருப்புகழரசு பதிப்பகம்

5, மாடல் ஹவுஸ் சாலை,

சி. ஐ. டி. நகர், நந்தனம்,

சென்னை—600035.

1986 — 23/00

Koviloor Digital Library

நூல் வரலாறு

1.	தலைப்பு	—	புரட்சிப் பொன்மொழிகள்
2.	ஆசிரியர்	—	திருப்புகழடிமை சண்முகதாச அடிகளார்
3.	மொழி	—	தமிழ்
4.	பதிப்பு	—	மூன்றாவது
5.	வெளியீடு	—	நவம்பர் 1986
6.	உரிமை	—	ஆசிரியர்க்கே
7.	தாள்	—	11.6 கி. கி. வெள்ளைத்தாள்
8.	நூலின் அளவு	—	18 செ.மீ×12.5செ.மீ.
9.	எழுத்து	—	10 புள்ளிகள்
10.	பக்கங்கள்	—	248 + VI
11.	அச்சகம்	—	ஜெயஸ்ரீ பிரிண்டர்ஸ் 238, பாரதி சாலை, சென்னை-5.
12.	கட்டடம்	—	கார்டு போர்டு
13.	முகப்போவியம்	—	டாக்டர் உபால்டு
14.	அட்டைப்படம் அச்சிட்டோர்	}	அலங்கார் அச்சகம், சென்னை-24
15.	விலை	—	23 ரூபாய்
16.	பதிப்பகத்தார்	—	திருப்புகழரசு பதிப்பகம், 5, மாடல் ஹவுஸ் சாலை, சி. ஐ. டி. நகர், நந்தனம், சென்னை-600035.

ஆசிரியரின் அனுமதியின்றி மொழி பெயர்த்தலோ அல்லது மற்ற எதற்கும் பயன்படுத்த கூடாது. மீறினால் சட்டப்படி நடவடிக்கை எடுக்க நேரிடும்.

அருள்மிகு பாம்பன் சுவாமிகளின் சண்முகக்கவசமும், குமாரஸ்தவமும் இத்துடன் இணைக்கப் பட்டுள்ளது.

Koviloor Digital Library

4-6.

இந்நூலுக்கு அணிந்துரை வழங்கியோர்

1. அருள்மொழி அரசு;
   திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்

2. ஜகத்குரு சங்கராச்சாரியார் சுவாமிகள்

3. மோகன்ராய் (கண்காணிப்பாளர் சென்ரல் எக்சைஸ்)

4. மாண்புமிகு நீதிபதி
   திரு. எஸ். சாமிக்கண்ணு அவர்கள்

5. உயர்நீதி மன்றம்
   மாண்புமிகு திரு. க. இராசாராம் அவர்கள்

6. பேராசிரியர் டாக்டர். இராமன் எம். ஏ; பிஎச். டி
   தமிழ்த்துறைத் தலைவர், விவேகானந்தா கல்லூரி
   சென்னை-28

7. டாக்டர் சி. பாலசுப்பிரமணியம் எம்.ஏ.எம்,லிப்;பிஎம்டி
   தமிழ் மொழித்துறைத் தலைவர், சென்னைப் பல்கலைக் கழகம்

8. சிலம்பொலி சு. செல்லப்பன் எம். ஏ; பிடி; பி, எல்
   இயக்குநர், தமிழ் வளர்ச்சித்துறை

9. எம். கந்தசாமி பி. ஏ., பி. எல். உள்துறை இயக்குநர்
   உயர்நீதிமன்றம் சென்னை

10. கவிஞர் டாக்டர் இ. முத்துராமலிங்கம் எம். ஏ; பி. எல்; டி. லிட்
    விளைபொருள் விற்பனை வாரியத்தலைவர்

11. கவிக்கொண்டல் டாக்டர் மா. செங்குட்டுவன் டி.லிட்.

12. பாவலர் எழிற்கோவன்

Koviloor Digital Library

13. டாக்டர் இரா. சேது எம். ஏ; பிஎச். டி; டிப்
(தாளிகை) தமிழ்ப் பேராசிரியர் விவேகானந்தர்
கல்லூரி, சென்னை

14. வே. சௌந்தரராஜன்:
தணிக்கையாளர், இந்தியன் வங்கி தலைமை
அலுவலகம், சென்னை-1

15. 'பெருங்கவிக்கோ' டாக்டர் வா. மு. சேதுராமன்
எம். ஏ.; டி. லிட்

16. கவிஞர் பொ, இல. பொன்னுசாமி எம். ஏ. ஐ. ஏ. எஸ்.
(Public service commission)

17. புதுவை நல்லிசைப் பெரும்புலவர்
தவத்திரு. அறிந்தார்க்கினியனார்

18. இலக்கியச் சித்தர் தங்கவயல் லோகிதாசன்

19. வாகீச கலாநிதி கி. வா. ஜகந்நாதன் அவர்கள்,

20. கவிஞர் அருணகிரிதாசன்

Koviloor Digital Library

4-6

பொருளடக்கம்

வ. எண்	பொன் மொழிகள்		பொ. மொ. எ.	ப. எ
1.	கடவுள்	...	44	60
2.	தவம்	...	13	72
3.	இறையன்பு	...	31	75
4.	அருள்வாக்குதிருப்புகழடிமை புலம்பல்	...	101	81
5.	குரு	...	15	99
6.	விதி	...	16	102
7.	நீதி	...	49	107
8.	அறிவு	...	32	116
9.	ஒழுக்கம்	...	14	122
10.	வாய்மை	...	9	125
11.	முக்தர், சித்தர், பக்தர், யோகி ஞானிகள்	...	14	127
12.	பொய்ம்ம, தீமை, மாயைகள்	...	39	130
13.	மருள் (ஆணவம்)	...	7	137
14.	அறியாமை (குற்றங்கள்)	...	33	139
15.	ஆசைகள்	...	16	147
16.	போலிகள்	...	56	150
17.	மதங்கள்	...		169
18.	மற்றைய மதங்கள்	...		172
19.	சாதி	...	7	185
20.	வறுமை		13	187
21.	நாடு		29	189
22.	நூல்கள், ஏடுகள்,	...	9	196
23.	கோயில்கள்	...	9	198
24.	பொது	...	76	202
25.	குலமகள்	...	12	219
26.	பெண்களில் சிலர்	...	44	221
27.	காமம்	...	43	229
28.	அருட்கவியின் இசைப்பாட்டு	...		238

Koviloor Digital Library

வாழ்த்துப்பா

எங்கள் இறைவன் திருப்புகழ் இன்னிசைக்க
உங்கள் வினையனைத்தும் ஒய்ந்தகலும் - சங்கத்
தமிழரசே சந்தப் புலவரேரே ! எந்தை
உமிநீக்கி எம்குருவே வாழ்த்து !

Koviloor Digital Library

புரட்சிப் பொன் மொழிகள்
மூன்றாம் பதிப்புரை

(விரிவாக்கம்)

என்றன் அன்புக்குரிய மெய்யன்பர்களுக்கு வணக்கம். இந்தப் புரட்சிப் பொன்மொழி நூலை முதல் பதிப்பாக 1981-ஆம் ஆண்டும், இரண்டாம் பதிப்பாக 1984-ஆம் ஆண்டும், மூன்றாம் பதிப்பாக 1986-ஆம் ஆண்டும் வெளியிடுகிறோம். 1981-ஆம் ஆண்டு வெளியிடும் பொழுது, இந் நூலைத் தமிழகத்தில் உள்ள சிலர் ஏற்பார்களா......என்று உள்ளம் பதைபதைத்திருந்தேன். ஆனால், அடியேன் நினைத்ததற்கு மாறாகத் தமிழ்ப் பெருங்குடி மக்கள் வரவேற்றுவாழ்த்தி இன்னும் பல இலட்சக்கணக்கான நூல்களைவெளியிட வேண்டும் என்று சொன்னார்கள். இதனால் மேலும் மேலும் பல பதிப்புகளை வெளியிட எண்ணியுள்ளோம். ஆகையால், இந்தப் புரட்சிப் பொன் மொழிகளை மீண்டும் அடியேன் வழங்குகிறேன். இந்தப் பொன்மொழிகளில் முன்பு இருந்ததை விடக் கூடுதல் பொன்மொழி மக்களுக்குப் பயன்படும் அளவுக்கு எழுதி உள்ளேன்.

இவை ஒரு மதத்திற்கோ, சாதிக்கோ, இனத்திற்கோ கூறப்பட்டுள்ள பொன் மொழிகள் அல்ல. உலகில் உள்ள எல்லா மனித இனத்திற்கும் கூறப்பட்ட ஒரு பொது நெறி நூலாகும். சில உண்மைகளைச் சொல்லும் பொழுது சிலரிடம் இருந்த சில சலசலப்பும், கசப்புணர்ச்சியும் வரத் தான் செய்யும். ஆனாலும், அதை அடியேன் பொருட்படுத்தாமல் இந்நூலை வெளியிடுகிறேன். இந்நூல் வெளிவருவதற்கு மிகவும் உதவியாக இருந்ததிரு,திருமதிஇராஜாராம்

Koviloor Digital Library

மோகன்ராய் S P. திரு,திருமதி வி. பத்மனாபன் (Auditor). அவர்களும் அவர்கள் குடும்பத்தாரும் என்றென்றும் இன்புற்று வாழ எந்தை கந்தவேல் திருவடியை இறைஞ்சி வாழ்த்துகிறேன்.

உயிர் கொல்லாமை என்னும் கோட்பாட்டை மிகவும் பெரிதாகக் கடைப்பிடிக்கும் சமணர்கள் நம் திருநாவுக்கர சரை ஏழு நாள் சுண்ணாம்புக் காளவாயில் வைத்துத் தீ வைத்துக் கொளுத்தினார்கள். கல்லில் கட்டிக் கடலில் போட்டார்கள். யானையை வைத்து மிதிக்க விட்டார்கள்.

அப்படியிருந்தும் நம் திருநாவுக்கரசர் இதையெல்லாம் வருத்தப்படாமல் தாம் இன்புற்று இருந்ததாகத் தம் நூலில் பாடுகிறார். சில மதங்கள் சொல்லளவில்தான் நீதிகளைத் தம்பட்டம் அடித்துக்கொள்கின்றனவே தவிர, அவ்வழியில், செயல்படுவதாக என்னறிவுக்குத் தெரியவில்லை. ஆனால், சைவ நன்னெறிப் பெருமக்கள் சொல்லும் செயலும் ஒன்றா கவே இருக்கும். குறிப்பாகத் திருவாலங்காட்டில் ஒரு நீலிக்குக் கொடுத்த வாக்குக்காக நாற்பது பேர்கள் தீக் குளித்தார்கள். இப்படிப் பல நிகழ்ச்சிகள் உண்டு. அதைச் சொல்ல ஏடு காணாது.

இதனாலன்றோ ? புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள்,

> ''புதியதோர் உலகு செய்வோம்—கெட்ட
> போரிடும் உலகினை வேரோடு சாய்ப்போம்''

என்று பாடியுள்ளார்.

நம் நாட்டில் சில ஜனங்கள் சுயநலத்துக்காகவும், ஒரு சில கட்சிகள் வாழ்வதற்காகவும் தேர்தல் நேரத்தில் பல கோடிக் கணக்கில் செலவழிக்கின்றனர். அதை வைத்துச் சில மருத்துவமனைகளும், சாலையில்லாத ஊருக்குச் சாலை யையும், பள்ளிக்கூடம் இல்லாத ஊர்களுக்குப் பள்ளிக்

Koviloor Digital Library

கூடங்களும், கட்டலாம். ஏழைகளுக்கு உணவு, உடை கொடுக்கலாம். சில கட்சிகள் ஒரு கட்சியிலிருந்து பிரிந்து தனிக்கட்சி ஆரம்பிக்கும் பொழுது முதல் கட்சியில் இருந்த சொத்துகள் தனக்குத்தான் சொந்தம் என்று இரண்டு கட்சிகளும் சண்டை போட்டுக்கொண்டு வழக்கு மன்றம் வரை செல்கின்றன. இவையெல்லாம் தேவைதானா? அந்தச் சொத்துகளை ஏழை எளியவர்களுக்குக் கொடுத்து உதவினால் என்ன? ஒரு கட்சியில் ஒருவர் இருக்கும் பொழுது இன்னொரு கட்சியில் உள்ளவரைப் பெரிய கொள்ளைக்காரன் என்றும், கொலைக்காரன் என்றும், குற்றவாளி என்றும் சொல்லுகிறார்கள். ஆனால், அதே நபர் அதே கட்சியில் சேரும் பொழுது அவர் புனிதமானவர் பரிசுத்தமானவர் என்று சொல்லுகிறார். இது ஏனோ? ஏன் என்றால் பாமர மக்கள் இதைப் பார்த்து நம்பி ஏமாளியாக இருப்பதால்தான்.

ஒரு நாள் அடியேன் ''தினகரன்'' பத்திரிக்கையைப் பார்க்கலானேன். 1984-ஆம் ஆண்டு மூன்றாம் மாதம் பத்திரிக்கையில் எவ்வித விசாரணையுமின்றி ஒரு நபர் நமது நாட்டில் (இந்தியாவில்) 35 வருட காலமாகச் சிறைச்சாலையில் இருக்கலானார். கடைசியாக ஒரு நீதிபதி அவருக்கு நஷ்டஈடாக சில லட்சம் ரூபாய் தரவேண்டும் என்று தீர்ப்பு கூறலானார். எத்தனை கோடி கொடுத்தால் என்ன? எவ்விதக் குற்றமும் செய்யாமல் எத்தனை வருட காலம் சிறைச்சாலையில் இருந்தார்! அதுவும் இந்த இந்திய மண்ணில். ஐய்யோ! இதை நினைப்பதற்கே எவ்விதம் இருக்கும் ! இவ்விதம் சிறை இருப்பதற்குக் காரணமானவர்கள் அனைவரையும் இது மாதிரி வைத்தால்தான் நீதி தேவனின் மனது அடங்கும்.

இந்தப் புரட்சிப் பொன்மொழி என்ற நூலில் இவ்விதம் உண்மைகளையெல்லாம் சொல்கிறோமே, எவ்விதம் விற்பனையாகும் என்றும், எங்கே எதிர்ப்புகள் வருமோ என்

Koviloor Digital Library

றும் சில மெய்யன்பர்கள் வந்து சொன்னார்கள். அவர்களிடம் நான் ''ஏன் புரட்சிக் கவிஞர்' மகாகவி பாரதியார், தந்தை பெரியார், அகநானூறு, புறநானூறு மற்றும் பல நூல்கள் சொல்லாத நீதியையா? நான் சொல்லிவிட்டேன். அவர்கள் நூல்களையே ஏற்றுக் கொள்ளும் தமிழ் அன்பர்கள் அடியேன் நூல்களை நிச்சயம் ஏற்றுக்கொள்வார்கள்'' என்று சொன்னேன். தமிழக அரசு இந்நூலை ஏற்றுப் பல மாவட்ட நூல் நிலையங்களுக்கு வாங்குமாறு ஆணையிட்டு உள்ளது. தமிழ்ப் பெருங்குடி மக்களும் இந் நூலை ஏற்றுக் கொண்டிருப்பதாலும் வாங்கலாயினர். முதல் பதிப்பு, இரண்டாம் பதிப்பைவிட இந்த மூன்றாம் பதிப்பில் பல அதிகப் புரட்சிப் பொன்மொழிகளையும், பல அரிய உயர்ந்த கருத்துகளையும் வெளியிட்டிருக்கிறோம். இந்த அரிய கருத்துக்கள் இருட்டறையில் உள்ளவர்களுக்கு வெளிச்சம் உண்டாக்கும் என்பதில் ஐயமில்லை.

இதற்கு அணிந்துரை வழங்கியுள்ள மாண்புமிகு சான்றோர்களுக்கும், ஆன்றோர்களுக்கும் அருமை மிகுந்த புலவர்களுக்கும், பொது மக்களுக்கும் என்னுடைய சிரந் தாழ்த்தி வணக்கத்தையும், நன்றியையும் தெரியப்படுத்திக் கொள்கிறேன். என்னிடம் பல மதத்தவர்களும், பல இனத்தவர்களும் அருள்வாக்குப் பெற்றுச் செவ்வேள் திருவருள்பெற்று வருவதால் அந்தஅன்பர்களுக்குஎன்றென்றும் கடமைப்பட்டுள்ளேன். இந்த உலகம் என்றைக்கு அனைத்தும் ஒரே மதம், ஒருவனே, தேவன். ஒரே இனம் என்று அறிந்து திருமூலர், திருவாக்கை உணர்ந்து அவ்வழியில் இயங்குகின்றதோ, சண்டை சச்சரவு இல்லாமல் இருந்து ஒரு தாய் மக்களாக ஒற்றுமையாக வாழ்கின்றோமோ! அன்றுதான் இந்த உலகம் மெய்யறிவை உணர்ந்ததாகும். மற்ற எல்லாத் துறையிலும் உயர்ந்திருந்தாலும், மனிதப் பண்பாட்டுத் துறையிலும் உயர்ந்ததாகக் கருதப்படும். நான் சொல்லித் தெரியவேண்டாம். உங்கள் அனைவருக்கும் தெரிந்த உண்மை. உலக ஒருமைப்பாட்டுக்காக இறை

Koviloor Digital Library

வனை வேண்டி அன்பர்களுக்கு நன்றி சொல்லி இந்தச் சிற்றுரையை முடித்துக் கொள்கிறேன். இந்தப் பதிப்பில் தவறு இருப்பின் என்னைச் சார்ந்ததாகும். உயர்வு இருப்பின் என் குருநாதரைச் சார்ந்ததாகும். குறைகண்டு சொன்னால் குறையிருப்பின் அடுத்த பதிப்பில் திருத்திக் கொள்ள உதவும். இந்நூல் ''Reflection on man and Society'' ''Progressive ideals for Human Progress'' என்று ஆங்கில மொழியில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இதைச் சென்னைப் பல்கலைக் கழகப் பேராசிரியர் திரு பொன். கோதண்டராமன் அவர்கள் மேற்பார்வையில் திரு. ராமசாமி அவர்களால் மொழிபெயர்த்தமைக்கு என்னுடைய அன்பும், நன்றியும் என்றென்றும் உரித்தாகும். திரு. பொன். கோதண்டராமன் அறிமுகம் ஆவதற்கு மூலக்காரணமாய் இருந்தவர் என் ஆருயிர் நண்பர் திரு. நடராஜன் (P. A. to V. C.) ஆவார். அவரும், அவர் குடும்பத்தினரும் என்றென்றும் இன்புற்று வாழ செவ்வேள் திருவடியை வணங்கி வாழ்த்துகின்றேன். இந்த நூல் திருக்குறள், பகவத்கீதை போன்று எல்லா மதத்தினருக்கும், எல்லா மக்களுக்கும், எல்லா நாட்டவர்க்கும் உரியதாகும். இந்தத் திருப்புகழாசுப் பதிப்பகத்தினை நிறுவியுள்ளதன் நோக்கம் பல நீதிநூல்களை வெளியிடுவதேயாகும். வணிக நோக்கமன்று. வாழ்க மன்னுயிர்! வளர்க நன்னெறி!

என் ஆருயிர் அன்பர்களுக்கு
வணக்கம். நன்றி!
அன்பன்
திருப்புகழடிமை சண்முகதாசன்

Koviloor Digital Library

ஓம் முருகா !

என்னுரை

எந்தை குருநாதர் திருவடிகளுக்கு வணக்கம்.

எனதன்பிற்குரிய மெய்யன்பர்களே! உங்கள் அனைவருக்கும் என் உளங்கனிந்த வணக்கங்கள்! 'புரட்சிப் பொன்மொழிகள்' என்னும் புதுமையான விரிவாக்கம் செய்யப்பட்ட இந்நூலை உங்கள் முன் படைத்துள்ளேன்.

எனது கடன் அருள் வாக்கு வழங்குதல். அருள் வாக்கு என்பது அருள் வேலவனால் அருளப்பட்ட கருணைச் சித்தாகிய ''வரப் பிரசாதம்'' அந்தச் சித்து என்னிடம் பிரகாசித்திருப்பதால், நான் கூறும் அருள்வாக்கும் பலருக்குப் பயனளித்து வருகின்றது. அதனால் என்னிடம் பல மதத்தவர்களும், பல வகைக் குணத்தவர்களும் தங்கள் குடும்பத் தொல்லைகளையும் துயரங்களையும் முறையிட்டு வந்த வண்ணம் உள்ளனர். என்றன் கந்தவேள் திருவருள் திருநீற்றுப் பிரசாதத்தால் அவர்களின் குறைகள் நீக்கப்படுகின்றன. அதனால், அவர்கள் என்மீது மாறாத அன்பு கொண்டுள்ளனர்.

நான் எல்லோருக்கும் பொதுவுடைமையான சொந்தக்காரன். நான் யார் மனமும் புண்படும்படி நடந்து கொண்டதும் இல்லை; இனி நடக்கப் போவதும் இல்லை. எனக்கே குற்றம் இழைக்கினும் அன்பைத் தவிர வேறேதும் என்னிடம் எதிர் பார்க்க முடியாது. அதாவது,

'இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்'

Koviloor Digital Library

என்ற திருக்குறளுக்கு ஒப்ப வாழ்ந்து கொண்டிருக்கிறேன். அப்படி இருக்க நான் ஏன் இந்தப் புரட்சிப் பொன் மொழி களை எழுத வேண்டும் என்ற கேள்விக்குறி உங்களில் பலர் உள்ளத்தில் எழும். எந்த மதத்தையும் புண்படுத்த வேண் டும் அல்லது குறை கூற வேண்டும் என்பதன்று, என் நோக்கம். மக்கள் அறநெறி தவறிச் செல்லும்பொழுது அவர்களுக்கு நம் பெரியோர்கள் சொன்ன அற நெறிகளை அறிவுறுத்தி அவர்களை நல்வழியில் நடத்திச் செல்வது என் போன்ற சித்தர்களின் கடமையாகும். இப்புத்தகத்தில் நான் ஒன்றும் புதுமையான கருத்துக்களைச் சொல்லிவிட வில்லை. எனக்கு முன் வாழ்ந்த—வாழ்ந்து கொண்டிருக் கின்ற பக்தர்களும், சித்தர்களும், முக்தர்களும், யோகிகளும் ஞானிகளும் கூறாத ஒன்றை, உயர் சீர்திருத்த மெய்ப் பொருளை அடியேன் ஒன்றும் புதிதாகக் கூறவில்லை. ஆனால், இக்காலத்திற்கேற்ப சில உவமைகளை (மேற் கோள்கள்) இங்குக் கூறியுள்ளேன். இப்பொழுது மக்களிடம் உள்ள குறைகளை நீக்குவதா? அல்லது நம் புராணங்களில் இருக்கும் போலித்தனமான ஆபாசக் கதைகளை நீக்குவதா என்று ஆராயும் நிலைக்கு இன்று நாம் வந்து விட்டோம். எதற்கு நேரத்தைச் செலவிடுவது என்பதே நமக்குப் புரியாத புதிராக உள்ளது.

அன்பர்களே! சற்று நன்றாகச் சிந்தித்துப் பாருங்கள். கடவுளுக்குப் பல மனைவிகளும், காதலிகளும் இருப்ப தாகப் பல பொய்ப்புராணக் கதைகளைப் புனைந்து, மக்களை ஏமாற்றுவது எவ்வளவு பெரிய கீழ்த்தரமான செயலாகும்! ஆபாசமான பிரச்சாரங்களால், கடவுளைச் சாதாரண மனிதனை விடக் கீழ்த்தரமான நிலைக்குக் கொண்டு வந்து விடுகிறார்கள் சில ஏமாற்றுக்காரர்கள். இப்படிப்பட்ட மனிதர்கள் இந்நாட்டிற்கும் இவ்வுலகிற்கும் தேவைதானா? புரட்டுப் புராணக்காரர்களால் உயர்ந்த மெய்ப் பொருளாகிய இறைவனை எப்படி அடைய முடியும்? நான் வழிபடும் எந்தை முருகக் கடவுளுக்கும்

Koviloor Digital Library

இரண்டு மனைவிமார்கள் உண்டு என்று கதை ஒன்று கட்டி இருக்கிறார்கள். ஒரு சாதாரண மனிதனே காமத்தைப் பற்றிச் சிந்திக்கும்போது அச்செயல் மிகக் கொடியது என உணருகிறான். அப்படி இருக்க, எல்லாம் வல்ல இறைவனுக் குப் பல மனைவிகள், குழந்தை குட்டிகள் என்று பாவித்துக் கதைகள் எழுதுவது எவ்வளவு பெரிய முட்டாள்தனம்? இக் கருத்தை ஆறாம் திருமுறையில் வள்ளலார் பெருமான் அவர்கள், மிகத் தெளிவாகவும் விளக்கமாகவும் சொல்லி விட்டுப் போயிருக்கிறார்கள். கடவுளுக்கு மனைவிமார் களையும், காதலிகளையும் கற்பிப்பவர்கள் கடவுள் இல்லை யென்று சொல்லும் நாத்திகர்களைக் காட்டிலும் மிகக் கொடியவர்கள் என்று கூறியுள்ளார்.

இந்து மதத்தில், 'கடவுளே எங்களைக் காப்பாற்று' என்று வேண்டுவதற்குப் பதில், சாதி வெறி பிடித்த மடத் தனமான ஆபாசப் புராணக் கதைகளை எழுதியவர்களால் இன்று கடவுளை நாம் காப்பாற்ற வேண்டிய அவல நிலைக்கு வந்து விட்டோம்! இறைவன் எந்த உருவத்திலும் அடங்காதவன் இதைக் 'கந்தரநுபூதி'யில் எந்தை குருநாதர் சொல்லுகிறார்:

உருவாய், அருவாய், உளதாய், இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் உருவாய் அருள்வாய் குகனே.

(கந்தரநுபூதி 54)

வாசித்துக் காணொணாதது
பூசித்துக் கூடொணாதது
வாய்விட்டுப் பேசொணாதது நெஞ்சினாலே
மாசர்க்குத் தோணொணாதது

Koviloor Digital Library

நேசர்க்குப் பேறொணாதது
மாயைக்குச் சூழொணாதது விந்துநாத
ஓசைக்குத் தூரமானது
மாகத்துக் கீற தானது
லோகத்துக் காதியானது கண்டுநாயேன்
யோகத்தைச் சேரு மாறுமெய்ஞ்
ஞானத்தைப் போதி யாயினி
யூனத்தைப் போடி டாதும யங்கலாமோ
....
....
நாசிக்குட் ப்ராண வாயுவை
ரேசித்தெட் டாத யோகிகள்
நாடிற்றுக் காணொணாதென நின்ற நாதா.

(திருப்புகழ் பாடல் 341)

இப்படி மெய்ப் பொருளாகிய கடவுளை நமது திருப்புக ழரசு அருணகிரிநாதரைத் தவிர வேறு எந்த இயக்குநரால் தெளிவாக மக்களுக்குப் படம் பிடித்துக் காட்ட முடியும்?

உலகிலுள்ள எல்லா மொழிகளுக்கும், மதங்களுக்கும் தலையான மதம், மொழி எதுவென்றால் அது நம் தமிழ்ச் சைவ நன்னெறியே என்பது வரலாற்று வல்லுநர்களே ஒப்புக் கொண்ட செய்தியாகும். இப்படி உயர்ந்த பண்பா டுடைய தமிழ்ச் சைவ நன்னெறி பல கலப்படங்களால் சீர் குலைந்து, நிலைகுலைந்து தடுமாறிச் செல்லும் பொழுது நம் உள்ளம் வெந்து, நொந்து வேதனையடைகிறது. இவைகளை எல்லாம் எனது அடுத்த நூலாகிய ''இறை வனும் அடியார்களும்'' என்ற நூலில் மிக விளக்கிச் சொல்லுவேன்.

அன்பர்களே! எனது பொன் மொழிகளை ஆர அமர நன்கு சிந்தித்துப் படிப்பீர்களாயின் உங்களுக்குச் சில உண்மைகள் புலப்படும். நாட்டில் சில மதங்களும் மதத்

Koviloor Digital Library

தலைவர்களும் தாமுங் கெட்டதல்லாமல் இந்த உலகையும் கெடுத்துள்ளார்கள். சில மருந்துகள் கசப்பாகத்தான் இருக்கும். ஆனால், அவை நோயைக் குணப்படுத்தும். முதலில் எனது பொன் மொழிகள் அம்பாகத் தோன்றும். நன்கு சிந்தித்து உணர உணர அது பேரன்பாக மாறிவிடும். ''ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' இது திருமூலர் வாக்கு. ஒன்றே குலம் என்பது மனிதகுலம். ஒருவனே தேவன் என்பது 'அறிதற்கரிய கடவுள்' இதே கொள்கையைத்தான் அருணகிரிநாதர், வள்ளலார், பாம்பன் சுவாமிகள் போன்ற பலர் பின்பற்றினார்கள். அம் மகான்கள் சென்ற வழியே சென்று உயர்வான மெய் வழியை அடையாமல் மயங்கித் திரிந்து மாயை வழியில் செல்வது மாண்புடையோர்க்கு இயல்போ? ஒருவனுக்கு உயிர் ஒன்றுதான்—கற்புள்ள குலமகளுக்கு ஒருவன்தான் கணவனாக முடியும். அதைப் போல் உலகிற்கு ஒருவன்தான் கடவுளாக முடியும். என்று பாம்பன் சுவாமிகள் மிகத் தெளிவாக எடுத்துக் கூறியும், மக்கள் இன்னும் சிறு தெய்வ வழிபாடுகளிலும், சீரழிந்த மத வெறிகளிலும் தம்மைச் சீரழித்துக் கொள்வது எவ்வாறு அறிவுடைமையாகும்?

என் அருமை நண்பர்களே! ''இதுவரையில் பல வழிகளில் சென்று காலத்தை வீணாக்கி விட்டேன். இனிமேலாவது மெய்யான வழியில் சென்று மெய்ப்பொருளை உணர்ந்து மெய்யான மெய்யோடு நான் கலந்ததைப் போல் நீங்களும் கலக்க வேண்டும்'' என்று வள்ளல் பெருமான் ஆறாம் திருமுறையில் கேட்டுக் கொண்டுள்ளதைப் போல, நானும் உங்களை மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன். இந்நூலில் குறைகள் இருக்குமாயின் அது என்னைச் சேர்ந்ததாகும். பெருமைகள் இருப்பின் அது எந்தை குருநாதர் அருணகிரிநாதரைச் சேர்ந்ததாகும்.

வாழ்த்துரை, மதிப்புரை, அணிந்துரை வழங்கிய சான்றோர்களுக்கும், ஆன்றோர்களுக்கும் அன்பர்களுக்கும்

Koviloor Digital Library

எனது அன்பு கலந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நூலைத் தமிழ் உலகம் ஏற்று மேன்மேலும் என்னை இவ்வழியில், செயல்பட வழிகாட்டித் துணை நிற்கும் என முழுக்க முழுக்க நம்புகிறேன். இந்நூல் வெளி வர மிக உதவியாக இருந்த அன்பர்களுக்கும், நல்ல முறையில் அச்சிட்டுத் தந்த அச்சகத்தாருக்கும் எனது அன்பு கலந்த நன்றியை மிகப் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அணிந்துரையிலும் வாழ்த்துரையிலும் அன்பர்கள் என்னைப் பலவாறு புகழ்ந்துள்ளார்கள். அப்புகழுக்கு நான் உரியவன் அல்லேன். 'சாக்கடைக்கு ஒரு போக்கிடம் இல்லை' என்று கூறுவார்கள். குப்பைத் தொட்டியில் கிடக்கும் குப்பைக்கும் கீழ்த்தரமான என்னை இத்தமிழ் உலகம் ஏற்று இருக்குமாயின், அப்பெரும் பண்பாட்டை நான் என்னென்று சொல்லி மகிழ்வது! அன்பர்கள் அனைவருக்கும் எனது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலை எந்தை குருநாதர் "சித்திரவித்தார அதிமதுர அருள் சந்தக் கவி அருள்மிகு திருப்புகழரசு அருணகிரிநாதர்" அவர்களின் திருவடிகளுக்குக் காணிக்கையாக்குகிறேன். இத்துடன் என்றன் ஆருயிர் குருநாதர் பாம்பன் சுவாமிகளால் அருளப்பட்ட சண்முக கவசத்தைச் சேர்த்துள்ளேன். பூவோடு சேர்ந்த நாரும் மணப்பது போல், அந்த உயர்வான தெய்வீக நூலால் எளியேனின் நூல் சிறப்படைய எண்ணியுள்ளேன். இது, மாணிக்கக் கல்லின் பக்கத்தில் கூழாங்கல்லை வைப்பதற்கு ஒப்பாகும். இருப்பினும் பேரவாவினால் அதை நான் சேர்த்துள்ளேன். கவசம் படிப்பதால் கந்தன் அருள் தானே வெளிப்படும் என்பதாலும் சேர்த்துள்ளேன். அன்புடன் ஏற்றுக் கொள்வீர்கள் என்று நினைக்கிறேன்.

Koviloor Digital Library

இந்நூலை வணிக நோக்குடன் வெளியிடவில்லை. நமது சைவ சமய நெறிகளை வளர்க்க வேண்டும் என்ற நோக்கத்துடனே இதை உங்கள் முன் வைக்கிறேன். மேன் மேலும் இம் மாதிரியான நூல்கள் வெளிவரப் பொது மக்கள் அனைவரும் ஆதரவு தருமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இங்ஙனம், அன்பன்

திருப்புகழடிமை சண்முகதாசன்
5, மாடல் அவுஸ் சாலை
C. I. T. நகர், நந்தனம், சென்னை-35

Koviloor Digital Library

அருள்வாக்கு, திருப்புகழ் அடிமை, தவத்திரு, சண்முகதாசன் அவர்களின் பெருவாழ்வு

தவத்திரு சண்முகதாசர் அவர்கள், தமிழகத்தின் தவப்பயனாய், 1949-ம் ஆண்டு சூலைத் திங்கள், பதினேழாம் நாள், (விரோதி வருடம் ஆடி 1ந் தேதி) கலிதீர்க்கும் ஞானக்குழந்தையாய் இப்பூவுலகில் உதித்தார். தண்டமிழ்க்கடவுள், குமரப்பெருமானுக்குத் தன் வாழ்வையே அர்ப்பணிக்கப் போவதை, தோன்றியவுடனே சொல்லுவது போன்று, கடலலை தவழும், திருச்செந்திலம் பதியில், அவர் பிறப்பு அதிசயமாய் அமைந்தது.

உலகப் பள்ளியில் பயில இருக்கும் அவரது வேட்கை உள்ளூர்ப்பள்ளிகளில் அடங்கிவிடுமா என்ன? சிறு வயது முதலாகவே, இறைப்பித்தில் நாட்டம் கொண்டு வீட்டை விட்டு வெளியேறி, எங்கெல்லாம் ஞானஅமுதம் கிடைக்கிறதோ, அங்கெல்லாம் தன் அருட்பசி தீர்த்துக் கொள்ள முற்பட்டார். பத்து வயது முதல் பதினேழு வயது வரை, அவர் தரிசித்த தலங்கள் பல, சித்தர்கள் நிறைந்த திருவண்ணாமலையும், வள்ளிமலையும் அவற்றுள், குறிப்பிடத் தக்கன. துறவியர் பலரும் தாமே முன்வந்து இந்த அருட் செல்வருக்கு ஆன்மீக நெறி உணர்த்தி, பல சித்தாடல்கள் செய்யும் அளவிற்குப் பக்குவம் ஊட்டினர். பதினோராம் வயதிலேயே கவிபாடும் ஆற்றல், இந்த சண்முகதாசருக்கு இயல்பாகவே இருந்தது.

Koviloor Digital Library

செந்திற்குமரனைத் தன் ஞானத்தந்தையாகவும், அருணகிரிநாதரைத் தன் அருட்குருவாகவும் வரித்துக் கொண்ட இவர், வடலூர் இராமலிங்க வள்ளலாரிடமும், பாம்பன் சுவாமிகளிடமும் அளவில்லாப் பற்றுக்கொண்டு, தன்னைத் 'திருப்புகழ் அடிமை' யாக்கிக் கொண்டார். தெய்வத் திருமறைகளையும், இலக்கண, இலக்கியங்களை யும் கற்றுத் தேர்ந்த பெரும் சிந்தனையாளராகவும் விளங்கினார்.

பெற்றோரின் பிடிவாதத்தினாலும், வாழ்ந்துகாட்ட வேண்டிய கடப்பாட்டினாலும், தட்டமுடியாது, தன் பதினேழாம் வயதில், இவர் இல்லறம் ஏற்கவேண்டியதா யிற்று. திருமிகு ஜெயலட்சுமி என்னும் உத்தமி, இவரது தவத்திற்கு உறுதுணையாய் வாழ்வாங்கு வாழ்ந்தும்கூட, இவரோ காவிகட்டி, கந்தனையே நினைந்தவண்ணம், மீண்டும் வீட்டைவிட்டு வெளியேறி, முருகன் தலங்களிலும் மலைகளிலும் தனி வாழ்வு நடத்திய காலங்கள் உள. இடையிடையே இவரைத் தேடிக் கண்டுபிடித்து, இல்லத் தில் சேர்த்துப் பாதுகாத்து, இவர் தம் துணைவியார் இந்த அருளாளரைத் தன் அன்பால் ஆட்கொண்டதுண்டு. சென்னையில், திரு அருட்பிரகாச வள்ளலார் வாழ்ந்த இல்லத்தில் சிலகாலம் இவர்களும் வசித்துள்ளார்கள். இதுகாலை, மக்கட் செல்வங்களோடு, அடிகளாருக்கும் பக்கபலமாய், அம்மையாரும் இணைந்து அறப்பணி நடத்தி வருவது வள்ளுவர் கண்ட இல்லறத்திற்குப் பெருமை சேர்ப்பதாகும். இவர்தம் மக்களும் செவ் வேள் முருகனுக்கு அடிமைகளாய், சித்தரின், பாதயாத் திரை, வேல்குத்துவிழா போன்ற அரிய பக்தி வழிப்பணி களில் பங்கு கொண்டு தொண்டு செய்கின்றனர். திருமகன் அருணகிரி தாசன் தன் தந்தைக்குப் பணி செய்து கிடப்பதே தன்கடன் எனும் கோட்பாட்டினால், இத்தவச் செல்வர் மனம்கோணாது நாளும், பொழுதும் செய்து வருகிறார்.

Koviloor Digital Library

அடிகளார் அகத்துறவி. ஆதலின் போலிப் புறத்தோற்றங்களையும், பொய்மையையும் கடுமையாகச் சாடுகிறார். அருட்பா அரசுபோல, ஆன்மநேய ஒருமைப்பாடே, இவர் சித்தாந்தமாய் இலங்குகிறது. அருவமாய் நிறைந்த அகண்டத்தைத் தனிமுருகனாய் உருவகித்து, தாசனாய் நின்று இவர் செய்யும் வழிபாடு புதுமையானது. கடவுளுக்கு மாசு கற்பிக்கும் புராணக் கூற்றுகளை, இவர், வன்மையாகக் கண்டிக்கிறார்.

சித்தர்நெறி இவர் காட்டும் பக்திநெறி. சாதி, மதம் ஏழை, பணக்காரர் போன்ற ஏற்றத்தாழ்வுகளைத் தூக்கி எறிந்துவிட்டு வந்தோர்க்கெல்லாம், சிந்தை உருகி அருள் மொழி செப்புவது வியப்பினும் வியப்பாகும். தங்கள் குறை யெல்லாம் தீர்க்கின்ற குருநாதராக மக்கள் இவர்தம் அருள் வாக்கு கேட்டு. மனம் நெகிழ்ந்தனர். வரும் பொருளை யெல்லாம் அறப்பணிகளுக்குப் பகுத்துவிட்டு இவரும், குடும்பமும் எளிய வாழ்வு நடத்துவது, இக்காலத்தில் ஒரு விந்தையாகும். அரசாள்வோரிலிருந்து, அன்றாடங்காய்ச்சிகள் வரை, நாளும் இவரைத் தரிசித்து, நன்மையடைவோர் எண்ணிலர்.

தன்னடக்கமும், சாந்தத் திருஉருவும், மென்மைநடையும், உண்மை உரையும், தவக்கனலும், முக்காலம் அறியும் பேராற்றலும், சித்து விளையாடலும் பொலியும் இத்தண்ணளியாளரின் பார்வை படுவதே பாக்கியமாகும்.

இவரிடம் இத்தனை சக்தி இருக்கின்றதா என எளிதில் அறிந்து கொள்ள இயலாதவாறு, தன்னை மறைத்து வாழும் தகுதிசான்ற இவரா இவ்வளவு புரட்சிக் கருத்துக் களைத் துணிச்சலாகச் சொல்லுகிறார் என வியப்பேற்படுமாறு படைக்கப்பெற்றுள்ளது. இவர் தந்த அமுதமொழி களாம் ‘புரட்சிப் பொன் மொழிகள்’ தொகுப்புநூல் தமிழகத்தில் ஒரு புதிய சமுதாயம் அமையவேண்டும் என்ற தணியாத தாகத்தோடு கடவுள் முதலாக, வாழ்வியல் முழு

Koviloor Digital Library

வதையும் அலசி ஆய்ந்து உருவாக்கப்பட்ட ஓர் 'உரைநடைத் திருக்குறள்' என இந்நூலைப் பற்றிக் கருத்துரைப்பது மிகையன்று. இவர் தொடாத துறையில்லை, சுட்டிக் காட்டாத விமர்சனம் இல்லை. ஒன்றைச் சொல்லும் விதமும், இவருக்கே உரியதாய்த் தனித்தன்மை பெற்று விளங்குகின்றது. கத்திபோல் தைக்கும் எத்தனை கருத்துக் கருவூலங்கள்! எத்தனை எத்தனை அரிய, புதிய, ஆழ்ந்த, அநுபவ உவமைகள்! இதைவிட நெஞ்சில் பதிவாய் இனி ஒரு சொல்லால் சொல்ல இயலாது எனும் ஆற்றல் படைத்த புலமைப் பெட்டகத்தை அருளித் தந்த நம் அடிகளாருக்கு உலகம் என்றும் நன்றி செலுத்தும்.

''சில மருந்துகள் கசப்பாகத்தான் இருக்கும். ஆனால், அவை நோயைக் குணப்படுத்தும். முதலில் எனது பொன் மொழிகள் அம்பாகத் தோன்றும் நன்கு சிந்தித்து உணர உணர அது பேரன்பாக மாறிவிடும்'' என்று அடிகளாரே கூறுகின்றார். நூலைப்படித்தபின் நம் அநுபவமும் அதுவே யாகும்.

உலகம் முழுதும் பயணம் மேற்கொள்ள இருக்கும், தமிழ் நாட்டுத் தாமிரபரணிநதிப் பண்பாடு தந்த இந்த அன்பரசு, அருள்நிதி, தவத்திரு சண்முகதாசர், நமக்கெல்லாம், உய்யும் பெருநெறி காட்ட பல்லாண்டுகள் இனிது வாழ வேண்டும் என்பதே நம் பிரார்த்தனை!

அடிகளாரிடம் கிருத்துவ மெய்யன்பர்களும், இஸ்லாமி யர்களும், சமண (மஹாவீர்) பௌத்தர்கள் மற்றும் பல மதத்தைச் சார்ந்தவர்கள் வந்து அவருடைய அருள்திரு வாக்காலும், அடிகளாரின் சித்தின் மகிமையாலும், இறை யருளாலும், உடற்பிணியும், மனவினையும் நீங்கிச் செல் கின்றனர். அடிகளாரிடத்தில் இந்தியாவில் எல்லா இடங் களில் இருந்தும் அயல் நாடுகளில் இருந்தும் அடிகளாரைத் தரிசித்து, பயன்பெறுகிறார்கள்; இவரிடத்தில் கடவுள்

Koviloor Digital Library

இல்லை என்று கூறிவருபவர்கள் திரும்பிச் செல்லும் பொழுது இறையுணர்வு உண்டு என்று நம்புவது திண்ணம். இவர் புத்தகத்தைப் படிக்கும் பொழுது முள் தரிப்பது போன்று தான் தெரியும். அதாவது 'பலாப் பழத்தைப் பார்த்தால் முள்ளாகத் தெரியும், உள்ளே சுவை அமுது மிகுந்த பழமாக இருக்கும்.'' பாகற்காய் கசப்பு என்று சாப்பிடாமல் இருந்தால் நஷ்டம் பாகற்காய்க்கு அன்று, உனக்குத்தான். புத்தகத்தில் உள்ள கருத்தை ஆய்ந்து மனத்தில் பதியவைத்தால் உண்மையில் அது பலாச்சுவைக்கு மேல் அமுதமாய் இருக்கும். இது திண்ணம், இவர் தம் வாழ்க்கையில் நிகழ்த்திய அற்புதமும் தொண்டும் விரிக்கின் அது பல நாட்கள் ஆகும். விரைவில் அவர் வாழ்க்கையில் நிகழ்த்திய அற்புதமும் அவருக்கும் முருகனுக்கும் உள்ள சொந்தபந்தமும் ஒரு காவிய நூலாகவரும்.

அடிகளார் தம் அருள்வாக்கினால் வரும் பணத்தைப் பல திருப்பணிகளுக்குச் செலவு செய்துள்ளார். குறிப்பாக குன்றத்தூர் முருகன் கோவில் மற்றும் பல ஏழை,எளியமக்களுக்குப் பல உதவிகள் செய்துள்ளார். பள்ளியில் பயிலும் மாணவ மாணவியர்களுக்குச் சீருடைகளும், நோட்டுப்புத்தகங்களும், பண வசதிகளும் பல செய்துள்ளார். ஏழை மக்களுக்குப் பல இடங்களில் அன்னதானம் செய்துள்ளார். பொதுப் பணிகள் பல செய்துள்ள அவர் தானே ஒரு நிறுவனம் நிறுவவேண்டும், அதன் மூலமாக மக்களுக்குப் பயனுள்ள பணிகள் செய்ய வேண்டும் என்ற அவாவினால் தான் குருநாதரின் பெயராலே ''திருப்புகழரசு அருட்பணி அறக்கட்டளை'' என்ற பெயரில் 1985ஆம் ஆண்டு துவக்கப் பெற்றது. இதில் ''சித்தர் அருட்செயல் ஆய்வுத் தவக் குடில்'' என்ற அமைப்பு உள்ளது. இதில் சித்தர்கள் இறைவனை அடைய கையாண்ட எளிய முறையையும் சித்தர்களின் அருட்செயல்களையும் மெய்யன்பர்களுக்குப் புரியும் வண்ணம் எளிய முறையில் கற்றுக் கொடுக்கப்படுகிறது. பிறகு, ஏழை, எளிய மக்களுக்காகவும், உடல் ஊன

Koviloor Digital Library

முற்றோர்க்காகவும், முதியவர்களுக்காகவும், பல வழிகளை அடிகளார் வகுத்துள்ளார். அவை பின்வருமாறு:

1. சிறு தொழில் மற்றும் குடிசைத் தொழில்
2. உடல் ஊனமுற்றோருக்காக மறுவாழ்வுப் பயிற்சி
3. முதியவர்களுக்காக அமைதியான தவக்குடில்
4. இலவச சித்த மருத்துவமனை
5. சித்த வைத்திய மூலிகைப் பண்ணை
6. மாணவ, மாணவிய கண்மணிகளுக்காகத் தொழிற் பயிற்சிக் கூடம்.
7. உடல் வலிமைக்காகவும், மனச்சாந்திக்காகவும், சூழ்நிலைத் தியானம் கற்றுக் கொடுத்தல்.
8. ''சுத்தாத்வித சைவ சித்தாந்தத்தைப் பரப்புதல்''

இப்படி இன்னும் பல அரிய வழிகளையும் கையாண்டுள்ளார். மற்றும் அருட்கவியரசு அருணகிரிநாதர், சுத்தாத்வித சைவ சித்தாந்த ஞான பானு அருள்மிகு பாம்பன் குமரகுருதாச சுவாமிகள், அருட்பிரகாச வள்ளல் அருள்மிகு இராமலிங்க அடிகள் இவர்களது கொள்கையை உலகமெல்லாம் பரப்பவேண்டும் என்று அப்பணியை அடிகளார் தம் சிரமேற் கொண்டுள்ளார்.

இவண்
அடிகளார் மீது
பேரன்பு கொண்ட அன்பன்

Koviloor Digital Library

திருப்புகழ் அரசு அருட்பணி அறக்கட்டளை
சித்த தெய்வீக தியான பயிற்சி நிலைய தர்மஸ்தாபனம்
அரசு அங்கீகாரம் பெற்றது.

அரசு பதிவு எண் 915 185

5, மாடல் ஹவுஸ் ரோடு
சி. ஐ. டி. நகர், நந்தனம்
சென்னை - 600035.
தென் இந்தியா.

இந்த தர்ம ஸ்தாபனமானது 1985-ம்ஆண்டு திரு. சண்முகதாசரால் சித்த யோகத்தைக் கற்றுக்கொள்ளவும். உண்மையையும் தன்னைப்பற்றியும் அறிந்து கொள்ள விரும்பும் மக்களுக்கு, ஒரே மதம், ஒரே நம்பிக்கையின் மூலம் பரம் பொருளுடன் இரண்டறக் கலப்பதற்கு உதவவும் தோற்றுவிக்கப்பட்டது. இந்க டிரஸ்ட் முழுவதும் ஒரு தர்ம காரியத்திற்காகவும், ஏழைகள் மற்றும் தேவைப்படும் மக்களுக்காகவுமே அமைக்கப்பட்டது என்பது இந்த டிரஸ்டின் பின் வரும் கொள்கை விளக்கப் பகுதியில் இருந்து அறிய முடியும்.

1. மக்களை அவர்களின் அன்றாட வாழ்க்கையில் நிலவும் அறியாமை மற்றும் கொடிய பழக்க வழக்கங்களில் இருந்து நீக்கவும், அவர்கள் வாழ்க்கை சீரிய முறையில் நடக்க கடவுளை வழிபட உதவவும் மற்றும் அவர்களின் இருதயமும் ஆன்மாவும் தூய நிலைப்பட்டு அதன்மூலம் அவர்கள் உயர்ந்த தெய்வீக எண்ணங்களையும், கொள்கைகளையும் அடைய உதவுதல்.

2. மக்கள் இவ்வுலகில் பிறருக்கு இன்னல் செய்யாமல் நேர்மையாக வாழவும், மது மற்றும் இதர போதைப்

Koviloor Digital Library

பொருள்கள், மாமிசம் இவைகளை உட்கொள்ளாது இருத்தல், மற்றவர்களுக்குப்போதிக்கும் ஒரு தனி மனிதன் தான் மேற்கண்ட கொள்கைகளைத் தீவிரமாகக் கடைப்பிடித்தல் ஆகியவற்றில் மக்களுக்குப் போதனை செய்தல்.

3. சமுதாயத்தில் உள்ள நலிவுற்ற மக்களுக்கு இலவசமாக சித்த மருத்துவ உதவிகளைச் செய்தல்.

4. சாதி, மத, இன உணர்வுகள் இன்றி வசதியற்ற எல்லா மாணவர்களுக்கும், பள்ளிகள், கல்லூரிகள், தொழில் நுட்பக் கல்லூரிகள் மற்றும் மருத்துவக் கல்லூரிகள் நடத்துதல்.

5. ஏழைகளுக்கு இலவசத் திருமணங்கள் நடத்தி வைத்தல்.

6. காய்ந்த பனை ஓலைகளில் எழுதப்பட்டுள்ள சித்த வைத்தியத்தின் சிறந்த விளக்கங்களைப் பாதுகாத்தல் மற்றும் அவைகளை உலகில் உள்ள எல்லா மக்களும் அறிந்து உதவியாக இருக்கப் புத்தக வடிவில் புதிதாகக் கொண்டு வருதல்.

7. நன்கொடைகள் மூலம் பெறப்பட்ட தொகைகளை மக்களின் சிறந்த தேவைகளுக்காக இந்த டிரஸ்டின் மூலம் செலவு செய்தல்,

8. சித்தர்களின்புராதன நூல்களைக்கிடைக்கும் இடங்களில் எல்லாம் இருந்து பெற்று அவைகளைப் புத்தக வடிவில் கொண்டு வருதல், மற்றும் தகுந்த நபர்களை அமர்த்தி சித்தர்களின் சீரிய கொள்கைகளையும், விளக்கங்களையும் கிராமம் கிராமமாகவும் மற்றும் பல்வேறு இடங்களிலும் அவ்வப்பொழுது பரப்ப உதவுதல்.

9. உலகில் உள்ள எல்லா மக்களுக்கும் கடவுள் ஒன்றே மதம் ஒன்றே என்ற கொள்கையைப் பரப்பி அதன் மூலம்

Koviloor Digital Library

இந்த டிரஸ்டின் கொள்கைகளை அவர்கள் உணரும்படி செய்தல்.

10. நூல் நிலையங்கள் நடத்துதல் மற்றும் தமிழ், இதர மொழி நூல்களை வெளியிடுதல், தவிரவும் மற்ற மொழிப் புத்தகங்களை மொழி மாற்றம் செய்து மனித இனத்தின் அறிவை வளரச்செய்தல்.

11. இலவசப் புத்தகங்கள், பண உதவி, இலவச உடை மற்றும் உணவு ஆகியவற்றை ஏழை மற்றும் சிறந்த மாண வர்களுக்கு அளித்து உதவுதல்.

12. அறிவியல், மருத்துவத்துறை, கலை மற்றும் இதர துறைகளில் வல்லுநர்களை ஊக்குவித்து அவர்களின் கொள்கைகளையும், எண்ணங்களையும் புத்தக வடிவில் கொண்டு வந்து எல்லோருக்கும் கிடைக்கும்படி செய்தல்.

13. ஏழை எளியவர்களுக்கும், அனாதைகளுக்கும் உணவு மற்றும் தங்கும் வசதிஉள்ள இடங்களை அமைத்து உதவுதல்.

14. உலகில் உள்ள இத்தகைய கொள்கைகள் கொண்ட சங்கங்களுடன் ஒத்துழைத்து அவைகளை ஊக்கு வித்தல்.

15. அறிவியல், மருத்துவம். கலைகள் மற்றும் சித்த துறைகளில் உள்ள பயனுள்ள குறிப்புகளை அச்சிட்டு வெளி யிடுவதற்கு அச்சகம் ஒன்று அமைத்தல்.

16. சித்தர்கள், வள்ளுவர், வள்ளலார், பாம்பன் சுவா மிகள், அருணகிரிநாத சுவாமிகள் ஆகிய சிறந்த தமிழ்ப் புலவர்கள். ஸ்ரீராமகிருட்டினர், சுவாமி விவேகானந்தர், நாயன்மார்கள், ஆழ்வார்கள் மற்றும் சிறந்த ஞானிகள் காட்டிய பாதையில் இந்த டிரஸ்டை நேர்மையாகவும், சீரிய முறையிலும் நடத்துதல், மற்றும் தன்னலமற்ற, தியா நோக்கம் கொண்டவர்களை உறுப்பினராக ஏற்றுக் கொள்ளுதல்.

Koviloor Digital Library

17. மக்களுக்குப் பயன்படக்கூடிய செய்திகளையும், கொள்கைகளையும் சேகரித்துப் புத்தக வடிவில் அவ்வப் பொழுது வெளியிடுதல்.

18. இந்த டிரஸ்டின் கொள்கைகளையும், எண்ணங் களையும் பரப்ப தகுந்த ஆசிரியர்களை நியமித்து அவர் களை உலகம் முழுவதும் அனுப்பி வைத்தல்.

19. இந்த டிரஸ்டில் ஆர்வம் கொண்டுள்ளவர்களை அழைத்துக் கலாச்சாரக் கூட்டங்களை நடத்துதல்.

20. இந்திய மண்ணில் வாழ்ந்து மடிந்த உயர்ந்த மனி தர்கள், புலவர்கள் ஆகியோரின் சீரிய கொள்கைகளை மாணவர்களுக்குத் தனி இடம் அமைத்து அதில் போதித் தல்.

21. அனைத்து மொழிகளையும், அனைத்துக் கலாச் சாரங்களையும் ஊக்குவித்தல், மற்ற மொழிப் புத்தகங் களைத் தமிழில் மொழிபெயர்த்தல், தமிழ் மொழிப் புத்த கங்களை மற்ற மொழிகளில் மொழிபெயர்த்தல், மற்றும் இப்புத்தகங்கள் உலகில் எல்லோருக்கும் கிடைக்கச்செய்தல்.

22. அனாதைகள், ஆதரவு அற்றவர்களுக்கு முடியும் இடங்களில் எல்லாம் இந்த டிரஸ்டின் பண உதவி கொண்டு இல்லங்கள் அமைத்து அவர்கள் வாழ்க்கை மேம்படச் செய்தல்.

23. காது கேளாதவர்கள், வாய்பேச முடியாதவர் களுக்குப்பள்ளிகள்நடத்துதல் மற்றும் உடல் ஊனமுற்றவர் களுக்கு மறுவாழ்வு நிலையங்கள் நடத்துதல்.

24. இந்தியாவிலும், அயல் நாட்டிலும் உள்ளவர் களுக்கு சைவ சித்தாந்தத்தின் சிறந்த நுணுக்கங்களைத் தெரிய வைத்தல்.

25. அக்கறை(ஆன்மீக சடுபாடு)உள்ளவர்களுக்கு தியா னத்தைக் கற்றுத் தருதல்.

Koviloor Digital Library

26. மறந்தும், புறக்கணிக்கப்பட்டும் வரும் இந்தியக் கலாச்சாரத்தின் மகிமையை மேம்படச் செய்தல்.

27. பண்டைய மொழியான தமிழை அதன் புனிதம் கெடாமல், விஞ்ஞான உலகின் மொழியாக ஆக்குதல்.

28. இந்த டிரஸ்ட் முற்றிலும் ஒரு தர்ம காரியத்திற்காக நிறுவப்பட்டது. இதன் கொள்கைகள், செயல்கள் எப்போதும் ஏழைகளுக்காகவே, அவர்களின் நலனுக்காகவே இருக்கும் என்பது தெளிவாகக் கூறப்படுகிறது.

சுவாமிகள் இந்த டிரஸ்டை நிறுவி, அருள்வாக்கு சொல்வதன் மூலம் (முருகக் கடவுள் சுவாமிகள் மூலம் பேசி அன்பர்களின் துன்பங்களையும் துயரங்களையும் நீக்க வழி சொல்கிறார்) அன்பர்கள் மனமுவந்து அளிக்கும் நன் கொடைகளைக் கொண்டு இந்தத் தர்ம காரியங்களைச் செய்து வருகிறார். இருப்பினும் பணஉதவி, இதர சேவைகள் செய்து இந்த இயக்கத்திற்கு ஆதரவாகவும், உறு துணையாகவும் இருப்பவர்கள் கடவுள் அருளுக்குப் பாத்திரமாக இருப்பார்கள் என்பது உறுதி.

ஆகவே, மத்திய, மாநில அரசுகளும் உலகில் உள்ள பொது மக்களும் பெரிய அதிகாரிகளும் மனமுவந்து முன் வந்து எல்லா அரசியல் வாதிகளும் இந்த இயக்கத்திற்கு இந்த இயக்கத்தின் முன்னேற்றத்திற்கு உதவி செய்வார்கள் என்று மனப்பூர்வமாக நம்பப்படுகிறது. இது மனித உரிமை ஆன்ம உரிமை மேம்பாட்டுக் கழகமாகும்.

இன்னும் உலகில் உள்ள அரிய பெரிய விஷயங்களை இவ்வறக்கட்டளை ஆய்வு செய்து மக்களுக்குப் பயனுடைய செய்திகளைத் தந்து தம்புகழை உயர்த்திக் கொள்ளும்.

இவ்வறக் கட்டளையின் நோக்கம்.

உலக உயிர்கள் அனைத்தும் இன்புற்று என்றென்றும் இனிதுற வாழ்வதே எம் வேண்டுகோளும் பிரார்த்தனையும் ஆகும்.

Koviloor Digital Library

சிறப்புப் பாயிரம்

முருகா

சாந்தமிகு சண்முக தாசன் தகமைமிகப்
போர்ந்த உயர்புரட்சிப் பொன்மொழிகள்—சேந்தன்
திருவருளால் தந்ததனால் தேனமுத மாக
ஒருமையுடன் வாழ்க உவந்து!
(அருள்மொழி அரசு திருமுருக கிருபானந்த வாரியார்)

களிற்றெருத்து மேவிக் கருத்தை முரசால்
விளக்கியாளும் கோன்மை விழைவே—துளக்ககன்ற
பொன்மொழிகள் ஆய்ந்து புவிதிருந்த வேட்கைமிக்
கின்றுரைசெய் தூக்குநெறிக் கீடு.

அனைத்துங் கேட்பார்க் கருள்வாக்காய்க் கூறும்
மனத்தெளிவும் நுண்கலையும் மாண்டு—புனத்தவள்மன்
தாளிணையே தஞ்சமென்னும் சண்முகதா சன்கரத்து
வாளிலறுந் தீய வழக்கு.

—தவத்திரு. புதுவை நல்லிசைப் பெரும்புலவர்
அறிந்தார்க்கினியனார்.

நூலின் திறனறிந்தேன் நுண்ணுணர்வின் ஆழம்தான்
மேலு முணர்தலுற்றேன் நின்னெழுத்தோ—வேலின்
முனைபாகும் பொய்வேடம் வல்லவர்க்கு ஆலின்
இனைவித்தே நல்லோர் தமக்கு.

டாக்டர் இரா. சேது எம். ஏ; பிஎச். டி; டிப்.
(தாளிகை)
தமிழ்ப் பேராசிரியர், விவேகாநந்தா கல்லூரி
மயிலாப்பூர், சென்னை-4

Koviloor Digital Library

கோவிலூர் ஆ
2076
R65
கோவிலூர்-63

அருமலர் சிந்தும் நறுந்தேனாம் தோற்கும்
அமுதெலாம் சேர்க்கும் அகிலமே ஏற்கும்
அருள்மிகு ''புரட்சிப் பொன்மொழிகள்'' யாக்கும்
அருள்வாக்கு சண்முக தாசனின் பெருநோக்கு !

அருட்பா அருளிய வள்ளலார் திருவழியில்
அறுவகைச் சுவையினை யுருவகப் படுத்திடும்
அருமருந்து திருவகைத் தகையாளன் தழைக்கட்டும்
அப்பணி தொடரட்டும் அறுமுகன் அருளட்டும் !

கடவுள்முதல் காமம்வரை கரும்பிலுமினிய கருத்து !
கரையிலாதன ! கற்போருக்குக் கற்கண்டு விருந்து !
கனல்பறக்கும் கந்தனருள் சுரக்கும் கருவூலம் !
கனிவான எழிற்சொற்கள் ! உபமான அனுகூலம் !

கனிந்தமுக்கனி ! கரைசேர்க்கும் இந்துமதப் பாலம் !
கலைநிறைப் பெட்டகம் ! சமயநெறி விளக்கம் !
கலிகண்ட திருப்புகழடிமைக் கருத்தினைக் கண்டோர்
கனகவேல் கருணையுடையவர் மதம்மாறார் காணீர் !

திரு. பொ. இல. பொன்னுசாமி, ஐ. ஏ. எஸ்.
(கவிகாள மேகம்)
தமிழ்நாடு ஆதி திராவிடர் மற்றும்
பழங்குடியினர் நல இயக்குநர்.

தென்புலத்தின் தீந்தமிழில் தெள்ளமுதமாம்
பொன்மொழிகள்
வன்புலத்தார் வாய்வீச்சை வாய்யடங்க வைக்கின்ற
சண்முகச் சித்தர் தருகின்ற தேன்விருந்தாம்
பண்படுத்தும் மருந்தாய்ப் பகர்ந்து.

இலக்கியச்சித்தர் தங்கவயல் லோகிதாசன்

வள்ளுவரும் உண்மைசிவ வாக்கியரும் ஒன்றாகி
உள்ளுவந்து ஒருருவாய் சண்முகனார்—தெள்ளுதமிழ்ச்
சிந்தனைக்கு ஊற்றானார்; செயல்புரட்சிப்
பொன்மொழிகள்
வந்திளிக்கும் வாழ்கைக்கு உரம்.

வாழ்க்கைப் புரட்சிக்கும் வையப்புரட்சிக்கும்
வீழ்ச்சி நெறிஅறியா மார்க்(சு) லெனின்போல் -தாழ்ச்சிக்கு
இடங்கொடா எண்ணத்தீ ஏற்றும் புரட்சிக்
கடலடா உண்மைக் கருத்து.

'பெரியார் மறையவில்லை; பித்தனல்லேன்; வாரீர்
எரியார்ந்த திமலையாய் சண்முக தாசன்
உரியேன் உலகிற்கு' எனஎழுந்தான் பொய்மைச்
சிறியார்க்கு இல்லை சிறப்பு.

சொல்லும் பொருளும் சுடருவமைத் தோள்சிறகாய்
வெல்லும் விழிப்புணர்த்தும் பொன்மொழிகள் — செல்லும்
மனம்தொறும் மாசகற்றும் மாண்பின; மாந்தர்
இனம்தொறும் ஏற்பதே பீடு.

நெஞ்சிலே பட்டதை நீளுலகு மேம்படப்
பஞ்சிலே பற்றும் பகுத்தறிவுச் செந்தீயாய்ப்
பாழ்மை அழித்தொழிந்து அன்புப் பயிர்வளர்க்கும்
வாழ்வை உணர்த்தும் மொழி!

'தமிழ்ப்பா நிலவு'
டாக்டர் த. கோவேந்தன்

Koviloor Digital Library

புரட்சி வேங்கையின் பக்திப் பொன்மொழிகள்

சாந்த நிறைதவமும் சண்முக தாசனவர்
ஏந்துந் திருவருட்கோர் ஈடில்லை—மாந்தரகம்
ஆளும் பதியவரின் அன்புநெறி வாக்கதனால்
நாளும் விளையும் நலம்!

பொங்கும் புரட்சிப் பொன்மொழிகள் பூத்தொருங்கே
மங்காத் தவநெறியின் மாண்புரைக்கும்—தங்குபுகழ்
சண்முக தாசனவர் சன்மார்க்க நூல்நயங்கள்
பண்பூட்டும் பக்தி விருந்து!

பக்திப் புரட்சிப் பணிச்சித்தர் பொன்மொழிகள்
முக்தி வழிகாட்டும் மூதுரைகள்—எக்காலும்
கூறவொணாச் சீர்நெறிகள் கொஞ்சுதமிழ் நூலதுவே
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு!

—பாவலர் எழிற்கோவன்

திருப்புகழ் அடிமை நாதம்
திகழ்ந்திடும் மலர்நூல் வேதம்
அருள்வளப் புரட்சி காட்டும்!
அரும்பொருள் நிறைகள் கூட்டும்!
முருகவேள் பக்தி நாட்ட
முழக்கமாய் மருளை ஓட்டும்!
பெருமித நலங்கள் தோற்றும்
பெருங்கடற் கோல மாகும்!

சண்முக தாசன் தந்த
சன்மார்க்க நூலின் நுண்மை
பண்பிலா பக்தி மார்க்கப்
பாதையைக் கடிந்தே சாடும்!
கண்ணனின் கீதை சாரக்
காவியப் புகழை யேற்கும்!
எண்ணிடும் இறைவ னோடு
இணைத்திடும் மலர் நூலாகும்!

வே. சௌந்தரராஜன்
தணிக்கையாளர், இந்தியன் வங்கி
தலைமை அலுவலகம் சென்னை-1.

Koviloor Digital Library

ஞானிகள் வாழ்த்தும் சொற்கள் ஞாலமே
போற்றும் செயல்கள் எங்கள்
வாழ்வினில் தெளிவளிக்கும் கீத நாத
வேத நூலாம்—நாளும்

புதுமலர் புரட்சிப் பொன்மொழி புவி
எங்கும் வாழத் தந்தீர் மேலும்
சிறப்புரை அனைத்தும் சேர்க்கும் சித்தர்தம்
சீர்திருத்தம் வாழ்க வெல்க!

கவிஞர் முத்தமிழ்த்தாசன்

புரட்சிக்கு வித்தாகும் பொன்மொழிகள் காணீர்!
மருட்சி கொளல் வேண்டா-அருட்சித்தா
சண்முக தாசனெனும் தண்டமிழ்ச் சான்றோர்
உண்ணமிழ்தாய் ஈந்தார் உவந்து.

கவிஞர்
டாக்டர் மா. செங்குட்டுவன்

சிந்தனைச் செல்வர்

சிந்தனைச் செல்வராம் சீர்திருத்த வேங்கையாம்
வந்தினிக்கும் வாக்குச்சித் ராம்முருகன்—தந்த
புரட்சிப் பொன்மொழிகள் புத்துலகு காண
அருள்சித்தர் அன்பான வாக்கு!

(திருப்புகழடிமை அருணகிரிதாசன்)

Koviloor Digital Library

சுவாமிகளின் அருளாற்றல்

திரு. சண்முகதாச சுவாமிகளுக்கு வியாபார நோக்குடன் செல்வம் குவிக்க வேண்டும் என்ற அவா இருந்திருந்தால் அவருக்கும் அவரைச் சேர்ந்தவர்களுக்கும் கோடி கோடியாகச் சேர்த்திருக்கலாம். உண்மையில் சுவாமிகள் அவர்களின் அருள் வாக்கினால் ஆசிர்வதிக்கப்பட்ட பக்தர்கள் தாங்களாகவே முன் வந்து, பல வருடங்களாகக் கொடுத்த பல லட்சத்திற்கும் மேற்பட்ட தொகையை, கடவுளின் சேவைக்காகவும், ஏழை எளியவர்களின் துயர் போக்கவும் பள்ளிக்கூடம் கட்டவும், அனாதை இல்லம் கட்டவும், வேலையில்லாதவர்களுக்குச் சிறு தொழில் செய்வதற்கும் தாராளமாக வழங்கி இருக்கிறார்கள். லஞ்சம், ஊழல் மற்றும் ஏமாற்றுதலுமே நிறைந்துள்ள இந்நாட்களில் சுவாமிகள் ஒரு சிறு தொகையே தன் வீட்டுச் செலவுக்கும், சொந்தச் செலவுக்கும் எடுத்துக் கொண்டார் என்பதைக் கேட்பதற்கே மிகவும் வியப்பாக உள்ளது.

திரு. சுவாமிஜி அவர்கள் ஜாதி, மதம், நிறம், மொழி மற்ற எல்லைகளுக்கும் அப்பாற்பட்டவர். அதனால் அவரிடம் வாழ்க்கையின் பலதரப்பட்ட மக்களும், எல்லா மதத்தவரும் எல்லா இனத்தவரும் மன அமைதிக்காகவும், அவரவர்களின் அநேக பிரச்சினைகளுக்குத் தீர்வு காணத் தயங்காமல் வருகிறார்கள் எனத் தெரிந்துகொள்வதில் ஒன்றும் ஆச்சர்யப்படுவதற்கில்லை. சுவாமிஜி அவர்கள் எப்பொழுதும் மிகுந்த அன்புள்ளவராகவும், மனித வர்க்கத்தின் காப்பாளராக மதிப்பிடப் படுவதில் ஒன்றும் ஐயமில்லை.

சுவாமிஜி அவர்கள் பரிபூரண (எல்லா) ஞானமும் அடைந்திருந்த போதிலும், எல்லா நல்ல குணங்களும் அமையப் பெற்றவராக அடக்கத்தில் தென்றலாகவும், பொறுமையின் இருப்பிடமாகவும், இயற்கையில் மென்மையாகவும், வாக்கில் உண்மையாகவும் மற்றும் செயல், தவவலிமை எல்லாம் ஒருங்கே அமையப் பெற்ற ஒருவரை நாம் காண்பது அரிது.

Koviloor Digital Library

அநேக தடவை முருக கடவுள் சுவாமிஜியின் உயிரைக் காப்பாற்றி இருக்கிறார் என்பது உண்மை. 1974-ம் ஆண்டு, திரு. சண்முகதாசர், முருக கடவுளின் தரிசனம் வேண்டி பல முறை புலம்பியும், அழுதும், துடித்தும், கதறியும் கண்ணீர் மல்கி வெம்பியும் கந்தவேள் பெருமான் வராததனால் உள்ளம் கசந்து யாரும் இல்லாத போது குன்றத்தூர் முருகன் கோவிலின் பின்புறம் உள்ள வேப்ப மரத்தில் தானே ஏறி சுருக்கிட்டுக் கொண்டார். ஆனால், ஆறுமுகப் பெருமானே இவரைக் கொண்டு பல அதிசயங்களை உலகிற்கு நிகழ்த்த வேண்டும் என்ற காரணத்தினால் இவரைத் தூக்குக் கயிற்றிலிருந்து காப்பாற்றினார். இந்த நிகழ்ச்சியைத் திருப்புகழடிமைப் புலம்பல் என்னும் நூலில்

''தூக்குக் கயிற்றில் துடித்திட்ட என்னை நீ
ஆக்குவித்தாய் உன்னடியின் கீழ்ஆளாய்
என்சொல்வேன்
பாக்கது வெட்டியில் பட்டுழல் துன்பம் போல்
ஆக்குதே நான்முகன் கூத்து !''

பொருள் :

தூக்குக் கயிற்றிலிருந்து என்னைக் காப்பாற்றினாலும் விதி என்னைப் பாக்கு வெட்டியில் அகப்பட்ட பாக்கைப் போல் அணுஅணுவாய்ச் சிதைக்க என்னையே ஆட்படுத்து கின்றதே என்று அலறுகின்றார். ஆனால், சண்முகப் பெருமானின் கருணையோ இவரை மாபெரும் ஞானியாக்கி உலக இருள் நீக்கும் எழுகதிராக என்றும் திகழ எம்பெருமான் எண்ணினார்.

மறுபடியும் இரண்டு வருடம் தமிழ்நாட்டில் இருக்கும் வள்ளி மலையில் முருகனைக் காண கடும் தவமிருந்தும், காண முடியாததால், தன் இன்னுயிரை மாய்த்துக் கொள்ள எண்ணி, மலையின் உச்சியில் இருந்து குதித்த போது, முருக கடவுள் சுவாமிஜியைத் தாங்கி மலை அடிவாரத்திற்குப்பூப்போன்று மெல்ல எடுத்து வந்தார். அடுத்து

Koviloor Digital Library

108காம்போஸ் என்னும் தூக்க மாத்திரைகளைச்சாப்பிட்ட சண்முகதாச சுவாமிகளை, முருக கடவுள் அதனுடைய விளைவுகள் இல்லாமலிருக்க செய்ததுடன் புதிய உத்வேக சக்தியுடன் எழுப்பி விட்டார். இது மருத்துவர்களையே ஆச்சரியப்படுத்திய செயலாகும். சுவாமிஜியின் வாழ்க்கை யில் இதைப் போன்ற பல நிகழ்ச்சிகள் நிகழ்ந்ததுண்டு. எப்பொழுதெல்லாம் இறைவன் தன் அருகாமையில் இல்லை என சுவாமிஜி நினைத்த மாத்திரத்தில், இறைவன் சுவாமிஜி தன்னை வந்தடையுமுன்பு இந்த உலகத்தில் இன்னும் அநேக முக்கியப்பணிகளை ஆற்றவேண்டும் என்று இருக்கச் செய்தார் என்பது சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அது போன்ற பெரிய காரியங் களுக்குள் ''தர்ம டிரஸ்ட்'' நிலையம் ஆரம்பிப்பதும் ஒன்றாக இருக்கலாம்.

திரு. சண்முகதாசரால் நடத்தப்படும் ''திருப்புகழ் அரசு அருட்பணி அறக்கட்டளை சித்த தியான நிலைய பயிற்சி டிரஸ்ட்'' ஏழை எளிய மக்களுக்கு எல்லா விதத்திலும் உதவிசெய்யும் சித்த மார்க்க அறிவைக் கற்றுக் கொள்வதற் காக நடத்துவது அவருடைய பொதுப்பணியில்கம்பீரத்தை யும் வலிமையையும் சேர்க்கின்றது. சுவாமிஜி கூறுவது ''இறைவன் எனக்குக்கொடுத்த மிகப்பெரிய பரிசை,எல்லா மக்களும் பகிர்ந்து கொண்டு பயனடையட்டும். இங்கு எல்லா மதங்களைச் சேர்ந்த எல்லா நிலையில் இருக்கும் மாணவர்களுக்கும் ''ஆத்ம சாந்தி'' சொல்லிக் கொடுத்து கடவுளுடன் ஒன்றிய உண்மை வாழ்க்கையின் குறிக் கோளை அடைவதற்கும், ஒருவர் இந்த உலகத்தின் பிறவிப் பயனடைய உதவி செய்கிறார்.

சுவாமிஜியின் பெரிய கைங்கரியங்கள் எப்பொழுதும் வாழட்டும். அவர் மனித குலத்திற்குச் செய்யும் பணி எப் பொழுதும் வெற்றி பெறட்டும்''

இப்படிக்கு
அடிமை
ராஜாராம் மோகன்ராய்
கண்காணிப்பாளர், தங்கக் கட்டுப்பாட்டுத் துறை
மத்திய அரசு

Koviloor Digital Library

மாண்புமிகு நீதிபதி
எஸ். சாமிக்கண்ணு அவர்களின்

அணிந்துரை

ஜஸ்டிஸ் எஸ். சாமிக்கண்ணு
பி. எஸ். ஸி., எம். எல்,
நீதிபதி, சென்னை, உயர்நீதி மன்றம்,
சென்னை-1.

25, ஆலந்தூர் சாலை
சைதாப்பேட்டை
சென்னை-15.

''அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு''.

அடியேனைத் திருப்புகழ் அடிமை சண்முகதாச சுவாமிகளின் ''புரட்சிப் பொன்மொழிகளுக்கு'' அணிந்துரை வழங்க வேண்டுமென்று அன்புக் கட்டளையிட்டார்கள் பேராசிரியர் ப. இராமன் அவர்கள். என் இதய தெய்வம் முருகனின் கருணை என்பதாக நினைந்து இதனை எழுதலுற்றேன்.

''நீதிபதியாக இருப்பவர்கள் எந்தவிதமான சலனங்களுக்கும், சபலங்களுக்கும் அடிமை ஆகக்கூடாது. அப்போதுதான் நீதியை நிலைநாட்டமுடியும்''.

''நீதி என்பது யாராலும் விலை கொடுத்து வாங்க முடியாத இறைவனின் சொத்து. அதை விலை கொடுத்து வாங்க நினைப்பவனும், விலைக்கு விற்க நினைப்பவனும் கடவுளின் முதல் எதிரிகள் ஆவர்.''

அடியேன் நீதித்துறையின்கண் பணியாற்றும் ஊழியன் என்ற முறையில் மேலே கண்டுள்ள பொன்மொழிகள் என் வாழ்க்கையின் தெய்வீக ஒளிபொருந்திய வழிகாட்டிகளாக விளங்கும். இம்முறையில் தமிழ்நாட்டின் தவப்புதல்வர்கள் யாவரும் அடியேனது உள்ளம் உவகையுடன் ஏற்றுக்கொண்ட பொன்மொழிகள் போன்று சகலத் துறைகளின் வாயிலாகப் பணிபுரியும் அத்தனை அன்பர்களுக்கும் அருளியுள்ள சுவாமிகளின் அருள் வாக்குகள் வெற்றியுடன் இப்பாரத நாட்டில் பவனி வர வாழ்த்துகிறேன்.

சென்னை
19-10-1981

அன்புள்ள
எஸ். சாமிக்கண்ணு

Koviloor Digital Library

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தலைவர்

மாண்புமிகு க. இராசாராம் B.A.,

அவர்களின்

வாழ்த்துரை

பல்லாயிரம் ஆண்டுகளாக மனித சமுதாயம் நன்னெறிப்படி நிம்மதியான நல்வாழ்வு வாழ்ந்திடப் பலப்பல ஆன்றோர்களும், சான்றோர்களும் வழிகாட்டிவருகின்றனர்.

வாழ்வின் அனுபவம் என்றும் பட்டறிவு என்றும் உளப்பாங்கின் வெளியீடாக, பழமொழிகளும் பொன்மொழிகளும் மக்களது அன்றாட வாழ்வில் பயன்பட்டு வருகின்றன.

இந்நூலாசிரியர் தனக்குப்பட்ட அனுபவங்களைத்தாமே "பொன் மொழிகள்" அதுவும், புரட்சிப் பொன் மொழிகள்" என்னும் தலைப்பில் மெத்தவும் தன்னம்பிக்கையோடு படைத்துள்ளார். இது ஒருவகைப் புரட்சிதான். திருவள்ளுவப் பெருந்தகை "எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு" என்பதை எல்லாக் காலத்திற்கும், எல்லா வகையினருக்கும் பொருத்தமாக "அறிவுடைமை" என்னும் அதிகாரத்தில் தெளிவுபடுத்தியுள்ளார். வள்ளுவரின் வாய்மொழிக் கொப்ப, இந்நூலினைப் படித்து, மெய்ப்பொருளினை ஆய்ந்துணர்ந்து நல்வாழ்விற்குப் பயன்படுத்த முற்படுவது நல்லது. நூலாசிரியரின் முயற்சிக்கு எனது நல்வாழ்த்துக்கள்.

அன்பன்
க. இராசாராம்
11-11-81

புனித ஜார்ஜ் கோட்டை
சென்னை-600 009.

Koviloor Digital Library

உரைகல்

பேராசிரியர் டாக்டர் ப. இராமன் எம். ஏ., Phd.
தமிழ்த் துறைத் தலைவர்,
விவேகானந்தா கல்லூரி, சென்னை-4.

எந்த வேளையும் கந்தவேளையே நினைந்து உருகிய அடியார் திருக்கூட்டம் வாழையடி வாழையென வந்து கொண்டிருக்கின்றது. இவ்வடியார் பிரணவ சொருபனான செவ்வேளை வழிபடுவதால் பிரணவ பரம்பரை என்று அழைக்கப்படுவார். அருணகிரிநாதர், கச்சியப்ப சிவா சாரியர். குமரகுருபரர், வள்ளலார், சிதம்பர சுவாமிகள், பாம்பன் சுவாமிகள் ஆகியோர் இப்பரம்பரையினரே.

'சும்மா இரு சொல்லற' எனக் கந்தக் கடவுளிடம் உபதேசம் பெற்றுச் சந்தக்கவிகள் பதினாறாயிரம் பாடியருளியவர் அருணை முனிவர். 'முத்தமிழால் வைதாரையும் அங்கு வாழ வைத்தோன்' எனச் செந்தூரான் தமிழ்மீது கொண்ட காதலையும் தமிழின் பெருமையையும் உலகுக்குக் காட்டியவர். இம்முனிவரைத் தம் வழிக்குத்துணையாகவும் அவர்தம் திருப்புகழ்ப்பாக்களே தம் நெஞ்சிற்கும் நாவிற்கும் துணையாகவும் கொண்டு குருவருளால் முருகன் திருவருளை நாடி நிற்பவர் அருள் வாக்குப் பெற்று வழங்கும் திருப்புகழ் அடிமை குகத்திரு, சண்முகதாச சுவாமிகள் ஆவார். இவரும் அப்பிரணவ பரம்பரையின் மரபில் வருபவர் என்றால் மிகையன்று.

அருணகிரிநாதரைக் குருவாகக் கொண்டாலும், பாம்பன் சுவாமிகளிடத்தும், வள்ளலாரிடத்தும் மாறாத அன்பு பூண்டுள்ளவர்.

அடிகள் அதி இளமைப் பருவத்திலேயே இறை ஞானத்தைத் தேடி வீட்டை விட்டு வெளியேறியவர். இன்று இல்லறத்தில் நல்லறம் நடத்தும் அகத்துறவுடையரா

Koviloor Digital Library

யிருக்கின்றார். ஒருவன் மூவேடணைகளை ஒழித்துப் புறத் துறவு கொள்ளலாம். ஆனால், அவனிலும் சதகோடி உயர்வுடையோன் உள்ளத் துறவுடையோன். காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம், இடும்பை, வேட்கை, ஈரிடை, தருப்பம், இராகம், துவேஷம், இடம்பம்,அகங்காரம் என்னும் பதினான்கு மனமலங்களைக் கழுவினாலன்றிப் புறத்துறவால் பயனில்லை. இவர் இல்லறத்திலிருந்தவாறே மனத்தால் துறவு பூண்டுள்ளார். இப்புரட்சிப் பொன்மொழிகளே அவர் எத்தன்மையானவர் என்பதை அங்கை நெல்லிக்கனியெனக் காட்டும்.

இப்புரட்சிப் பொன்மொழிகள் கடவுளில் தொடங்கி காமத்தில் முடிகின்றது. புரட்சிப்பொன்மொழிகள் என்னும் குற்றால அருவியிற் குளித்து உடல் தூய்மையும், உள்ளத் தூய்மையும் பெற வாசகர்களை 'வம்மின் வம்மின்' 'முந்துமின் முந்துமின்' என்றழைக்கிறேன்.

கடவுளைத் திருவிளையாடல் புரியவைக்கும் புன்மையைக் கண்டிக்கின்றார். தவம் என்பதென்ன? அறிவு ஓங்கினால் ஆசைகள் அறும். அதுவே தவம். தலையை உயர்த்திப் படம் எடுத்து ஆடும் நல்ல பாம்பு அதன் தலைமேல் பாறாங்கல்லை வைத்தால் ஆட முடியுமா? ஏ மனிதா! உன் ஆசைகள் தாம் நல்ல பாம்பு. அறிவென்னும் பாறாங்கல்லை அதன் மேல் வை. ஆசைகள் அடங்கும்" என்று அழகான உவமையால் விளக்குகின்றார். உண்மை இறையன்பு, "நெஞ்சுருகி வேண்டுவதுதான்" என இறையன்பை இசைக்கின்றார். எல்லாவற்றுக்கும் ஆணவமலமே வலிமையானது. ஒருவனை ஆட்டிப் படைப்பது. "தன்னைத் தேய்ந்துபோன துடைப்பமாகவும் செருப்பாகவும் ஒருவன் நினைப்பானானால் ஆணவமலம் தானே தேய்ந்து போகும்" என்கிறார். மனிதன் திருந்த எத்துணை எளிய விளக்கம்! அரிய போதனை!

புலம்பல் என்ற தலைப்பில் இருபத்து நான்கு இன்னிசை வெண்பாக்கள் ; திருப்புகழ் மணம் கமழும் இசைப்பாக்கள்

Koviloor Digital Library

பாடியவர் குகத்திரு சண்முகதாச சுவாமிகளே. அடிகளின் பக்தியின் உருக்கமும், அடிமை நோக்கமும், அகங்கார நீக்கமும் இப்பாடல்களில் தெற்றெனப் புலப்படும்.

உண்மையான குருவைப் புறத்தோற்றத்தில் காண முடியாது. அவன் ஆற்றல் மின்சாரம் போன்று மறைந்திருக்கும் என்கின்றார். சிலர் குற்றங்களைப் புரிந்துகொண்டே எல்லாம் விதியின் செயல் எனக் கூறித் தப்பப் பார்ப்பதை அடிகள் இடித்துரைக்கின்றார். இவர்களைப் போன்றவர் தாம் நீதிபதிகளும்! சட்டம் பயின்றால் மட்டும் போதுமா ? பண்பையும் பயின்றாலல்லவா? உண்மை நீதிபதியாக முடியும். என்று சுட்டுகிறார். அறிவு என்ன என்பதைப் பல முறை படித்தறியுங்கள். 11, 15, 21, 25 ஆகிய அறிவுப் பகுதிகளைச் சற்று ஊன்றிப் படியுங்கள்.

தமிழர்க்குத் தமிழ் மறைகள் திருக்குறளும், திருப்புகழும். அவை தமிழர்க்கு இரு கண்கள் என்று இம் மறைகளில் அடிகள் தமக்குள்ள ஈடுபாட்டைப் புலப்படுத்துகின்றனர். முப்பாலும், புகழும் எப்பாலவர்க்கும் இன்னமுதங்களே !

மானம் உயிரிலும் சிறந்தது, ''உயிர் போனாலும் ஒரு அழுகை; மானம் போனால் எக்காலத்தும் அழுகை'' எனகிறார் மானத்தின் பெருமையை! இவ்வளவு அருமையாய்ப் புரிய வைத்துள்ளார்.

தன்னைப் பிரமம் என்று அகங்கரிக்கின்ற அறிவிலிகளுக்கு நல்லறிவு ஊட்டுகின்றார். இதைப்போன்றே புராணங்களிலும், இதிகாசங்களிலும் பொய்மைகளைப் புகுத்திவிட்டனர். அடிகள் மாமல்லபுரச் சிற்பத்தைச் சான்று காட்டி, 'ஐவருக்கு ஒருத்தி மனைவியாகும் போது அவள் அழியாத பத்தினியாக எவ்வாறு இருக்க முடியும் ? '' என்று கேட்கின்றார். ஒருவனுக்கு ஒருத்தி என்ற மணமும் வாழ்வுமே கற்பெனப்படும். ஐவருக்கும் எச்சிற் பொரு

Koviloor Digital Library

ளான பாஞ்சாலி எவ்வாறு பத்தினியாவாள்? தமிழர் கற்பின் மாட்சிக்குச் சற்றும் பொருந்தா இழிவை அடிகள் எள்ளுகின்றார். இராமாயணத்தில் இராமன் சீதையை நெருப்பிலிறங்கச் செய்ததும், வண்ணான் கூற்றைக் கேட்டுச் சூலுற்ற சீதையைக் கொடுங் கானகத்தில் விட்டு வந்ததும் கடவுளாக உயர்த்திப் பேசப் பெறும் இராமன் செய்யத் தக்கதா? அப்படியானால் அவன் கடவுளாக மாட்டான் என்று வெகுண்டு உணர்த்துகின்றார்.

அன்பர்கள் வகை வகையான மாம்பழங்களைச் சுவைத் திருப்பார்கள். ஆனால், அந்த வண்டு மாம்பூப் பருவத்தி லேயே கூடவே வளர்ந்து கொட்டைக்குள் முழுவளர்ச்சி பெறுவதை பலர் அறியார். உயிரியல் (Biology) உண்மையை அடிகள் கூறுகின்றார். இவ்வண்டின் தோற் றமும் வளர்ச்சியும் போன்றே ஆசைகள் படிப்படியாக வளர்ந்து பெரிய வடிவெடுக்கின்றன என்று உணர்த்து கின்றார்.

ஆதிசங்கரர் கூடுவிட்டுக் கூடுபாயும் சித்தைப் பயன் படுத்தி அரசனின் இறந்த உடலிற் புகுந்து அரசியைக் கூடினான் என்ற வரலாற்றைச் சுற்றி அடிகள் அத்துவைதம் இது தானோ? ஞானத்தின் செயல் திறம் இது தானோ? என்று கடிந்து கேட்கிறார். உலகத்தின் பொய் வேடத்தைத் தானே எல்லோரும் போற்றுகிறார்கள். உண்மையைப் பேச இவர் ஒருவரே உள்ளார். சாதியைக்கூடப் பொய் யர்கள் தாம் படைத்தனர். கடவுளா படைத்தார்? அப் படிக் கடவுள் படைத்திருந்தால் அவன் எனக்கு வேண்டா என்கின்றார். பொய் மாய வாழ்வு வாழும் கூட்டத்தில் இன்று அரசியல் வாதிகளே அதிகம். அவர்கள் நாட்டையே நசுக்கிச் சுகபோகத்தில் மூழ்கித் திளைக்கும் எத் தர்கள் என்று எத்துகின்றார். பொய்யர்கள், வஞ்சகர்கள், கள்வர்கள் என்று ஒரு குறிப்பிட்ட பிரிவினரைச் சுட்டினால்

Koviloor Digital Library

அப்பிரிவினர் கோயில் அருச்சகர்களே, கடவுளை வைத்து வாணிகம் செய்து கொண்டிருக்கும் ஒழுக்கக் கேடர்கள் என்று கடுமொழி கூறுகின்றார். இறுதியில் பொதுவாகவும் பல உண்மைகளை வெளியிட்டுள்ளார். அன்பர்கள் புரட்சிப் பொன்மொழிகளைப் படித்தால் நிச்சயம் மனமாற்றம் பெறுவர். செவ்வேட் பரமன் திருவருளுக்குப் பாத்திரமாவர். அடிகள் என்னை இந்நூலுக்கு உரை ஒன்று உரைக்கப் பணித்தார். நான் உரைகல் அளித்தேன். உரைகல் தரமறியாது, உரைத்துப் பார்ப்போரே தரம் அறிவர். நீங்களும் உரைத்துப் பாருங்கள்.

அன்பன்
டாக்டர் ப. இராமன்

Koviloor Digital Library

அணிந்துரை

டாக்டர் சி. பாலசுப்ரமணியன்
எம்.ஏ. ; எம். லிட். ; பி. எச். டி.
தமிழ் மொழித் துறைத் தலைவர்,
சென்னைப் பல்கலைக் கழகம்.

திருப்புகழடிமை சண்முகதாச சுவாமிகளை யான் நேரில் இதுகாறும் காணும் பேறு பெற்றிலேன். ஆயினும், அவர் தம் தெளிந்த திறந்த உள்ளத்தினைப் ''புரட்சிப் பொன் மொழிகள்'' என்னும் அவர் தம் நூலின் வழியே நன்கு கண்டேன்! மகிழ்ந்தேன்! வியந்தேன்! பயன் கொண்டேன்!

நூலின் தலைப்பிற்கேற்பவே நூலும் அமைந்துள்ளது. சுவாமிகள் வாழ்க்கையின் பல்வேறு பகுதிகளையும் தம் அனுபவ அறிவு கொண்டு துலக்கமுறக் கண்டுள்ள பார்வை புலப்படுகின்றது. வையத்து வாழ்வாங்கு வாழ வைக்கும் வகையில் இவர்தம் பொன்மொழிகள் அமைந்திருப்பது தமிழ்ச் சமுதாயம் காலத்தினாற் பெற்ற நற்பேறே எனலாம். சான்றாகக் குன்றிலிட்ட விளக்கொளியென ஒளிரும் சுவாமிகளின் மணிமொழிகள் சில வருமாறு:

1. பள்ளங்களில் உருண்டோடி வரும் வெள்ளம் தங்கும். அன்பு, ஒழுக்கம், பக்தி உள்ள உள்ளங்களில் தான் ஆண்டவனின் கருணை வெள்ளம் தங்கும். (பக் 19)

2. ஒருமரம் எப்படி நல்லவர் ஆனாலும் தீயவரானாலும் தன் நிழலை மாறுபாடின்றித் தருகிறதோ, அதைப் போல் இறைவன் தன்னிடம் சரணடைந்த எவராக இருப்பினும் புறத்தில் தள்ளான். (பக் 22)

3. இங்ஙனம் கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தில் தோன்றிய மொழியாகிய ஆதித் தமிழ் மொழியை விட்டு இடையில் வந்த ஏதோ ஒரு மொழியில் அர்ச்சனை செய்தால்தான் இறைவன் தோன்றுவான்; மற்ற மொழிகளில் ஓதினால் இறைவன் வரமாட்டான் என்று கூறிப் பாமர மக்களை ஏமாற்றும் சிலரை நாம் என்னென்று சொல்வது? அவர்கள் ஆரிய மொழியாகிய வடமொழிதான்

Koviloor Digital Library

கடவுளுக்குச் சொந்தம் என்று சொல்லுகின்றனர். அது உண்மையாக இருக்குமாயின் நம்மில் ஆழ்வார்களும், நாயன்மார்களும், சித்தர்களும், முத்தர்களும் வடமொழியில்தானே எல்லா நூல்களையும் இயற்றி இருக்க, வேண்டும்? மாறாக அவர்கள் எல்லாம் தங்கள் நூல்களைத் தமிழில்தானே இயற்றி உள்ளார்கள்? இவை அனைத்தும் எல்லாம் வல்ல இறைவனுக்குத் தெரியாமலா இருக்கும்? இந்த மொழிப் பித்தலாட்டக்காரர்களின் வேடங்கள் இறைவனுக்குப் புரியாமலா போகும்? (பக் 25)

4. தனக்கு வரும் இன்ப துன்பங்களுக்குத் தானே காரணம் என்று உணருபவன் ஞானி. வரும் துன்பங்களுக்கு மற்றவர்களே காரணம் என்று பழி போடுபவன் அஞ்ஞானி.

5. பறவையும், மிருகமும் கூட தம் குழந்தைகளுக்கு வேண்டிய உணவைத் தேடி வந்துவிடுகின்றன. ஆனால், நமது நாட்டில் இருக்கும் சிலருக்கு அதுகூட முடியவில்லையே! எத்தனையோ பிள்ளைகள் தெருவில் பிச்சை எடுப்பதையும் வறுமையால் தற்கொலை செய்து கொள்வதையும் உலகில் பார்க்கிறோம் (பக் 111)

6. ஒருவனுக்கு இரண்டு கண்களுக்கும் அதிகமாக இருப்பதாகக் கேள்வியுற்றதில்லை. எனவே நமக்கு இரண்டு குழந்தைகளே போதுமானது. இரண்டு பெற்று வளமோடு வாழ்வதால் நமக்கும் நாட்டிற்கும் நன்மை உண்டாகும். இரண்டையும் இரண்டு கண்களாகப் போற்றி வளர்க்கலாம். (பக் 115)

புரட்சி பூத்துக் குலுங்கும் கருத்துக்களை அள்ளி அள்ளி நம் உள்ளம் உவக்கத் தந்திருக்கும் திருப்புகழடிமை அவர்களின் திறம் வெல்க! அருள் திரு. சண்முகதாச சுவாமிகளின் அருள் நெறி இவ்வவனியில் தழைப்பதாக! மன்பதை வாழ்க! மன்னுயிர் தழைக்க!

தமிழகம் }
சென்னை } சி. பாலசுப்பிரமணியன்
19-10-81

Koviloor Digital Library

சிறப்புரை

சிலம்பொலி சு. செல்லப்பன் எம்.ஏ ;பி.டி;பி.எல்
இயக்குநர், தமிழ் வளர்ச்சித்துறை. தமிழ்நாடு அரசு

திருப்புகழ் அடிமை திரு. சண்முகதாசன் அவர்கள் எழுதியுள்ள புரட்சிப் பொன்மொழிகள் என்னும் நூலுக்கு ஓர் அணிந்துரை எழுத வேண்டுமென அருமை நண்பர் செங்குட்டுவன் என்னைப்பணித்தார். சமயத் தொடர் பான நூலுக்கு என்னை முன்னுரை எழுதச் சொல்கிறீர் களே என்றேன். நூலைப் படித்துக் கருத்துரைக்குமாறு சொன்னார். நூலை முழுதும் படித்ததும், திருப்புகழ் அடிமை திரு. சண்முகதாசன் சமயத்துறையில் ஒரு புதிய மனிதராக, புரட்சிக் கருத்துக்களைக் கொண்டவராக, மொழியுணர்வும் இனவுணர்வும் கொண்ட சிந்தனையாள ராக இருப்பதை உணர்ந்தேன். சாதி சமயச் சண்டைகளிலே கோத்திரக் குப்பையிலே உழன்று கிடந்த மக்களைக் கண்டித்து, ஆருயிர்கட்கெல்லாம் அன்பு செய்யத் தொண்டாற்றிய அருளாளர் இராமலிங்க வள்ளலார் வழியில் வந்தவராக இந்நூலாசிரியரைக் காண முடிகிறது.

25 தலைப்புக்களில் சிறந்த பொன்மொழிகள் இந் நூலில் காணப்படுகின்றன. கடவுள் முதல் காமம் ஈறாக அனைத்துப் பொருள்களுமே அலசி ஆராயப்பட்டுள்ளது. ஒவ்வொரு பொருளிலும் நூலின் தலைப்புக்கேற்றவாறு ஆசிரியரின் புரட்சி எண்ணங்கள் வெளிப்படுத்தப்பட்டுள் ளன. சமுதாயத்தில் நிலவிவரும் ஒரு கருத்து அல்லது செயல் முறையை முற்றிலுமாக மாற்றுவதும், மாற்றுவதற்கான வழிகாணுவதும் புரட்சியாகும். அப்புரட்சியை ஆசிரியரின் உரைகள் தூண்டுவனவாக அமைகின்றன.

புராணங்கள் கோமாளித்தனமான கூற்று என்பதை ஆசிரியர் ஆணித்தரமாக எடுத்துரைக்கிறார். "புராணங்கள்

Koviloor Digital Library

எழுதுபவனின் மனத்துக்கேற்றவாறு இறைவனை இழிவு படுத்தும் இழிகதைகளேயன்றி மனத்தைத்தூய்மையாக்கும் புனித நூல்கள் அல்ல என்பது வெள்ளிடை மலை" (பக்24) எனத் துணிவுடன் எடுத்துரைக்கிறார். மேலும் ஆண்டவன் பெயரால் நம் அன்னை மொழியைத் துறப்பது இழிசெயல் என்பதையும் வெளிப்படுத்துகிறார். ''கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே தோன்றிய மொழியாகிய ஆதித் தமிழ் மொழியை விட்டு, இடையில் வந்த ஏதோ ஒரு மொழியில் அர்ச்சனை செய்தால்தான் இறைவன் தோன்றுவான்'' என்பது பித்தலாட்டக்காரர்களின் செயல் என்கிறார் (பக் 25). மேலும்''இந்த மொழியில் மந்திரத்தை உச்சரித்தால்தான் இறைவன் வருவான்; வேறெந்த மொழியில் சொன்னாலும் கடவுள் வரமாட்டான் என்று சொல்வது கடவுளை ஒன்றும் தெரியாத முட்டாள் ஆக்கு வதற்கு ஒப்பாகும்'' (பக் 89) என்று குறிப்பிடுகிறார்.

விதியின் பெயரால் மக்களை மடமையில் ஆழ்த்தும் போக்கையும் வன்மையாகக் கண்டிக்கிறார். ''எல்லாமே இறைவன் செயல் என்றால் நல்ல வினைகளேயல்லவா நடைபெறவேண்டும்? ஆனால், மக்களிடம் காமம், கொலை, சூது, வாது மலிந்து கிடக்கின்றன. உழைப் பவன் ஒருவன்; உண்டு கொழுப்பவன் ஒருவன், மெய் சொல்பவன் பசியால் வாடுகிறான்; ஏமாற்றிப் பிழைப் பவன் இன்பத்தில் திளைக்கிறான். இவையெல்லாம் கடவுள் செயல் என்றால், விதியின் செயல் என்றால் இப் படிப் பல அறியாச் செயல்களுக்குக் காரணம் கற்பித்துத் தப்பித்துக்கொள்ளும் கயவர்களைத் தூக்கில் போட்டால் விதியென்ற பெயரால் இனி அக்கிரமம் நடக்காது'' என்னும் புரட்சி உரையைத் திருப்புகழ் அடிமை திரு. சண்முகதாசன் வாயிலாக இந்நூலுள் காணமுடிகிறது. (பக் 48)

ஆண்டவன் பெயரால், மதத்தின் பேரால் சாதி ஏற்றத் தாழ்வுகள் கற்பிக்கப்பட்டதையும் கொதித்தெழுந்து

Koviloor Digital Library

கண்டிக்கிறார். ''கடவுள் சாதிகளைப் படைத்ததாகச் சில நூற்கள் கூறுகின்றன. அது உண்மையாக இருக்குமானால் அப்படிப்பட்ட கடவுளும் நமக்குத் தேவையில்லை...அப்படிப்பட்ட நூல்களும் தேவையில்லை'' (பக் 106) இது புரட்சி மொழியல்லவா?

சில அரிய உவமைகளை மிகவும் பொருத்தமான முறையில் இந்நூலுள் பல இடங்களில் காணமுடிகிறது. சான்றுக்குச் சில.

''மானத்தை இழந்தபின் அதைத் திரும்பப் பெற முயலுவது கடலில் மாணிக்கத்தைப் போட்டுவிட்டுத் தேடுவதற்கு ஒப்பாகும்.'' (பக் 55).

''ஒரு கரும்பு பயன்படுத்தும் விதத்திலிருந்து சர்க்கரையாகவும், போதைப் பொருளாகவும் மாறுகிறது. ஒரு குழந்தையை எப்படிப் பக்குவப்படுத்தி வளர்க்கிறோமோ அதைப் பொருத்தே அதன் வளர்ச்சி அமைகிறது.'' (பக்59).

''பொய்யைப் பல நாள் மறைக்க முடியாது; முதிர்ச்சியுற்ற கர்ப்பிணி எத்தனை நாள் அதனை மறைக்க முடியும்? ஒருநாள் வயிறு பெருத்து உண்மையென்னும் குழந்தை பிறந்தே திரும்.'' (பக் 71)

''ஒன்றைப் பார்த்து ஒருநாய் குரைக்கும்; அதைப் பார்த்து என்ன நடந்தது என்ற உண்மையை அறியாமல் பல நாய்கள் குரைக்கும்; இப்படி உண்மை புரியாமல் குரைக்கும் மனித நாய்களும் நாட்டில் பலஉண்டு.''(பக் 90).

இவ்வாறு மக்கள் அறிந்த செய்திகள் உவமைகளாக்கிச் செய்திகளைச் சொல்லும் அரிய பாங்கு நூலுள் பக்கத்திற்குப் பக்கம் காணமுடிகிறது. இது ஆசிரியரின் வளமான சிந்தனையையும் எதையும் கூர்ந்து நோக்கும் போக்கையும் தெளிவாக்குகிறது.

Koviloor Digital Library

''கோழியைப்போல் எழுத்தாளர்கள் நமக்குத் தேவையில்லை; அது நெல்லை அப்படியே விழுங்கிவிடும். ஆனால், கிளியோ நெல்லைக் கொரித்து அரிசியை மட்டும் உண்ணும் சிறந்த எழுத்தாளர்கள் தீமைகளை நீக்கி உயர்ந்த உண்மைகளையே மக்களுக்கு எடுத்துரைப்பர்.'' (பக் 126) என்பது எழுத்தாளர்கள் பற்றி நூலாசிரியர் கூறியுள்ள சிறந்த கருத்து. இவர் கூறியுள்ள இந்தக் கூற்றுக்கேற்பவே மனித குலத்திலுள்ள தீமைகளைக் களைந்து நன்மைகளை நாடும் நல்லுள்ளம் கொண்டவராகத் திருப்புகழ் அடிமை திரு. சண்முகதாசனை இந்நூலுள் காண முடிகிறது.

சமயத்துறையில் நடைபெறும் ஒழுங்கீனங்கள் அகன்று தூய்மையாக அன்பு நிலவிச் சமுதாயம் செழிக்க வேண்டுமென்னும் கருத்துக்களைச் சமய வழியிலே நின்று கூறுகின்ற புரட்சியாளராகத் திருப்புகழ் அடிமை தென்படுகிறார். மதத்தின் பெயரால், கடவுளின் பெயரால் நடைபெறும் பலகேடுகளைக் கண்டிக்கும் உரைகளைக் காவி உடை அணிந்த ஒருவர் வாயிலாகக் கேட்கும் புரட்சியை இந்நூல் அளிக்கிறது.

திருப்புகழ் அடிமை திரு. சண்முகதாசன் அவர்கள் இவை போன்ற புரட்சிகரமான கருத்துக்களைத் தொடர்ந்து தந்து, மக்கள் நல்வாழ்விற்கு வழிவகுக்க வேண்டுமெனப் பெரிதும் விழைகிறேன்.

சென்னை
28-10-81

அன்புடன்
சு. செல்லப்பன்

Koviloor Digital Library

சிறப்புப் பாயிரம்

பெருங்கவிக்கோ

டாக்டர் வா. மு. சேதுராமன் எம். ஏ., டி. லிட்

சண்முக தாசராம் தண்டமிழ்த் தாசர்பேர்
விண்ணோர் அருணகிரி வெல்சீடர்-பண்ணமுதக்
கூட்டுப்போல் பேரின்பக் கோவாயில் தான்திறக்கும்
பாட்டுத் துறவுகோல் பார்!

வள்ளலார் தொண்டர்! வடலூரான் பேரன்பர்
பள்ளம்பாய் நீர்போல் பயன்வாக்கு-தெள்ளிவாய்
செல்வாக் குதிர்க்கும் சுடர்வாக்குச் சண்முகனார்
எல்லாவர்க் கும்மினிமை யே!

தவம்பற்றி அன்புத் தலம்பற்றி புன்மை
அவம்பற்றி கொல்லும் அரிமா-சிவம்பற்றி
மக்கள் தமைச்சுரண்டும் வாசியிலா மூர்க்கர்க்குத்
தக்க சவுக்கடி தான்!

அருள் வாக்குச் சண்முகா ஆய்புகழ்த் தாசர்
தெருள்வாக்கு வையத் திசையில்-பொருள்வாக்காய்ச்
சென்று பரவி திகழறம் காத்துசேர்
நன்றாலே வெற்றிகாணும் நன்கு!

திருப்புகழ் நல்லடிமை தேசமெலாம் போற்ற
வரும்புகழ் எல்லாம் வகையாய்-பெருமடியார்
தான்பெறவே வாழ்ந்து தமிழருளால் ஓங்கிட்வே.
வான்தவம் காக்கும் வரம்!

Koviloor Digital Library

காஞ்சி காமகோடி பீடத்தின்

கருத்துரை

காஞ்சி காமகோடிபீடாதிபதி ஜகத்குரு சங்கராச்சார்ய சுவாமிகளுக்கு நமது புரட்சிப் பொன் மொழிகள், நூலை அனுப்பி, அணிந்துரை கேட்டிருந்தோம். அவர்கள் அனுப்பி வைத்த 'அணிந்துரை' இது:

ரென்னி 12-11-81

இப்பவும் தாங்கள் அனுப்பிய 'புரட்சிப் பொன் மொழிகள்' என்ற புஸ்தகம் வந்து ஸ்ரீமஹா ஸன்னிதானத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

புஸ்தகத்தில் உவமைகளெல்லாம் நன்றாகக் கையாளப்பட்டு விளக்கப்பட்டிருக்கிறது. நன்றாய் இருக்கிறது என்று ஸ்ரீஆசார்ய ஸ்வாமிகள் சிலாகித்துக் கொண்ட விபரம் தெரிவிக்கலான காரியம்.

ஒப்பம் (கே. கணேசன்)
மேலாளருக்காக

Koviloor Digital Library

அணிந்துரை

திரு, எம். கந்தசாமி பி. ஏ., பி எல்.,
அரசுத் துணைச் செயலாளர்,
வணிக வரி மற்றும் அறநிலையத்துறை

சென்னை
24-11-84

திருப்புகழ் அடிமை திரு. சண்முக தாசன் அவர்கள் எழுதியுள்ள "புரட்சிப் பொன்மொழிகள்" என்ற நூலைப் படித்தேன்.

சில அரிய உவமைகள் மிகப் பொருத்தமான வகையில் இந்நூலில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. உதாரணம்;—

"என் விதி என் விதி என்று சொல்லிக் கொண்டு மேலும் மேலும் தவறுகளைச் செய்து கொண்டு போவது தன் கண்ணைத் தானே நெருப்புக் கொல்லுரால் குத்திக் கொண்டதற்கு ஒப்பாகும்."

"உடைந்து போன ஓடு ஒன்று சேராது
ஒழுக்கமற்ற வாழ்வு உயர்வாகாது"

ஒவ்வொரு கருத்தைச் சொல்லும் போது அதற்கு ஏற்ற உவமையைச் சொல்லிப் பின் கருத்தைக் கூறுகிறார்.

திருப்புகழ் அடிமை திரு. சண்முகதாசன் அவர்கள் இவை போன்ற புரட்சிகரமான கருத்துகளைத் தந்து மக்களை நல்வழிப்படுத்த வேண்டுமெனப் பெரிதும் விரும்புகிறேன். அவர் தம் தொண்டு வளர்க!!

Koviloor Digital Library

உவமைகள் உயிர் பெற்றன

கவிஞர் டாக்டர் முத்துராமலிங்கம், எம் ஏ.பி.எல்.டி.லிட்.,
(தலைவர், தமிழ்நாடு விளைபொருள் விற்பனை வாரியம்)

'வெண்டிரைப் புணரி அலைக்கும் செந்தில்' எனப் புறப்பாட்டுப் புலவரால் புகழ்ந்துரைக்கப்பட்ட 'திருச்செந்தூர்' திருமண் தந்த திருப்புகழடிமையின் எழுத்தில் எண்ணற்ற இதயங்களை அடிமை கொள்ளும் ஆற்றல், அடையாளம் காண முடிகிறது !

முழங்கும் கடல் கண்டு பிறர் கலங்கி ஓடிய காலத்திலேயே கலங்கள் செலுத்தியவர்கள் நம் தமிழர்கள் !

தமிழ்— மூன்று —தானை— நான்கு— நிலம்— ஐந்து— சுவை— ஆறு—சுரம் —ஏழு —திசை எட்டு— உணர்ச்சிகள் ஒன்பது என்று வாழ்வை வகுத்து வாழ்வாங்கு வாழ்ந்தவர் நம் தமிழர் !

அதனால்தான் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் இந்நாட்டை,

'ஆற்றில் புனலின்
ஊற்றில் கனியின்
சாற்றில் தென்றல்
காற்றில் நல்ல
ஆற்றல் மறவர் செயலில்
பெண்கள் அழகில்
கற்பில் உயர்ந்த நாடு !

எனக் குறிப்பிட்டார் !

அப்படி வாழ்வாங்கு வாழ்ந்த இனம் இடையில் நுழைந்த இருட்டால் தன் இயற்கை வெளிச்சத்தின் எழில் ஒளி குறைய நேர்ந்தது !

Koviloor Digital Library

சமயத்தின் பேராலும், சாத்திர வாயிலாகவும், கலையின் மூலமாயும் இடை நுழைந்து இடம் பிடித்து ஏற்றம் கண்டுள்ளதை, இதயம் நொந்து இடையிடையே குறிப்பாய்ச் சுட்டியும், குறிவைத்து எறிந்தும் குமுறிச் சீறுகிறார் நம் திருப்புகழடிமை திரு. சண்முக தாசனார் !

சமயச் சார்புள்ள சண்முகதாசனார் ''புரட்சிப் பொன் மொழிகள்!'' எப்படித் தர இயலும் என்று மேலோட்டமாய் எண்ணுபவர்கள், புத்தகத்தைப் புரட்டி நூலோட்டம் கண்ட பின்போ, இது, புரட்சிப் பொன்மொழிகள் மட்டுமல்ல ; காலத்திற்கேற்ற புதுமைப் பொன்மொழிகளின் பொன் கூடு ! எனப் புகழ்த்துரைப்பர் !

தமிழும் சைவமும் தழைக்கும் தாமிர வருணிக்கரை தந்த இந்த ஆன்மநேய அருளாளர், உவமைகளுக்குப் புதிய உயிரோட்டம் தருவதைப் பாருங்களேன்—

'சில ஏமாற்றுக்காரர்கள் நான் சமூகத்திற்கு மாபெரும் தியாகி என்று சொல்வது, மீனவன், ஒருவன் வலையைக் கடலில் போட்டுக் கடலைச் சுத்தம் செய்கிறேன் என்று சொன்னதற்கு ஒப்பாகும்.'

அலைகடல் பதியில் பிறந்ததால்தானோ என்னவோ இவர் வலை உவமை விரித்து நம் நெஞ்சில் இலக்கிய அலை அடிக்கச் செய்கிறார் !

இன்னொரு இடம் பாருங்கள்—'கற்புடைய மகளிர் வாழ்வில் எவ்வளவு புயல் வீசினாலும் அவர்கள் உள்ளம் பிளவுபடாது. இதுநீரை எத்தனை முறை கத்தியால் குத்திக் கிழிப்பினும் தடியால் அடிப்பினும் பிளவு படாததற்கு ஒப்பாகும்!

அடடா...! என்ன அரிய உவமை!

பல சமயவாதிகள், சமயத்திற்கேற்ற சந்தர்ப்பவாதிகளாய்ப் பொய்ப்புகழ் பெற்று இந்தப் பூமியில் 'புழுதி உலா' வருகிறார்கள்!

Koviloor Digital Library

சிலர்தான் அடக்கத் தென்றலாய்ப் பிறர் அறியா வண்ணம் உலவி பிறர்க்கு நன்மையும் தன்மையும் சேர்க்கிறார்கள்.

புழுதி வருவது கண்ணுக்குத் தெரியும்; தென்றல் கண்ணுக்குத் தெரிவதில்லை. தென்றல் தெரியாமலே நம்மைத் தீண்டி நலன் பயக்கிறது.

புழுதியாய் உலா வராமல் அத்தகைய தென்றலாய்த் திகழ்பவர் நம் திருப்புகழ் அடிமையார்!

இவரின் சொற்களிலேயே இவருக்குப் பொருத்தமான வாடாத வார்த்தை மாலை இதோ—

'பலாமரம் பூக்காமலேயே பலன் தருகிறது. அது போல விளம்பரமின்றியே பல நன்மைகள் செய்யும் உயர்ந்தோரும் உண்டு!'

'நீரும் நெருப்பும் இணைந்திருக்க முடியாது. எது வலிதோ அதுவே வெற்றி பெறும். அதுபோல் மாயையும் மனச்சாட்சியும் போரிடும் போது எது வலியதோ அதுவே வெற்றி பெறும்.'

என்று வாழ்க்கைப் பயணத்தின் நடைமுறைத் தத்து வத்தை நுட்பமாய் அணுகி எளிய உவமையால் இவர் கோடிட்டுக் காட்டுகையில், நம் அடிமனத்தின் அடி வாரத் தில் ஆலய மணியாய் 'அற்புதம்' என்ற நாத ஓசை நம்மை யறியாமலே எழுகிறது!

வரிக்கு வரி வசந்தமழை; வார்த்தைக்கு வார்த்தை கருத்துக்கனல்! போற்றிப் பாதுகாக்க வேண்டிய பொற் பேழைப் பனுவலிது! தத்துவ முத்துக்களைத் தவமிருந்து பெற்று ஏட்டில் தவழவிட்டுள்ள நம் தண்டமிழ்க் கொண் டல் திருப்புகழடிமை சண்முக தாசனார் தமிழ்த் தொண் டும் அருள் தொண்டும் ஆல் போல் தழைத் தோங்கி அன்பர்க்கு நிழல் நல்கும்! நெறி நல்கும்!!

சென்னை-28 அன்பன்
8-8-84 இ. முத்துராமலிங்கம்

Koviloor Digital Library

ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் அருளிய குமாரஸ்த்தவம்

ஓம் ஷண்முக பதயே நமோ நம;
ஓம் ஷண்மத பதயே நமோ நம;
ஓம் ஷட்கிரீவ பதயே நமோ நம;
ஓம் ஷட்கிரீட பதயே நமோ நம;
ஓம் ஷட்கோண பதயே நமோ நம;
ஓம் ஷட்கோச பதயே நமோ நம;
ஓம் நவநிதி பதயே நமோ நம;
ஓம் சுபநிதி பதயே நமோ நம;
ஓம் நரபதி பதயே நமோ நம;
ஓம் சுரபதி பதயே நமோ நம;
ஓம் நடச்சிவ பதயே நமோ நம;
ஓம் சடாட்சர பதயே நமோ நம;
ஓம் கவிராஜ பதயே நமோ நம;
ஓம் தபராஜ பதயே நமோ நம;
ஓம் இகபர பதயே நமோ நம;
ஓம் புகழ்முனி பதயே நமோ நம;
ஓம் ஜெய ஜெய பதயே நமோ நம;
ஓம் நய நய பதயே நமோ நம;
ஓம் மஞ்சுள பதயே நமோ நம;
ஓம் குஞ்சரி பதயே நமோ நம;
ஓம் வள்ளி பதயே நமோ நம;
ஓம் மல்ல பதயே நமோ நம;
ஓம் அஸ்த்ரா பதயே நமோ நம;

Koviloor Digital Library

ஓம் சஸ்த்ரா பதயே நமோ நம;
ஓம் சஷ்டி பதயே நமோ நம;
ஓம் இஷ்டி பதயே நமோ நம;
ஓம் அபேத பதயே நமோ நம;
ஓம் சுபோத பதயே நமோ நம;
ஓம் வியுஹ பதயே நமோ நம;
ஓம் மயூரா பதயே நமோ நம;
ஓம் பூத பதயே நமோ நம;
ஓம் வேத பதயே நமோ நம;
ஓம் புராண பதயே நமோ நம;
ஓம் பிராண பதயே நமோ நம;
ஓம் பக்த பதயே நமோ நம;
ஓம் முக்த பதயே நமோ நம;
ஓம் அகார பதயே நமோ; நம;
ஓம் உகார பதயே நமோ நம;
ஓம் மகார பதயே நமோ நம;
ஓம் விகாச பதயே நமோ நம;
ஓம் ஆதி பதயே நமோ நம;
ஓம் பூதி பதயே நமோ நம;
ஓம் அமார பதயே நமோ நம;
ஓம் குமார பதயே நமோ நம.

Koviloor Digital Library

அருள்மிகு பாம்பன் குமர குருதாச சுவாமிகள்
அருளிச் செய்த

சண்முக கவசம்

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

அண்டமாய் அவனியாகி அறியொணாப் பொருள(து) ஆகித்
தொண்டர்கள் குருவுமாகித் துகள் அறு தெய்வமாகி
எண்திசை போற்ற நின்ற என் அருள் ஈசன்ஆன
திண்திறல் சரவணத்தான் தினமும் என் சிரசைக் காக்க! 1

ஆதியாம் கயிலைச் செல்வன் அணிநெற்றி தன்னைக் காக்க
தாதவிழ் கடப்பந் தாரான் தானிரு நுதலைக் காக்க
சோதியாம் தணிகை ஈசன் துரிசு இலாவிழியைக் காக்க
நாதனாம் கார்த்திகேயன் நாசியை நயந்து காக்க. 2

இருசெவிகளையும் செவ்வேள் இயல்புடன் காக்க வாயை
முருகவேள் காக்க நாப்பல் முழுதும்நல் குமரன் காக்க
துரிசு அறு கதுப்பை யானைத் துண்டனார் துணைவன் காக்க
திருவுடன் பிடரி தன்னைச் சிவசுப்ரமணியன் காக்க. 3

ஈசனாம் வாகுலேயன் எனது கந்தரத்தைக் காக்க
தேசுறு தோள் விலாவும் திருமகள் மருகன் காக்க
ஆசுஇலா மார்பை ஈராறு ஆயுதன் காக்க என்றன்
ஏசுஇலா முழங்கை தன்னை எழில் குறிஞ்சிக்கோன் காக்க 4

உறுதியாய் முன்கை தன்னை உமையிள மதலை காக்க
தறுகண் ஏறிடவே என்கைத் தலத்தை மாமுருகன் காக்க
புறங்கையை அயிலோன் காக்க பொறிக்கர விரல்கள் பத்தும்
பிறங்கு மால்மருகன் காக்க பின்முதுகைச் சேய் காக்க. 5

Koviloor Digital Library

ஊண்நிறை வயிற்றை மஞ்ஞை ஊர்தியோன் காக்க வம்புத்
தோள்நிமிர் சுரேசன் உந்திச் சுழியினைக் காக்க குய்ய
நாணினை அங்கி கௌரி நந்தனன் காக்க பீஜ
ஆணியைக் கந்தன் காக்க அறுமுகன் குதத்தைக் காக்க 6

எஞ்சிடாது இடுப்பை வேலுக்கு இறைவனார் காக்க காக்க
அஞ்சகனம் ஓர் இரண்டும் அரன்மகன் காக்க காக்க
விஞ்சிடு பொருள் காங்கேயன் விளரடித் தொண்டையைக் காக்க
செஞ்சரண் நேச ஆசான் திமிரு முன் தொடையைக் காக்க 7

ஏரகத் தேவன் என் தாள் இரு முழங்காலும் காக்க
சீருடைக் கணைக்கால் தன்னை சீரலைவாய்த்தே காக்க
நேருடைப் பரடு இரண்டும் நிகழ் பரங்கிரியன் காக்க
சீரிய குதிக்கால் தன்னை திருச்சோலை மலையன் காக்க 8

ஐயுறு மலையன் பாதத்து அமர் பத்து விரலும் காக்க
பையுறு பழநி நாத பரன் அகம் காலைக் காக்க
மெய்யுடன் முழுதும் ஆதி விமல சண்முகவன் காக்க
தெய்வ நாயக விசாகன் தினமும் என் நெஞ்சைக் காக்க 9

ஒலியெழ உரத்த சத்தத் தொடுவரு பூத ப்ரேதம்
பலிகொள் இராக்கதப் பேய் பலகணத்து எவை ஆனாலும்
கிலிகொள எனைவேல் காக்க கெடுபரர் செய்யும் சூன்யம்
வலியுள மந்த்ர தந்த்ரம் வருத்திடாது அயில்வேல் காக்க 10

ஓங்கிய சீற்றமே கொண்டு உவணிவில் வேல் சூலங்கள்
தாங்கிய தண்டம் எஃகம் தடி பரசு ஈட்டி யாதி
பாங்குடை ஆயுதங்கள் பகைவர்என் மேலே ஓச்சின்
தீங்கு செய்யாமல் என்னைத் திருக்கைவேல் காக்க காக்க 11

ஔவியமுளர் ஊன்உண்போர் அசடர்பேய் அரக்கர் புல்லர்
தெவ்வர்கள் எவர் ஆனாலும் திடமுடன் எனைமல் கட்டத்
தவ்வியே வருவா ராயின் சராசரம் எல்லாம் புரக்கும்
கவ்வுடைச் சூர சண்டன் கை அயில் காக்க காக்க 12

Koviloor Digital Library

கடுவிடப் பாந்தள் சிங்கம் கரடி நாய் புலிமா யானை
கொடிய கோள்நாய் குரங்கு கோல மார்ச்சாலம் சம்பு
நடையுடை எதனா லேனும் நான் இடர்ப்பட்டி டாமல்
சடிதியில் வடிவேல் காக்க, சானவி முளைவேல் காக்க 13

ஙகரமே போல் தழீஇ ஞான வேல் காக்க வன்புள்
சிகரிதேள் நண்டுக் காலி செய்யன் ஏறு ஆலப்பல்லி
நகமுடை ஓந்திபூரான் நளிவண்டு புலியின் பூச்சி
உகமிசை இவையால் எற்குஓர் ஊறுஇலாது ஐவேல் காக்க
14

சலத்தில் உய்வன்மீன் ஏறு தண்டுடைத் திருக்கை மற்றும்
நிலத்திலும் சலத்திலும் தான் நெடுந்துயர் தரற்கே உள்ள
குலத்தினால் நான் வருத்தம் கொண்டிடாது
அவ்வவ்வேளை
பலத்துடன் இருந்து காக்க பாவகி கூர்வேல் காக்க 15

ஞமலியம் பரியன் கைவேல் நவக்கிரகக் கோள் காக்க
சுமவிழி நோய்கள் தந்த சூலை ஆக்கிராண ரோகம்
திமிர்கழல் வாதம் சோகை சிரமடி கர்ண ரோகம்
எமை அணுகாமலே பன்னிருபுயன் சயவேல் காக்க 16

டமருகத்து அடிபோல் நைக்கும் தலையிடி கண்ட மாலை
குமுறு விப்புருதி குன்மம் குடல்வலி ஈழை காசம்
நிமிரொணா(து) இருத்தும் வெட்டை, நீர் பிரமேகம்
எல்லாம்
எமை அடையாமலே குன்று எறிந்தவன் கைவேல் காக்க 17

இணக்கம் இல்லாத பித்த எரிவு மாசுரங்கள் கைகால்
முணக்கவே குறைக்கும் குஷ்டம் மூலவெண் முளைதீமந்தம்
சணத்திலே கொல்லும் சன்னி சாலம் என்று அறையும்
இந்தப்
பிணிக்குலம் எனை ஆளாமல் பெரும் சக்தி வடிவேல் காக்க
18

Koviloor Digital Library

தவனமா ரோகம் வாதம் சயித்திய அராசகம் மெய்
சுவறவே செய்யும் மூலச் சூடு இளைப்பு உடற்றுவிக்கல்
அவதிசெய் பேதி சிழ்நோய் அண்டவாதங்கள் சூலை
எவையும் என்விடத்து எய்தாமல் எம்பிரான் தினிவேல்
காக்க 19

நமைப்புறு கிரந்தி வீக்கம் நணுகிடு பாண்டு சோபம்
அமர்ந்திடு கருமை வெண்மை ஆகுபல் தொழுநோய் கக்கல்
இமைக்குமுன் உறு வலிப்போடு எழுபுடைப்பகந்த ராதி
இமைப் பொழுதேனும் என்னை எய்தாமல் அருள்வேல்
காக்க 20

பல்லது கடித்து மீசை படபடென்றே துடிக்கக்
கல்லினும் வலிய நெஞ்சம் காட்டியே உருட்டி நோக்கி
எல்லினும் கரிய மேனி எமபடர் வரினும் என்னை
ஒல்லையில் தாரகாரி ஓம் ஐம்ரீம்வேல் காக்க 21

மண்ணிலும் மரத்தின்மீதும் மலையிலும் நெருப்பின்மீதும்
தண்நிறை ஜலத்தின்மீதும் சாரிசெய் ஊர்திமீதும்
விண்ணிலும் பிலத்தின் உள்ளும வேறுஎந்தஇடத்தும்
என்னை
நண்ணிவந்து அருள் ஆர்சஷ்டி நாதன் வேல் காக்க காக்க22

யகரமேபோல் சூல் ஏந்தும் நறும்புயன் வேல்முன் காக்க
அகரமே முதலாம் ஈராறு அம்பகன் வேல்பின் காக்க
சகரமோடு ஆறும் ஆனோன் தன்கைவேல் நடுவில் காக்க
சிகரமின் தேவமோலி திகழஐவேல் கீழ்மேல் காக்க 23

ரஞ்சிதமொழி தேவானை நாயகன் வள்ளி பங்கன்
செஞ்சயவேல் கிழக்கில் திறமுடன் காக்க அங்கி
விஞ்சிடு திசையின் ஞான வீரன்வேல் காக்க தெற்கில்
எஞ்சிடாக் கதிர்காமத்தோன் இகலுடைக்கரவேல் காக்க24

Koviloor Digital Library

லகரமே போல் காளிங்கன் அல்லுடல் நெளியநின்று
தகர மர்த்தனமே செய்த சங்குஅரி மருகன் கைவேல்
நிகழ்எனை நிருதி திக்கில் நிலைபெறக் காக்க மேற்கில்
இகல் அயில்காக்க வாயுவினில் குகன் கதிர்வேல் காக்க 25

வடதிசை தன்னில் ஈசன் மகன் அருள் திருவேல் காக்க
விடையுடை ஈசன் திக்கில் வேத போதகன் வேல் காக்க
நடக்கையில் இருக்கும் ஞான்று நவில்கையில் நிமிர்கையில் கீழ்க்
கிடக்கையில் தூங்கு ஞான்று கிரிதுளைத்துள வேல் காக்க 26

இழந்து போகாத வாழ்வை ஈயும் முத்தையனார் கைவேல்
வழங்கும்நல் ஊண் உண்போதும் மால் விளை யாட்டின் போதும்
பழஞ்சுரர் போற்றும் பாதம் பணிந்து நெஞ்சு அடக்கும் போதும்
செழும்குணத் தோடு காக்க திடமுடன் மயிலும் காக்க 27

இளமையில் வாலிபத்தில் ஏறிடு வயோதிகத்தில்
வளர் அறுமுகச் சிவன்தான் வந்தெனைக் காக்க காக்க
ஒளிஎழு காலை முன்எல், ஓம்சிவ சாமி காக்க
தெளிநடு பிற்பகல்கால் சிவகுரு நாதன் காக்க 28

இறகுடைக்கோழித் தோகைக்கு இறைமுன் இராவில் காக்க
திறலுடைச் சூர்ப்பகைத்தே திகழ்பின் இராவில் காக்க
நறவுசேர் தாள் சிலம்பன் நடுநிசி தன்னில் காக்க
மறைதொழு குழகன் எம்கோன் மாறாது காக்க காக்க 29

இனம்எனத் தொண்டரோடும் இணக்கிடும் செட்டி காக்க
தனிமையில் கூட்டந் தன்னில் சரவணபவனார் காக்க
நனி அனுபூதி சொன்ன நாதர்கோன் காக்க இத்தைக்
கனிவோடு சொன்ன தாசன் கடவுள்தான் காக்கவந்தே 30

சண்முக கவசம் முற்றிற்று

Koviloor Digital Library

திருப்புகழ் திருத்தணிகை

பாடல் எண்: 305

சினத்தவர் முடிக்கும் பகைத்தவர் குடிக்குஞ்
செகுத்தவரு யிர்க்குஞ் சினமாகச்
சிரிப்பவர் தமக்கும் பழிப்பவர் தமக்கும்
திருப்புகழ் நெருப்பென் றறிவோம்யாம்
நினைத்தது அளிக்கும் மனத்தையு முருக்கும்
நிசிக்கரு வறுக்கும் பிறவாமல்
நெருப்பையு மெரிக்கும் பொருப்பையு மிடிக்கும்
நிறைபுக ழுரைக்குஞ் செயல்தாராய்
தனத்தன தனத்தந் திமித்திமி திமித்திந்
தகுத்தகு தகுத்தந் தனபேரி
தடுட்டுடு டுடுட்டுண் டெனத்துடி முழக்குந்
தளத்துட னடக்குங் கொடுசூரர்
சினத்தையு முடற்சங் கரித்தமலை முற்றுஞ்
சிரித்தெரி கொளுத்துங் கதிர்வேலா
தினைக்கிரி குறப்பெண் தனத்தினில் சுகித்தெண்
திருத்தணி யிருக்கும் பெருமானே.

Koviloor Digital Library

புரட்சிப் பொன்மொழிகள்

Koviloor Digital Library

Koviloor Digital Library

1. கடவுள்

உடல் இயங்க எப்படி உயிர் முதன்மையானதோ, அதைப்போன்று எ ல் ல ா உயிர்களுக்கும் உயிராகிய இறைவனே முதன்மையானவன். 1

பசியெடுப்பதை அவரவர் உணர்வால் மட்டுமே உணர முடியுமேயொழிய பருப்பொருளாக மற்றவருக்கு எடுத்துக் காட்ட முடியாது. அதைப்போல் கடவுளை உணர்வால் மட்டுமே உணர முடியுமே யன்றி பருப்பொருளாகப் பிற ருக்குக் காட்டுவிக்க முடியாது. 2

ஊமையிடம் தேனைக் கொடுத்தால் அதனைச் சுவைத்து மகிழ முடியுமே அன்றி அதன் தன்மையினை அவன் வாயால் சொல்ல இயலாது. அதைப் போன்றே இறைவனைத் தானே உணர்ந்து அறியவேண்டுமே அன்றிப் பிறர் சொல்லியோ, அல்லது ஏட்டில் பார்த்தோ உணர முடியாது. 3

இறைவனை அடைய நினைப்பவன் உயிருக்குப் போராடும் ஒருவனைப்போல் இரவு பகல் அருள் திரு வடியை நினைத்து ஏங்கினால் தானே வந்து வெளிப்படும் கடவுள் 4

Koviloor Digital Library

நமக்கு வேண்டிய அன்பருடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ள நினைத்தால் அவருக்குரிய எண்களை இயக்கினால் தான் பதில் கிடைக்கும். அதைவிட்டு ஏதோ ஒன்றைச் சுழற்றினால் எப்படித் தொடர்பு கொள்ளமுடியும்? அதைப்போன்றே இறைவனை அடைய நினைத்தால் அவருக்குரிய திருநெறியுடையோருடன் தொடர்பு கொள்ள வேண்டும். 5

கரடு முரடான பலாப்பழத்திலேதான் கற்கண்டிற்கும் மேலான இனிப்புச் சுவையைக் காண்கின்றோம். அது போன்றே பல கடுந்துன்பங்களைக் கடந்தால் தான் கடவுளைக் காணமுடியும். 6

பள்ளங்களில்தான் உருண்டோடிவரும் வெள்ளம் தங்கும். அன்பு, ஒழுக்கம், பக்தி உள்ள உள்ளங்களில்தான் ஆண்டவனின் கருணை வெள்ளம் தங்கும். 7

மண்ணுக்குள் பதிந்து இருக்கும் வேர்க்கடலை போல் நமக்குள் இறைவன் மறைந்து இருக்கிறான். இதை அன்பு என்னும் மண்வெட்டியால் வெட்டி, ஆசைகள் என்னும் தோல்களை உரித்தால்தான் கடவுள் என்னும் கருணைப் பருப்பு கைக்குக் கிடைக்கும். 8

இனிப்புள்ள இடத்தில்தான் எறும்புகள் சேரும். அதைப்போல் இரக்கமுள்ள இடத்தில்தான் இறைவன் சேருவான் 9

பாலில் உருவத்தைக் காணமுடியாது, அதுவே தயிராகி, மோராகி, வெண்ணெய்யாகி, பிறகு நெய்யாக உருக்கிப் பார்த்தால் அதில் உருவம் தெரியும். அதைப்போல் மாந்தரிடம் உள்ள ஆசைகள் அழியும் போதுதான் அவன் உள்ளம் தெளிந்த நீரோடையாகின்றது. அதில் இறைவனது திருவுருவத்தைக் காணலாம். 10

Koviloor Digital Library

இறைவனிடம் இந்தக் காரியம் செய்துவிட்டால் ''உனக்கு அதைச் செய்கிறேன். இதைச் செய்கிறேன். திருமணமும் செய்து வைக்கிறேன்'' என்று பேரம் பேசுகிறார்கள். இறைவன் என்ன கையூட்டு (லஞ்சம்) வாங்கும் லாவண்ய அதிகாரியா? 11

உள்ளத்தில் உண்மையான, உருக்கமான, மிகத்தூய்மையான அன்பை இறைவனுக்குக் காணிக்கையாகச் செலுத்தினால் போதும். இறைவன் அதைத்தான் மகிழ்ச்சியாக ஏற்றுக்கொள்கிறான். வீண் வெளிப்பகட்டுப் பூசைகளால் அவனை அடைய முடியாது. 12

கோவிலுக்குச் செல்வதே இறைவனிடம் பிச்சை கேட்பதற்குத்தான். அவ்வாறு இருக்கும் பொழுது இறைவன் கழுத்திலே இருக்கும் அலங்கார மாலையைச் சில பணக்காரர்களுக்கும், பதவியில் இருப்பவர்களுக்கும் போட்டு வரவேற்பது இறைவனையே அவமானப்படுத்துவதாகும். அப்படிப் போடுவது வழக்கமான செயலென்றால், ஏழை அனைவருக்கும் அல்லவா போடவேண்டும்? இறைவன் சன்னிதானத்திலுமா? ஏற்றத்தாழ்வுகள்? 13

வாசனையுள்ள, வாசனையற்ற கதம்ப மலர்களை எப்படி இறைவன் ஏற்றுக்கொள்கின்றானோ, அதைப் போன்றே. பலதரப்பட்ட குணங்கள் நிறைந்த மனிதர்களையும் ஏற்றுக்கொள்கிறான். அவன் கருணைக்கடலுக்கும் மேலானவன் அல்லவா? 14

ஒரு நாணயத்தின் இருபுறமும் சரியாக இருந்தால் தான் அதுசெல்லுபடியாகும். அதைப்போல் அகத்தளவிலும், புறத்தளவிலும் தூய்மையாக இருந்தால்தான் இறைவன் உலகத்தில், செல்லும் நாணயமாக முடியும். 15

Koviloor Digital Library

நீரில் நெருப்பும், நெருப்பில் நீரும், காற்றில்நெருப்பும் இருப்பது கண்ணுக்குத் தெரிவதில்லை. அதனால், அது இல்லையென்று சொல்லிவிட முடியுமா? அதைப்போல் கடவுள் நம் கண்களுக்குக் காட்சி தரவில்லை யென்பதற் காகக் 'கடவுளே இல்லை' என்று சொல்லி விடமுடியுமா?
16

பூமிக்குக் கீழே தண்ணீர் இருக்கின்றது. அது கண் ணுக்குத் தெரிவதில்லை. அதைப் போன்றே கடவுள் நம் கண்களுக்குத் தெரிவதில்லை. அதனால்'கடவுளே இல்லை' யென்று சொல்லி விடக்கூடாது. 17

கதிரவன் ஒளியைக் கண்டவுடன் காரிருள் எப்படி விலகுகின்றதோ அதைப்போல் கந்தனின் பேரருள் ஒளி கண்டவுடன், மாயை என்னும் பேரிருள், இருக்கும்இடம் தெரியாமல் ஓடிவிடும். 18

கனல் பறக்கும் பாலைவனத்திலே தாகம் மிகுந்தவன் தண்ணீரைத் தேடிச்செல்வது போலவும், நடுக்காட்டில் ஒருவன், உண்ண உணவின்றிப் பசியால் உணவைத்தேடி ஓடுவது போலவும், மருத்துவரில்லாத கிராமத்தில் தாங்க முடியாத கொடிய பிணியால் வாடும் ஒருவன் மருத்து வரை நாடி வேறு ஊருக்குத் தவித்துச் செல்வது போலவும், ஞானத் தூக்கம் மிகுந்த ஒருவன் எப்போது படுத்துறங்கு வோம் (சமாதி நிலை) என்று பரதவிப்பது போலவும், வேட்கை மிகுந்து வேண்டி, இறைவனை நாடி ஏங்கித் தவித்தால் தானே முன் வந்து நிற்கும் பேரருள்! 19

இறைவனிடம் "நான் அந்த வழிபாடு செய்தேன்; இந்தக் குடமுழுக்குச் (அபிஷேகம்) செய்தேன்; யாத்திரை பல செய்தேன்; பல தீர்த்தங்களில் நீராடினேன்; நான் ஏன் இவ்வளவு இன்னல்களுக்குட்பட வேண்டும்? உனக்குக் கண் இல்லையா? காதில்லையா? என்று வேண்டி இறை வனின். திருவருளைச் சாடுகின்றனர். யாரும் தான் செய்த

Koviloor Digital Library

குற்றத்திற்காக, அதற்குரிய தண்டனையைக் கடவுளிடம் வேண்டி உள்ளம் உருகி ஏங்கியதை இது வரை நான் கண்டதில்லை. 20

சரியான முகவரி இல்லாவிடில் உரியவர்களிடம் அஞ்சல் போய்ச் சேராது. அதுபோல், நிலையான மனமில்லாவிடில் இறைவனை அடைய முடியாது. 21

இறைவனின் தோட்டத்தில் வேலை செய்த யாரும் கூலி பெறாமல் போனதில்லை. எதிர்பார்த்ததை விட ஆயிரம் மடங்கு கிட்டும். ஏனெனில், அவன் ஒன்றும் கருமி அல்லன் ; இல்லாதவனும் அல்லன். 22

ஒரு மரம் எப்படி நல்லவர் ஆனாலும் தீயவரானாலும் தன் நிழலை மாறுபாடின்றித் தருகிறதோ, அதைப்போல் இறைவன் தன்னிடம் சரணடைந்த எவராக இருப்பினும் புறத்தில் தள்ளான். 23

ஓர் ஊருணி (குளம்) தண்ணீரை நல்லவர்களானாலும், தீயவர்களானாலும், விலங்குகளானாலும் தாகத்தோடு வரும் யாருக்கும் தன் சுவை குன்றாது அளிக்கும். அதுபோல் இறைவனிடம் அபயம் புகுந்த யாராயினும் மாறுபாடின்றி ஏற்றுக் கொள்ளப்படுவார்கள். 24

கதிரவனின் ஒளியென்னவோ ஒன்றுதான். ஆனால் உலகம் சுற்றுவதால், ஒவ்வொரு நாட்டிற்கும் வெவ்வேறாய் அதாவது ஒரு நாட்டிற்கு ஒளியாயும். இன்னொரு நாட்டிற்கு இருளாகவும் (இரவு பகலாக) காட்சியளிக்கின்றது. அதைப்போல் இறைவன் அருள் என்னவோ ஒன்றுதான். ஆனால், அது மக்களின் மாறுபட்ட குணத்திற்குத் தகுந்தவாறு, நீதிபதியாக இருந்து தீர்ப்பு வழங்குகின்றது. 25

Koviloor Digital Library

மனிதன் கடவுளுக்கும், தனக்கும் சம்பந்தம் இல்லையென்று சொல்வது—ஒரு மரத்தில் காய்த்த கனி, தனக்கும் மரத்திற்கும் சம்பந்தமில்லையென்று சொல்வதற்கு ஒப்பாகும். 26

இறைவனையடைய திருநெறியைத் தவிர வேறு ஒரு நன்னெறி இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. வேறு வழிகளில் சென்று தன்னைப் பாழாக்கிக்கொள்வது, கடும் பாலைவனத்தில் தாகத்திற்குத் தண்ணீரைத் தேடி அலைந்த மாந்தனுக்கு ஒப்பாகும். 27

சில புராணக் கதைகளைப் பார்க்கும்போது கோமாளித்தனமான கூற்றாக இருக்கிறது. குறிப்பாக, ஒரு புராணத்தைப் பார்த்தால் ஒரு கடவுளுக்குப் பிறப்பு, வளர்ப்பு ஒரு மாதிரியாகவும், அதே கடவுளுக்கு வேறொரு புராணத்தில் மற்றொரு மாதிரியாகவும் உள்ளது. இன்னொரு புராணத்தைப் பார்த்தால் ஒரு கடவுள் பல பெண்களோடு சல்லாபம் புரிவதாகவும், பல பெண்களின் உடைகளைத் திருடி, அவர்களை நிர்வாணக் கோலத்தில் சரணடையச் செய்து, கண்டுகளிப்பது போலவும் சரசக்கதைகள் பல மலிந்து கிடக்கின்றன. இதிலிருந்து என்ன தெரிகின்றது, எழுதுபவனின் மனதுக்கேற்றவாறு இறைவனை இழிவு படுத்தும் இழிகதைகளேயன்றி மனத்தைத் தூய்மையாக்கும் புனித நூல்கள் அல்ல அவை என்பது வெள்ளிடைமலை. 28

அறிவுடைய பெரியோர்கள் சிலர் எங்கோ ஒதுங்கி வாழும்போது அறிவற்றவர்கள் சிலர் ஆடம்பரப் புகழோடு வாழ்வது, சில உயர்ந்த மாணிக்கக் கற்கள் கேட்பாரற்று எங்கோ கிடக்க, சில கூழாங்கற்கள் அங்காடியில் தங்களை மாணிக்கங்கள் என்று பீற்றிக்கொள்வதற்கொப்பாகும். 29

சில சாத்திர, சம்பிரதாயங்களில் இறைவன் இருப்பதாகச் சொல்வது, ஒரு சாராரின் வயிற்றுப் பிழைப்புக்

Koviloor Digital Library

காகக் கூறப்பட்ட கூற்றாகும். ஆனால், இறைவன் உண்மை யான அன்பு, ஒழுக்கம், கருணை ஆகியவற்றைக் கடைப் பிடிப்பவரிடம்தான் இருக்கின்றானே தவிர, அவர்கள் கூறும் சாத்திர சம்பிரதாயங்களில் இல்லை. 30

இறைவன் ஒரு சிற்பியினால் செதுக்கப்பட்ட சிலை யிலோ, ஓர் ஓவியனால் தீட்டப்பட்ட ஓவியத்திலோ ஒரு கவிஞனால் எழுதப்பட்ட கவிதையிலோ இருப்பதாகத் தெரியவில்லை. ஓர் உண்மையான பக்தனின் அன்பில்தான் இறைவனைக் காண முடியும். 31

உலக மொழிகளிலே சிறந்த மொழி தமிழ் மொழி தான். இதை நான் எப்படிச் சொல்வேன் என்றால்— முத்தமிழ்ச் சங்கத்தில் தலைவனாக இருந்து இறைவனே தமிழை ஆராய்ந்தான்; தமிழ்மீது விருப்பங்கொண்டு அதில் பாடல் பெற—சுந்தரமூர்த்தி நாயனாருக்காகப் பரவை நாச்சியாரிடம் தூது சென்றான்; தருமி என்னும் புலவனுக் குப் பரிசு கிடைப்பதற்காகத் தன் கையாலேயே தமிழில் திருமுகப் பாசுரம் ஒன்று எழுதி அனுப்பினான். ''உலகம் உவப்ப'' என்ற முதல் அடியை நக்கீரருக்குத் தானே வலிந்து எடுத்துக் கொடுத்தான்; ''முத்தைத்தரு பத்தித் திருநகை'' என்று அருணகிரி நாதருக்கும்—''உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்'' என்று சேக்கிழார் பெருமா னுக்கும், தானே உவந்து முதலடிகள் எடுத்துக் கொடுத் தான்; இவை எல்லாமே தமிழ் மொழியில்தான். இங்ஙனம் கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தில் தோன்றிய மொழியாகிய, ஆதித் தமிழ் மொழியை விட்டு இடையில் வந்த ஏதோ ஒரு மொழியில் அர்ச்சனை செய்தால்தான் இறைவன் தோன்றுவான்; மற்ற மொழிகளில் ஓதினால் இறைவன் வரமாட்டான் என்று கூறிப் பாமர மக்களை ஏமாற்றும் சிலரை நாம் என்னென்று சொல்வது? அவர்கள் ஆரிய மொழியாகிய வடமொழிதான் கடவுளுக்குச் சொந்தம் என்று சொல்கின்றனர். அது உண்மையாக

Koviloor Digital Library

இருக்குமாயின் நம்மில் ஆழ்வார்களும், நாயன்மார்களும், சித்தர்களும், முக்தர்களும், வடமொழியில்தானே எல்லா நூல்களையும் இயற்றி இருக்கவேண்டும்? மாறாக அவர்கள் எல்லாம் தங்கள் நூல்களைத் தமிழில்தானே இயற்றி உள்ளார்கள்? இவை அனைத்தும் எல்லாம் வல்ல இறைவனுக்குத் தெரியாமலா இருக்கும்? இந்த மொழிப் பித்தலாட்டக்காரர்களின் வேடங்கள் இறைவனுக்குப் புரியாமலா போகும்? 32

கருமூலப் பொருள் இல்லாமல் எதையும் தானே புதியதாகப் படைக்க முடியாது. இது வரையில் யாரும் படைத்ததும் இல்லை; இனி படைக்கப் போவதுமில்லை. இறைவனின் பழமையில் பலப்பல புதுமையை உண்டாக்கலாம். அதுவும் 'இறைவன் சித்தமே' மூலமில்லாமல் ஒன்றை உற்பத்தி செய்யமுடியாது. இது விஞ்ஞான அடிப்படையின் தத்துவம். 33

மனிதனால் முடியாதது எதுவும் இல்லை என்போர்; தன்னுயிர் பிரியும்போது தன்னை ஏன் காப்பாற்றிக் கொள்ள முடிவதில்லை. எல்லாவற்றையும் மனிதனால் படைக்க முடியுமென்றால், உலகில் எத்தனையோ மலடிகள் குழந்தைகள் இல்லாமல் இருக்கிறார்களே அவர்களுக்குத் தன் ஆற்றலால் குழந்தை பிறக்க வைத்திருக்கலாமே! அப்படி இருந்தால் குழந்தைகள் இல்லாமல் ஏங்கும் எத்தனை உயிர்கள் மகிழ்ச்சியடையும். 34

கடவுள் என்பது நாற்றக்கருவறையில் பத்துத் திங்கள் இருந்து வருவதல்ல. அப்படி ஆண் பெண் சேர்ந்து உற்பத்தி செய்வதற்குப் பெயர் இறை இல்லை. இறை ஒப்பில்லாதவன் உலக எண்ணங்களுக்கெல்லாம் அப்பாற்பட்டவன். 35

Koviloor Digital Library

இறைவன் என்பவன்; நெருப்பின் சூடு போலவும், தண்ணீரின் குளிர்ச்சியைப் போலவும், மலரின் மணம்போல வும், விந்துவின் மூளையைப் போலவும், மூளையில் உள்ள உயிரைப் போலவும், இப்படி இயற்கையாகவே எல்லாவற் றிற்குள் தானும், தனக்குள் எல்லாமுமாக இருக்கும் ஓர் ஒப்புயர்வற்ற பரம்பொருள்தான் இறைவன். 36

கடவுள் இல்லையென்று சொல்லும் சிலைக்குக் காலை யில் மாலையைப் போடுகிறான் கடவுள் சிலைக்கும்,கடவுள் இருக்கு என்று சொல்லும் திருவள்ளுவர் சிலைக்கும் மாலை யில் மாலையைப் போடுகிறான். என்னே அரசியல் தந்திரம்? நாத்திகருக்கும் ஆத்திகருக்கும் நல்ல பிள்ளை ஆகப் போடும் வேடம்! நீர் விலாங்கு மீன் பார்க்க தண்ணீர் பாம்பு போல் இருக்கும். பாம்பைக் காணும்போது நான் உன் சாதிதான் உன் குட்டிதான் என்று சொல்லும்.மீனைப் பார்க்கும் போது அதே வார்த்தையைத்தான் சொல்லும். ஆனால், அதன் உண்மைச் சொரூபம் அதற்குத்தான் தெரியும்.

37

கிறிஸ்துவ மதம் தோன்றி இரண்டாயிரம் ஆண்டுகள் என்று வரையறுத்து விடலாம். இஸ்லாமிய மதம் தோன்றி ஆயிரத்து நானூறு ஆண்டுகள் என்று வரையறுத்து விட லாம். அல்லது அவர்கள் கூற்றுப்படி, ஒரு இலட்சத்து முப்பத்து இரண்டாயிரம் நபிகள் தோன்றினர். கடைசியில் முகமது நபி தோன்றியதாகக் கூறலாம். புத்த மதத்தை இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகள் என்று வரையறுத் துக் கூறலாம். (சைன மதம் அதாவது மகாவீரர் மதம்) இரண்டாயிரம் ஆண்டுகள் என்று வரையறுத்துக் கூறி விட லாம். ஆனால், நம்சைவசமயத்தை எப்படி வரையறுத்துக் கூற இயலும்? அது கல் தோன்றி மண்தோன்றாக் காலத்தி லேயே தோன்றிய சமயம் (மதம்)தமிழ்ச் சைவ சமயம். 38

Koviloor Digital Library

மலரைப் போன்று நல்லோர்க்கு மென்மையான கருணையும் தீயோர்க்கு முள்ளைப் போல் குத்துகின்ற மறக்கருணையும் உடையவன் இறைவன். 39

"தீயவர்களை அழிப்பதற்காகவும் தர்மத்தை நிலை நாட்டவும் பத்து அவதாரமும் இந்த இந்தியபாரத நாட்டில் தான் கண்ணபிரான் அவதாரம் எடுத்ததாகக் கூறுகிறது. தச அவதாரத்தில். ஆனால், ரஷ்யாவிலோ? அல்லது அமெரிக்காவிலோ ? அல்லது ஜப்பானிலோ ? அல்லது அரபுநாடுகளிலோ? அல்லது மற்றைய உலக நாடுகளிலோ அவதாரம் எடுத்ததாகத் தெரியவில்லை. இதிலிருந்து என்ன தெரிகிறது, அந்த நாடுகள் தேவர்கள் நாடுபோல் உயர்வாகவும் அக்கிரமம் நிறைந்த காரணத்தால் அதை அழிக்க இந்தியாவில் பல அவதாரம் எடுத்ததாகவும் கூறும் அந்தப் புராணக் கூற்றுகளில் இருந்து என்ன தெரிகிறது? அவ்வளவு கேவலமான பாரதமா ? நம் பாரதம். 40

இந்துக் கோவில்களில் மட்டும் தமிழ் அர்ச்சனை வழிபாடு வேண்டும் என்னும் தமிழ் அரசியல் வாதிகள் மசூதிகளிலும், சர்ச்சுகளிலும் ஏன் தன் தமிழைப் புகுத்த முடியவில்லை ? பல ஆயிரம் மைல்களுக்கு அப்பால் வந்து இறக்குமதியான மொழி, அதுவும் இந்த நாட்டுக்கே புரியாத மொழிதானே, அங்கே ஆதிக்கம் செலுத்துகிறது. ஏன் அந்தக் கடவுளைத் தமிழில்கூப்பிட்டால் காது கேட்காதா? அல்லது நம்ம ஊர் மொழி அவருக்குப் புரியாதா ? இதை இந்த அரசியல்வாதிகள் கண்டு கொள்ளாமல் போகிறார்கள். பாவம் ஓட்டுக்காக எது எதற்கெல்லாம் எப்படி எப்படி, யெல்லாம் வளைந்து நெளிந்து போகிறார்கள் ! பாவம் அப்பாவி இந்தத் தமிழ் மக்களுக்குத்தான் புரியாமல் தவிக்கிறார்கள் ! இந்தச் சூழ்ச்சியை ! 41

Koviloor Digital Library

ஓய் (Y) தென்கலை நாமத்திற்கும் யூ (U) வடகலை நாமத்திற்கும் சண்டை போட்டுக் கொண்டு சுப்ரீம் கோர்ட்டா போவது? இது கடவுள் பிரச்சனை அல்லவா? இதை எப்படி மனிதர்கள் தீர்க்க முடியும்? வரதராஜ பெருமாளிடம் முறையிட்டு அழுதுதொழுதால், நீங்கள் உண்மையான பக்தராக இருந்தால் பெருமாளே நேரில் தோன்றி எனக்கு ஓய் (Y) நாமம்தான் பிடிக்குமென்றும் அல்லது (U) யூ நாமம்தான் பிடிக்கும் என்றும் மொழிந்திருப்பார். கோர்ட் செலவும் மிச்சமாகி இருக்கும். இப்பொழுது முடிவென்ன என்றால் (U) நாமம் 15 நாள். ஓய் (Y) நாமம் 15 நாள். (U) யூவும், (Y) யும் கலந்து கலந்து பார்த்தால் நம்ம பெருமாள்தானா, என்று சந்தேகம். ஆகையால், யூ (U) நாமம் ஒரு பகுதியிலும் ஓய் (Y) நாமம் ஒரு பகுதியிலும் போடலாம் என்பது எனது கருத்து. இதற்கு ஒன்றும் பெருமாள் 144 தடை உத்தரவு போட மாட்டார். ஏனென்றால் 15 நாள் அப்படிநாமமும் 15 நாள் இப்படி நாமமும் ஏற்றுக்கொள்ளும்போது இதை மறுக்கவா போகிறார்? 42

கடவுளை மிகச் சாதாரண நிலைக்கு ஆளாக்கும் ஆட்கள் யார் என்றால், தன்னைக் கடவுள் அவதாரம் என்று சொல்லி மக்களை ஏமாற்றும் மேஜிக்காரர்கள்தான். இவர்களை ஒழித்தால் கடவுள் காப்பாற்றப்படுவார். 43

கடவுள் ஈடு இணையற்ற மாபெரும் ஆற்றல் உள்ளவன். அவனை எழுத்தால், சொல்லால், மனத்தால், சிலையால், ஓவியத்தால் மற்ற எதனாலும் இணையவைக்க முடியாது. அன்பினால் குழந்தையைத் தாலாட்டுவதைப் போல் நமக்காக உருவாக்கப்படுத்திக் கொள்ளலாம். 44

Koviloor Digital Library

2. தவம்

கரும்புச்சாறு சாப்பிட வேண்டுமென்றால் கரும்பை இயந்திரத்தில் வைத்து நசுக்கினால்தான் சாறு கிடைக்கும். அதைப்போன்றே முக்தி நிலையைப் பெறவேண்டுமானால் நமது ஐம்புலன்களையும் ஒடுக்கி ஒறுத்து ஆளவேண்டும். 1

தேன் வேண்டுமானால் தேனீக்கள் கொட்டுவதை நாம் பொறுத்துக் கொள்ளத்தான் வேண்டும். அதைப் போல் ஞானம் பெற வேண்டுமானால் நம்மை வருத்தும் துன்பங்களைப் பொறுத்துக் கொண்டுதான் இருக்க வேண்டும். 2

இசையில் எழுவகைப் பண்க்ளை முறையாக எழுப்பி நயனப்படுத்த வேண்டுமாயின், பத்து விரல்களும் அவசியம் வேண்டும். அதைப்போல் தவத்திற்குப் பத்துக் குணங்கள் வேண்டும்.

1. அன்பு 2. அறம் 3. ஒழுக்கம் 4. வாய்மை 5. தூய்மை 6. நேர்மை 7. அழுக்காறாமை 8. பொறுமை 9. புலமை 10. பற்றில்லாமை.

இவையனைத்தும் ஒருங்கே அமைந்தால் தவத்தில் வெற்றி பெறலாம். 3

ஒருவனைத் தண்ணீருக்குள் மூழ்கடித்தால் மூச்சுக்காக வெளியில் வர எப்படித் துடியாய்த் துடிப்பானோ, அதைப் போல் தவத்திற்குச் செல்ல வேண்டியவன் இறையென்னும் மூச்சுக்கு ஏங்கித் துடிக்க வேண்டும். 4

Koviloor Digital Library

தகுதி இல்லாத ஒருவன் தவமிருக்கச் செல்வது, எழுத்து அறிவே இல்லாத ஒருவன், புலவர்களுக்கு இடையில், ''யாப்பிலக்கணப்படி யான் 'சித்திரக் கவி' இயற்ற வந்துள்ளேன்'' என்பதற்கு ஒப்பாகும். 5

நம் நாட்டில் கணக்குத் தெரியாதவர்களைத்தான் மிகுதியாகக் காண்கின்றோம். கணக்குத் தெரிந்தவர்கள் ஒரு சிலர் தாம். கணக்கென்பது கூட்டல், கழித்தல், பெருக்கல் அல்ல. அன்றாடம் நாம் எத்தனை மணி நேரம் உண்கிறோம், உடுத்துகிறோம், உறங்குகிறோம், வீண் செயல்களில் ஈடுபடுகிறோம், அனாவசியமாக நேரத்தை விரயமாக்குகிறோம் என்னும் அன்றாடக் கணக்குப்பட்டியலைப் பார்த்தால் கடவுளை நினைப்பதற்கும், அறச்செயல்களைச் செய்வதற்கும் எத்தனை வினாடிகளை நாம் செலவழித்தோம் என்ற உண்மைக் கணக்குத் தானே தெளிவாகத் தெரிந்துவிடும். 6

உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் ஒருவனை மருத்துவர்கள், அவனுடைய உயிரைக் காக்க, அவயவங்களையும், இரத்த ஓட்டத்தையும், உடலின் இயக்க நிலையையும், நாடித் துடிப்பையும், எவ்வாறு அடிக்கடி ஆய்வு செய்கிறார்களோ, அதைப்போல் தவமேற்பவன், தன் மனம், அறவழி கடந்து, புறவழி செல்கிறதா என்று அடிக்கடி ஆய்வு செய்து கொள்ளவேண்டும். அப்பொழுது தான் தவம் பிழைக்கும். 7

சிலர் மனம் அடங்கவில்லையே, அடங்கவில்லையே என்று கூறிக் கொண்டிருக்கிறார்கள். மனம் அடங்காமல் இருக்க என்ன காரணம் என்று அவர்கள் அறியாமல் போவதேன்? நோய் உள்ளவனுக்கு, நோயினுடைய மூலகாரணம் தெரிந்து விட்டால், நோயை அடியோடு ஒழித்து விடலாம். அதை விட்டுவிட்டுக் கண்ட மருந்துகளைக் கொடுத்தால் எப்படி நோய் தீராதோ, அதைப் போல் மனம் அடங்க மூலகாரணமான ஆசைகளைக் கிள்ளி எறிந்தால் மனம் தானே அடங்கும். 8

Koviloor Digital Library

மனிதன் எந்தெந்த ஆசைகளை (மண். பெண், பொன் பட்டம், பதவி, உலக ஆசை) விட்டு விடுகிறானோ அவன் அந்தந்த இரும்பு விலங்குகளாகிய அடிமைத்தனத்திலிருந்து விடுதலையடைகிறான். 9

ஒருவன் ஞானியாவது சாதாரண செயல் அன்று. ஒரு நெல் விட்டிற்த வரவேண்டுமாயின் வரப்பு கட்டி, உழுது, பயிரிட்டு, நீர்பாய்ச்சி, காவல் காத்து, அறுவடை செய்து, அடித்துப் பக்குவமாக வீட்டிற்குக் கொண்டு வந்து சேர்க்க வேண்டியிருக்கிறது. சாதாரணப் பயிரை வளர்க்கவே இப்படியென்றால், ஞானப் பயிரை வளர்க்க எப்படி என்று பார்க்கவேண்டும். ஞானமடைய வேண்டுமாயின், மனத்தை ஆசைகளிலிருந்து நீக்கி, அறம் என்னும் பயிரிட்டு அறிவு என்னும் காவல் காத்தால்தான் ஞானிகளாக முடியும். 10

அறிவு ஓங்கி, உயரும்பொழுது, ஆசைகள் தாமாகவே வீழ்ந்து மடிந்துவிடும். இது எப்படி என்றால் நல்ல பாம்புத் தலையில், பெரிய பாறாங்கல்லைத் தூக்கி வைத்தால் அது எப்படிப் படமெடுத்து ஆட முடியாதோ? அப்படியே இது. 11

மனத்தூய்மை இல்லாத ஒருவன் துறவியாக முடியாது. தண்ணீரில் இறங்காமல் ஒருவன் நீச்சல் கற்றுக் கொள்ள முடியாது. 12

கடலில் அலைகள் ஓய்ந்தபின் குளித்துக்கொள்ளலாம் என்று நினைப்பது அறியாமையாகும். மன அலைகள் (உலக ஆசைகள்) ஓய்ந்தபின் துறவியாகிவிடலாம் என்று நினைப்பது அதைவிட அறியாமையாகும், கடல் அலைகள் ஓயப்போவதுமில்லை நீ துறவியாகப் போவதுமில்லை ; நீ எப்பொழுது துறவியாகிறாயோ அப்பொழுதே மன அலைகள் (உலக ஆசைகள்) நின்றுவிடும். 13

Koviloor Digital Library

3. இறையன்பு (பக்தி)

பாறைகளில் தூவிய விதை முளைக்காது. அதேபோல் பாவிகளின் நெஞ்சங்களில் தூவிய பக்தியும் நிலைக்காது. 1

இந்த நாடு எப்பொழுது முழுக்க, முழுக்கச் சைவ சன்மார்க்க நெறியைக் கடைப் பிடிக்கின்றதோ, அப்பொழுது தான் முழுக்க, முழுக்க மனிதன் மெய்யுணர்வு பெற்றதாகக் கருத முடியும். 2

காயிலே புளிக்கும் மாங்காய், கனியிலே இனிப்பதைப் போல், பக்குவமாவதற்கு முன் நெஞ்சம் பரதவிக்கும். பக்குவமான பின் அதுவே ஞானப் பழம் ஆகிவிடும். 3

பக்தி என்பது காவி, கமண்டலம், உருத்திராட்சம், வீபூதி கொண்ட வெளிவேடம் அன்று. உள்ளத்தில் ஒருமையில்லா வழிபாடெல்லாம் இறைவனை ஏமாற்றுவதாகும். 4

பக்தி என்பது கற்பூரம் உருகித் தீய்ந்து ஒன்றுமில்லாமல் காற்றோடு காற்றாய்க் கலப்பது போல், நான் என்பதே இல்லாமல் ; உணர்ந்து, உணர்ந்து உருகி நெகிழ்ந்து இறைவனோடு இரண்டறக் கலப்பதேயாகும். 5

தானாகவே கடல் நீர், குடிநீராகுமென்று கரை ஓரத்திலே கழுகொன்று காத்திருந்ததாம் தாகத்தைத் தீர்த்துக் கொள்ள. அதுபோல் எவ்வித நன்மைகளும் தவமும் இன்றி அருள் தாமாகவே தேடிவரும் என்று இறுமாந்திருக்கும் பேதையரை என்னென்று சொல்வது ? 6

Koviloor Digital Library

உங்களின் உள்ளத்திலிருக்கும், நல்லொழுக்கப் பயிரைத் தீமைகள் என்னும் மிருகங்கள் மேயாமலிருக்க, பக்தி என்னும் வேலியை அமைத்துக் கொள்வீர்களாக! 7

மெய்ப் பொருளைக் காண வேண்டுமாயின் மனிதன் பொய்யான ஆசைகளிலிருந்து விடுதலையாகி மெய்ஞ் ஞானியாக மாறவேண்டும். அது எப்படி என்றால் தங் கத்திலிருக்கும் களிம்பை நீக்கினால் அது எப்படிப் பத்தரை மாற்றுத் தங்கமாகிறதோ அதைப்போலவே. 8

உப்புக் கல்லைத் தண்ணீரில் போட்டதும் அது கரைந்து நீரோடு நீராகிவிடுகிறது. ஆனால், வெறுங்கல்லை எத் தனை ஆண்டுகள் தண்ணீரில் போட்டு வைத்தாலும் நீருக் குள் அது கரையாது. அதைப்போல் பக்குவமான பக் தன்; இறையருளுக்கு உடனே பாத்திரம் ஆகிறான். ஆனால், பக்குவம் இல்லாதவன் எத்தனை ஆண்டுகள் முயன்றாலும் அது வீணாகிவிடுகிறது. 9

ஒரு சொற்பொழிவாளன் சொற்பொழிவாற்றினான். அந்தச் சொற்பொழிவைக் கேட்கப் பலதரப்பட்ட மொழி யாளர்கள் வந்திருந்தார்கள். ஆனால், அவன் ஒரே ஒரு மொழியில்தான் சொற்பொழிவு செய்தான், அந்தமொழி தெரிந்த ஒரு கூட்டம் மட்டும்தான் அதைக் கேட்டு உருகி, உணர்ந்து மகிழ்ந்தது. மற்றவர்கள் ஏதோ சமயச்சொற் பொழிவுக்கு வந்திருந்ததாக நினைவு. ஆனால், அங்கே கூறப்பட்ட தத்துவத்தைச் சிறிதும் உணர முடியவில்லை. ஏன்? அந்த மொழி மற்றவர்களுக்குத் தெரியாத காரணத் தால்தான். அதைப்போல் இறையருளின் தத்துவத்தை உணரவும் ஓர் ஆற்றல் (பக்குவம்) வேண்டும் இல்லையேல் அந்தத் தத்துவத்தை முழுவதும் உணர முடியாது. 10

Koviloor Digital Library

விளக்கில் எண்ணெய் இல்லையாகின் ஒளி நின்று விடும். உண்மையான அடியாருக்கு உள்ளத்தில் அருள்தன்மை இல்லையாகின் உயிரே பெரும் துடிதுடிப்புக் கொள்ளும். 11

இறைவனிடம் உண்மையான அன்பு இல்லாமல் போலித்தனமாகப் பக்தி வைத்தல், செம்பில் தங்கமுலாம் பூசியதற்கு ஒப்பாகும். 12

எண்ணெய் நமக்கு வேண்டுமானால் தேங்காயையோ, எள்ளையோ செக்கில் போட்டு ஆட்டினால்தான் கிடைக்கும். அதைப்போன்றே ஞானம் என்ற எண்ணெய் பெற வேண்டுமாயின் அறிவு என்னும் பொருளை நல்ல முறையில் பக்தி என்னும் செக்கில் செலுத்தினால்தான் கிடைக்கும். 13

ஒழுக்கமில்லாதவனின் பக்தி, நீரில்லாத பயிர்போல் வாடி வதங்கி விடும். 14

சிறகில்லாமல் பறவை வானத்தில் பறக்க முடியாது. துடுப்புக்கள் இல்லாமல் மீன் நீரில் நீந்த முடியாது. அதைப் போன்று பக்தியில்லாமல் முக்தி பெற முடியாது. 15

வாழைமரத்தில் விரைவில் நெருப்புப் பற்றாது. அதே போல் ஞானமில்லாதவர்களுக்கு அருள் உடனே கிட்டாது. 16

சுடாத சிப்பியில் எவ்வளவுதான் நீர் ஊற்றினாலும் அது நீர்க்காது. ஆனால், சுட்ட சிப்பியில் நீர் பட்டாலே போதும், அது உடனே நீர்த்துச் சுண்ணாம்பாகிவிடும். அதைப்போன்று பக்குவமில்லாதவர்களிடம் எந்த அறிவுரை புகட்டினாலும் அது அவர்கள் மனத்தில் ஏறாது. பக்குவமானவர்கள் சுட்ட சுண்ணாம்பு போன்று உடனே பயன் தரும்படி மனத்தில் ஏற்றுக்கொள்வார்கள். 17

Koviloor Digital Library

முள் நிறைந்த காட்டில் செருப்பில்லாமல் நடக்க முயன்றால் ஒழுங்காகச் சென்று சேரமுடியாது. அதைப் போல் ஆசையென்னும் முள் நிறைந்த வாழ்க்கைப் பாதையில் அடக்கம், பக்தி என்னும் பாதுகாப்பணி இல்லாமல் சென்றால் வாழ்க்கையில் நல்ல நிலையை அடைய முடியாது. 13

ஞானம் என்னும் பயிர் வளர வேண்டுமாயின் களை (புல்) என்னும் மாயை களைந்தெறியப்படவேண்டும். 19

இதற்கு முன்னிருந்த அடியார்களில் இறையன்பின் பொருட்டு ஒருவர் பிள்ளைக்கறி சமைத்தார்; ஒருவர் கண்ணையே தந்தார். இறையைக் காணும் பொருட்டு 35 நாட்கள் கழுத்துவரை குழிதோண்டி உடல் மக்கிப் போயினும்; நீ வராவிடில் வெளியேறேன்; என்றார், பாம்பன் சுவாமிகள், அருணகிரிநாதர் கோபுரத்தில் ஏறி விழுந்தார், இறைவேட்கையால். இப்படி அளவிட முடியாத தொண்டு செய்த அவர்கள் எங்கே? நாம் எங்கே? அப்படி இருந்தும் நாம் அவர்களைவிட உயர்வான இடத்தை இறைவனிடத்தில் வேண்டுகிறோம். இது விதைவிதைக்காமலே அறுவடைக்குக் கழனியில் காத்திருந்ததற்கு ஒப்பாகும். 20

தூக்குக் கயிற்றில் தொங்கப்போகும் ஒருவனின் மனம் அவன் உயிர் ஒன்றில் மட்டும்தான் நாட்டம் உள்ளதாய் இருக்கும். அதுபோல் இறைவன் மேல் ஒருமுனைச்சிந்தனை உள்ளவர்களுக்கு மட்டும்தான் அவன் பேரருள் கிட்டும். 21

உம்மை ஒரு தேய்ந்துபோன செருப்பாகவும், துடைப்பமாகவும் நினைத்துக் கொள்வீர். மற்றவர்கள் மீது மரியாதை உமக்குத் தானாகவே வந்துவிடும். 22

ஒரு பக்தன் தன் கொள்கைகளுக்கு மாறுபட்ட எவருக்கும் அடிமையாக மாட்டான். இது எது போல் என்றால்,

Koviloor Digital Library

கற்புள்ள ஒரு பெண் எல்லோருக்கும் மனைவியாக மாட்டாள். 23

உண்மையான பக்திக்கு இலக்கணம் எதுவென்றால் கணவன் இறந்த செய்தி கேட்டதும் அந்த அதிர்ச்சியால் உயிர் பிரியும் உயர் பத்தினி போலவும்; கணவனின் உடல் தீயில் எரியும்பொழுது தானும் உடன்கட்டை ஏறும் கற்புள்ள மாதர்களைப் போலும்; ஒரு நல்ல பக்தன் என்பவன் தன் இதயத்திலிருக்கும் புனித பக்தி கடுகளவு குறையினும் மேலே உள்ள கற்புடைய மாதர்களைப் போல் ஆகிவிடுவான். இதுவே உண்மையான பக்தர்களின் இலக்கணமாகும். 24

பக்குவமில்லாத மாணவனுக்குக் கடுமையான ஞான உபதேசம் செய்வது, மயக்க மருந்து கொடுக்காமல் புற்று நோயை அறுவைச் சிகிச்சை செய்து குணப்படுத்த முயல்வ தற்கு ஒப்பாகும். 25

பல ஆண்டுகளாகக் காத்திருந்த நல்லொழுக்க பக்தியை ஒரு சில ஆசைகளின் காரணமாக நாசமடையச் செய்வது, நீண்ட நாட்களாகக் குழந்தையில்லாமல், பின் கருத்தரித் துப் பத்துமாத காலம் தாய் வயிற்றில் வளர்ந்தபின் அது இறந்து பிறப்பதற்கு ஒப்பாகும். 26

கடலில் நீந்த நினைக்கும் ஒருவன் முதலில் பயங்கர அலைகளைக் கடந்தால்தான் அமைதியான நீரில் நீந்த முடியும். அதுபோல் மனிதன் ஞான இன்பக் கடலில் நீந்த வேண்டுமாயின் துன்ப அலைகளை முதலில் கடக்க வேண்டும். 27

உண்மையான இறைவனைக் கண்டவர்கள் அதன் உண்மையைப் பாமர மக்களுக்கு எளிதில் புரிந்து கொள்ளும் அளவிற்கு விளக்கமாகச் சொல்லவில்லை. அப்படிச் சொன்னவர்கள் உண்மையாக இறைவனைக் கண்ட தில்லை. 28

Koviloor Digital Library

பல் இல்லாத ஒருவன் எப்படிக்கரும்பைக் கடித்து அதன் சாற்றைச் சுவைக்க முடியாதோ அதைப்போல் அறிவில் லாத ஒருவன் திருமறைகளைக் கற்றுப் பொருள் உணர்ந்து நடக்கமுடியாது. 29

இதற்குமுன் நம் முன்னோர்கள் கோடான கோடிப்பேர் இறைவனை அறிந்து, சிந்தித்து, ஆராய்ந்து உண்மையான சைவ, சமய நன்னெறிகளைப் புகட்டிவிட்டுச் சென்றுள் ளார்கள். அப்படிப்பட்ட உயர்ந்த உண்மையான இறைவன் திருவருளை நாம் ஐயுற்று ஆராய்ந்தால் இன்னும் எத்தனை ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும் இறைவனின் பேரருளைத் துளிகூடப் பெற முடியாது. நம் உடலில் உள்ள நோய் தீர வேண்டுமாயின் மருத்துவரையோ, மருந்துத் தொழிற் சாலைகளில் தயாரிக்கப்படும் மருந்துகளையோ நம்பிக்கை யோடு உண்டு வியாதிகளைக் குணப்படுத்திக் கொள் கிறோம். அவர்களைப் பற்றி நாம் ஐயுற்று ஆராயத் தொடங்கினால் நாம் ஆராயுமுன் நோயால் இறந்து போவோம். அதைப்போல் இறையருளைப் பெற வேண்டு மாயின் எந்த வித ஐயப்பாடும் இல்லாமல் ஞானிகள் எழுதி யுள்ள ஞான நூலைக் கற்றுப் பின்பற்றினால் ஞான அருளைப் பெற முடியும். 30

சாதாரண ஆறுகால பூசைகள்; அன்றாடம் புனிதத் தீர்த்தத்தில் மூழ்குதல்; இவை ஓர் அரிச்சுவடி (L.K.G.) ஆகும். மேற்கொண்டு இறைவனைத் தொடர்ந்து செல்ல அருவ, உருவ ஆடம்பர வழிபாடின்றி அறிவு தெளிந்த மெய்ப் பொருளை உணர்ந்து உருகி இறைவனோடு இரண் டறக் கலப்பதே மெய்ஞ்ஞானமாகும். 31

Koviloor Digital Library

4. திருப்புகழ் அடிமை புலம்பல்

இன்னிசை வெண்பா

எத்திக்கும் தித்திக்கும் ஏற்ற திருப்புகழ்
முக்திக்கும் சக்திக்கும் வித்தென்று கொட்டுவோம்
பக்திக்கும் பண்புக்கும் புத்திக்கும் பொன்னெறியாம்
சித்திக்கும் சிந்திக்க சீர்.

குரு வணக்கம்

எந்தை குருநாதன் சந்தத் திருப்புகழோன்
முந்தை வினையகற்றும் கந்த அருட்பாவோன்
சிந்தை வழிகாட்டி பாம்பன்; சிறியேனின்
சிந்தையில் நின்று செயல்.

அவை அடக்கம்

விழியற்றோன் ஓவம்! விரலற்றோன் வீணை!
மொழியற்றோன் பேச்சு! முடமுற்றோன் ஓட்டம்!
பழியுற்ற பாவிநேர் பாடவந்தேன் பாவம்
விழியுற்ற மாந்தரே கேளீர்!

Koviloor Digital Library

வடபழனி மேவும் வடிவே லரசே
இடரேது மின்றி எளியேன் செயலை
சுடர்போன் றோங்க அருளும் செவ்வேற்
கடல்போற்றுன் பம்வரினு மென்? 1

சலிக்கா தெனக்கீந்த சண்முகத் தேவே!
பலிக்காச் செயலனைத்தும் கூட்டுவித்தாய்; பாவி
சலிக்கா தினிப்பாரில் பட்டுழல் பாங்கோ?
எலிகளுக்கா அஞ்சும்சிம் மம்? 2

எத்தனையோ கோடி பிறப்பெடுத்து நோற்பினும்
இத்தனை பாவம் குறையுமோ? வேலவா!
எத்துணை? நீயின்றி எந்தையே இங்கெனக்கார்?
செத்தமீன் போற்காய்ந்தேன் சென்று. 3

போரூர்ப் பெருமானே! போராட்டம் என்விதி!
பேரூர்ப் புகுமுன் பெறுவேனோ உன்கழல்?
வேறூர்ப் புகுமுன் வெறுவாழ்வில் வீழுமுன்!
போரூர்க் கழலையே போற்று! 4

மறப்பேனோ? என்னை நினைப்பேனோ? உன்னைத்
துறப்பேனோ? மாயை தொடுப்பேனோ பாவை?
சிறப்பேனோ செல்வா? செருக்கேனோ வீணில்?
மறப்பாயோ மைந்தனை நீ? 5

நெஞ்சம் பதைக்குதே! நெக்குருகிப் போகுதே!
அஞ்சித் துடிக்குதே! ஆகுநிலை சிந்தித்தால்!
வஞ்சமேன்? நான்முகா! வாழ்வெழுதத் தோற்றாதோ?
தஞ்சமே சண்முகா! தாழ் வேது? 6

Koviloor Digital Library

தூக்குக் கயிற்றில் துடித்திட்ட என்னைநீ
ஆக்குவித்தாய் உன்னடியின் கீழ்ஆளாய் என்சொல்வேன்
பாக்கது வெட்டியில் பட்டுழல் துன்பம்போல்
ஆக்குதே நான்முகன்செய் கூத்து! 7

கற்பென்பார் கண்ணகி நாடென்பார் கற்புடைய
பொற்பாவை சென்றிட்டாற் பூரிப்பார்! பொங்கிடுவார்!
அற்பரையும் ஏன்பெற்றாய்? அன்னையே! ஆருயிர்
பொற்பாதம் போற்ற அருள்!

என்னினும் கீழினம் இவ்வுலகில் உண்டோசொல்?
என்னினும் மாகடையன் எங்குமே கண்டதுண்டோ?
எண்ணினும் முற்றுமோ! என்குற்றம் என்போல
எண்ணின் பிறப்புண்டோ சொல்?

நான்பட்ட பாடுநாய்தான் பட்டதுண்டோ? நாயகா!
நான்பட்ட பாட்டைப்போல் நாட்டிற் படவேண்டாம்
ஏன்பட்டேன்? என்விதியோ? என்மதியோ? அய்யகோ!
வீண்பட்டேன் வெந்துழன்றேன் நான்! 10

சித்தம் கலங்கித்தவித் தேன்செய் வறியாது
நித்தம் பலதுன்பம், நெஞ்சே, வெடித்திடும்போல்,
அத்தா அறியாயோ? என்விதி! அம்மம்மோ!
பித்தாய் புலம்பினேன் நான்! 11

உன்னாசை பாதியும் பெண்ணாசை பாதி,விதி
மண்ணாசை மீதி; மரணப்புண் வாழ்க்கையில்
என்னாசை சண்முகத்தை என்றினிக் காண்பேனோ?
என்னோசை கேட்கவிலை யோ? 12

Koviloor Digital Library

ஒருபாதி சண்முகம் நெஞ்சில் பதிந்தான்
மறுபாதி பெண்முகம் மாயை புகுந்து
சிறுபாதி பாதியாய்ச் சீர்குலைந்தேன் செவ்வேட்
குறுசோதி கூறிடும் கூர்ந்து 13

செந்தில்தாய், பெற்றபிள்ளை! சீரழிய லாமோசொல்?
சிந்தையில் ஊற்றுநீ சீக்கிரம் வந்திடுவாய்
எந்தைநீ தாயன்றோ? என்னுயிர் செல்வமன்றோ?
கந்தையாய்த் தள்ளலா மோ? 14

வெறியாட்ட உள்ளக் கொடும்பேய்! ஓடுங்க
நெறியோச்சும் செங்கழல் சென்னியிற் சூட
பொறியாட்டப் பாம்பது ஓய்ந்து உணர
நிறையாற்றால் நீடே அருள். 15

கல்லாக் கசடனாய்க் காக்கறியாக் காமுகனாய்
எல்லாரும் எள்ளும் இழியனானேன் சண்முகா!
பொல்லாத ஊழோ? புலையனின் வீண்மதியோ?
செல்லா இடம்சென்ற நெஞ்சு. 16

எங்குதான் உள்ளாயோ? எம்மானே! இக்கொடியன்
அங்குதான் 'வந்தடைதல் எள்ளளவோ? எந்தையே!
எங்கும்நீ ருள்ளிரென் றால்இப் பொழுதேவந்
திங்குநீர் என்முன்தோன் றும். 17

உயிரும் உடலுமாய் ஒத்திருந்த காதல்
மயிலும் சேவலுமாய் மாற்றிச்செல் லுங்கால்
வயிறெரிந்து காதலியை மாண்டவளாய்ச் சிந்தை!
அயில்வேல் அழகனும்அவ் வாறு! 18

Koviloor Digital Library

ஏதேது சிந்திப் பினும்இரக்க மின்றிபாவி
ஏதேது செய்தி டினும்இன்னும் தீதுபல
சூதே புரிந்திடினும் சூழ்ச்சியே செய்திடினும்
வேறேது செய்யாத வேல். 19

மாதே கதியென்று மங்கிநான் மையினும்
ஏதோ இவன்எவனோ வென்றெந்தை யே!விடின்
ஈ தோவென்றி கழ்வார் புவியோர்கள்
ஈதோ கழலென வா! 20

ஏற்பாயோ? ஏனென்று என்னை வெறுப்பாயோ?
காப்பாயோ? கைவிடு வாயோ? கதறுகின்றேன்
நூற்பார்கைப் பஞ்சாய் நொடிந்து நுவலுகின்றேன்
ஏற்பார்எந் தையேயா ரிங்கு? 21

வேலால் மயிலால் வெகுதீர சூரனால்
காலால் முடியாக் கதையுண்டோ? கந்தனே!
கோளால் மிதியுண்டு கொந்தளித்தேன் சண்முகா!
மாலால் அழிவதோ நான். 22

என்னால் பழியுனக்கெந் தையேடுயன் னன்னையே!
சொன்னால் புரியுமோ? சொல்லித்தான் முற்றாமோ?
இன்னும் உயிரெதற்கு? இத்துன்பம் போதாதோ?
உன்னால் அழியாதோ ஊழ்! 23

சிந்திப் பதோசெவ்வேல்! சேவிப்பதோ உன்கோவில்!
சந்திப் பதோவென்னை? மாகடைய ஊழ்வினை!
கொந்திப் பிடுங்குதே! குன்னித் துடிக்குதே!
செந்தில் பதிக்கிலையோ? நெஞ்சு. 24

Koviloor Digital Library

வின்பொழுது போக்கிய வெங்கொடிய காமுகன்
நான்பழுதோ? நான்முகன் பைத்தியமோ? அய்யகோ!
வான்முழுதும் ஒப்பாமோ? நான்பட்ட துன்பந்தான்
ஏன்பொழுது தாழ்த்துகிறாய் இன்று? 25

கண்ணகியே நானென்பார்! காரைக்கால் பக்தியென்பார்!
பொன்னகை காட்டினால் புன்னகை காட்டுவார்!
புண்ணகை ஈய்ந்திடுவார்! பொன்மேனி தானென்பார்!
என்னகையோ? என்னுயிரோ வேல்! 26

வேண்டாமே வேண்டாம் வெறுங்கொடிய வாழ்விது
தாண்டவ மாடிடும் தாங்கொணா ஊழ்வினை
ஆண்டவா உன்னடியை அன்றாடம் சிந்தித்தும்
தாண்டவமோ ஒன்பதுகோட் கள்! 27

எத்தனையோ போர்க்களத்தில் ஐயாநீர் வெற்றி!வெற்றி
இத்தினையாம் என்னிதயப் போர்க்களத்தை
என்சொல்வேன்?
அத்தியொடு மாபரி வேங்கை அரிமாதேள்
இத்தினையில் தோல்வியோ? வேல்! 28

ஊழ்பெரிதோ? உய்விக்கும் உன்கருணை வேல்பெரிதோ?
தாழ்பெரிதோ தாழ்விக்கும் மாயை பெரிதோ?
ஆழ்பெரிதோ? ஆற்றோடை நீர்தான் பெரியதோ?
தாழ்பெரிதே! என்றியம்பு வாய்! 29

ஊழதுவும் கோளதும் உய்ய வழியின்றிப்
பாழென்ற கேணியிற் பாவியாய் விழவைத்துத்
தாளொன்று போட்டுத் தவியாய்த் தவிக்கவைத்துத்
தாளொன்றே நம்பியும் தாழ்வு? 30

Koviloor Digital Library

செந்தில் பதிமேவும் செவ்வேற் பெருமானே
எந்தை யருணகிரி இன்னிசைப் பித்தனே
சிந்தை இரங்காயோ? அம்மா! சிறியேனின்
முந்தை வினைதீர்க்கும் தாய். 31

என்பிறப்பும் ஓர்பிறப்போ? என்விதியும் ஓர்விதியோ?
என்பிறப் பேற்ற அயனெங்கு கற்றானோ?
மண்பிறப்பி லெல்லாம் மிகக்கடையேன் என்செய்வேன்?
முன்பிறப்பின் தீயூழ் அற. 32

பிறப்புற்ற நாள்முதலாய்ப் பேயேன் முருகா!
சிறப்புற்றேன் அல்லேன், சிதைவுற்றேன் வேலா!
அறப்பற்று மல்லேன், அருள்பற்றும் அல்லேன்,
இறப்புற் றிருந்தால் நலன். 33

பெண்முகம் பார்த்துப் பிழைமேற் பிழைசெய்த
வன்மனப் பாவிநான் வாழ்வறியாச் சாவிநான்
சண்முகப் பிள்ளைநான் சறுக்கி விழலாமோ?
என்முகம் பாராய் இனி. 34

பாராயோ? வாராயோ? பாவியேன் பற்றதனைத்
தீராயோ? தென்தணிகை வேந்தே! விழலுக்கும்
நீரேனோ? என்னிதய ஏந்தலே! என்தாயே!
சாராதோ சண்முக நெஞ்சு? 35

பட்டினியால் வாடிநான் பார்ப்பாயோ? என்தாயே!
பட்டுநான் போவதற்குப் பைந்தமிழே! சம்மதமோ?
சுட்டிப் பயலெனநீ விட்டுவிட்டாய் சூழுலகில்
சுட்ட புழுப்போல் துடித்து. 36

Koviloor Digital Library

நோயுற் றுழலாமல் நொந்துமனம் வாடாமல்
பாயிற் கிடவாமல் பார்பார்த் திழிக்காமல்
தாயிற் சிறந்த தணிகைப் பெருமானே!
நாயிற் கடையேனைப் பார். 37

தாயும் சரியில்லை! தந்தை சரியில்லை!
சேயும் சதமில்லை! சீரும் சிறப்பில்லை!
நாயும் நலமுண்டு! நான்தான் சரியில்லை!
காயும் மலரானேன் காய்ந்து! 38

தட்டுத் தடுமாறித் தையலார் பார்வையிற்
கட்டுப்படு மாறேறா? என்விதி? அய்யகோ!
சுட்ட புழுவானேன் சுப்ரமண்ய பிள்ளை—நான்
கொட்டு மறந்தோஅ யன்! 39

கணக்கற்ற காமுகர்கள் தொட்டமுலை காமப்
பிணக்குற்றுக் காசிறைத்து வீணிற் சுழன்று
பிணம்முற்ற ஊழ்வினையால் பேதை யுழன்று
கணக்கற்ற தப்பைத்தப் பேன். 40

செல்லாத காசானேன் செல்லரித்த ஏடானேன்
பொல்லாத ஊழ்வினையால் பொங்கித் தவிக்கின்றேன்
நில்லாத சக்கரம்போல், நீந்தியலா நொண்டிபோல்
கல்லாதான் காவியமா னேன். 41

இரக்கந்தா னில்லையோ ஏழை இவன்பால்
சுரக்கத்தா னில்லையோ என்னெஞ்சி லன்பு
உருக்கந்தா னில்லையோ உன்கழல் மீது
பருக்கத்தான் பெற்றாளோ பார்த்து. 42

Koviloor Digital Library

வறுமை என்னும் பெருங்கொடிய பூதம்
சிறுமை என்னும் வனிதையர் மோகம்
வெறுமை யென்றார்க்கும் வீண்விழியின் நேயம்
நறுவை யென்று நறுக்கு. 43

ஆசை யடங்கப் பெறுவேனோ? அண்ணல்மீ
தாசை தொடங்கப் பெறுவேனோ? கன்னல்மா
தாசை மயக்கம் தவிர்ப்பேனோ? மின்னல்வாழ்
வாசை ஒழியுமோ இன்று. 44

நான்போன போக்கில் நரகத்தில் விட்டுவிட்டால்
மான்போல் வலைப்பட்ட மாயை கதையாகும்!
ஏன்பட்டேன்? என்று எவர்கேட்பார்? எந்தையே!
ஏன்பட்டேன் நான்முகன் கை? 45

முடிவில்லா மாகதையோ! என்பிறப்பின் தீயூழ்
அடியில்லா மாமரம்போல் தள்ளாடி அந்தோ!
பிடியில்லை பாழ்கிணற்றில் சிங்கம்போல்! நித்தம்
முடிவில்லாத் துன்பமேல்துன் பம். 46

எட்டிரண் டென்றும் இதிகாச வாழ்வென்றும்
கட்டிப் பிடிகாற்றை என்றும் கணக்கில்லா
முட்டிமோதும் பாதைபல கூறுகின்றார் என்செய்வேன்
கட்டிப் பிடிப்பேனோ காண். 47

ஒன்று மறியாத ஊதாரி லோபிக்கு
நன்றேஇஃ தென்று நல்கிட நாயகா
என்று வருவாயோ? என்னிடர் தீர்த்தருள
அன்றே! உயிர்பிழைப்பேன் யான். 48

Koviloor Digital Library

செய்யாத் தவறனைத்தும் செய்தேன்; சிறியன்நான்
பொய்யா மொழிநீதி சற்றும் பிடித்தறியேன்
ஐயா இனிசெய்வ தென்முருகா! சண்முகா
கொய்யாக் கனிகாப்பா வாய். 49

மன்றாடிக் கேட்கிறேன் மன்னா வரவேண்டும்
செண்டாடும் பந்துபோற் சிந்தை தடுமாறி
அன்றாடம் துன்புறு மாசை யொழிந்திங்கு
நின்றாட வேண்டும்நெஞ் சில். 50

அங்குள வென்றுதேடி இங்குள வென்றுதேடி
எங்கும் தடுமாறி, நொந்து தவித்தேன்; நீ
இங்கே உளேனென்று ஆண்டா லொழியநான்
எங்கே திரிவேன் இனி? 51

ஏட்டி லடங்காது; யான்செய்த குற்றங்கள்
காட்டிலும் நாட்டிலும் என்போற் பிறப்பில்லை
ஆட்டிப் படைத்தவனே அந்தோ விதிஅடியார்
ஏட்டி லிடமுண்டோ சொல்? 52

எண்ணி முடிக்கத்தான் முற்றாமோ? என்குற்றம்
கண்ணிப் படுகாக்கை போற்கந்தா கல்லானேன்
எண்ணித் துடிக்கின்றேன் இன்னும் புவியெதற்கு
கண்ணில் படுவாயோ கனிந்து! 53

நான்செய்த குற்றத்தால் வீதியிலே கொண்டுவந்து
ஏன்செய்தாய்? ஏன்செய்தாய்? என்று பரிகாலில்
ஊன்நய்யக் கட்டி இழுப்பினும் போதுமோ?
ஏன்செய்தேன்? ஏன்பிறந்தேன் இங்கு? 54

Koviloor Digital Library

உடன்பிறந்த பந்தங்கள் போயினும் போக
உடல்பொருள் ஆவிபோயி னும்போக மற்றும்
கடல்பெரிய துன்பம் வரினும் வருக
அடலருணைப் பாதமட்டும் நின்று. 55

கோடிக் கணக்கில் தவறிழைத்தேன் கோழையான்
வாடி மனம்தள் ளாடிவறு மையுற்றேன்
தேடி யறியேன் திருப்புகழ்ப் பாதமதை
நாடி வருமோ நலன் ? 56

கல்லும் மணலும் கலந்துவிற்றேன் ; காசாசை
அல்லும் பகலும் அநியாயப் பாதையிற்
கொள்ளிவாய்ப் பேய்போற் குணங்கெட்டேன் சண்முகா!
சொல்லி முடியுமோ ஊழ் ? 57

பகுத்தறிவுப் பாழ்குருடன் பாமரரும் பாவம் !
பகுத்தறியாப் பன்றிபோல் பாழ்நரகில் வீழ்ந்து
வகுத்தறியும் வள்ளுவன் வாய்மொழியும் பொய்க்குமோ?
தொகுத்தறிவாய் தூய்மைக் கடல். 58

பட்டம், பதவி ; வெறியுற்றேன், பார்நகைக்க,
சட்ட மதைச்சத, மாக்கிச், சனியானேன்
சுற்றம் நலமுறச் சொத்து பலசேர்த்தேன்
முற்றும் முரணே விதி. 59

அயலார் மனைமீது ஆசையாற் நீதியற்றுக்
கயலே, கடலே, கனியே, யென்—விதி
மயலே புரிந்து மதியே மறந்தேன்
அயிலே அகற்று இருள். 60

Koviloor Digital Library

அரியென்றும், வேதமென்றும், யாகமென்றும், அந்தோ !
புரிகின்றார் செல்வமதை வீணாய் விதியோ ?
நரியொன்று ஏமாற்றி ஏமாந்த கன்றாய் ;
புரிகின்றார் இல்லை அறம். 61

கோவில்தான் கட்டியென்ன குற்றம் புரிகின்றார்
காவு டலியிடு கின்றார் கவியதுபோல்
சாவு தடுத்தறியச் சண்முகனைச் சாராதார்,
ஏவு கணைவிடுமோ ? சொல். 62

திக்கெங்கும் ஓடாதீர் தெள்ளித் திரியாதீர்
சொக்கிவீணாய் வாடவேண்டாம் ; சூத்திரம்
கற்கவேண்டாம்
செக்கிலிடு எள்போலச் சிந்தித்துச் செவ்வேளைச்
சொக்கியே சும்மா இரு. 63

காமன் கணைக்கு வலிமை பெரியதோ ?
பூமென் கழல்வேல் வலிமை பெரியதோ ?
சாமமும் ஏமமும் போரிடும் போதுநான்
சாவதே மேலென நின்று. 64

என்னுயிரைச் சண்முகா ஏற்றுக்கொள் இல்லையெனில்
என்னுயிரைக் கட்டி வதைக்கும் கனிமாது
பெண்ணுறவை இன்றோடு வீழ்த்திடு வேலினால்
உன்னுறவை வேண்டிநின் றேன். 65

என்று ஒழியுமோ ? இன்னும் புரியேன்
மறையே படுகிளியே ! புண்கண் படுவேல் !
பறையே ! படுகதியே ! இன்னும் பொறுமையேன் ?
இறையே ! இனிதோ உனக்கு ? 66

Koviloor Digital Library

கற்பழியாப் பெண்ணைநான் கற்பழித்தேன்; கண்மூடிக்
கற்பழிந்த பெண்ணோடு கற்பிழந்தேன் ; மேலான
கற்புநெறி மாதரசைக் கண்வைத்தேன் என்சொல்வேன் ?
அற்பர்க்கெல் லாமரசு நான். 67

எண்ணற்ற கோடிக் கணக்காண்டாய் எத்தனையோ !
புண்ணுற்ற பிட்டமதைக் கண்டாய் இருப்பினும்
கண்ணற்ற என்போற் பிறவியைக் கண்டதுண்டோ ?
கண்ணுற்று நோக்காயோ ? கண்ணு. 68

என்னதான் என்எழுத்தோ இவ்வாறு யானுழன்றேன்
பொன்னதாம் உன்பாதம் புல்லனுக்கும் உண்டோசொல் ?
கண்ணதாம் தித்திக்கும் செந்தமிழ்ப் பாதமதை
எண்ணதாம் சூட இசை. 69

பொல்லாப் புழுத்தலைப் பொய்யன் புரிந்ததெல்லாம்
செல்லாப் பணம்போல மன்னித்துத் தாய்க்குமேலாம்
எல்லா வலிய பெருமான் எனதிதயக்
கல்லாக் குகைவாழ வந்து. 70

பொய்சொன்னேன் பொய்சொன்னேன் நாளெல்லாம் பொய்சொன்னேன்
மெய்சொல்லி நானறியேன் மெய்வழி நானறியேன்
மெய்தளரும் போதுஎன் செய்வேன் முருகனே !
மெய்ஞ்ஞான முண்டோ எனக்கு. 71

கண்ணிமை காலமும் கந்தனே நான்தொழேன்
மண்சுமை பாரத்தால் மந்திபோல் மந்தமானேன்
என்னிமை நீங்காமல் ஏந்தலே ! காத்தருள
கண்ணிமைப் போதினில் வா. 72

Koviloor Digital Library

இப்படியோர் தாயைநான் எங்குமே கண்டதில்லை
எப்படிச் சென்றிடினும் ஏழையை என்மகனே
இப்படியும் நீதிரிய லாமோஎன் றேங்கியே
இப்படி செல்லென்னும் தாய். 73

கண்தைத்த பூச்சிபோல் காட்டில் பதறலுற்றேன்
முன்தைத்த முள்ளோடு பின்தைத்த முள்ளுள்கண்
மூன்வைத்த மூள்ளிலும் கண்ணீர்க் கதைபோலே
கண்வைத்துப் பாராயோ ? கண்ணு. 74

சொக்கித் தவிக்கின்றேன் சொர்க்கபுரி மாதென்று
விக்கிக் கிடந்துழலும் நாளன்றோ மெய்ஞ்ஞானம்
சொக்கலிங்கப் பிள்ளையே ! சொர்க்கலோக வித்தகனே
சொக்கலிங்க என்செய்வேன் நான். 75

பற்றேது மன்று பற்றற்றான் பாதமுற
பற்றாமோ ? பற்றுமோ பற்றாதோ ? நான்முகன்கை
பற்றுகின்ற பந்தமெல்லாம் நின்றுவிட்டால் அம்மம்மோ !
சுற்றுகின்றார் ஏதுரைப்பேன் வீண்? 76

ஆவினன் ஏரகம் செந்தில் பரங்கிரி
மாவடிவாழ் காஞ்சி இளைய வேலூரில்
ஆவினன் மோட்சத் திருத்தணி சோலைமலை
ஆவினன் வாழும் அரசு. 77

போரூர் மயிலம் புனிதவய லூர்விராலி
தேரும் கடலூர் வடலூர் திருச்சியில்
யாரும் நினைக்கமுத்தி சயும் திருஅருணை
தேரும் திருநாள்ச ழம்! 78

Koviloor Digital Library

ஆசையாம் வேங்கையை ஆற்றுக்குள் மூக்கிக்கொல்
பாசமாம் யானையைப் பாராது வெட்டிவீழ்த்து
கூசுமாம் கோபநாய் கோதைமோ கப்பாம்பு
போது கொன்றவன்யோ கி. 79

எப்பழி ஏற்பினும் ஏற்பேன் எனதுயிர்
செப்பரிய செவ்வேளுக் கன்பிலன் என்றாகின்
கொப்புளித்துச் சிந்தும் குருதிமுரு காமுருகா!
துப்பிழிய வாழ்வெதற்குத் தோய்ந்து. 80

தூக்கமும் துக்கமும் தொண்டையைத் தாக்குதே!
ஊக்கம் உறுதிஒரு சற்றுமிலை ஓம்!முருகா!
தூங்காத தூக்கத்தில் தூங்கநீ வைப்பதற்கு
ஏங்காமல் ஏங்கினேன் நான். 81

தாய்க்கும் தமக்கைக்கும் மனைவிக்கும் பேதமின்றி
நாயதற்கும் கீழாய் நடைகெட்ட பிண்டங்கள்
காய்க்கும் கனிக்கும் கருத்துண்டு; கர்மமோ?
பேய்க்கும் முறையுண்டு சொல்? 82

கங்கைதான் மூழ்கியென்ன? காவியம் கற்றென்ன?
குங்குமம் சாம்பல் குறுமணி பூண்டென்ன?
தொங்குநீள் தாடிகாவி தோகையர் பார்த்திட
எங்குதான் போகுமோஎண் ணம்? 83

தனக்குவரும் தாரத்தைத் தரம்வேண் டுவார்தான்
மனக்குறை மாசு மறப்பதேனோ? மாயை
பணக்குழியிற் பாவிகள் வீழ்ந்து பரத்தை
தனக்கேதான் என்பதென்ன கூற்று. 84

Koviloor Digital Library

கல்லாகி நீநின்ற காரணந்தான் என்னவோ?
புல்லருக் கஞ்சியோ? பொங்கிடும் உன்னடியார்
கல்லுக்கு அஞ்சியோ? கந்தா! கதறுகிறேன்
சொல்லுக்கா அஞ்சிஒளிந் தாய்: 85

கடவுளே தாமென்பார் கைசித்துக் காட்டி
உடல்பொருள் ஆவிபறித்து ஆண்டியாக்கி அந்தோ!
உடற்கட்டு மாதர்க் கடிமை யாகிக்
கடலிலும் மாபாவி ஏன்? 86

சற்றேனும் மற்றவரைக் கொற்றவா! நான்மதியேன்
சற்றேனும் குற்றமற நின்னடியார் தொண்டனானேன்
சற்றேனும் கல்விசெல்வத் திற்கிரப்ப தோநானும்
பற்றேதும் மில்லை பணிதுந். 87

இன்றொருவர் நாளை யொருவர் எனத்திரிந்து
கொன்றார்கள் கற்பு நெறிக்கன்னி மேல்நாட்டம்
வென்றார் களோ?வெங் கொடியகாமக் கோபமதை
என்றா வதுஅவன டிக்கு. 88

உருகி உலர்ந்து நினைந்து நெகிழ்ந்து
சுருதி கலந்து கவிகள் புனைந்து
சுருதி யுணர்ந்து நெறிகள் பயின்று
அருகி விழுந்ததே அருள். 89

பாட்டேதும் ஏற்றவில்லை பாவேறே பட்டஎன்
பாட்டையே பைத்தியக் காரன் புலம்பினேன்
கூட்டையும் கூட்டுவன் கும்பலையும் கொஞ்சிவீணில்
வீட்டை மறப்பதோ வேல். 90

Koviloor Digital Library

அப்பாவிக் கன்றொருநாள் சொந்தமானாள் தேனழகு
சிப்பாய்க்கு இன்றுமனம் தந்தாள் செழுகழுத்தி
அப்பாவிக் கென்சொல்வாள்? என்சொல்வாள்?
அம்மம்மோ
இப்பாவின் தந்தையைத் தேடு. 91

இப்படி அப்படி என்றெல்லாம் மேடையிற்
செப்பிடு வித்தை புரிவோர்கள் பண்நெறி
அப்படியே வாழுங்கால் நம்நாடு வான்உலகம்
இப்படிச் சென்றால் எங்கு? 92

நெறியின்றிச் செல்வங்கள் சேர்ப்போரும் தெய்வ
நெறியின்றித் தீமையாம் வீண்வழிசெல் வோரும்
குறியின்றி கள்வாழ்வு வாழ்வோரும் கந்தா
குறியின்றிப் போவார் குலைந்து. 93

நெஞ்ச முருக நெறியோடு சண்முகா!
தஞ்ச மெனச்சார்ந்தால் தந்திடுவான் அஞ்சலென
நஞ்சிலும் மிஞ்சிய வஞ்சகம் வேண்டாமோ
கொஞ்சி நடனங் கொளும். 94

ஊனு ருகஉழைத்தேன் ஓங்கி மரமானாய்
நானுருக என்சொல்கே ளாதுசென்றாய் பூதமே!
வானுருக கண்ணீரால் நான்கதறி னும்போமோ?
ஏனுருகேன் என்றிரங்காய் இன்று! 95

கட்டியவன் கட்டிலிலே தூங்கவைத்துப் பேய்நெஞ்சே!
கெட்டியவள் பின்சென்று பேரிழந்து பேரிழந்து
கொட்டியவன் ஊழென்றும் கோளென்றும் சொல்வதோ?
கட்டியவன் வந்தால்நீ எங்கு? 96

Koviloor Digital Library

ஐந்தடக்கம் இல்லா வழிபாட்டா லாவதென்?
ஐந்தனும் ஆறனும் அன்னையோ டாணையும்
பைந்தமிழ் பக்தன் உளத்தில் பதிந்திடுவார்
ஐந்தடக்கம் உள்ள மனம். 97

வேலனை கந்தனை வெஞ்சூரனைக் கொன்றோனை
காலனும் அஞ்சுவான் காங்கேயா உன்நாமம்
பாலனும் தந்தையாம் தாயுமாம் தொண்டனாம்
கோளானும் அஞ்சும் குரு. 98

என்னே இனிதின்பம் இங்கியான் கண்டதில்லை
விண்ணே நிகரோ ? ஒருசற்றும் இல்லைஇல்லை
முன்னை நுகர்ந்ததோ ? சற்றேதும் இல்லைஇல்லை
என்னே ! இனிவருமோ சொல் ? 99

எப்போ தழைத்தாலும் என்குரல் கேட்டுவந்து
அப்போதே வந்தருளும் அன்னையே வாழ்கநீ
இப்போதும் எப்போதும் என்னிறையே நெஞ்சினில்
முப்போதும் நின்று அருள். 100

வாழ்க உலகெலாம் வெல்க நன்னெறி
ஆழ்க அருள் நெறியின் அன்பர்கள் திரமுடன்
வாழ்க வளமுடன் வையகம் என்றென்றும்
சூழ்க முருக னருள் ! 101

Koviloor Digital Library

5. குரு

வெளியில் தெரிகிற மின்சாரக் கம்பி, பார்ப்பதற்குச் சாதாரணமாகத்தான் இருக்கும். ஆனால், அதைத் தொட்டுப் பார்த்தால்தான் தெரியும் அதன் தன்மை எப்படிப் பட்டதென்று! அதைப்போன்றே ஞானிகள் பார்ப்பதற்குச் சாதாரணமாகத்தான் காட்சி அளிப்பார்கள். ஆனால், அவர்களை அணுகி, ஆராய்ந்து, மனத்தால் தொட்டுப் பாாத்தால்தான், அவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பது விளங்கும். 1

எவ்வளவு பெரிய வைக்கோல் போராக இருந்தாலும் ஒரு தீக்குச்சி இருந்தால் போதும்—அதை அழித்துவிட லாம். எவ்வளவு பெரிய பாவமாக இருந்தாலும் ஒரு ஞான குருவின் பார்வை பட்டால் போதும்—அது அழிந்து போய்விடும்.

ஒரு விளக்கிலிருந்து ஆயிரம் விளக்குகளுக்கு ஒளி எடுத்தக் கொண்டாலும், அதனுடைய ஒளி குறைவ தில்லை. அதைப்போல் நிறைவு பெற்ற ஞானிகளிட மிருந்து பலர் பலன் பெற்றுக் கொள்வதால் அவர்களின் அருள் தன்மை குறைவதில்லை. 3

பத்து இடங்களில் 20 அடி, 30 அடி ஆழம் தோண்டித் தண்ணீர் வரவில்லையென்று வருத்தம் கொள்வதைவிட ஒரே இடத்தில் 200 அடி தோண்டினால் உனக்குத் தேவை யான தண்ணீர் கிடைக்கும். அதேபோல், கொள்கை ஒன்று குரு ஒருவன், என்ற அடிப்படையில் இருந்தால், உனக்கு தேவையான அருள் கிடைக்கும். 4

Koviloor Digital Library

ஒரு குருடன், மற்றொரு குருடனுக்கு வழி காட்ட முடியாது. ஞானமில்லாதவன் மற்றொருவனுக்கு எப்படி ஞானத்தைக் கற்பிக்க முடியும்? 5

அருளுக்கு உண்மையான ஞானியை நாடு. விமானத்தில் செல்ல, புகை வண்டி நிலையத்தில் காத்திருக்கக் கூடாது. போலி வேடதாரிகளிடம் சென்று காலத்தை வீணாக்கிக் கொள்ளாதே. 6

ஒரு வண்டிக்கு எல்லாவிதமான சாதனங்களும் சரியாக இருந்தாலும், நல்ல ஓட்டுநர் இல்லாவிட்டால் அதை ஒழுங்காக இயக்கிச் செல்ல முடியாது. அதைப் போன்று ஒரு மாணவனுக்கு, நல்ல குரு கிடைத்தால்தான் முக்திப் பயணத்திற்கு வழிநடத்திச் செல்ல முடியும். 7

ஒரு பட்டம் எவ்வளவு உயரத்தில் பறந்தாலும், அது அவனுடைய கையிலுள்ள நூலுக்குக் கட்டுப்பட்டுத்தான் இருக்கும். அதைப்போன்றே, ஒரு ஞானியின் உள்ளம் எவ்வளவுதான் உலக விவகாரங்களில் பிரிந்து போயினும், அவருடைய பஞ்ச பூதங்கள் அவருக்குக் கட்டுப்பட்டே இருக்கும். 8

பழுதடைந்த வீணையிலிருந்து எந்த நாதமும் எழாது. அதுபோல, பாவமிக்க மாணவனை, இறைவனேயன்றி வேறு எந்தக் குருவாலும் கடைத்தேற்ற முடியாது. ஆனால், இறைவனோ, அந்தப் பழுதடைந்த வீணையை நரகத்திற்குத் தான் அனுப்புவான். நரகத்திலும் திருந்தாவிடில் அவனின் விதி அதோகதிதான். 9

வீணை என்னவோ ஒன்றுதான். ஆனால், அதில் எழும் நாதமோ அதை மீட்டும் கரங்களைப் பொருத்தது. மனிதன் என்னவோ ஒருவன் தான். ஆனால், அவனின் அறிவு இயக்கப்படும் விதத்தைப் பொருத்துள்ளது. ஒரு

Koviloor Digital Library

வித்துவானின் சுரங்களில், உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் இனிய நாதம் எழும்புகிறது. அதுபோல் ஒரு நல்ல குருவிடமுள்ள சீடனின் ஞானமும் முழு ஒளி பெற்றுத் திகழ்கிறது. 10

பாலைவனத்தில் நெல்லை விதைத்தால் அது முளைக்காது. சில மண்ணில். சில பழச் செடிகளை நட்டால், அவை அந்த மண்ணில் வளரா, எவையெவை எந்தமண்ணில் விளையுமோ அதற்குத் தகுந்த நிலத்தில் தான் அந்தந்த விதைகளை விதைக்க வேண்டும். அதைப் போன்றே பலதரப்பட்ட மாணவர்களுக்கு, அவரவர் இயல்புக்கேற்ப குரு போதிக்க வேண்டும். அவரவர்கள் தகுதிக்கு மீறிப் போதனை செய்தால், அதைப் புரிந்து கொள்ளும் ஆற்றல், அவர்களுக்கு இல்லாததால், அது தகுந்த பயனைத் தராது. 11

உதிர்ந்து சிதறிய பூக்கள், ஒரு நாரால் மாலையாகின்றது. சிதறிய எண்ணங்கள் ஓர் அருள் குருவின் மொழியால் ஒன்றாகி, இறைவன் மார்பில் மாலையாகத் திகழ்கின்றது. 12

மழையை எதிர்நோக்கும் வாடிய பயிர்போல், பசுவை எதிர்நோக்கும் பசி மிகுந்த கன்றுபோல், அயலூர் சென்ற கணவனை எதிர்நோக்கும் குலமகள் போல், நினைத்து, நினைத்து, உருகி, உருகி, உலர்ந்து இருந்தால் ஞானகுரு தானே வந்து வெளிப்படுவார். 13

காலில் மலம் ஒட்டியவுடனே சுத்தம்செய்ய, எப்படித் தண்ணீரைத் தேடி ஓடுகிறோமே, அதைப்போல் மனத்தில் ஆசையென்னும் அழுக்கு நீங்க ஒரு நல்ல ஆசானைத் தேடிச் செல்ல வேண்டும். 14

வேம்பு கசப்பாக இருந்தாலும், அது நோய் தீர்க்கும் மருந்தாகிறது. சான்றோர்களின் வாக்கு கசப்பாயிருந்தாலும், அது மன நோயை நீக்கும் மருந்தாகும். 15

Koviloor Digital Library

6. விதி

பசி, நோய், வயிற்றுச்சூல், கர்ப்பம் இவையெல்லாம் அவரவர்கள் தாம் சுமக்க வேண்டும். மற்றவர்கள் சுமக்க முடியாது. அதைப்போல் அவரவர்கள் செய்த வினைப் பயனை அவரவர்கள் தாம் சுமந்தாக வேண்டும். 1.

விதியென்றால் நாம் எதை விதைக்கின்றோமோ அதையே அறுவடை செய்வதற்குப் பெயராகும். எங்கிருந்தோ புதிதாக முளைக்கும் செடியல்ல. 2.

என் விதி, என் விதி என்று சொல்லிக்கொண்டு மேலும் மேலும் தவறுகளைச் செய்து கொண்டு போவது தன் கண்ணைத் தானே நெருப்புக்கோலால் குத்திக் கொண்டதற்கு ஒப்பாகும். 3.

ஒரே விதமான கல், பல சிற்பிகளின் கையில் கிடைக்கிறது. ஒருவன் ஒரு தெய்வவடிவை வடித்துக் காட்டுகின்றான்: ஒரு சிற்பி மேதைகளின், வடிவத்தை வடித்துக் காட்டுகிறான். ஒரு சிற்பி கண்ணகியின் வடிவத்தை வடித்துக் காட்டுகிறான். ஒரு சிற்பி அருவருக்கத்தக்க சின்னங்களை விட ஆபாசமாக வடித்துக் காட்டுகிறான். ஆனால், சுத்தி, கல் உளி எல்லாம் ஒன்றுதான். சிற்பியின் எண்ணங்கள் தான் வேறு. அதைப்போலவே அவரவர்கள் எண்ணங்களுக்குத் தகுந்தவாறுதான் அவரவர்கள் செயலும், வாழ்க்கையும் அமையும். இதுதான் விதி. 4.

ஒரு கொலையைச் செய்த ஒருவன் குற்றவாளிக் கூண்டின் நின்றுகொண்டு நீதிபதியைப் பார்த்து, ''நான் செய்த

Koviloor Digital Library

கொலைக்கு நான் காரணமல்ல. விதியின் செயல். உலகத்தில் எல்லாமே இறைவனால்தான் நடைபெறுகிறது. அதைப் போன்றே இதுவும் இறைவன் செயல். முற்பிறப்பில் அவன் செய்த தவற்றுக்கு என்மூலம் கடவுள் பழிவாங்கினார்'' என்று கூறினால், நீதிபதி விட்டுவிடுவாரா? "நீ செய்த செயலுக்குக் கடவுள் மீதா பழி போடுகிறாய்?'' நீ சொன்னாயே அதே கடவுள்தான் உனக்குத் தூக்குத் தண்டனை வழங்க வேண்டும் என்று என்மூலம் உனக்குத் தண்டனை வழங்கச் சொல்கிறான்'' என்று அப்படிப்பட்டவனைப் பார்த்து நீதிபதி சொல்ல வேண்டி வரும். 5

எல்லாமே விதியின் செயல் என்றால் எல்லோருக்குமே நல்ல வாழ்க்கை அமைய வேண்டும். எல்லாமே இறைவன் செயல் என்றால் நல்ல வினைகளே நடைபெற வேண்டும். ஆனால், மக்களிடம் காமம், கொலை, சூது, வாது மலிந்து கிடக்கின்றன. கணவனை அருகில் உறங்க வைத்து விட்டு மாற்றானோடு சல்லாபம் புரியும் மனைவி, மனைவி இருக்கும்பொழுது மாற்றாளோடு காமலீலை புரியும் கணவன் போன்றவர்களின் செயல்கள் எல்லாம் கடவுள் செயலா? உண்மையில் உழைப்பவன் ஒருவன். ஆனால், உண்டு கொழுப்பவன் வேறு ஒருவன் மெய்யே சொல்பவன் பசியால் வாடுகிறான். ஏமாற்றிப் பிழைப்பவன் மஞ்சத்தில் வாழ்கிறான். இவைகளெல்லாம் கடவுள் செயல் என்றால், விதியின் செயலென்றால் இப்படிப் பல அறியாச் செயல்களுக்குக் காரணம் கற்பித்துத் தப்பித்துக் கொள்ளும் கயவர்களைத் தூக்கில் போட்டால் விதியென்ற பேரால் இனி அக்கிரமம் நடக்காது. இனிப் புதியதோர் உலகத்தை நாமே படைப்போம். அதில் சித்தர்களையும், முக்தர்களையும் உண்டாக்குவோம். நன்மை, தீமைகள் பிறர் தந்து அனுபவிப்பவையல்ல என்பதை நாம் உலகிற்கு உணர்த்துவோம். 6

தாவரங்களின் இலை, காய், கனிகள், பூக்கள் எல்லாம் ஒரு குறிப்பிட்ட காலம் வந்தவுடன் உதிர்ந்து அழிந்து

Koviloor Digital Library

விடும். மனித உயிர்களும் தாவரங்களைப் போன்றே தோன்றி மறைவது இயற்கை. ஒரு நிலையில்லாதது. இது தான் வாழ்க்கைத் தத்துவம் 7

ஒருவன் ஊமையாய்ப் பிறப்பதற்குக் காரணம் அவன் முந்திய பிறப்பில் அவசியமற்ற கொடுஞ்சொற்களால் பலரைக் குத்திக்குதறி இதயத்தை ஊமையாக்கியிருப் பான் அதன் விளைவே இந்த வினை. 8

திரைப்படக் கருவியில் என்றோ பிடித்த படத்தை இன்று நடப்பதுபோல் மீண்டும் பார்க்கின்றோம். நம் இன்றைய வாழ்வு என்றோ நாம் செய்த வினைகளின் விளைவுகளை-நல் வினையை நல்வினையாகவும், தீவினை யைத் தீவினையாகவும் காட்டுகிறது. 9

சிலர் தற்பொழுது நிரபராதிகளாகவும்,நல்லவர்களாக வும், இருப்பார்கள். ஆனால், அவர்களுக்கு வாழ்க்கையில் எண்ணற்ற சோதனைகள் ஏற்படுவதுண்டு. இது எதைப் போல்என்றால் எந்தக்குற்றமும் செய்யாத பட்டினத்தாரை திருட்டுப் பட்டம் சூட்டிக் கழுமரத்தில் ஏற்றப்போகும் பொழுது. "இறைவா யான் செய்த முன்வினையோ? இங்கு வந்து மூண்டதுவே!" என்று இறைவனை நினைத்துக் கூக் குரல் இடவும் கழுமரம் தீப்பற்றி எரிந்தது. அப்பொழுது அவர் "விதியென்பது தானாகவே வந்து மக்களைத் துன்பப் படுத்துவது அல்ல. நாம் பல பிறவிகளில் என்ன விதைக் கின்றோமோ, அதையே இப்பிறவியில் அறுவடை செய்கின்றோம்" என்றுணர்ந்தார். 10

ஒரு சாதாரண மனிதன் யாரையும் புண்படுத்தவோ, தண்டிக்கவோ மனம் வராது. அப்படி இருக்க, சில மாந் தர்கள் 'என்னைக் கடவுள் சோதிக்கிறார், தண்டித்தார்' என்று கடவுள் மீது பழி போடுவது, தவறு செய்த ஒருவன் தண்டிக்கும் நீதிபதியைப் பார்த்து, நீதிபதியை ஓர் அரக்கன் என்று சொல்வதற்கு ஒப்பாகும். 11

Koviloor Digital Library

தீமைகளைச் செய்துவிட்டு இதுவும் இறைவன் செயலென்று இறைவன் மீது பழியைத் தூக்கிப் போடுவார்கள். இது எதைப்போல் இருக்கிறது என்றால், தாய் சமைத்துக் கொண்டிருந்தாள். அவன் வெளியே போகும் நேரத்தைப் பார்த்து அவள் புதல்வன் பகைவனான எதிர்வீட்டுக்காரர் கூரையில், தன் வீட்டின் கொள்ளிக்கட்டையை எடுத்து வைத்து அதை எரித்துச் சாம்பலாக்கி விட்டான். ஏன் இப்படிச் செய்தாய்? என்று கட்டிப்போட்டு உதைத்துக் கேட்டதற்கு 'நானல்ல இந்தக் குற்றத்திற்கு மூலகாரணம். எங்கள் வீட்டில் நெருப்பு எரிந்து கொண்டிருந்தது. நெருப்புக்குக் காரணம் என் தாய். ஆகையால், இந்தக் குற்றத்திற்கு மூலகாரணம் என் தாய்தான்' என்று சொல்வதற்கு ஒப்பாகும். 12

சில அநியாயக்காரர்கள் உடனே தண்டிக்கப்படாமல் இருப்பதால் அவர்கள் தவற்றுக்கு மேல் தவறுகள் செய்கிறார்கள். ஒரு முரட்டுக் குதிரையின் துள்ளலை அதன் முதலாளி நீண்ட நேரம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான். நீண்ட நேரமாகியும் அது திருந்தாமையால் முதுகில் ஒரு பெரிய சுமையை ஏற்றிக் காலில் இரும்பு இழுபந்தங்கள் பூட்டிச் சாட்டையால் அடிஅடியென்று அடித்த பின்பே அதன் ஆணவம் அடங்கி, ஒடுங்கி ஒரு நிலைக்கு வந்து சேர்ந்தது. ஆதலால், தண்டனை பெறும் முன்பே தன்னைப் பக்குவப்படுத்திக் கொள்வது அறிவுடையவர்களது செயலாகும். 13

சில நன்மைகள் வரும்பொழுது மகிழ்வதும் அதற்குமுன் நாம் செய்த தீமைகள் துன்பங்களாக வரும்பொழுது துக்கப்படுவதும் மாந்தர்களின் இயல்பு. இது எதற்கு ஒப்பாகுமென்றால், ஒருவன் மற்றொருவனிடம் கொடுத்த கடனை (1000 ரூபாய்) திரும்பப் பெறும்பொழுது வட்டியும், முதலுமாக மகிழ்ச்சியுடன் பெற்றுக்கொண்டான். அதே நபர் மற்றொருவனிடம் பத்தாயிரம் ரூபாயைக் கடனாகப்

Koviloor Digital Library

விடும். மனித உயிர்களும் தாவரங்களைப் போன்றே தோன்றி மறைவது இயற்கை. ஒரு நிலையில்லாதது. இது தான் வாழ்க்கைத் தத்துவம் 7

ஒருவன் ஊமையாய்ப் பிறப்பதற்குக் காரணம் அவன் முந்திய பிறப்பில் அவசியமற்ற கொடுஞ்சொற்களால் பலரைக் குத்திக்குதறி இதயத்தை ஊமையாக்கியிருப் பான் அதன் விளைவே இந்த வினை. 8

திரைப்படக் கருவியில் என்றோ பிடித்த படத்தை இன்று நடப்பதுபோல் மீண்டும் பார்க்கின்றோம். நம் இன்றைய வாழ்வு என்றோ நாம் செய்த வினைகளின் விளைவுகளை-நல் வினையை நல்வினையாகவும், தீவினை யைத் தீவினையாகவும் காட்டுகிறது. 9

சிலர் தற்பொழுது நிரபராதிகளாகவும்,நல்லவர்களாக வும், இருப்பார்கள். ஆனால், அவர்களுக்கு வாழ்க்கையில் எண்ணற்ற சோதனைகள் ஏற்படுவதுண்டு. இது எதைப் போல்என்றால் எந்தக்குற்றமும் செய்யாத பட்டினத்தாரை திருட்டுப் பட்டம் சூட்டிக் கழுமரத்தில் ஏற்றப்போகும் பொழுது, "இறைவா யான் செய்த முன்வினையோ? இங்கு வந்து மூண்டதுவே!" என்று இறைவனை நினைத்துக் கூக் குரல் இடவும் கழுமரம் தீப்பற்றி எரிந்தது. அப்பொழுது அவர் "விதியென்பது தானாகவே வந்து மக்களைத் துன்பப் படுத்துவது அல்ல. நாம் பல பிறவிகளில் என்ன விதைக் கின்றோமோ, அதையே இப்பிறவியில் அறுவடை செய்கின்றோம்" என்றுணர்ந்தார். 10

ஒரு சாதாரண மனிதன் யாரையும் புண்படுத்தவோ, தண்டிக்கவோ மனம் வராது. அப்படி இருக்க, சில மாந் தர்கள் 'என்னைக் கடவுள் சோதிக்கிறார், தண்டித்தார்' என்று கடவுள் மீது பழி போடுவது, தவறு செய்த ஒருவன் தண்டிக்கும் நீதிபதியைப் பார்த்து, நீதிபதியை ஓர் அரக்கன் என்று சொல்வதற்கு ஒப்பாகும். 11

Koviloor Digital Library

தீமைகளைச் செய்துவிட்டு இதுவும் இறைவன் செய லென்று இறைவன் மீது பழியைத் தூக்கிப் போடுவார்கள். இது எதைப்போல் இருக்கிறது என்றால், தாய் சமைத்துக் கொண்டிருந்தாள். அவள் வெளியே போகும் நேரத்தைப் பார்த்து அவள் புதல்வன் பகைவனான எதிர்வீட்டுக்காரர் கூரையில், தன் வீட்டின் கொள்ளிக்கட்டையை எடுத்து வைத்து அதை எரித்துச் சாம்பலாக்கி விட்டான். ஏன் இப்படிச் செய்தாய்? என்று கட்டிப்போட்டு உதைத்துக் கேட்டதற்கு 'நானல்ல இந்தக் குற்றத்திற்கு மூலகாரணம். எங்கள் வீட்டில் நெருப்பு எரிந்து கொண்டிருந்தது. நெருப் புக்குக் காரணம் என் தாய். ஆகையால், இந்தக் குற்றத் திற்கு மூலகாரணம் என் தாய்தான்' என்று சொல்வதற்கு ஒப்பாகும். 12

சில அநியாயக்காரர்கள் உடனே தண்டிக்கப்படாமல் இருப்பதால் அவர்கள் தவற்றுக்கு மேல் தவறுகள் செய் கிறார்கள். ஒரு முரட்டுக் குதிரையின் துள்ளலை அதன் முதலாளி நீண்ட நேரம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந் தான். நீண்ட நேரமாகியும் அது திருந்தாமையால் முதுகில் ஒரு பெரிய சுமையை ஏற்றிக் காலில் இரும்பு இழுபந்தங்கள் பூட்டிச் சாட்டையால் அடிஅடியென்று அடித்த பின்பே அதன் ஆணவம் அடங்கி, ஒடுங்கி ஒரு நிலைக்கு வந்து சேர்ந்தது. ஆதலால், தண்டனை பெறும் முன்பே தன்னைப் பக்குவப்படுத்திக் கொள்வது அறிவுடையவர்களது செய லாகும். 13

சில நன்மைகள் வரும்பொழுது மகிழ்வதும் அதற்குமுன் நாம் செய்த தீமைகள் துன்பங்களாக வரும்பொழுது துக்கப் படுவதும் மாந்தர்களின் இயல்பு. இது எதற்கு ஒப்பாகு மென்றால், ஒருவன் மற்றொருவனிடம் கொடுத்த கடனை (1000 ரூபாய்) திரும்பப் பெறும்பொழுது வட்டியும், முதலுமாக மகிழ்ச்சியுடன் பெற்றுக்கொண்டான். அதே நபர் மற்றொருவனிடம் பத்தாயிரம் ரூபாயைக் கடனாகப்

Koviloor Digital Library

பெற்ற பின் அதைத் திரும்பக்கேட்டதற்கு அந்தக்கடன் எப்பொழுது வாங்கியது; அப்போது வாங்கிய கடனுக்கு இப்போது என்ன சம்பந்தம் இருக்கிறது? அது முடிந்து போன கதை. அதற்கு இப்பொழுது நான் என்ன செய்ய முடியும்? என்று சிறி விழுந்தானாம். பணத்தைப் பெறும் பொழுது என்னே மகிழ்வு? தான்பட்ட கடனைத் திருப்பிக் கொடுக்கும்பொழுது என்னே சங்கடம்? என்னே மாந்தனின் இயல்பு! 14

'நாம் செய்வது எல்லாமே கடவுளுக்கு அர்ப்பணம் செய்வது' என்று "பகவத்கீதையில்" சொல்லப்பட்டு இருக்கிறது. அப்படியென்றால் கொலை செய்வதும், கொள்ளையடிப்பதும், மது அருந்துவதும் வேசி வீட்டிற்குப் போவதும் கடவுளுக்குச் செய்யும் அர்ப்பணம் தானே? அவர்கள் எல்லோருக்கும் கடவுள் வாழ்த்தி வரம் அளிப்பாரா? அறிவுடைய சான்றோரே சிந்தித்துப் பாருங்கள். இங்கு நடக்கும் நன்மை திமைகளுக்கு இறைவனே காரணம் என்றால் நமது நாட்டில் சட்டத்திற்கும், நீதித்துறைக்கும், காவல் துறைக்கும் என்ன வேலை? 15

கடவுள் என்றால், அல்லது கடவுளால் கடவுளை இடப்பட்டது என்றால் எல்லாமே, ஒன்றாகத்தானே இருக்க வேண்டும். ஒவ்வொரு கடவுளும்; மதமும் வேறுபட்டு கூறுவது ஏன்? இதிலிருந்து கடவுள் சொன்னதாகச்சில கயவர்கள் தம் மதத்தில் இடைச்செருகல்கள் செய்ய மக்களை ஏமாற்றி வருகிறார்கள். கடவுளே! நீயே! நேரே தோன்றி என்பேரால் இந்த அக்கிரமக்காரர்கள் அநியாயம் செய்கிறார்கள். மக்களே இவர்களை நம்பாதீர்கள் என்று சொல்வாயோ? 16

Koviloor Digital Library

7. நீதி

செல்லாத நாணயமும், செல்வம் இழந்தவனுடைய நாணயமும் ஒன்றே! 1

ஒன்றுந்தெரியாத அப்பாவி ஒருவன் பேச்சில் மயக்கும் மோசக்காரனின் வலையில் விழுந்தால் நீந்தத் தெரியாதவன் கடலில் விழுந்த கதைக்கு ஒப்பாகும். 2

மேட்டிற்கு எத்தனை முறை நீர் பாய்ச்சினாலும் மேலே செல்லாது. அதேபோல் மடயர்களுக்கு எத்தனை முறை அறிவு புகட்டினாலும் மனத்தில் ஏறாது. 3

காக்கையும். குருவியும் கல்லைக் கண்டவுடன் ஓடி விடும். ஆனால் எருமை மாடு அடிபட்டால்தான் தோட்டத்தை விட்டு வெளியேறும். அதேபோல் சில மனிதர்கள் வாழ்க்கையில் பயங்கர அடிபட்டால்தான் திருந்துவார்கள். 4

இந்நாட்டில் உழைக்காமல் ஒருவன் உணவு உண்பது, இருகை, கால்கள், இல்லாத முடவன் பிச்சை எடுத்து உண்பதை விடக் கேவலமாகும். 5

பிறரை ஏமாற்ற நினைப்பவன் தன்னைத்தானே ஏமாற்ற விதை வீதைத்துக் கொள்கிறான். அது ஒரு நாள்

Koviloor Digital Library

பயிராகத்தான் போகிறது. அதை, அவன் ஒரு நாள் நிச்சயமாக அறுவடை செய்யத்தான் போகிறான். 6

பொருளின் பொருட்டுப் பூரியரைப் (தீயவர்கள்) புகழ்ந்து பொருள் பெறுதல், ஊனமுற்றுத் தெருத் தெருவாகச் சென்று இரந்து உயிர் வாழும் கடையரினும் கடையர்கள். 7

தவறு என்பது தெரியாமல் செய்வது, ஆனால் 'வாழ்க்கையில் தவறி விழுந்துவிட்டேன்' என்பது தெரியாமல் நடப்பதன்று; தெரிந்தே நடப்பதாகும். 8

செல்லாதீர்கள் ''No Entry'' என்ற எச்சரிக்கையைப் பார்த்ததும் சிலர் தவறிப்போய், பின் தப்பித்துக் கொள்வதுண்டு. பலர் அபாரதம் கட்டியதுண்டு, ஒரு சிலர் எச்சரிக்கையை எடுத்துக் கொண்டு வேறுவழி செல்வதுண்டு, அதைப்போல் தான் வாழ்க்கை என்னும் No Entry அத்து மீறலால் பலர் பலவிதம் துன்புற்றதுண்டு. 9

பாசியில் பார்த்து நடக்காவிட்டால் அது நம்மைப் படுபள்ளத்தில் வழுக்கித் தள்ளிவிடும்: அதைப்போன்று சில பாச விஷயங்களிலும் பார்த்து நடக்க வேண்டியுள்ளது. 10

தோட்டத்தில் மாலையில் மலரும் மல்லிகையும், காலையில் அங்காடிக்கு வந்துவிடும். அதைப்போல் மனத்தில் இருக்கும் சில ரகசிய உண்மைகள் எப்படியேனும் ஒருநாள் வெளியில் வந்துதான் தீரவேண்டும். 11

நெருப்பின் மீது எவ்வளவு பெரிய வைக்கோல்போரைப் போட்டு மூடினாலும், அதன் புகை வெளியேதெரியத்தான் செய்யும். அதைப் போன்றே; என்னதான் உண்மையை

Koviloor Digital Library

மறைத்துப் பொய் சொன்னாலும் அது ஒருநாள் வெளியே தெரியத்தான் செய்யும். 12

உண்மையான நண்பர்களை வறுமையான காலத்திலும், நமக்குச் சோதனை வரும் காலத்திலும்தான் நாம் அடையாளம் கண்டுகொள்ள முடியும். 13

செல்வத்தை எவ்வகையிலும் ஈட்டி விடலாம்; ஆனால், அருளை எவ்வகையிலும் ஈட்டமுடியாது. ஒருகுழந்தையைப் பிறப்பிக்க வேண்டுமாயின், தாயின் கருவறையின் மூலம் தான் பிறப்பிக்க இயலும். அதைப் போலவே அருளை அறவழியில்தான் அடையமுடியும். 14

சிலர் பேசினால் கூட்டம் அதிகமாக வருகிறது. அதனால் அவர்கள் பெரியவர்கள் ஆகிவிடமாட்டார்கள். மலத்தில் கூடத்தான் ஈக்கள் நிறைய மொய்க்கின்றன. ஆனால், அது மதிப்பு உள்ளதா? மலர்களில் சில ஈக்கள் தான் மொய்க்கின்றன. என்றாலும் அதன் சிறப்பே சிறப்புதான். கூட்டத்தை வைத்து எதையும் எடை போட முடியாது. குணங்களை வைத்துத்தான் எடை போடவேண்டும் 15

வீண் பகட்டுக் காரர்களின் பேச்சில் பல்லாயிரக் கணக்கான மக்கள் மயங்கிக் கூடுகிறார்கள். ஆனால், அறிஞர்கள் வீட்டில் சிலர்தான் கூடுவார்கள். இது எப்படியென்றால் பலசரக்குக் கடையில் பலபேர் கூடுவார்கள். ஆனால், நவரத்தினக் கடைக்கு ஒரு சிலரே தேடிச் செல்வார்கள்; அதுபோலத்தான். 16

பள்ளிகளில் சன்மார்க்கம் என்ற நன்மார்க்க வகுப்பு ஒன்று கண்டிப்பாக நடத்தப்பட வேண்டும். அப்போதுதான் அவர்கள் வருங்காலத்தில் மனச்சாட்சிக்குப் பயந்து நல்லவர்களாக வாழ்வார்கள். 17

Koviloor Digital Library

நாம் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்புவது நன்மை தரும் கல்வி பயிலவேயன்றித் தீய காதல் அறிவு கற்றுக் கொள்ள அன்று. 18

மானத்தை இழந்த பின் அதைத் திரும்பப் பெற முயல்வது கடலில் மாணிக்கத்தைப் போட்டுவிட்டுத் தேடுவதற்கு ஒப்பாகும். 19

சிலரின் பசப்பு வார்த்தைகளைச் சிலர் நம்புவார்கள். அறிவுள்ளவர்களின் வார்த்தைகள் அவர்களுக்கு அம்பு போல் இருக்கும். ஆடு, அறுப்பவனைத்தான் நம்புமாம். ஏனென்றால் அதை அறுக்கும் வரை தேவையான இனிய உணவுகளையே இதமாகக் கொடுப்பதால்..' அவனின் உண்மை உருவம் தெரியாது. 20

மனத்தில் வன்மையும், உறுதியும், நம்பிக்கையும் இல்லாமல் வாழ்க்கையைத் தொடங்குவது, ஓட்டைப் படகில் ஏறிக் கடலில் பயணம் செய்வதற்கு ஒப்பாகும். அதில் சிறிது, சிறிதாக நீர்ஏறி அது மூழ்கி விடுவதுபோல் வாழ்க்கையும அமிழ்ந்துவிடும். 21

கடல் பெரிதாக இருந்தாலும், அது குடிநீருக்குப் பயனாவதில்லை. சில தீயவர்களிடம் செல்வம் இருந்த போதிலும் அது யாருக்கும் பயனாவதில்லை. கடல் அருகே சிறு ஊற்றில் நல்லதண்ணீர் (குடிதண்ணீர்) கிடைக்கிறது. அதைப்போல் ஒரு நல்ல ஏழைக்குக் கிடைத்த சிறு செல்வமும் பலருக்கும் பயன்படுகிறது. 22

ஆலம் விதை சிறியதாக இருந்தாலும், அந்த மரத்தின் நிழல் பலருக்கும் பயன்படுகிறது. பனங்கொட்டை (பனை விதை) பெரிதாக இருந்தாலும் அதன் (பனைமரம்) நிழல் ஒருவருக்குக் கூடப் பயன்படாது. அதுபோல்

Koviloor Digital Library

சிறியவர்களாயிருந்தாலும் பலர் பயனடைகிறார்கள், சிலர் பெரியவர்களாய் இருந்தாலும் யாருக்கும் பயன் படுவதில்லை. 23

பொய் சாட்சிகளைக் கொண்டு சில நேரங்களில், சில நிரபராதிகள் தண்டிக்கப்படுவதும், சில குற்றவாளிகள் விடுவிக்கப்படுவதும் இந்த உலகத்தின் தலை எழுத்தாகி விட்டது. 24

சட்டங்களைப் படித்து ஒருவர் நீதிபதியாவதற்கு முன் அறநூல்களைப் பயின்று மனத்தைச் செம்மைப் படுத்திக் கொள்ள வேண்டும். அப்போதுதான் அவர் உயர்வு பெறுவார். இல்லையென்றால் நீதிதேவன் முன்பாக அவர் ஒரு மன்னிக்க முடியாத குற்றவாளியாகப் பின்னால் நிற்க நேரிடும். 25

நீதிபதியாக இருப்பவர்கள் எந்தவிதமான சலனங்களுக்கும், சபலங்களுக்கும் அடிமை ஆகக்கூடாது. அப்போதுதான் நீதியை நிலைநாட்ட முடியும். 26

நீதி என்பது யாராலும் விலை கொடுத்து வாங்க முடியாத இறைவனின் சொத்து. அதை விலைகொடுத்து வாங்க நினைப்பவனும், விலைக்கு விற்க நினைப்பவனும் கடவுளின் முதல் எதிரிகள் ஆவார்கள். 27

செடியில் இருக்கும் பொழுது ஒரு மலர் அழகாக இருக்கின்றது. அது ஒரு பெண்ணின் கூந்தலுக்குச் சென்றபின் கசங்கி, காய்ந்து, கருகிக் குப்பைப் பொருளாகி விடுகிறது. அதைப்போல் நன்நெறியில் இருப்பவர்கள் நெறி தவறிச் சென்றால் அந்த மலரைப் போலாகிவிடுவார்கள். 28

Koviloor Digital Library

மின்சாரத்தை முறையாகப் பயன்படுத்தினால் நமக்கு தேவையான நல்ல காரியங்களுக்கு எவ்வளவோ பயன் படுகிறது. அதைத் தவறாகத் தொட்டுவிட்டால் நம்மைப் பிணமாக்கி விடுகிறது. அதைப்போல் நம் மனத்தை நல்வழியில் செலுத்தினால் நன்மையடையலாம். மாற்றி மாற்று வழியில் செலுத்தினால் தீய பலனையே அடைவோம். 29

மருத்துவமனைக்கு வரும் நோயாளி அறுவைச் சிகிச்சைக்கான கருவிகளைக் கண்டவுடன் அலறிவிடுகி றான். ஆனால், அந்தக் கருவிகள் தன்னைக்கொல்லவிருக்கும் நோயைக் குணப்படுத்தி, உயிர் கொடுக்கும் ஆயுதமென்று நினைத்தால் பயம் வராது. அதைப்போல் வினைதீர்க்கும் மருந்து என்று ஏற்றுக் கொள்ள வேண்டும் நல்ல குருமொழியை. 30

இழி குணமுள்ள ஒருவரிடம் உயர்ந்த குணம் வருமென்று எதிர்பார்ப்பது, எட்டிக்காய் பழுத்தால் இனிக்கும் என்று காத்திருந்த கிளிக்கு ஒப்பாகும். 31

நோய் தீர்க்கும் மருந்துகளும் நம் நாட்டில் உண்டு. நோய் கொடுக்கும் மருந்துகளும் நம் நாட்டிலுண்டு. நோய் கொடுத்து அணு அணுவாக உயிர்கொல்லும் மருத்துவரும் நம் நாட்டில் உண்டு. அன்பால் உயிர் பிழைக்க வைக்கும் மருத்துவரும் உண்டு. 32

சில பாவிகளைத் திருத்த நினைப்பது சுட்ட உடலை உயிராக்கி எழுப்பி நடப்பிப்பதற்கு ஒப்பாகும். 33

வெறி பிடித்த நாய்க்கு நல்ல குணங்களைக் கூறினாலும் அது மீண்டும் வெறியாகும். அதைப் போல சிற வெறி

Koviloor Digital Library

பிடித்த வீணர்களுக்கு அறிவுரைகளைக் கூறுவதால் அவர்களுக்கு மீண்டும் மீண்டும் வெறிபிடிக்கும். 34

கண்ணாடியின் முன்நின்று, கோபமாகப் பார்த்தால், கோபமாகவும், சிரித்துக்கொண்டு பார்த்தால் சிரிப்பாகவும், வருத்தத்துடன் பார்த்தால் வருத்தமாகவும் தோன்றும். அது எப்படியென்று கேட்பது அறிவுடமையாகாது. நாம் எப்படிக் காட்டுகிறோமோ அதைப்போன்றே அது பிரதிபலித்துக் காட்டுகிறது. நாம் எப்படி மற்றவர்களிடம் காட்சி தருகிறோமோ அதன் பிரதியே நமக்கு வாழ்க்கையில் கிடைக்கும் பலனாகும். 35

நீரில் இருக்கும்போது தான் முதலைக்குப் பலம் அதிகமாக இருக்கும். அது தரைக்கு வந்துவிட்டால் அதன் வலிமை குன்றித் தரையில் உள்ள சிறிய உயிர்களுக்கும் பயந்துதான் ஆகவேண்டும். அதுபோலத் தனது நிலையிலிருக்கும்வரைதான் எவருக்குமே பலன். அந்த நிலையிலிருந்து எவன் மாறி விடுகிறானோ அவனுக்கு முதலையின் கதிதான். 36

ஒரு கொலைகாரன் கொலை செய்கிறான். நீதிபதி அவனுக்குத் தூக்குத் தண்டனை தந்து கொலையை நிறைவேற்றுகிறார். முன்னவன் தனது காழ்ப்புணர்ச்சியின் காரணமாகக் கொலை செய்கிறான். பின்னவர் அறத்தை நிலை நிறுத்தும் பொருட்டு அவனைத் தண்டிக்கிறார். இந்தச் செயலில் எப்படி வேறுபாடு இருக்கிறதோ, அதைப் போன்றே ஒரு குரு, சீடனைத் தண்டிப்பதோ, கண்டிப்பதோ அவனுக்கு நன்மை செய்யும் பொருட்டேயன்றி வஞ்மை செய்யும் பொருட்டு அல்ல. 37

ஒரு கரும்பு பயன்படுத்தும் விதத்திலிருந்து சர்க்கரையாகவும் போதைப் பொருளாகவும் மாறுகிறது. ஒரு

Koviloor Digital Library

குழந்தையை எப்படிப் பக்குவப்படுத்தி வளர்க்கிறோமோ அதைப் பொருத்தே அதன் வளர்ச்சி அமைகிறது. 38

மஞ்சனத்திக் கட்டையும் (நுணா) சந்தனக் கட்டையும், பார்க்க ஒன்று போல் இருக்கும். ஆனால், அதை ஆய்ந்து பார்த்தால்தான் அதன் வேறுபாடு தெரியும். அதைப் போன்றே மக்கள் அனைவரும் ஒன்றுபோல் காட்சி தருவார்கள். ஆனால், அவர்களை நெருங்கி, அணுகி ஆய்ந்து பார்த்தால்தான் அவர்களின் உண்மை உருவம் தெரியும். 39

உப்பில்லாத உணவு சுவைக்காது. உப்பு அதிகமாய் உள்ள உணவு சிறக்காது. அதைப் போன்றே வாழ்க்கையில் எதுவும் அளவோடு இருந்தால்தான் அது சிறப்பானதாக அமையும். 40

இல்லற வாழ்க்கை என்பது ஒரு மாட்டு வண்டிக்குச் சமம். இரண்டு காளை மாடுகளுக்குள் ஒரு மாட்டிற்குக் கால் ஊனமடைந்தால் வண்டி ஊர் போய்ச் சேராது. அது போல் கணவனும் மனைவியும் ஒத்திருந்தால்தான் வாழ்க்கைச் சுமையை இறுதிவரை சுமக்க முடியும். 41

பாம்பிற்குப் பல்லில், மட்டும் தான் விஷம். ஆனால், பாவிகளுக்கு உடல் முழுதுமே விஷம். 42

குற்றவாளிகளைத் தண்டிப்பதால் ஒருவனுக்குக் கொடுமைக்காரன் என்ற பட்டத்தைச் சூட்டிவிட முடியாது. பாவங்களின் சம்பளம் மரணம். எமன் உயிர்களை அவர்களின் தவறுகளுக்குத் தகுந்தவாறு பறித்துச் செல்கிறான். ஆயினும், அவன் பெயர் என்ன தெரியுமா? எம - தர்ம - இராஜன். 43

Koviloor Digital Library

நம்பிவந்த ஒருவருக்கு தாம் துரோகம் செய்வது ஒரு புலியிடம் அடைக்கலமானவனை அந்தப் புலியே அடித்துக் கொன்று தின்பதற்குச் சமமாகும். 44

நீதி மன்றத்தில் ஒரு குற்றவாளி தண்டிக்கப்படுகின்றான்; அதே குற்றவாளிமேல் நீதி மன்றத்தில் நிரபராதி என்று வீட்டுக்கு அனுப்பப்படுகின்றான் : நீதி என்றால் எல்லாம் ஒன்றாகத்தான் இருக்கும். இரண்டாக, மூன்றாகவா இருக்கும் ? 45

ஏழைகளுக்கு நீதி கிடைப்பதென்றால் இந்நாட்டில் முடியாத காரியமாகும். ஏனென்றால், அந்த ஏழைக்குப் பணம் கிடையாது. அவர்களுக்கு அரசியல் வாதிகளின் உதவியும் கிடையாது. 46

அரசியல்வாதிகள் பார்த்து. நினைத்தால் நீதியை எப்படி வேண்டுமானாலும் மாற்ற முடியும்; ஆனால், இவர் எல்லாம் நீதி தேவன் முன்பாக ஒருநாள் தண்டிக்கப் படுவது உறுதி. 47

குற்றவாளிகள் திருந்த வாய்ப்புத் தரலாம், ஆனால், வேண்டுபவர்கள் வேண்டாதவர்கள் என்று பார்க்கக் கூடாது. 48

நீதி யென்பது, அரசியல்வாதிகளிடம் சென்று விலை கொடுத்து வாங்குவது இல்லை ; அது இறைவனின் செங் கோல் அதை மதிக்காதவர்கள் தண்டிக்கப்படுவது உறுதி. 49

Koviloor Digital Library

8. அறிவு

வண்டியில் பயணமாகும்போது அதில் பயணம் செய்யும் பயணிகள் அனைவரும் தூங்கலாம். ஆனால், ஓட்டுநர் தூங்கினால் பயணிகள் கதி என்னவாகும்? அதைப் போல் அறிவென்னும் ஓட்டுநர் தூங்கினால் பஞ்ச பூதமென்னும் பயணிகள் காயப்பட்டு மரணத்திற்கு உள்ளாக நேரிடும். 1

வாத்துக்குக் கண்ட இடத்தில் முட்டை இடத் தெரியுமே ஒழிய, அதை அடைகாத்துக் குஞ்சு பொரிக்கத் தெரியாது. ஆனால், கோழி அப்படியல்ல. முட்டையிட்டு அடைகாத்துக் குஞ்சு பொரிக்கின்றது. அதைப்போல் பலர் கற்றதை மட்டுமே கக்குவார்கள். ஆனால், நல்ல அறிவுள்ள மாணவர்கள் கோழி அடைகாத்துக் குஞ்சு பொரிப்பதைப் போன்று புதிய புதுமைகளை உருவாக்கித் தருவார்கள், நாட்டு மக்களுக்கு. 2

மீனை எத்தனை முறை கழுவினாலும் அதன் துர்நாற்றம் போகாது. அதைப்போன்று எத்தனை முறை அறிவு நீரை ஊற்றிக் கழுவினாலும் சில அறிவற்றவர்களை மாற்ற முடியாது. 3

ஓட்டைப் பானையில் தண்ணீர் நிற்காது. தெளிந்த அறிவில்லாதவர்களிடம் எதைச் சொன்னாலும் அது மனத்தில் நிற்காது. 4

Koviloor Digital Library

சில பட்டதாரிகள் படித்து முடித்தபின் தாம் எல்லா வற்றிலும் கரைகண்டு விட்டதாக இறுமாந்து இருப்பது குரங்கொன்று பெரிய மரத்தின் உச்சியிலிருந்துகொண்டு வானத்தைத் தொட்டுவிட்டதாகநினைப்பதற்கு ஒப்பாகும். அது போல் கல்வி என்பது ஏட்டளவிலோ, சொல்ல ளவிலோ, எழுத்தளவிலோ அன்று. உயர்ஞானக் கல்வியின் நிலையே உண்மையான கல்வியாகும். 5

கூகை (ஆந்தை)க்குப் பகலில் கண் தெரிவதில்லை. அதைப்போல் தெளிந்த அறிவில்லாதவர்களுக்கு ஞானம் தெரிவதில்லை. இறையருளைத் தெளிவில்லாத, அறிவில்லா தோருக்குக் கற்பித்தாலும் அது அவர்கள் மனத்திற்கும் புலப்படாது. 6

ஆமை எப்படித் தன்னை ஆபத்திலிருந்து பாதுகாத்துக் கோள்ளத் தன் மேலோட்டைப் பயன்படுத்திக் கொள் கிறதோ, அதைப் போன்றே தீமையை அறிவென்னும் ஓட்டால் தடுத்து, நம்மைக் காத்துக்கொள்ள வேண்டும. 7

சிலர் எப்பொழுதும் அறிவில் முழு நிலவாய் ஒளிர்ந்து கொண்டிருப்பார்கள். ஒரு சிலரின் அறிவோ சில நாள்களில் வளர்பிறையாகவும், சில நாள்களில் தேய் பிறையாகவும் நிலையில்லாமல் மாறிமாறித் தோன்றிக் கொண்டிருக்கும். 8

பகலும் இரவும் மாறி மாறி வருவதுபோல் பக்குவ மற்றவர்களின் உள்ளத்தில் அறிவும், அறியாமையும் மாறி மாறித் தோன்றி மறைகிறது. 9

மின்விசிறியை நாம் தட்டிவிட்டால் அதை நிறுத்தும் வரை அந்த மின்விசிறி ஓடிக்கொண்டே இருக்கும். விசையை நிறுத்தினால்தான் அது நிற்கும் அதைப் போன்றே ஆசையென்னும் விசிறி ஓடிக்கொண்டிருப்பதை,

Koviloor Digital Library

நிறுத்த வேண்டுமாயின் அறிவென்னும் விசையை நாம் பயன்படுத்த வேண்டும். 10

எறும்பு சிற்றுபிராயிருந்தாலும் எதிர்காலத்தை எண்ணி முன்னேற்பாடாய் உணவைச் சேகரித்து வைக்கின்றது. உருவில் பெரியதான குரங்கோ எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திப்பதில்லை. அதனால்,மழைக்காலத்தில் உடல் குளிரோடும் வயிற்றுப் பசியால் வாடுகின்றது. பகுத்தறிவு பெற்ற நாமும் இம்மை வாழ்வுக்கேயன்றி மறுமை வாழ்வுக்கும் நலமான செயல்களைச் செய்து புண்ணியத்தைச் சேர்த்து வைத்துக் கொள்ள வேண்டும். சிந்தித்துச் செயல்படாவிடில் பாவச் சுமையை இம்மைக்குமேயன்றி மறுமைக்கும் சுமக்க நேரிடும். 11

ரோடித் தூய்மையாகச் செல்லும் பெரிய யானை சேற்றிலே புரண்டு வரும் பன்றியைக் கண்டவுடன் விலகிச் செல்கிறது. அருவருக்கத்தக்க அந்தக் கரும் பன்றியோ களிறு தன்னைக் கண்டு விலகிச் செல்வதாய் எள்ளி நகைக்கின்றது. அதைப் போல்தான் சில மூர்க்கர்கள் அடக்கமுள்ள அறிவுடையோரை நினைக்கின்றனர். 12

கண்ணில் ஒளியும், கருத்தில் தெளிவுமில்லாதவரிடம் நவரத்தினத்தைக் கொடுத்தால் அதன் தன்மையை உணர முடியாது! அதுபோல் உள்ளத்தில் தெளிவான மெய்யறிவு இல்லாதவன் இறைவனை உணர முடியாது. 13

செல், கறையான், எலி போன்ற உயிரினங்கள், எவ்வளவு உயர்ந்த, அழகான நூல்களாய் இருப்பினும் அதைக் கடித்து அரித்துப் பாழ்படுத்திவிடும். அதேபோல் அறிவற்ற மாந்தர் கையில் எவ்வளவு பெரிய உயர்ந்த நூல்களைக் கொடுப்பினும் அது பயனற்றுப் போய் விடும். 14

Koviloor Digital Library

யாம் கண்ட நூல்களில் அறிவுச் செல்வம் நிறைந்த திருவள்ளுவரின் திருக்குறளுக்கு மறுகுறளோ அல்லது அருணகிரிநாதரின் திருப்புகழுக்கு மறுபுகழோ இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. 15

பத்தரைமாற்றுத் தங்கத்தை அடிக்கடி துவக்குவ தில்லை. ஆனால்,பித்தளையை அடிக்கடி துலக்காவிடில் அது கறுத்துப் போய்விடும். அறிவாளிகளுக்கு அடிக்கடி சொல்ல வேண்டியதில்லை. ஆனால் அறிவற்ற இழிமாந்தர்களுக்கு அடிக்கடி அறிவுரை புகன்றால்தான் சிறிது காலமாவது சற்றுப் பிரகாசிப்பார்கள். இது நிலையில்லாத புத்தி. 16

உள் தாழ்ப்பாள் போடப்பட்ட வீட்டிற்கு வெளியி லிருந்து திறக்க இயலவில்லையே, என்று சொல்லிக் கொண் டிருந்தால், எப்படித் திறக்க இயலும்? அதைப் போன்றே உள்ளே இருக்கும் மாயை என்னும் தாழ்ப்பாளைத் திறக் காமல் அறிவென்னும் கதவு திறக்காது. 17

தெருவுக்குள் நின்றுகொண்டு சுற்றிச் சுற்றிப் பார்த்தா லும் ஊரின் எல்லை தெரியாது. அதையே ஒரு மலையின் மேலிருந்து பார்த்தால் அந்த நகரமே தெரியும். அதைப் போல் தன்னை உணர வேண்டுமாயின் அறிவாகிய மலையின் மீது ஏறிப்பார்க்க வேண்டும். 18

கல்வி என்பது கல்லின்மீது எழுதப்பட்ட எழுத்து. எப்படிக் காலமெல்லாம் அழியாமல் இருக்கின்றதோ, அதைப்போல் நெஞ்சில் பதிந்து கற்றதை என்றும் பின்பற்றி நடப்பதாகும். 19

சொத்தை (பயன்படாத) விதை ஒருக்காலும் முளைக் காது. மனப்பக்குவம் இல்லாதவர்களிடம் ஒருக்காலும் ஞானம் தோன்றாது. 20

Koviloor Digital Library

ஓர் உயிரைப் பதைபதைக்கக் கொல்லவோ, அல்லது கொன்ற உயிரை உண்பதோ அறிவுடைய மாந்தர் செய்யும் செயல் அல்ல. 21

நமது குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் இறந்துவிட்டால் நமது உள்ளம் எவ்வாறு பரதவிக்கிறதோ, அதைப் போன்றுதானே, நாம் கொல்லும் விலங்கினங்களின் இனமும் பரதவிக்கும்! ஏன் அறிவுடைய மாந்தர்கள் உணர மறுக்கிறார்கள்? 22

சிறியவர்களிடமிருந்தும், சில அரிய பெரிய கருத்து கள் தோன்றலாம். இது பூசணியின் சிறிய கொடியில் இருந்து பெரிய பூசணிக்காய் காய்ப்பதற்கு ஒப்பாகும். 23

உலகில் எல்லோருடைய உதவியும் ஓர் எல்லைவரை தான். ஆனால், நாம் கற்ற உயர் கல்வியாகிய ஞானம் இம்மைக்கும் மறுமைக்கும் பெருந்தோணியாகும். 24

சிலரின் பட்டப் படிப்பு என்பது காற்றில் பறக்கும் நூல் பட்டத்திற்கு ஒப்பாகும். பெருங்காற்று அடித்தால் நூலறுந்து அது கிழித்துவிடும். ஆதலால், உள்ளத்தில் உறுதியான கட்டுப்பாட்டுடன் படிக்கும் ஞானப்படிப்பே நிலையான பட்டப் படிப்பாகும், 25

நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களின் மீது அவ நம்பிக்கை கொள்வதால், அவர்களால் அடையும் பல நன்மைகளை நாமே, நம்மால் இழந்து போகிறோம். 26

நம்பிக்கைக்குப் பாத்திரமில்லாதவர்களிடம் நாம் நம்பிக்கை வைப்பது, கூரிய அம்பு என்று தெரிந்தும் அதை எடுத்துக் கண்ணில் குத்திக்கொள்வதற்கு ஒப்பாகும். 27

Koviloor Digital Library

ஏழை ஒருவன் தன் மகனைப் பட்டதாரியாக்க மிகவும் துன்பப்பட்டுத் துயரப்பட்டுக் கல்லூரிக்கு அனுப்புகிறான். ஆனால், கல்லூரியைவிட்டு வெளியே வரும்பொழுது சில மாணவர்கள் இல்லாத தீய பழக்கங்களை எல்லாம் கற்றுக் கொண்டு வெளியில் வருகிறார்கள். இதற்குத்தானா பெற்றோர்கள் துன்பப்பட்டுப் பிள்ளைகளைக் கல்லூரிக்கு அனுப்புவது? 28

மாணவ மணிகளே சற்று உணர்ந்து பாருங்கள், எதற்காக இவ்வுலகிற்கு வந்தோமோ அந்த உயரிய பணியைச் செய்யாமல், நாமும் கெடுவதோடு நாட்டிற்கும் நாம் சுமையானது மனிதப் பிறப்பாகுமா? 29

அறிவு என்பது மக்களை ஏமாற்றிப் பணம் பறிப்பதோ? ஒட்டுப் பிரிப்பதோ இல்லை. அறிவென்பது தானும் கடைத்தேறி மற்றவர்களையும் கடைத்தேற வழி வகுப்பதே யாகும். 30

இந்தக் காலத்தில் அறிவை எதை வைத்து மக்கள் தீர்மானிக்கிறார்கள் என்றால், பணத்தையும் பதவியையும் வைத்துத்தான். இவை நிலையானவை அல்ல. 31

மெய்யறிவை உணர்ந்து எவன் உலகுக்குக் கற்பிக்கு கிறானோ? அவனே! என்றும் நிலைத்து நிற்கும் ஞானி யாவான் இதை யறியாதவர்கள் பதர்கள். 32

Koviloor Digital Library

9. ஒழுக்கம்

உடைந்துபோன ஓடு ஒன்றுசேராது. ஒழுக்கமற்ற வாழ்வு உயர்வாகாது. 1

சந்தனக் கட்டையை உரசிப் பார்த்தால்தான் அதன் மணம் தெரியும். அதைப்போல் சிலரை நெருங்கிப் பார்த்தால்தான் அவர்களது உயர்ந்த குணங்கள் தெரியும். 2

பாறைமீது தண்ணீர் ஊற்றினாலும் அது நிற்பதில்லை; கீழே போய்க் கொண்டுதான் இருக்கும். அதைப் போன்றே, ஞான நூற்களைப் படிப்பதாலோ அல்லது மேடையில் மணிக்கணக்கில் பேசுவதாலோ முழு ஞான அருள் வந்து விடுவதில்லை. படிக்கின்ற நூல்களின் சாரத்தைப் பின் பற்றி ஒழுக்கமுடன் நடந்தால்தான் ஞானம் கிடைக்கும். 3

ஒழுங்கீனமாக வாழ்க்கை நடத்துதல், கண்ணில் வந்து தைக்கும், அம்பைப் போன்றதாகும். ஆனால், மற்ற துன்பங்கள் எல்லாம் காலில் தைக்கும் முள்ளைப் போன்றதற்கு ஒப்பாகும். ஆதலால், கூடுமானவரை ஒழுக்கமான வாழ்க்கை வாழக் கற்றுக்கொள்ள வேண்டும். 4

நல்ல நீராகிய குளம், ஆறு இவைகளில் வாழும் மீன், கடல் நீரில் சென்றவுடன் உயிர் வாழாது. அதைப்

Koviloor Digital Library

போன்று அறிவுடைய சான்றோர்கள் தீயவர் கூட்டத்தில் கலந்து உயிர் வாழ முடியாது. 5

பனிமலையின் உச்சிக்குச் செல்லப் போதிய பாதுகாப்பான பொருள்கள் தேவை. இல்லையென்றால் உயிருக்கே ஆபத்து வந்துவிடும். அதுபோல் இந்த உலக மாயை என்னும் பனிக்கட்டி மலையில் நடக்கும்போது அறம், ஒழுக்கம், பண்பாடு, போன்ற உயரிய குணங்களைக் கவசமாய்க் கொண்டு வழி தொடர்ந்தால்தான் இறுதியில் வெற்றியடைய முடியும். 6

மரத்தில் பூக்கும் எல்லாப் பூக்களும் கனியாவதில்லை; சில உதிர்ந்துவிடுகின்றன. அதுபோல் உலகில் தோன்றும் எல்லாரும் சிறப்பாக வாழ்வது இல்லை, 7

அடிப்படை (அஸ்திவாரம்) இல்லாத கட்டடம் உறுதியாகச் சீராக அமைவதில்லை. அதைப்போன்றே ஆரம்பத்திலேயே ஒழுங்காக வளர்க்காத பிள்ளைகளின் வாழ்க்கையும் சீராக அமையாது. 8

மாணவர்கள் ஒழுக்கமாய் வாழ ஆசிரியர்களும் குருகுல மாணவர்கள் சீராக—குருகுலக் குருவும், குழந்தைகள் செம்மையாக வாழப் பெற்றோர்களும் ஒழுக்கமாக வாழ்ந்து, உயர்வானதைக் கற்பிக்கவேண்டும். 9

இறப்பு என்பது உயிர்பிரிவதல்ல, மானம் போவதே இறப்பாகும். உடலைவிட்டு உயிர் பிரிந்தால் அது ஒரு நாள் அழுகையுடன் ஓய்ந்துவிடும். ஆனால், மானமென்னும் இறப்புற்றால் உயிர் இருக்கும் பொழுது, உயிர் போன பின்பும் அழியாத பெரும் பழியாய் உலகத்தில் நின்று நிலவ நேரிடும். 10

Koviloor Digital Library

சிலர் "எனக்கு வாழ வழியில்லை, எனவேதான் என் உடலை விற்றுப் பிழைக்கின்றேன்" என்று கூறுகிறார்கள். பழக்கூடை தூக்கியோ, கூலிவேலை செய்தோ பிழைக்கும் மாதர்களை நாம் நிறையக் காண்கின்றோம். இப்படியின்றி உடலை விற்று வாழ்வது தங்களின் சொகுசு வாழ்க்கைக்கே! இதுவும் ஒரு பிறப்பா? இதுவும் ஒரு வாழ்க்கையா? 11

ஒவ்வொருவனும் தனக்கு வரும் தாரம் தரமுள்ளவளாகவும், கற்புள்ளவளாகவும், அறிவுள்ளவளாகவும், அழகுள்ளவளாகவும், பண்புள்ளவளாகவும் இருக்கவேண்டும் என்று கனவு காண்கிறான். ஆனால், தான் அவ்வாறு இருக்கின்றானா என்று சற்றேனும் சிந்தித்துப் பார்ப்பதுண்டா? 12

ஒழுக்கம் என்பது பிறர் புகட்டி வருவது இல்லை. தானாகவே தோன்றக்கூடியது. அது வாழும் நாட்டையும் கலாச்சாரத்தையும் பொருத்தே அமையவேண்டியது. 13

நாட்டுக்கு நாடு சாதிக்கு சாதி கலாச்சாரப் பண்பாடு மாறுபட்டு இருப்பதால் திருக்குறள், தொல்காப்பிய வழியே நாட்டவர்க்கும் எவ்வினத்தவர்க்கும் மேம்பாடு உள்ளதாக இருக்கும். 14

Koviloor Digital Library

10. வாய்மை

யானை எவ்வளவு பெரியதாக இருந்தாலும் ஒரு சிறிய அங்குசத்திற்கு அடங்கிக் கிடக்கிறது. மிக உயர்ந்தவர்கள் சிறியவர்கள் சொல் மெய்யாகின் கட்டுண்டு கிடப்பார்கள். 1

மகிழம்பூ காய்ந்து கருகிப் போயினும் மணத்தில் குறைவதில்லை அதுபோல் உண்மை பேசுபவர்கள் உடலே இரண்டு துண்டானாலும், உண்மையைத் தவிர வேறு ஒன்றையும் உளற மாட்டார்கள். 2

உண்மை பேசும் ஒருவனைத் தேவருங் கண்டு அஞ்சுவர். இது சிங்கத்தைக் கண்டு யானை அஞ்சுவதற்கு ஒப்பாகும். 3

உண்மை என்பது மனச்சாட்சிக்கு மாறுபட்டு மொழியாது. இது ஓடிவரும் வெள்ளத்தைப் போன்றது. களி மண்ணோ கூரையோ (குப்பை, கூளம்) போட்டு அணை போடமுடியாது. 4

உண்மையென்பது இறைவனின் மறுவடிவம். பொய் யென்பது தீமையின் முழுவடிவம். 5

பொய்யைப் பலநாள் மறைக்க முடியாது. முதிர்ச்சியுற்ற கர்ப்பிணி எத்தனை நாள் அதனை மறைக்க முடியும்?

Koviloor Digital Library

ஒரு நாள் வயிறு பெருத்து உண்மையென்னும் குழந்தை பிறந்தே தீரும். 6

உண்மை பொய்யாகவும், பொய் உண்மையாகவும், சில நேரங்களில் காட்சியளிக்கின்றன. தூரத்தில் வரும் ஆட்டுக் குட்டியை, ஆண் என்றோ, பெண்ணென்றோ அறுதியிட்டுக் கூற முடியாது. அது அண்மையில் வந்தவுடன் உண்மை புலனாகிவிடும். அதுபோல் காலம் வந்ததும் உண்மையும் பொய்யும் தானே வெளிப்பட்டுவிடும். 7

வாய்மையே ! கொல்லும் ! தீமையே வெல்லும் ! இது இன்றைய நடைமுறைச் சித்தாந்தம். ஆனால், எந்த வாய் மையைக் கொன்றார்களோ அந்த வாய்மையே அவர் களைக்கொலை செய்யும் ஒருநாள். 8

நாணயம் உள்ளவர்கள்தாம் இந்த நாட்டை ஆள வேண்டுமே யொழிய நாணயமற்றவர்கள் ஆண்டால் கோமகன் வழியே குடிகள் என்று நாடு சுடுகாடு ஆகி தானும் அழிவதும் அல்லாமல் சாதாரண பாமர மக்களும் பொசுக்கப்படுவார்கள். 9

Koviloor Digital Library

11. முக்தர், சித்தர், பக்தர் யோகி, ஞானிகள்

நம் கண்ணுக்குத் தெரிகிற மாபெரும் ஒளி ஒன்று நிலவு. மற்றொன்று கதிரவன். ஆனால், இவற்றை விடப் பல மடங்கு ஒளி பொருந்திய நட்சத்திரங்கள் வானத்தில் இருக்கின்றன. அவை நம் கண்ணுக்குத் தெரிவதில்லை. அதைப்போல் சித்தர்கள் பலர் வெகு தொலைவிலே சிறிது சிறிதாக ஒளி வீசிக்கொண்டிக்கிறார்கள். 1

பண்புமிக்க பாவலன் என்பவன் பலவற்றையும் தெள்ளத் தெளிய ஆய்ந்து மெய்ப்பொருளை அகழ்ந்து எடுப்பவன். அவன் பல வண்ணமிக்க நறுமண மலர்களிலிருந்து இனிய தேனைச் சேர்த்து வைக்கும் தேனீக்கும் மேலானவன். 2

உப்பாகிய கடல் நீரைக் கார் மேகம், உவர்ப்பை நீக்கி உயிர் வளர்க்கும் நன்னீராய்ப் பொழிகிறது. அது போல் உண்மையான பாவலன் தீமைகளை நீக்கி நன்மை பயப்பனவற்றையே பாடுவான் நாட்டுக்காக! 3

பாதரசம் எப்பாத்திரத்தில் இருப்பினும் அது அதனுடன் ஒட்டாது. அதைப்போல் ஞானிகள் உலகத்தோடு வாழினும், அவர்கள் எதனுடனும் ஐக்கியமாக மாட்டார்கள்— இறைவனைத் தவிர. 4

Koviloor Digital Library

கண்ணாடி தன் முன்னே இருக்கும் உருவத்தை மட்டுமே காட்டும். மருத்துவக் கருவிகள் சில உடலின் உள்ளுறுப்புகளை அப்படியே படம் பிடித்துக் காட்டும். மிகச் சிறந்த சில மருத்துவக் கருவிகள் உடலினை அணு அணுவாகப் படம் பிடித்துக் காட்டும். அதைப்போன்றே சித்தர்கள் எதையும் அணு அணுவாகப் படம் பிடிக்கும் தன்மை உடையவர்கள். வெறும் உருவத்தை மட்டுமே முன் நிறுத்திக் காட்டும் கண்ணாடியல்லர் ஞானிகள். எல்லாவற்றையும் உணரும் ஆற்றல் பெற்றவர்களே ஞானிகள். 5

மயிலின் உடலில் இயற்கையாகவே பலவித வண்ணக் கலவை இருக்கிறது. அது யாராலும் தீட்டப்பட்டதன்று. அதைப் போன்றே ஞானிகளிடத்தில் இயற்கையாகவே நல்ல குணங்களும், பேரறிவும் அமைந்திருக்கின்றன. அவை யாரும் சொல்லி, ஏற்பட்டதல்ல. அது இறைவன் ஈந்த வரப்பிரசாதம். 6

உலகில் எத்தனையோ பொருள்கள் தோன்றித்தோன்றி மறைந்து கொண்டிக்கின்றன. ஆனால், கதிரவனும், மதியும் எப்போதும் மறையாமல் தினமும் தோன்றிக் கொண்டிருக்கின்றன. அதைப் போன்றே உலகத்தில் சித்தர்களும் யோகிகளும், என்றும் மறையாத புகழுடன் உலவுகின்றனர். 7

தாமரை இலை எத்தனை ஆண்டுகள் தண்ணீரிலேயே இருந்தாலும், தண்ணீருக்கும் தனக்கும் சம்பந்தம் இல்லாத நிலையைப் போல் இருக்கும். அதைப் போன்று ஞானிகள் உலகத்தோடு ஒன்றி இருப்பதைப் போன்று காட்சி தந்தாலும் தாமரையைப் போன்று உலக மாயையுடன் தொடர்பின்றி இருப்பார்கள். 8

Koviloor Digital Library

உடன்பிறந்த தேங்காயும், ஓடும் (சிரட்டையும்) என்ன தான் ஒன்று சேர்ந்திருந்தாலும் எண்ணெய்ச் செக்கில் போடும்போதும், மக்கள் பயன்படுத்தும் போதும் இரண்டும் தனியாகித்தான் தீரவேண்டும். மாயையுடன் பிறந்த மனிதனும் மாயையை விட்டு விலகி வந்தால்தான் ஞானத்திற்குத் தகுதியானவன் ஆக முடியும். 9

கடலிலும், ஆற்றிலும் வாழும் மீன்கள் அதன் சலசலப்பிற்கு அஞ்சியதில்லை. அதைப் போல் உலகத்தில் ஞானிகள் வாழ்ந்தாலும் மாயையின் சலசலப்பிற்கு அவர்கள் அஞ்சுவதில்லை. 10

மாந்தராய்ப் பிறப்பு கிட்டுவதே அரிது. அது கிட்டியும் தன்னைப் பக்குவப்படுத்திக் கொண்டு நன்னெறியில் வாழத் தெரியாதவர்கள், பல ஆண்டுக் காலம் தவம் புரிந்து பெற்ற தன் குழந்தையைத் தானே தன் கையால் நெரித்துக் கொல்லும் தாய்க்கு ஒப்பாவர். 11

சற்றும் நன்னெறியில் நடக்காதவன் மதம் பிடித்து அலையும் யானைக்கு ஒப்பாவான். முடிவு மரண வேதனையாக இருக்கும். 12

தனக்கு வரும் இன்ப துன்பங்களுக்குத் தானே காரணம் என்று உணருபவன் ஞானி. வரும் துன்பங்களுக்கு மற்றவர்களே காரணம் என்று பழி போடுபவன் அஞ்ஞானி. 13

சித்தர் ஆவதற்குச் சிவனன்றித் துணையில்லை. இப்போது சிலர் தம்மைச் சித்தர் என்று பிதற்றிக் கொள்வது; பூனையைப் போல் பதுங்கிப் புலியைப் போல் மக்களை, மக்கள் பணத்தைக்கொள்ளை அடிப்பது ஆகும். 14

Koviloor Digital Library

12. பொய்ம்மை, தீமை, மாயைகள்

மலரைத் தொட்டுச் சோதிக்கலாம். ஆனால், தீயைத் தொட்டுச் சோதித்தால் கை வெந்து போகும். அதுபோல நன்மையான பல காரியங்களை ஆராயலாம். தீமையான செய்திகளைச் சோதித்துப் பார்க்கக் கூடாது. 1

மிருகங்கள் எவையும் ஆடை உடுத்திக்கொண்டு நடந்ததாகத் தெரியவில்லை. தீயவர்கள் எவரும் திருந்தியதாக என் கண்ணுக்குத் தெரியவில்லை. 2

இறைவன் பலமுறை மன்னித்தும் தன்னைத் திருத்திக் கொள்ளாதவனின் வாழ்க்கை, குளத்தில் இருக்கும் மீன் அடிக்கடி வெளியில் துள்ளி விழ, அதை ஒருவன் கருணையின் காரணமாக மீண்டும் மீண்டும் தண்ணீரில் போட்டும் அது அதையும் மீறிக் கரையில் பல முறை துள்ளி விழுந்து வெயிலில் காய்ந்துபோன கதைக்கு ஒப்பாகும். 3

தீமைகளைச் செய்துவிட்டு நன்மைகளை எதிர்பார்ப்பது வேப்பங்கன்றை நட்டுவிட்டு மாங்கனிகளை எதிர்பார்ப்பதற்கு ஒப்பாகும். 4

Koviloor Digital Library

தம்மைப் பரப்பிரம்மம் என்று சொல்லித் திரிபவர்கள் உண்பதேன்? உடுப்பதேன்? காம சுகங்களில் உழல்வதேன்? இவை எல்லாம் செய்யுமோ பரப்பிரம்மம்! 5

தூய்மை, ஆச்சாரம் என்று சொல்பவர்களே, உங்கள் உள்ளத்தில் ஓடும் சாக்கடை எண்ணங்களைவிட, வெளியில் மடி ஆச்சாரம் என்னும் தீட்டு இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. 6

குளத்தில் நீர் இருக்கும்வரை கொட்டி, ஆம்பல், தவளை மீன், ஆமை இன்னும் பல உயிரினங்களும் இருக்கும். அதைப் போல் உள்ளத்தில் ஆசை இருக்கும்வரை காமம், கோபம், மதம் (திமிர்), ஆச்சரியம் போன்ற உணர்ச்சி களும் இருக்கும். நீர் வற்றினால் எல்லாம் மறைந்து போகும். அதேபோல் மனிதன் திருந்தினால் எல்லாம் மாய மாய் மறைந்து போகும். 7

வெங்காயத் தோலை உரிக்க, உரிக்க உள்ளே ஒன்றும் இருக்காது. அதேபோல் பொய்யர்கள் பேச்சை ஊடுருவிப் பார்த்தால் ஒன்றும் இருக்காது. 8

முட்டை பொரித்தவுடன் எப்படி ஓட்டுக் கூட்டிலிருந்து விடுதலையாகிக் குஞ்சு வெளிவருகிறதோ, அதைப்போல் ஒருவன் ஞானம் வந்தவுடன், மாயை என்னும் கூட்டி லிருந்து விடுதலையடைகிறான். 9

காட்டிலுள்ள காடையெனும் பறவைக்கு எவ்வளவு தான் உணவு கொடுத்து வளர்த்தாலும்! தன் இனத்தைக் கண்டவுடன் வீட்டைவிட்டுக் காட்டிற்கு அது மீண்டும் ஓடிவிடும். அதைப்போல் தீயவர்களுக்கு எவ்வளவுதான் நல்ல உதவிகள் செய்தாலும் தீயவர்களைக் கண்டவுடன் அவர்கள் நம்மைவிட்டுப் பிரிந்து தீயவர்களுடன் கூட்டுச் சேர்ந்து நமக்கே தீங்கு விளைவிப்பார்கள். 10

Koviloor Digital Library

வெள்ளை நூலில் எந்த வண்ணமும் உடனே பற்றிக் கொள்ளும். எந்த வண்ணம் பற்றிக் கொண்டதோ அந்த நூலிழை மறுபடியும் வெண்மையாவது கடினம். அதைப் போன்று சில தீமைகள் ஆரம்பத்தில் பற்றிக் கொண்டு விட்டால் அது பின்பு விலகுவது கடினம். 11

பசு, எருமை, நாய் இப்படி எந்த மிருகமென்றோ அல்லது நல்லவன், கெட்டவன், சிறியவன், பெரியவன்: யோகி, ஞானி இப்படி எந்த மனிதர் என்றோ பாராமல் கொசு தன் கைவரிசையைக் காண்பித்து இரத்தத்தை உறிஞ்சிவிடும். அதுபோல் தீயவர்கள் எதைப் பற்றியும் கவலைப்படுவதில்லை. அவர்கள் தங்கள் கை வரிசையை யாரிடமும் காண்பித்துவிடுவார்கள். 12

கூண்டில் அடைபட்ட கிளி, புலி இவை எப்படி விடுதலையாவதென்று சிறித் துடித்துக் கொண்டிருக்கின் றனவோ, அதைப் போன்று ஆசையென்னும் மாயைச் சிறையிலிருந்து நீ சதறித் துடித்துப் புலம்பி இறைவனிடம் வேண்டினால் விடுதலை பெறுவாய். 13

ஒரு குடம் பாலில் ஒரு துளி விஷம் விழுந்தால் கெட்டு விடும். அதைப் போல் அறிவுள்ள மாந்தர் தவறி, வழி தவறியவருடன் சேர்ந்தால் பால் பாழானதுபோல் பாழாகி விடுவார்கள். 14

வங்கியில் நாம் போடும் வைப்புத் தொகைக்கு, எப்படிப் பின்னால் மொத்தமாய் வட்டியும், முதலுமாய்க் கிடைக்கிறதோ, அதைப் போல் நாம் செய்யும் நன்மை தீமைகளுக்கு ஏற்ப நமது வாழ்க்கையும் அமைகிறது. 15

கவணிலிருக்கும் கல்லும், வில்லிலிருக்கும் அம்பும், யாரும் எய்யாமல் மேலே வந்து விழுவதில்லை. அதைப்

Koviloor Digital Library

போல் நாம் செய்யாத தீமைகள் நம்மை வந்து தாக்கு வதில்லை. 16

ஒரு சிறு உயிரணு எப்படிப் பல மாதங்களில் வளர்ச்சி பெற்று, ஒரு பெரிய குழந்தையாக வெளி வருகின்றதோ, அதைப் போன்றே நாம் செய்யும் தீமைகள் பல வடிவங் களில் வளர்ச்சி பெற்று ஒரு பெரிய வடிவாகப் பிறக்கிறது. 17

வாழைப் பழத்தைத் தோல் எப்படி மூடிக்கொண்டுள் ளதோ அதைப்போல் நம் மனத்தை மாயை என்னும் இருள் மூடிக் கொண்டிருக்கிறது. தோல் என்னும் மாயையை உரித்தால் ஞானமென்னும் பழத்தை உண்ண லாம். 18

வேட்டைக்குச் செல்லும் நாய் ஆரம்பத்தில் உற்சாகத் துடன் துள்ளிக் குதித்துச் செல்லும். ஆனால்,வேட்டையாடி வீட்டிற்குத் திரும்பும் போது களைத்து, இளைத்து, கதி கலங்கித் திரும்பும். அதுபோல் இந்த உலகமென்னும் காட்டில் வேட்டையாட வந்த உயிர்கள் மாயை என்னும் வீண் ஆசையால் இளைத்துக் களைத்துப் பரதவித்து, அந்தோ! ஒன்றும் இல்லாமல் சுடுகாட்டிற்குச் செல் கின்றன. 19

உலகில் எல்லா உயிர்களும் தமக்கு நிலையான உறவில்லை என்று தெரிந்தும், அவைகளிடம் நாம் பழகித் திரிவது மாயைக்கு இடமாகும். இது எப்படியெனில் முருங்கை மரத்தை, வேங்கை மரமென்று நினைப்பதற்கு ஒப்பாகும். 20

கண்ட கழுதைகளை எல்லாம் புகழ்ந்து பாடும் கவிஞர்களை நினைக்கும்போது உண்மையிலேயே இவர்கள் ''கவி'' (குரங்கு) ஞர்கள்தான் என்ற கூற்று மெய்யாகி விடுகிறது. 21

Koviloor Digital Library

மீன் உயிரோடிருந்தாலும் நாறும். இறந்து போனாலும் அதே துர்நாற்றம்தான் வீசும். அதுபோல் பொய் சொல்பவர்களுக்கும், தம் உயிர் போயினும் மெய்சொல்ல வரவே வராது. 22

நீரும் நெருப்பும் இணைந்திருக்க முடியாது. எது வலியதோ அதுவே வெற்றி பெறும். அதைப்போல் மாயையும் மனச்சாட்சியும் போரிடும்போது எது வலியதோ அதுவே வெற்றி பெறும். 23

வலிமையில்லா மனது மாயையிடம் மாட்டிக்கொண்டு விடுபட முடியாமல் தவிப்பது, உடும்புப்பிடியில் இருந்து மீளமுடியாத சிற்றுயிர்களைப்போல் தவிக்கின்றது. 24

ஊசியில் ஓட்டை இல்லாவிட்டால் எந்த நூலும் நுழைய முடியாது. அதைப்போல் மனத்தில் ஆசை இல்லாவிட்டால் எந்த மாயையும் நுழைய முடியாது. 25

கீரியும் பாம்பும்; எலியும் பூனையும்; பசுவும் புலியும் கூட ஒன்றாக வாழலாம். ஆனால், இருளும் ஒளியும் ஒரே இடத்தில் இருக்க முடியாது. அதுபோல் ஞானமும், மாயையும் ஒரே இடத்தில் இருக்க முடியாது. 26

மண்பாண்டம் கீழே விழுந்துவிட்டால் உடைந்து நொறுங்கிவிடும். ஆனால், செப்புக்குடம் கீழே விழுந்தால் உடையாது. மேன்மக்கள் செப்புக்குடம் போன்றவர்கள். எதுவரினும் கலங்காமல் உறுதியோடு பணியாற்றுவார்கள். ஆனால், கீழ் மக்களோ மண்பாண்டம் போன்று சிறிதும் உறுதியின்றிக் கீழே விழுந்து நொறுங்கி அழிந்து விடுவார்கள். 27

பொய் சொல்லும் பள்ளிக்கூடம் எதுவென்றால், சில அரசியல்வாதிகளின் நெஞ்சம்தான். 28

Koviloor Digital Library

தன் வீட்டையும், தெருவையும் சுத்தம் செய்யாதவன் நாட்டையும், உலகையும் சுத்தம் செய்ய முயலுவது கையாலேயே உலகை அளந்துவிடலாம் என்று சொல்வதற்கு ஒப்பாகும். 29

மூடர்கள் தீய வழியையே நோக்கிச் செல்வது, எவ்வளவு உயர்ந்த உணவு இருந்தாலும், நாற்றமெடுத்த மலத்தையே நாடிப்போகும் பன்றிக்கு ஒப்பாகும். 30

தீயவர்களின் உடம்பிலிருக்கும் அணு ஒவ்வொன்றும் ஒரே சமயத்தில் ஓராயிரம் கோடி தீமைகள் செய்யும் ஆற்றல் பெற்றது. 31

கொசு பார்ப்பதற்கு மிகச் சிறியதாக இருக்கும். ஆனால், அது உடலில் எந்தவித இடையூறுமின்றி மெதுவாக இரத்தத்தை உறிஞ்சிவிடும். அதைப்போன்றே சில தீய நண்பர்கள் சாதாரணமாக இருந்து கூடவே பழகி, மெதுவாக அமைதியாய் நம் குருதியை உறிஞ்சிவிடுவார்கள். 32

மின்சாரத்தில் தெரிந்தோ, தெரியாமலோ கை வைத்தாலும் அது குருதியை உறிஞ்சிச் சக்கையாகிப் போனபின் தூக்கியெறிந்துவிடும். அதுபோல் மாயை என்னும் ஆசைக் காட்டேரி நம்மை எலும்புக் கூடாக்கும் வரை விடாது. 33

எந்த இனச்சாவி தன்னைத் திறக்கவரினும் அது தன்னினமாக இருக்குமாயின் பூட்டு திறந்து கொள்ளும். அதைப் போன்று அறிவுள்ளவர்களைக் கண்டால் அறிவுடையவர்களின் இதயக்கதவு திறந்து கொள்ளும். தீயவர்களின் இதயக் கதவு அந்த இனத்தவர்களுக்கு மட்டும்தான் திறந்து கொள்ளும். மற்றவர்களுக்குச் சற்றும் இடம் தராது. 34

Koviloor Digital Library

தீய வேல்விழியாளின் வலையில் (மகிழ்ச்சியில்) மாட்டுவது இரைக்கு ஆசைப்பட்டுத் தூண்டிலில் அகப்பட்ட மீனுக்கு ஒப்பாகும். 35

ஆலம் விதை சிறியதாகத்தான் இருக்கிறது. ஆனால், அது ஒரு பெரிய மரமாகி நிற்கிறது. அதைப் போன்று நாம் செய்யும் ஒரு சிறு தீமையும் பின்னால் பெரிய உருவமாக வந்து நமக்குத் துன்பம் தருகிறது. 36

வாழ்க்கையில் சில உறவுகள் எப்பொழுதும் நிலைத்து நிற்பதில்லை. இது எதற்கு ஒப்பு என்றால், திரைப்படக் காட்சி முடிந்தவுடன் எப்படி அரங்கத்தைவிட்டு வெளியேறுகிறார்களோ அதுபோல் நம்மிடம் இருந்த செல்வமும் சிறப்பும் புகழும் இழந்தவுடன் நம்மைவிட்டு அவர்கள் பிரிந்து விடுவார்கள். 37

நிலையில்லா வாழ்வை நிலையென்று நம்பி மோசம் போவது, சரியில்லாத M.L.Aக்களை நம்பி மந்திரிசபை அமைப்பதற்கு ஒப்பாகும். 38

வாழ்க்கையில் அவசர முடிவு எடுப்பது அலங்கோலத்தில் முடியும். அதைப்போல் துறவு என்பது உறுதி இல்லையென்றால் கடைசியில் குழப்பத்தில் இரண்டும் கெட்டான் நிலையில் ஆகிவிடும். 39

Koviloor Digital Library

13. மருள் (ஆணவம்)

நாத்திகன் ஒருவன் கடவுள் இல்லையென்பது, தென்னை மரத்தின் உச்சியிலிருக்கும் இளநீர் தனக்கும் மண்ணிற்கும் சம்பந்தமில்லை என்பதற்கு ஒப்பாகும். 1

எல்லாவற்றையும் தானே செய்து கொள்வதாக ஒருவன் கூறினான் — அது கோபுரத்தைத் தாங்கும் பாவனையிலிருக்கும் பொம்மை — கோபுரத்தைத் தானே தாங்குகிறது என்று நினைப்பதற்கு ஒப்பாகும். 2

சில அறப்பணிக் குழுத் தலைவர்கள் ஊராரின் உண்டியல் பணத்தில் சுரண்டியது போக மீதியில் குளம் வெட்டியும் கோவில் அனைத்தும் தாமே தம் பாட்டன் வீட்டுச் சொத்தில் செய்ததாகத் தம்பட்டம் அடித்துக் கொள்வது, புறா ஒன்று நெல் களத்தில் குவிந்து கிடக்கும் நெற்குவியலைப் பார்த்து, இது யாம் உண்டுபண்ணியதுதான், அனைவரும் திருப்தியாகச் சாப்பிடவும் என்று மற்றப் புறாக்களுக்கு அழைப்பு விடுப்பதற்கு ஒப்பாகும். 3

செல்வர் ஒருவர், கவிஞர் ஒருவரை அழைத்துக் கொண்டு சில கோவில்கள், அறச்சாலைகள் போன்ற பல இடங்களைச் சுட்டிக் காண்பித்து—இது என் பாட்டன் செய்தது ; அது என் முப்பாட்டன் செய்தது ; இது என் தாத்தா செய்தது'' என்று அடுக்கிக் கொண்டே போனார்.

Koviloor Digital Library

கவிஞர் இடைமறித்து, ''நீங்கள் நாட்டிற்கு என்ன செய்வீர்கள் ?'' என்று கேட்டதற்கு, 'நான் அவர்களைப்போல் ஏமாளியும் அல்ல—கோமாளியுமல்ல'' என்று பட்டென்று பதிலளித்தார். 4

ஒரு மூடனும், ஒரு தற்பெருமைக்காரனும் சந்தித்தார்களாம். மூடன் என்னைவிட அறிவாளி எவனும் இல்லையென்றானாம். தற்பெருமைக்காரன், என்னைவிட எதிலும் உயர்ந்தவர்கள் இந்த உலகத்தில் எவரும் கிடையாது என்றானாம். இது எதைப்போல் இருக்கிறதென்றால்—கருங் குரங்கொன்று —மயிலைப் பார்த்து எல்லாவிதத்திலேயும் நானே அழகாய் இருக்கிறேன் என்று சிங்கத்தைப் போல் கர்ஜித்துக் கொண்டதற்கு ஒப்பாகும். 5

சிலரிடம் சில உண்மையைச் சொன்னால் தான் சொல்வதே உண்மை என்று அடித்துப் பேசுவார்கள். இது எப்படி இருக்கின்றதெனில் வானத்தில் பறக்கும் கருங்காக்கையைப் பச்சை நிறமென்று அடித்துச் சொல்வதற்கு ஒப்பாகும். 6

ஆணவம் அழிய வேண்டுமாயின் முதலில் தன்னைத் தான் உணர வேண்டும். இல்லையென்றால் தனக்கு உண்மை புலப்படாது! 7

பல அனுபவங்கள் இருந்தால் உண்மையான உண்மையைப் புரிந்துகொள்ள முடியும். இல்லையென்றால் ஒற்றையடிப் பாதையிலே சென்று இதுதான் உலகம் என்று கூறும் முட்டாளுக்கு ஒப்பாகும். 8

Koviloor Digital Library

14. அறியாமை (குற்றங்கள்)

அடிக்கடி தவறு செய்துவிட்டுக் கோவிலுக்குச் செல்வது, தண்ணீர்த்துறைக்கு அடிக்கடி அழுக்குத் துணி சென்று, அடிபட்டுச் சீக்கிரம் கிழிந்து போவதற்கு ஒப்பாகும். 1

அருளென்னும் அரிசியை, அறியாமை என்னும் உமி மூடியுள்ளது. தெளிவென்னும் உரலில் போட்டு, அறிவு என்னும் உலக்கையால் குத்தினால் அறியாமை உமி நீங்கினால், அருள் வெளிப்படும். 2

கிணற்றுத் தவளை, கிணற்றைச் சுற்றிக்கொண்டே, 'இதுதான் உலகம்' என்று நினைத்துக்கொள்ளும்; குளத்திலிருக்கும் தவளை,'இதுதான் நம்உலகம் என்று நினைத்துக் கொள்ளும்; ஆற்றில் இருக்கும் மீன்,'இதுதான் நம் உலகம், என்று நினைத்துக் கொள்ளும். ஆனால், உலகம் எவ்வளவு பெரியது என்று அவைகளுக்குத் தெரியாது. சிலர் ஏதோ கற்றுக்கொண்டு, எல்லாமே தனக்குத் தெரியும் என்று கூறுவது—இதைப் போன்றதாகும். 3

தீமைகளுக்கு நாம் அடிமையாகும்போது, நம்மை அவை ஆட்டிப் படைக்கின்றன. அதிலிருந்து விடுதலையாகி ஞானம் பெற்றதும், உலகத் தீமைகளை, ஞானி ஆட்டிப் படைக்கிறான். ஒரு இராசாளிப் பறவையின் கண்களைக்

Koviloor Digital Library

கட்டியிருக்கும் போது மிகச் சாதாரணப் பறவைகள் கூட அதைக் கொத்திப் பிடுங்கிக் கூத்தாடும். ஆனால், ஞானக் கண்களை அவிழ்த்து விட்டால், கொத்திய அந்தப் பறவைகள் எல்லாம் அலறும் வண்ணம் அது குதறித் தள்ளி விடும். 4

ஒரு குற்றமற்றவனை, மூர்க்கத்தனமான ஒருவன் ஆட்டிப் படைக்கலாம். அந்த மூர்க்கன் வலிமையானவன் கையில் அகப்பட்டுவிட்டால் விதி அதன் வேலையைச்செய்ய ஆரம்பித்துவிடும். 5

சிறு வயதில் துணி கட்டாமல் இருக்கலாம். ஆனால் முதிய வயதில் அதைப் போன்று இருக்க முடியாது. அறியாமல் தவறு செய்யலாம், அறிந்து தவறு செய் தால்......!!? 6

பக்தியென்னும் விதை போடாமல் ஞானப்பயிர் முளைக்கும் என்று நினைப்பது, கடல் நீரைப் படியாலே அளந்து விடலாம் என்ற பகடிக்கு முட்டாள் ஒப்பாகும். 7

எவ்விதத் தவமோ, அறமோ புரியாத ஒருவன் இறை அருளுக்குப் பாத்திரமாகிவிடலாம் என்று நினைப்பது, கொலை, கொள்ளை, கொடுமை என்று பல குற்றங்கள் புரியும் குற்றவாளி ஒருவன், தலைமை நீதிபதியாகி விடலாம் என்று கனவு காண்பதற்கு ஒப்பாகும். 8

இந்த உடலை வளர்க்க, உலகில் இல்லாத பொய்புரட்டு கள் எல்லாம் புகல்கிறார்கள். ஆனால், உயிர் (அருள்) வளர்க்க ஒன்றுமே செய்திலர். இது எட்டி மரத்திற்குத் தண்ணீர் இறைத்து, இனிய மரத்தைக் காயப் போட்டதற்கு ஒப்பாகும். 9

Koviloor Digital Library

சாவது உறுதியென்று தெரிந்திருந்தும், யாரும் தமக்குச் சவக்குழி வெட்டிவைத்ததை யான் கண்டதில்லை. ஆனால், பணக்குழி மட்டும் வெட்டிப் பாதுகாத்து வருகிறார்கள். 10

சாக்கடையும், சந்தனமும் ஒன்றாகக் கலந்துவிட்டால் சந்தனத்தின் மகிமையே குன்றிவிடும். அதுபோல் மனம் மாயையெனும் இருளில் ஒன்றாகக் கலந்துவிட்டால்—மதி மயங்கிவிடும். 11

ஒழுக்கமின்றி, உடையின்றி, மானமின்றி வாழும் மிருகங்களைக் காட்டிலேதான் பார்த்ததுண்டு. அந்த மிருகங்களிற் கூடச் சில ஒழுக்கமானவை உண்டு. இன்றோ நாட்டில் அதைவிடக் கொடிய, பகுத்தறிவு படைத்திருந்தும் பண்படாது, புண்பட வாழும் புல்லியர்கள் மலிந்து, புகழ் பெற்று வளம்பட வாழ்வதை என்னென்று சொல்லி ஆற்றுவது? 12

புஷ்பராகக் கல்லும், வைரக் கல்லும் பார்க்க ஒன்றுபோல்தான் தோன்றும். ஆனால், அவை, ஒன்றாக முடியாது. அதைப் போன்றே நல்லவர்களும், கெட்டவர்களும் ஒன்றாகத்தான் தெரிவார்கள். ஆனால், அவர்கள் ஒன்றல்லர். பார்வைக்கு ஒன்றுபோல் தெரிந்தாலும் குணத்தில் வேறுபாடுகள் உண்டு. 13

காற்றில் இரண்டு வகையுண்டு — ஒன்று தென்றல் காற்று. மற்றொன்று புயல்காற்று. தென்றல் காற்று அடித்தால், மனத்திற்கு இதமாகவும், உடலுக்குக் குளிர்ச்சியாகவும் இருக்கும். ஆனால், புயல் காற்று வீசினால், பூகம்பமும், சேதமும் ஏற்படும். அதைப் போன்று பார்ப்பதற்கு ஒன்றுபோல் தெரியும். நல்லவர்களும், கெட்டவர்களும் அவர்களின் செயல்களின் விளைவினால் வேறுபட்டுத் தோன்றுவர். 14

Koviloor Digital Library

குற்றம் புரிந்த சிலரை மன்னிபபது, இனியாவது திருந்த மாட்டார்களா என்ற பேரவாவினால்தான். ஆனால், சிலருக்கோ, அது மேலும் மேலும், குற்றம் செய்யப் படிக்கட்டுகளாக அமைந்துவிடுகிறது. ஒரு சிலருக்கோ, அது திருந்தும் வாய்ப்பாகிறது! 15

அதிகப் பிரசங்கித்தனமாய் எல்லாம் தெரிந்ததுபோல் ஆரவாரிப்பது, கழுதையொன்று தன் கத்தலை, இன்னிசை இசைப்பதாக எண்ணுவதற்கு ஒப்பாகும். 16

உலகம் இறைவனில்லாமல், தானே தோன்றித் தானே இயங்குகியது என்று ஒரு சாரார் சொல்வது வானத்தில் இயங்கும் இராக்கெட் ஒன்று, தோற்றுவிப்பார் இயக்கு விப்பார் எவரும் இன்றித் தானே இயங்குகிறது என்று சொல்லும் அறியாமை போலுள்ளது. 17

உருவத்தில் மனிதராய் இருப்பதால், எல்லோரும் மனிதராகிவிட முடியாது. அது காக்கை கறுப்பாயிருப் பதால், தன் குரலும் குயிலின் குரலுக்கு ஒத்தது என்று எண்ணுவதற்கு ஒப்பாகும். 18

சிலர் எவ்வித அறவழியிலும் செல்லாமல், தானே இறையருள் வரும் என்று, இறுமாந்து இருப்பது. கிணறு வெட்டாமலே, மண்ணுக்குக் கீழேயுள்ள தண்ணீர், தானே மேலே வரும் என்று காத்திருந்து, காலத்தை வீணாக்கும் கசடனுக்கு ஒப்பாகும். 19

சிலர். ''நான் மூழ்காத தீர்த்தமில்லை; காணாத கோவி லில்லை; பார்க்காத சித்தர்களோ; முக்தர்களோ, பக்தர் களோ-இல்லை; கேட்காத வேதமில்லை.'' என்று அரற்றிக் கொள்வது, கதிரவனைப் பக்கத்தில் போய்ப் பருந்தொன்று தொட்டுவிட்டு வந்ததாகக் கூறும் கதைக்கு ஒப்பாகும். 20

Koviloor Digital Library

சில புத்தகப் புரட்டிகள் புத்தகங்களைப் படித்துவிட்டு எலலாமே தெரிந்துகொண்டோம் என்று அரற்றிக் கொள்வது, கடல்நீர் முழுவதையும் தானே குடித்துவிட்டதாகச் சொல்லும் மீனுக்கு ஒப்பாகும். 21

ஒரு மொழிக்காரர்கள், ''இந்த மொழியில் மந்திரத்தை உச்சரித்தால்தான் இறைவன் வருவான்; வேறெந்த மொழியில் சொன்னாலும் கடவுள் வரமாட்டான்'' என்று சொல்வது, கடவுளை ஒன்றும் தெரியாத முட்டாள் ஆக்குவதற்கு ஒப்பாகும். 22

வேத மொழியால் இறைவனை அடைந்துவிடலாம் என்றால், அந்த மொழி வல்லுநர் அனைவரும் அல்லவா இறைவனைக் கண்டிக்க வேண்டும்? பல வேதியர்கள், எப்பொழுது திதி, திவசம், சடங்கு, வரும் என்று எதிர் பார்த்து வறுமையில் வாடுகிறார்களே! 23

எல்லாப் பழங்களிலும் விதை உள்ளேதான் இருக்கும். ஆனால், முந்திரிப் பழத்திற்குமட்டும் விதை வெளியே இருக்கும். சிலருடைய தான தருமங்கள் அடக்கமாய்ப் பழத்திற்குள்ளே இருக்கும் விதையைப்போல் யாருக்கும் வெளியில் தெரியாது. வேறு சிலரோ, வெளியிலிருக்கும் முந்திரிக் கொட்டையைப்போல் தாம் செய்த தான, தருமங்களை யெல்லாம் தம்பட்டம் அடித்து மற்றவர்களுக்குப் பறைசாற்றுவார்கள். இது எதற்காக என்றால் சிறிய புழுவைப் போட்டு பெரிய மீனைப் பிடிப்பதற்காகும். 24

சில ஏமாற்றுக்காரர்கள் ''நான் சமூகத்திற்கு மாபெரும் தியாகம் செய்தவன்'' என்று சொல்வது, மீனவன் ஒருவன் வலையைக்கடலில்போட்டுக் கடலைச் சுத்தம் செய்கிறேன் என்று சொல்வதற்கு ஒப்பாகும். 25

Koviloor Digital Library

குற்றவாளிகள் இல்லாத நாட்டில் காவல் துறைக்கும், நீதித் துறைக்கும் என்ன வேலை? அதற்காக மக்களின் வரிப்பணங்களில பல கோடி ருபாய் வீணாக விரயமாக்கப் படுகிறது. ஆதலால், குற்றவாளிகளே மனம் திருந்துங்கள். நீங்கள் எல்லோரும் மனம் திருந்தினால், அந்தப் பணத் தைக் கொண்டு ஒரு பெரிய தொழிற்சாலையை உண்டு பண்ணலாம். அதனால், உங்களுக்கும் நன்மை, நாட்டிற் கும் நன்மை. 26

ஒன்றைப் பார்த்து ஒரு நாய் குரைக்கும். அதைப் பார்த்து என்ன நடந்ததென்று உண்மையை அறியாமல் பல நாய்கள் குரைக்கும். இப்படி உண்மை புரியாமல் மனித நாய்களும் நாட்டில் பல உண்டு. 27

இறைவனே இல்லாமல் தானே இந்த உலகம் வந்தது. தானே இயங்குகிறது என்று சொல்வது, தாய், தந்தை இல்லாமல் ஒருவன் தானே பிறந்ததாகக் கூறுவதற்கு ஒப்பாகும். 28

உயர்ந்த வகையைச் சார்ந்த சித்த மருத்துவம் கையில் இருக்க அதைப் பயன்படுத்தி நோயைக் குணப்படுத்த முய லாமல் போவது, கண்ணுக்குத் தெரிந்த நவரத்தினங்களைக் கையிலே எடுக்க முடியாமல் காலிலே மிதித்துச் செல் வதற்கு ஒப்பாகும். 29

நான் ஒருமுறை இராமேசுவரத்தில் உள்ள சிற்பங் களைச் சுற்றிப் பார்க்கையில், சீதையின் சிற்பத்திற்கு அரு கில் வந்தபோது, வழிகாட்டி (கைடு) ''இதுதான் இராம னின் மனைவி சீதை. இவள் ஒரு பத்தினித் தெய்வம்'' என்று கூறினான். சீதை நெருப்பில் நிற்பது போல் உள்ள அந்தச் சிற்பத்தைப் பார்த்ததும், கூட வந்த வெளிநாட்டுச் சுற்றுப்பயணிகள் குழுவினரில் ஒருவன் — (Why is she standing in fire?'' இவள் ஏன் நெருப்பில் நிற்கின்றாள்?

Koviloor Digital Library

என்று கேட்டான். அதற்கு வழிகாட்டி' "சீதை இராவணனிடம் ஒன்பது மாதம் சிறையில் இருந்ததால். அவளது கற்பைச் சந்தேகித்து, இராமன் அவளை, "அக்கினிப் பரீட்சை" செய்கிறார் என்று விளக்கினான். இதைக் கேட்ட வெளி நாட்டவன், மிகவும் வியப்புடன், ("What! Does God suspect his wife?") (என்ன! கடவுள் தன் மனைவியையே சந்தேகிக்கிறாரா?) என்று வினவினான். இன்னும் சற்றுத்தூரம் சென்றதும் சீதை லவகுசாவுடன், காட்டில் இருக்கும் சிற்பத்தைப் பார்த்தவுடன் "What is this?" (இது என்ன) என்று கேட்க, அதற்கு அந்த வழிகாட்டி. 'ஒரு வண்ணான் சொன்னதற்காக சீதையின் கற்பைச் சந்தேகித்து, அவளைக் காட்டிற்கு அனுப்பிவிடுகிறான்., காட்டில் அவள் இரண்டு குழந்தைகளுக்குத் தாயாகி அவர்களுடன் வாழ்வதைச் சித்தரிக்கும் சிற்பம்" என்று கூறினான். இதைக் கேட்ட வெளிநாட்டவன் மிக அதிர்ச்சியுடன் —"Is it a God Incarnate's life? Even an ordinary man trust his wife, but Rama, Who has been conssidered to be God incarnate, is now depicted as a total embodiment of distrust in the Whole world. Even after SIta had proved that she had cleared herself after a fire bath, he stil doubted her, and banished her to the forest, after hearing a commentfrom the Washerman in-deed it is distressing and disquesting to hear this. So far we have manintained great ragard for the indian Epics, but this high regard has been completely shatter-red. (இது என்ன? தெய்வ வாழ்க்கையா அல்லது கீழ்த்தரமான மனிதனின் வாழ்க்கையா? சாதாரண ஒரு மனிதனே தன் மனைவியைச் சந்தேகப்பட மாட்டான். ஆனால், கடவுள் அவதாரமான இராமன் தன் மனைவியைச் சந்தேகிக்கிறான். உலகத்திலேயே அவநம்பிக்கையின் மொத்த உருவமானவன் யாரென்றால் அது இராமன்தான் ஏனென்றால் ஏற்கெனவே ஒரு முறை சீதையை நெருப்பில்

Koviloor Digital Library

சோதித்த பின்பும், ஒரு வண்ணான் சொன்னதற்காக அவளை மீண்டும் காட்டிற்கு அனுப்பிவிடுகிறான். இதைக் கேட்கவே மிக வெட்கமாகவும் அருவருப்பாகவும் இருக்கிறது. இந்திய இதிகாசங்களை மிகவும் உயர்வாக இது வரை எண்ணியிருந்தோம். ஆனால், இதைக் கேட்டபின் அவையனைத்தும் தவிடு பொடியாகிவிட்டன. இதுதான் இந்தியப் பண்பாடா?'' என்று கேட்டான். கடவுள் என்று சொல்லப்படுகின்ற இராமன் இப்படிச் சந்தேகித்தான் என்றால், அந்த இராமன் எப்படிப்பட்டவன் என்பதை நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள் ......! ? 30

சில மாந்தர்கள் ஆசையின் காரணமாக அநீதியான செயல்களில் ஈடுபட்டுப் பின் அது அவர்களுக்குத் துன்பமாக மாறும்பொழுது, இந்தத் துன்பம் அந்தப் படுபாவியினால்தான் வந்தது என்று மற்றவர்களைக் குறை கூறுவார்கள். அது காட்டிலே நடக்கும் ஒருவன் காலில் முள் தைத்தவுடன் தன் கால் படாமல் முள் தானாகவே வந்து காலில் தைத்துவிட்டது என்று முள்மீது பழி போடுவதற்கு ஒப்பாகும். 31

மனத்தைத் தீய வழிகளில் கொண்டு செல்லும், சில் தீய சொற்பொழிவு செய்யும் கூட்டங்களுக்கு (சுயநலவாதிகளின் சொறபோர்)பாமர மக்கள் சென்று நேரத்தை மணிக்கணக்கில் வீணாக்குவதை நினைத்தால் நெஞ்சமே குமுறுகிறது. இது எதற்கு ஒப்பாகும் என்றால், கடவுள் வேடம் போட்டு நாடகமாடும் ஒருவனைக் கண்டு அவனே கடவுள் என்று நம்பி மதிமயங்கிக் கிடக்கும் மக்களுக்கு ஒப்பாகும். 32

பொய்யான காதலை நிலையானதென்று நினைத்து மகிழ்ந்து வாழ்வது நாணலிலே தொட்டில் கட்டிப் போட்டுத் தாலாட்டுவதற்கு ஒப்பாகும். 33

Koviloor Digital Library

15 ஆசைகள்

குளத்தில் தண்ணீர் இருக்கும்போது தாமரை மலர்களும், பல கொடிகளும் தலை தூக்கி நிமிர்ந்து நிற்கும் தண்ணீர் வற்றியவுடன் அவை காய்ந்து சருகாகிவிடும். ஆனால், அதன் சகாப்தம் முடிந்துவிட்டது என்று எண்ணாதே! மறுபடியும் மழை பெய்தவுடன் அவை துளிர்த்து தலை நிமிர்ந்து காட்சியளிக்கும். அதைப் போன்றே ஆசை என்னும் மழைநீர் வந்தவுடன் தீய எண்ணங்கள் தலை தூக்கி வளர ஆரம்பிக்கும். எனவே, ஆசை என்னும் நீர் வராமல் உன் மனத்தைப் பக்குவமாய்ப் பாதுகாத்துக் கொள். 1

ஆண்டவனிடம் அடைக்கலமான பின்பு உலக ஆசையில் மனம் போவது, ஓர் அரசப் பறவையின் விரட்டலுக்குப் பயந்து குகையில் அடைக்கலமான அந்தச் சிறு பறவை, அரசப் பறவை போனதும், அடைக்கலமான அந்த இடத்தை விட்டு மீண்டும் வெளியில் வந்து, மற்றொரு அரசப் பறவைக்கு இரையாவதற்கு ஒப்பாகும். 2

மனிதன் ஆசைகளுக்கு அடிமையாவது இரைக்கு ஆசைப்பட்டு, வேடன் வெட்டி வைத்த படுகுழியில் வீழ்ந்த யானைக்கு ஒப்பாகும். 3

பனைமரத்துக் காய்களைப் பார்த்தால் ஒரே காயாகத் தான் இருக்கும். ஆனால், அதனுள் மூன்று கண்கள்

Koviloor Digital Library

இருக்கும். அதைப் போன்றே மனிதர்களுக்குள்ளும் மண், பொன், பெண் ஆகிய மூவாசைகளும் அவரவர் வினைப் பயனைப் பொருத்து, அவரவர்க்கு இயற்கையிலேயே அமைந்துவிடுகிறது. 4

தக்கைபோல் உள்ள பருப்பொருள்கள்தாம் தண்ணீரில் மிதக்கும். கனமான பொருள்கள் அமிழ்ந்து விடும். அதைப்போல் ஆசையில்லாதவர்கள்தாம் ஞானக் கடலைக் கடக்க முடியும், ஆசை மிகுந்திருந்தால் ஞானக் கடலில அமிழ்ந்து போகத்தான் நேரிடும். 5

புதைச் சேற்றில் தெரிந்தோ, தெரியாமலோ எப்படி விழ்ந்தாலும் அதிலிருந்து மீள முடியாது. உலக ஆசை களும் அப்படித்தான். 6

ஆசையெனும் மதுபோதையில் இருக்கும் ஒருவனுக்கு அறநெறி புகட்டுவது, பெரிய மேட்டிற்கு நீர் பாய்ச்சு வதற்கு ஒப்பாகும். 7

தூக்க மயக்கத்தில் இருப்பவனுக்கு என்ன சொன்னா லும் காலையில் நினைவுக்கு வருவதில்லை. அதுபோல் உலக ஆசையென்னும் மதிமயக்கத்தில் இருப்பவனுக்கு என்ன சொன்னாலும் நெஞ்சில் நிற்பதில்லை. 8

மாம்பழம் பார்வைக்குக் கவர்ச்சியாக உள்ளது. சதையைச் சுவைத்தால் அது இன்னும் சுவையாக உள்ளது. கொட்டையை நெருங்கும்போது அதில் வண்டு துளைத்துக் கொண்டிருக்கும். அதுபோல் சிலர் புறத்தோற்றத்தில் மிகவும் புனிதராய் இருக்கின்றனர். அகத்துள்ளோ ஆசையென்னும் வண்டு அரித்துக் கொண்டேயிருக்கும். மாம்பழத்தில் உள்ள வண்டை ஆய்ந்தால் அது பூவில் தொடங்கிக் காயில் வளர்ந்து—கனிக்குள்—கொட்டைக்குள்

Koviloor Digital Library

உயிர்த் துடிப்புடன் இருக்கின்றது. அதுபோல்தான் மனிதர்களுக்குள் இருக்கும் ஆசையென்னும் வண்டும். 9

காலில் இரும்பு ஆணி தைத்துவிட்டால் அதோடு நடக்கமுடியாது. அதுபோல் நெஞ்சில் ஆசை என்னும் ஆணி இருக்கும்போது ஞான வழியில் நடக்கமுடியாது. 10

விஞ்ஞானத்தில் உயர்ந்த அளவுக்கு மனிதன் மனிதனாக வாழ மெய்ஞ்ஞானத்தில் உயரவில்லை. அப்படி உயரும் நாள் எந்நாளோ? அதுவே நம் பொன்னான நாளாகும். 11

ஆசைக்கு அசையாதவர்கள் அரிதரிது. காற்றுக்கு அசையாத செடியோ இலையோ உண்டோ? 12

கடல் நீரை எப்படிப் படியால் அளந்து அளவிட முடியாதோ, அதைப்போல் மாந்தர்களின் ஆசைகளை அளவிட்டு அறிந்திட முடியாது. 13

ஆசைகளை அறுத்தால் அறிவு ஞானம் தானே வரும். ஆசைக்குட்பட்டால் பொறியில் அகப்பட்ட எலியின் கதைதான். 14

வீணாசைகளுக்கு அடிமையாகிறவர்கள் தாமாக மதிப்பைக் குறைத்துக் காணாத துன்பங்களைக் காண்பார் பின்பு. 15

ஆசை யாருக்கு உரியது? வேசியருக்கும் வீணருக்கும் சொந்தமானது. அதைப் பொது உடமையாக்க வேண்டாம். நல்லாசை வளரட்டும்; தீயாசை ஒழியட்டும். 16

Koviloor Digital Library

16. போலிகள்

கல்லாதவன் கவிதையும், கழுதையின் கத்தலும் ஒன்றே! 1

நாட்டில் சிலர் தாமே கடவுள் அவதாரம் என்று சொல்லிக்கொண்டு கிருஷ்ண லீலையான சல்லாபங்களைச் செய்கிறார்கள். ஆசைகளிலிருந்து விடுதலையடைவது தானே ஞானியின் முதல் வேலை! ஆனால், அதை விட்டு விட்டுக் கிருஷ்ணனைப்போல் தானும் கெட்டதல்லாமல், மற்றவர்களையும் கெடுப்பது பைத்தியக்காரத்தனமான செயல் அல்லவா? இதுவோ இறைவனின் செயல்? இவர்கள்; ஞானிகளல்லர் போலிகள்; போகிகள். 2

வாய்ச் சொல் வீரர்களின் பிதற்றல் பசு, புலித் தோலைப் போர்த்திக்கொண்டு உறுமுவதற்கு ஒப்பாகும். 3

காக்கையும் குயிலும் பார்ப்பதற்கு ஒன்றுபோல் இருக்கலாம். ஆனால், இரண்டும் ஒன்றாகாது. அதைப்போல் நல்லவர்களும், தீயவர்களும் ஒன்றுபோல் இருக்கலாம். ஆனால், ஊடுருவிப் பார்த்தால் சில உண்மைகள் புலப்படும். 4

பாறைக்குள் இருக்கும் தேரை (தவளை) கண்ணுக்குத் தெரிவதில்லை. அதைப்போல் பாவிகளின் உள்ளத்திலிருக்கும் கள்ளச் செயல்கள் கண்ணுக்குத் தெரிவதில்லை.

Koviloor Digital Library

கண்ணுக்குத் தெரியாததால் கல்லுக்குள் தேரை இல்லையென்று எப்படிச் சொல்ல முடியாதோ அதைப் போன்றே கண்ணுக்குத் தெரியாததால் சிலரது உள்ளத்தில் கெட்ட செயல்கள் இல்லையென்று நாம் சொல்ல முடியாது. 5

நேற்றுவரை கடவுளுக்கு நிகராக ஒருவனைக் காசாசை, பதவி வெறிகொண்டு புகழ்கிறான். மறுநாளே அவனை இகழும் இகழ்ச்சி வேறு எதற்கும் ஒப்பாவதில்லை. இப்படிப்பட்ட கூத்தர்களை நினைக்கும்பொழுது பச்சோந்தியின் உருவம்தான் என் கண்ணிற்குப் பளிச்சென்று தோன்றுகிறது. 6

சுத்தம் செய்த சுண்ணாம்பும், வெண்ணெய்யும் ஒன்று போல் தோன்றலாம். அதுபோல் சில புல்லர்களும் நன் மக்களைப் போன்றே காட்சியளிப்பார்கள். ஆனால், அது மெய்யாகாது. 7

கயவர்கள் உருவத்தில் நன்மக்களைப்போல் இருப்பதால் தாமும் அறிவுடைய மாந்தர்கள் என்று இறுமாந்திருப்பது, பன்றி யானையைப் பார்த்து நாமும் யானையைப்போல் தானே இருக்கிறோம்; இருவர் நிறமும் ஒன்று போல்தானே இருக்கின்றது என்று இறுமாந்து இருக்கும் செயலுக்கு ஒப்பாகும். 8

தகுதியில்லாதவர்களுக்குப் பதவியும் பட்டமும் கொடுப்பது, ஒரு நோய் பிடித்த கோவேறு கழுதையைச் சிங்காரித்து ஊர்வலமாக அழைத்துச் சென்று அரியணை ஏற்றிப் பாராட்டுப் பத்திரம் படிப்பதற்கு ஒப்பாகும். 9

கடல் நீரும் குடிநீரும் பார்க்க ஒன்றுபோல் தெரியும்; ஆனால், அதைக் குடித்துப் பார்த்தால்தான் அதன் தன்மை தெரியும். அதைப் போன்றே. எல்லா மக்களும் பார்க்க

Koviloor Digital Library

ஒன்றுபோல்தான் தெரிவார்கள். ஆனால், அவர்களுடன் பழகிப் பார்த்தால்தான் அவர்களது தன்மை புரியும். 10

ஒரு சிலர் பல புத்தகங்களை ப்படித்துவிட்டு இங்கொன்றும் அங்கொன்றுமாகச் சில பாடல்களைக் கக்குவதனால் சிறந்த அறிவாளிகள் ஆக முடியாது. ஒலிப்பதிவுக் (Tape recorder) கருவி கூடத்தான் பதிவு செய்த பாட்டை இயக்கினால் மீண்டும், மீண்டும் அப்படியே ஒப்புவிக்கின்றது. 11

அறநெறி, அன்பு, ஒழுக்கம் இவ்வழிகளைத் தவிர மற்றப் புற வழியிலும் இறைவனை அடையலாம் என்று கூறுவது, தேனைக் குடிக்கச் செல்லும் ஈக்கள்,கள் (மது) பானையில் கள்ளைத் தேனென்று நினைத்து மயங்கிக் கிடப்பதற்கு ஒப்பாகும். 12

பித்தளை நகை (கவரிங்) என்னதான் தங்கமுலாம் பூசினாலும் அது தன் உண்மையான உருவத்தை விரைவில் காட்டிவிடும். அதைப் போன்றே சில பொய்யர்கள் என்னதான் உண்மைபேசினாலும் அவர்களின் பொய்ம்மை நாளடைவில் வெளிப்பட்டுவிடும். 13

கள்ளிப்பாலும் (நஞ்சுடையது) பசுவின் பாலும் பார்ப்பதற்கு ஒன்றாகத் தோன்றும். சோதித்துப் பார்த்தால்தான் வித்தியாசம் தோன்றும். அதைப் போன்றே சில உண்மையான துறவிகளும் போலித் துறவிகளும் பார்க்க ஒன்றாகத்தான் தோன்றுவார்கள். ஊடுருவிப் பார்த்தால் தான் வேறுபாடுகள் விளங்கும். 14

சிலர் உயிரிரக்கம் (ஜீவகாருண்யத்தைப்) பற்றி மிக மிகத் தம்பட்டம் அடித்துக்கொள்வார்கள். அவர்கள் கட்டுவதும் பட்டு, இறைவன் சிலைகளுக்குக் கட்டுவிப்பதும் பட்டுப் பூச்சியைக் கொன்று எடுத்த பட்டுநூல் பட்டுத் துணிகள். அவர்களுடைய ஆசனங்களாகப் புலித்

Koviloor Digital Library

தோல், மான்தோல், இப்படி இறந்து போன எத்தனையோ மிருகங்களின் தோலைப் பயன்படுத்துகிறார்கள். இதற்குப் பெயர்தான் ஜீவகாருண்யமா? இவர்களுக்குப் புரியவில்லையா? அல்லது புரிந்தும் புரியாததைப் போல் நடிக்கிறார்களா? யாமறியோம் பராபரமே! 15

சில மடத்தலைவர்களை நான் பார்த்திருக்கிறேன். எல்லாமே துறந்துவிட்ட துறவிகள் போல் நடிக்கிறார்கள். ஆனால், அவர்கள் அணிந்திருக்கின்ற அணிகலன்கள் தங்கம், வைரம், பட்டு போன்ற, உயர்ந்த பொருள்களாக இருக்கின்றன. இதிலிருந்து பார்த்தால் இவர்கள் இன்னும் "மடத்" தலைவர்களாக இருக்கிறார்களே தவிர மடமையை ஒழிக்கும் தலைவர்களாக எப்பொழுது மாறுகின்றார்களோ? யாம் அறியோம் பராபரமே என்றுதான் நினைக்க வேண்டியுள்ளது. 16

உண்மையான துறவிக்குத் தன்னுடைய உடலே ஒரு பெரிய பாரமாக இருக்கும்பொழுது மற்ற அணிகலன்களையும், பட்டங்களையும் ஏற்றுக்கொள்ள எவ்வாறுதான் மனம் வருமோ? 17

சில நெற்பயிர்கள் மூன்று மாதத்திலே கதிர்விடும். சில நெற்பயிர்கள் ஆறு மாதங்களில் கதிர்விடும். சில பயிர்கள் எத்தனை மாதங்களாகியும் சாவியாகவே இருக்கும். அதுபோலவே சில மாணவர்களும் எத்தனை ஆண்டுகள் பயின்றாலும் அவர்கள் வெறும் சாவியாகத்தான் காட்சி தருவார்கள். 18

சிலருக்கு சாமி வந்தால் கோழி வெட்டு, ஆடு வெட்டு, பட்டு கொண்டுவா என்றெல்லாம் கேட்கிறார்கள். இது போன்ற கயவர்களும் நம் நாட்டிற்குத் தேவைதானா?

Koviloor Digital Library

கடவுள் இதையெல்லாம் கேட்கின்றாரா? கடவுள் பெய ரைச் சொல்லிக்கொண்டு இது போன்ற செயல்களில் இறங் கும் கயவர்கள் எதற்குத்தான் இருக்கின்றார்களோ? 19

குறி மேடைகளில் சாமி ஆடுவோர், "மகனே உன்னை நான் காப்பாற்றுகிறேன்" என்று ஆருடம் சொல்லி, ஆயிரக்கணக்கில் பணம் பறிக்கிறார்கள். குறி கேட்டவன் விபத்திலோ அல்லது வேறு வகையிலோ மறு வாரமே இறந்துவிடுவானாகில் அது சாமியின் வாக்கா? அல்லது ஆசாமியின் பிதற்றலா? 20

இறைவனின் பெயரைச் சொல்லி இந்தியாவில் எத்தனை இழி செயல்கள் நடக்கின்றன. அம்மாதிரி அக்கிர மங்கள் நடப்பது நின்றால்தான் இறைவன் பிழைப்பான். இப்படிப்பட்ட போலி வேடதாரிகளால்தான் உண்மை யான இறைவனே இல்லை என்று ஆகிவிடுகிறது; நாத்திகப் பிரச்சாரம் தலைவிரித்தாட ஆரம்பித்துவிடுகிறது. 21

தமிழின் பேரால் சிலர் உடல் வளர்ப்பது குழந்தையின் பேரைச் சொல்லித் தாய் இரந்து உண்டு உடல் வளர்த்த கதைக்கு ஒப்பாகும். 22

நாட்டுக்காகப் பாடுபட்டவன் நாதியற்று அலைகிறான். ஆனால், நாடு என்ற பேரால் வீடு பல கட்டி, உல்லாச உப்பரிகையில் உலாவுகிறார்கள் பலர். இது எதைப்போல் என்றால், குளம் வெட்டுபவன் ஒருவன்—அதன் பலனை அனுபவிப்பதோ மற்றொருவன் என்பதைப் போலாகும். 23

செயல்படுத்தாத சில திட்டங்களைத் தீட்டி மக்களுக் குக் காட்டுவது வெறும் பழங்களின் தோலைக் காட்டிப் பழம் என்று ஏமாற்றுவதற்கு ஒப்பாகும். 24

Koviloor Digital Library

எத்தனை மணி நேரம் வேண்டுமானாலும் திரைப்படம் பார்க்க வரிசையில் நின்று காத்துக் கொண்டிருப்பார்கள். ஆனால், இறைவனை அடைய ஞானச் சொற்பொழி விற்கோ அல்லது அறநெறி ஊழியம் செய்யவோ, ஒரு சில நிமிட நேரங்கூட காத்திருக்கச் சற்றேனும் அவர்களுக்கு மனம் வரவே வராது. 25

சாதாரண துறவியே துறவியான பின்பு மறந்தும் கூட ஒரு பெண்ணை நினைத்துப் பார்க்கமாட்டான். எல்லாப் பெண்களையும் அம்பாளின் வடிவமாகவும், தாயாகவும் கருதுவான். அப்படியிருக்க ஆதிசங்கரர், பாரதியென்னும் ஒரு பெண், போட்டியில், எல்லாக் கலைகளும் தெரிந்த தாகக் கூறுகிறீரே, உமக்குக் காமக்களவியல் கலை தெரியுமா?'' என்று கேட்டவுடன், ''இதுவரையில் அது தெரியாமல் இருந்து விட்டோமே!'' என்று நாணி, தன் உடலை விட்டு இறந்துபோன ஒரு அரசன் உடலில் புகுந்து (கூடுவிட்டுக் கூடுபாய்ந்து) கொண்டார். அரசன் மனைவி அவரை ஆலிங்கனம் செய்தாள். அப்பொழுது அவள் தன் கணவன் வயதானவன்—ஆனால், இப்போது அவர் வடிவில் இங்கே லீலை புரியும் இவன், ஒரு மந்திரசக்தியால் இறந்து போன தன் கணவனின் உடலில் (கூடுவிட்டுக் கூடுபாய்ந்து) நம்மை மகிழ்விக்க வந்த தெய்வம் என்று ஏங்கி வெறும் உடல் எங்கேனும் இருந்தால் அதைக் கொளுத்திவிடுங்கள் என்று ஆணையிட்டாள். அந்தக் காரிகை ஆதிசங்கரர் கொடுத்த அருளமிர்தத்தில் மயங்கியல்லவா இப்படிப் பிதற்றலானாள். 64 வகை காமக்கலைகளையும் இவளிடம் காட்டி கற்றுத் தேர்ந்த பின், பாவம் ஆதிசங்கரர் தன்னிடம் போட்டிக்கு வந்தவளை வெற்றி பெற்றார். சித்தர் என்றால் நினைத்த மாத்திரத்திலேயே எல்லாவற் றையும் உணரும் ஆற்றல் பெற்றவர்கள்; மாற்றான் மனைவி யிடம் சென்றா அந்தக்கலைக்குப் போட்டியில் வெற்றிபெற வேண்டும். ஒரு சாதாரண போட்டிக்கு இப்படியொரு

Koviloor Digital Library

அற்ப வேலை செய்வதா; இதிலிருந்து அவர் நிறுவிய மதமும், கொள்கையும், அவரும் எப்படி என்று அறிவுள்ள நீங்களே அடையாளம் கண்டுகொள்ளுங்கள். அவர்கள் மடங்களுக்குள்ளே நான்தான் முதல் ஜகத்குரு அல்ல. நான்தான் ஜகத்குரு. அப்பப்பா ஒரு உலகுக்கு எத்தனை? ஜகத்குரு. 26

ஒருவன் மதத்தலைவன் பட்டத்திற்கு ஆசைப்படுவது. மக்களுக்கோ, மகேசுவரனுக்கோ தொண்டு செய்ய அல்ல. தனது இச்சை,சுகபோகங்களை அனுபவிக்கவே. இவர்கள் தாம் சன்மார்க்கத்தின் முதல் எதிரிகள். 27

குற்றம் உள்ள ஒருவன், குற்றமில்லை என்று சொல்லிக் கொள்வது, கண்ணில் மச்சமுள்ள ஒருவன். மற்றவர்கள் சொல்வதையும் கேட்காமல், கண்ணாடியிலும் பார்க்காமல், தன் கண்ணில் மச்சம் இல்லை என்று சொன்னால் எப்படியோ—அதைப் போன்றதற்கு ஒப்பாகும். 28

உலகத்தில் தன்னைத்தானே திருத்திக் கொள்ளாமல் மற்றவர்களைத் திருந்தச் சொல்வது ஒரு கழுதையைப் பார்த்துக் குதிரை, ''நீயும் என்னைப்போல் குதிரையாகி விடு'' என்று சொல்வதற்கு ஒப்பாகும். 29

கடவுள் உள்ளார், உள்ளார் என்று உரைத்துக் கொண்டு நாட்டுக்குத் தீமை செய்யும் பக்தர்களைவிட. இறைவன் இல்லை இல்லையென்று வாதிட்டுத் திரிந்து மக்களுக்கு நன்மை செய்யும் நாத்திகர்கள் எவ்வளவோ மேல். 30

மெய்வழிக்கு அழைத்துச் செல்கிறேன் என்று பொது மக்களை ஏமாற்றி அழைத்துக்கொண்டுபோய் புறவழியில் தள்ளி 'நான் கடவுளின் அவதாரம், மறு அவதாரம் எடுக்கப் போகிறேன்' என்று ஏமாற்றிக் கோடிக்கணக்

Koviloor Digital Library

கான பணம் சம்பாதித்துப் பூமிக்கடியில் தங்கக் கட்டி களாகப் புதைத்து வைத்திருந்த பணத்தாசை பிடித்த பாவியா கடவுளின் அவதாரம்? அவனா மீண்டும் மறு பிறவி எடுப்பான்? அவனை நம்பிய மக்களின் அறியா மையை என்னென்று சொல்வது? 31

சிலர் சாமி ஆடிக்கொண்டு உளறுவதை நினைத்தால், சிலர் (மது) குடித்துவிட்டு ஆடுவதுபோல் உள்ளது. 32

உலகில் ''இறைவன் பார்க்கும் இடமெங்கும் நீக்கமற நிறைந்திருக்கிறான்' என்ற தேவாக்கியத்தை உண்மை யாக உணர்ந்திருக்கும் பக்தர்களாக இருப்பாராயின் உலகில் பக்தர்கள் தீமை செய்வார்களா? அப்படித் தீமை செய்வது இறைவனுக்குத் தெரியாத இடம்தான் ஒன்று உலகில் உண்டா? அப்படி இருந்தும் இவர்கள் தீமை செய்வார்களாயின் இறைவனை இவர்கள் எவ்வாறு முட்டாளாக்க நினைத்து ஏமாற்றுகிறார்கள் என்று நன்றா கப் புரிந்துகொள்ளுங்கள். 33

சில கபட சந்நியாசிகள் பொதுமேடையில் வேதம்—பகவத்கீதை-உபநிஷத்துக்களை அள்ளி அள்ளி வீசி. அருள் மழையை அப்படியே பொழிவார்கள். அப்படிப் பேசும் போதுகூடச் சிலர் தம் ஆசைநாயகிகளை மறைமுகமாய்ப் புகழ்வார்கள். ஒவ்வொருத்தியும் தன்னையே புகழ்வதாக ஏமாந்து மயங்குவாள்(பாவம்! கூட்டத்திலிருக்கும் பாமர மக்கள். அந்த ஆசை நாயகிகளின் சரஸ, விரச மொழி களில், காம விளையாட்டு லீலைகளைப்பற்றி, எப்படி அறிய முடியும்) ஆனால், தனியறைக்குள் வந்ததும் தாக சாந்திக்குப் கோபிஸ்திரிகளில் ஒருத்தி காலை அமுக்க, ஒருத்தி கையை அமுக்க, ஒருத்தி தலையை அமுக்க, ஒருத்தி... இப்படிப் பல அவயவங்களை அமுக்கி, சுகம் காண்கிறார்கள். இந்த நிகழ்ச்சியைச் சில போலிச் சாமியார்களிடமும் அந்தப் பெண்களிடம் இது முறையா என்றுகேட்டால்... 34

Koviloor Digital Library

Guru is Brahma, Guru is Vishnu, Guru is Lord Parameswara-Guru is the very Parabrahman i e-he is God of the Gods-He is above all relations-Superior even clear that ones own husband......... "குரு என்பவர். கடவுளுக்கு மேலானவர், எல்லா உறவுகளுக்கும் மேலானவர் .. ஏன்? சொல்லப் போனால், கணவனுக்கும் மேலாக-அன்புடனும் ஆசையுடனும் அரவணைப்பவர். அவருக்கு இப்படியொரு பாத பூஜை தாக சாந்தி பணி விடை செய்தால்-என்ன என்று பதிலளிக்கிறார்கள். இது இந்தியத் தமிழ்ப் பண்பாட்டுக்குப் பொருந்துமா என்று கேட்டால் ஒரு கண்ணனை, பல கோபிஸ்திரிகள் ஒரு பாஞ்சாலியை பலர்...என்று பதிலளிக்கிறார்கள். இப்படிப் பதிலளிப்பவர்கள் ஒன்றும் தெரியாத பாமர மக்கள் இல்லை. படித்துப் பட்டம் பெற்று, பணத்திமிரில் நீதி தெரியாத மயக்க வெறியில் இருக்கும் தேவனுக்கு அடியாள்கள்." அதுவும் தமிழ் நாட்டுப் பெண்கள். இப்படிப்பட்ட பெண்கள் இருந்தால், ஏன் இம்மாதிரி சுகங்களை அனுபவிக்க, பல மடயர்கள், வெறியர்கள் போலிச் சாமியார் வேடம் போட மாட்டார்கள்? ஏமாளிகள் இருக்கும்வரை ஏமாற்றுபவர்கள் நிச்சயம் இருந்தே தீருவார்கள். இப்படிப்பட்டவர்கள் நம் நாட்டைக் கெடுத்தது போதாதென்று, வெளி நாட்டிலும் தம் திருவிளையாடல்களைக் காட்ட ஆரம் பித்துவிட்டார்கள். பாவம், சில அப்பாவி உண்மைப் பக்தர் களை அந்த இறைவன்தான் காப்பாற்ற வேண்டும். 35

வேதங்கள், புராணங்கள், உபநிஷத்துக்கள், தேவாரம், திருவாசகம் இப்படிப் புராண நூற்களைக் கற்று மேடை களில் ஊருக்கு உபதேசம் சொல்வதனால் அவர்கள் ஞானிகளாகி விடமுடியாது. அது உண்மையாக இருக்கு மாயின் இதுவரையில் சொற்பொழிவு ஆற்றிக்கொண் டிருக்கும் வேதாந்திகளுக்கும், சித்தாந்திகளுக்கும்

Koviloor Digital Library

உண்மையிலேயே இறைவன் நேரடியாக அல்லவா காட்சி தந்திருக்க வேண்டும். இதுவரையில் எவருக்கும் இறைவன் அப்படிக் காட்சி தந்ததாக எனக்குத் தெரியவில்லை. அப்படி கடவுளைக் கண்ட ஒருவர் குரு இருப்பாராயின் காலில் விழுந்து மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன், அந்தக் குருவின் இருப்பிடத்தை எமக்குத் தெரிவிப்பீர்களாக. 36

சிலர் தம்மைக் கடவுளின் அவதாரம் என்று சொல்லிக்கொள்கிறார்கள். இவர்களை நாம் எப்படி நம்புவது? திருநாவுக்கரசரைச் சுண்ணாம்புக் காளவாயில் உயிருடன் வைத்து வேக வைத்தார்கள். கை கால்களைக் கட்டிக் கடலில் போட்டார்கள். விஷம் கொடுத்தார்கள். கழுமரத்தில் ஏற்றினார்கள். ஆனால், அத்தனை துன்பங்களிலும் அவர் உயிர் உடலைவிட்டுப் பிரியாமல் இருந்தது. அப்படிப்பட்ட உண்மையான அடியாராகிய திருநாவுக்கரசரே தம்மைக் கடவுளின் அவதாரம் என்று சொல்லிக் கொள்ளாமல் நான் கடவுளின் அடிமை என்று சொன்னார். ஆனால், சில போலி காவி வேடதாரிகள், தம்மைக் கடவுளின் அவதாரம் என்று சொல்லிக் கொண்டு மக்களை ஏமாற்றுகிறார்கள். அவர்கள் உண்மையிலேயே கடவுளின் அவதாரமாக இருப்பாராயின் மேலே குறிப்பிட்ட அத்தனை சோதனைகளையும் செய்வோம். உயிர் பெற்று வந்தால் கடவுளின் அவதாரம் என்று ஏற்றுக் கொள்வோம். அப்படி இல்லையென்றால் அவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்று நீங்களே அடையாளம் கண்டு கொள்ளுங்கள்.

இந்த இந்திய நாட்டில் தன்னைக் கடவுளின் அவதாரம் என்று சொல்லிக்கொண்டு வெளிநாட்டுக் கடிகாரங்களும் கடத்தல் பேனாக்களும் வரவழைத்து மக்களை ஏமாற்றித் திரியும் ஓநாய்களே! நீங்கள் உண்மையிலேயே கடவுளின் அவதாரம் என்றால், இந்த இந்தியத் திருநாட்டில் எத்தனையோ மக்கள் பசிபட்டினியினால் சுருண்டு துவண்டு தற்கொலைப் படைகளாகி இருக்கின்றார்கள், இந்நாட்டில்

Koviloor Digital Library

இப்படிப்பட்ட ஏழைகள் பிழைப்பதற்கு உணவுப் பொருள்களாகிய அரிசி, பருப்பு போன்ற பொருள்களை மூட்டை மூட்டையாக, அல்ல இலட்சம் லட்சமாகப் படைத்துப் பல விமானம் மற்றும் அத்தியாங்கிய பொருள் ஏழை மக்களின் கண்ணீர்த் துளிகலளத் துடைக்கவேண்டும்? கடவுள் அவதாரம் என்றால் மருத்துவ மனைகளும், காவல்துறைகளும் எதற்கு இந்த நாட்டிற்கு? தன்னைக் கடவுள் அவதாரம் என்று சொல்லிக் கொள்கின்றீர்கள். அந்தோ நீங்கள் தோன்றிய இந்த நாடு மற்றைய நாட்டிடம் தேவைகளுக்குக் கையேந்திக் கடன்பட்டா கிடக்கவேண்டும்? ஐய்யோ! என்னே பரிதாபம்! நம் நாடல்லவா பல்வேறு நாடுகளுக்கு உதவி செய்யவேண்டும்? 38

இந்த நாட்டில் ஒரு பன்றியை நன்றாகக் குளிப்பாட்டி அதற்குப் பட்டுப் பீதாம்பரத்தை அணிவித்து, அந்தப் பன்றியைப் பார்த்தசாரதியின் கோவிலுக்கு முன் நிறுத்தி 'இது தான் கூர்ம' அவதாரம் என்று சொன்னால் அதைப் பார்த்து உடனே நம்பிக்கை ஏற்பட்டு வணங்கக்கூடிய மனிதர்களும் உண்டு. இந்த நாட்டில்! 39

தன்னை முதலில் புத்தர் அவதாரம் என்றும்; அதற்குப் பிறகு இயேசுநாதர் அவதாரம் என்றும் அதற்குப் பின் தத்தாத்திரேயர் அவதாரம் என்றும் அதன் பின் சதாசிவப் பிரமேந்தர் என்றும் இந்த இருபதாம் நூற்றாண்டில் தன்னை ஒரு கடவுள் அவதாரம் என்று சொல்லிக்கொண்டு மக்களை ஏமாற்றுகிறார்கள். இவர்களெல்லாம் பைத்தியக்காரர் மருத்துவ மனையில் இருக்க வேண்டியவர்கள். வெளியே இருந்து கொண்டு மற்றவர்களையும் பைத்தியக் காரர்களாக்கிவிடுகிறார்கள். இவர்கள் எல்லோரும் கடவுளின் அவதாரம் என்றால் பெரிய நெருப்புக் குழியில் இவர்களை நிறுத்திப் பின்பு அவர்கள் மீண்டும் உயிர்த்தெழுந்து வந்தால் அவர்கள் சொல்வது போல் உண்மையில் கடவுள் அவதாரம் என்று நினைக்கலாம். அப்படி இல்லையென்

Koviloor Digital Library

றால் அவர்களைப் பற்றிப் பொதுமக்களாகிய நீங்களே புரிந்து கொள்ளுங்கள், அடையாளங்கள். 40

19-8-1982-இல் என்னிடம் அருள்வாக்குக் கேட்க ஓர் அம்மையார் வந்திருந்தார். தன்னை அவர் 'இராஜ ராஜேஸ்வரி அவதாரம்' என்றும், தன்னை ஆதிபரா சக்தியின் அவதாரம் என்றும், 'நான் இதற்கு முன் அருள்வாக்கு சொல்லிக் கொண்டிருந்தேன். யாரோ எனக்குச் செய்வினை செய்ததால் எனக்கு முன்பு போல் அருள் வாக்கு வரவில்லை. எனக்கு ஒரு கையும், காலும் வரவில்லை என்று என்னிடம் வ்ந்து கதறினார். நான் அப்பொழுது கேட்டேன். நீ ஆதிபராசக்தியின் அவதாரம் என்றும் இராஜராஜேஸ்வரியின் அ்வதாரம் என்றும் மூகாம்பிகையின் அவதாரம் என்றும் கூறுகிறாயே? அப்படியென்றால் நீ உன்னையே காப்பாற்றிக் கொள்ளலாமே என்று கேட்டேன் அப்போது அவருடைய முந்தைய (பழைய) கதையைப் பின் வருமாறு கூறினார். ''நான் ஒரு கோடம் பாக்கத்துவாசி முன்பு சினிமாவில் துணை நடிகையாகப் பல படங்களில் நடித்து இருக்கிறேன். ஒருநாள் ஒருவர் வந்து இந்தக் காலத்தில் இப்படி இருப்பதைவிட அம்பாள் வேடம் போட்டுக் குறி சொன்னால் பணம் இன்னும் நிறையச் சம்பாதிக்கலாம் என்று என்னிடம் கூறினார். முதலில் பயந்தேன். பிறகு போகப் போக எனக்கு அது என்னுடைய நடிப்புத் தொழில் போலப் பழகிவிட்டது. பிறகு அம்பாளைப் போல் தங்க முலாம் பூசிய கிரீடமும் இடுப்பில் ஒட்டியாணமும் அணிந்து பட்டுப் புடவையும், பல்வேறு ஆபரணங்களும் அணிந்து, காட்சியளித்ததால் பல மடயர்கள் என்னை உண்மையிலேயே அம்பாளின் அவதாரமாக நினைத்து, என் காலில் விழுந்து வணங்கினார்கள். நான் என் காலைத் தூக்கி அவர்களை ஆசிர் வாதம் செய்தேன். பணம் கொட்டோ கொட்டு என்று கொட்டியது. இருந்தாலும் எனது பிறவிப் புத்தி போகாத

Koviloor Digital Library

தால் அதில் பல தவறுகள் செய்தேன். அதனால், நான் இடம் விட்டு இடம் மாறவேண்டி இருந்தது. கடைசியில் செய்வினையின் பயனாகப் பல நோய்களுக்கு ஆளாகித் தங்கள் காலில் வந்து சரண் அடைந்துவிட்டேன்'' என்று கண்ணிருடன் கதறினார். 41

அதைக் கேட்ட நான் ‘‘உனக்கு எந்தவித செய்வினையும் யாரும் செய்யவில்லை. நீ அம்பாள் என்று சொல்லிக்கொண்டு அக்கிரமங்கள் பல செய்ததால் இந்தத் துன்பத்திற்கு ஆளாகி இருக்கிறாய். ஆனால், மீண்டும் இந்த அக்கிரமங்களைச் செய்யமாட்டேன் என்று நீ சத்தியம் செய்து கொடுத்தால் நான் உன்னைக் குணப் படுத்திவிடுகிறேன்.'' என்று கூறினேன். அந்த அம்மையாரும் சரி என்று கூறியதால் நானும் அந்த நோயைக் குணப் படுத்திவிட்டேன். ஆனாலும், நாய்வாலை எவ்வளவு பாடு பட்டு நிமிர்த்தினாலும் நிமிர்ந்து நிற்குமா? அது போல் தான் அந்த அம்மையாரும் மறுபடியும் அதே அக்கிரமங் களைச் செய்துகொண்டு இருக்கிறார். இனி இறைவன் ஒருவன் தான் அந்த அம்மையாரைக் காப்பாற்றவேண்டும். 42

சோதிடத்தை நம்பிச் சிலர் ஏமாறுகிறார்கள். ஜாதகம் சொல்லுகின்றபடியாக நடக்கும் என்று நினைத்து சிலர் தன் வாழ்நாள்களைக் கெடுத்துக்கொள்கிறார்கள். இந்தச் சோதிடத்தைப் பற்றிச் சற்றுச் சிந்திப்போமாக. பாம்புப் பஞ்சாங்கத்தைப் பார்த்தால் இன்றைய இராசியும், நட்சத் திரமும், கிரகமும் ஒரு மாதிரியாகப் பலன் இருக்கும். அதுவே ஆற்காடு பஞ்சாங்கத்தில் பார்த்தால் நட்சத்திர மும், கிரகமும், திதியும் வேறு மாதிரியாகப் பலன் சொல் லும். இந்தப் பஞ்சாங்கங்களை எழுதுபவர்கள் பிராமணர் கள்தாம் ஒரே நாட்டில் ஒரே ஊரில் எழுதுகின்ற இப் பஞ்சாங்கமே இப்படி என்றால் இந்தச் சோதிடத்தை நம்பி

Koviloor Digital Library

வாழ்க்கையை எப்படி அமைத்துக் கொள்வது? கிரகங்கள் என்றால், நட்சத்திரங்கள் என்றால், எல்லாப் பஞ்சாங்கங் களும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டியதுதானே? ஏன் பஞ்சாங்கங்கள் வெவ்வேறாக மாற்றிக் கொண்டு இப் படிச் செய்கின்றன. உண்மையான சோதிடம் பொய்யல்ல அதைத் தேடிப்பார்த்து வாழ்க்கையை அமைத்துக் கொள்ளவும். 43

சிலர் கடவுள் இல்லை என்று தம்பட்டம் அடித்து மேடைகள் தோறும், புத்தகங்கள் தோறும் மிகக் கேவலப் படுத்தி எழுதியும் பேசியும் திரிவார்கள் அப்படித் திரிந்து கொண்டிருப்பவர்களும் கள்ளத்தனமாகத் தன் வீட்டு பூஜை அறையில் கடவுளை நினைத்து வணங்குகிறார்கள். தன் மனைவி, குழந்தைகள் தூய தமிழ்ப் பெயரை விடுத்து ஆதிபராசக்தி கூறினாள் என்று பெயரையும் மாற்றி வேறு ஒரு பெயர் வைத்துக்கொள்ளும்போது அந்த ஆதிபராசக்திக்கு என்னே வெறுப்பு இந்தத் தமிழ் மீது என்று நினைத்து நான் மிகவும் வருத்தப்படுகிறேன். இவர்களுடைய செய்கை எப்படி உள்ளது என்றால் பொய் சொல்லித் திரியும் ஒருவன் நாடகத்தின் அரிச்சந்திரன் வேஷம் போடுவதற்கு ஒப்பாகும். இது மக்களை மடையர்களாக்கி தன்னை மட்டும் உயர்த்திக் கொள்ளும் கயமைத்தன்மை ஆகும். 44

வானத்தில் இருக்கும் நட்சத்திரங்களின் எண்ணிக் கையை எண்ணிவிடலாம். ஆனால், அரசியல் வாதிகளின் ஆசைகளை நாம் எண்ணமுடியாது. 45

அறிவில்லாதவனுக்கும் இரக்கமில்லாதவனுக்கும் தானம் தருவது எதற்கு ஒப்பாகும் என்றால், மூன்று அடி நிலம் கேட்டு தானம் கொடுத்தவன் தலையை மிதித்த கிருஷ்ணனுக்கு ஒப்பாகும். 46

Koviloor Digital Library

வாய்மை வெல்லாம் தர்மம் வெல்லும் என்னும் மறைமொழி எப்பவோ! செத்துவிட்டது. இக்காலத்தில் மட்டும் அல்ல. அக்காலத்திலும்தான் எப்படியென்றால், தர்மமே வடிவெடுத்த கர்ணன் கடைசியாகக் கண்ணனின் சூழ்ச்சியால் கமண்டலத்தையும் பலநாள் செய்து வந்த தர்மத்தையும் தானமாகத் தந்தான். இது உலகிலேயே பெரும் தர்மம். ஆனால், பிச்சையேற்றவன் பாரதத்தில் பிழைக்கிறான், பிச்சை போட்டவன் பாரதத்தில் சாகிறான் எங்கே தர்மம். வாய்மையே கொல்லும். 47

கிறிஸ்தவர்களுடைய வேதப் புத்தகமாகிய பைபிளில், முதல் அத்தியாயம் ஆதியாகமம் வசனம் 20, 27, தேவன் தன்னுடைய சாயலாகவும், தமது ரூபத்தின்படியேயும் மனுஷனைச் சிருஷ்டித்தார் என்று கூறியிருப்பதிலிருந்து பரலோகத்திலிருக்கின்ற தேவன் மனிதருடைய சாயலிலும் ரூபத்திலும் இருக்கிறான் என்பதில் யாருக்கும் எள்ளளவும் சந்தேகம் இருக்க முடியாது. அல்லாமலும், மாற்கு சுவிசேஷம் அத்தியாயம் 16 வசனம் 19ல் ''இவ்விதமாய்க் கர்த்தர் அவர்களுடனே பேசின பின்பு பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, தேவனுடைய வலது கரத்தில் உட்கார்ந்தார்''—என்று கூறியிருப்பதிலிருந்து தேவனுக்கு வலது கையுண்டு என்பதும் பெறப்படுகிறது. நமக்கு இரண்டு கைகளைக் கொடுத்த ஆண்டவன் ஒற்றைக் கையராகவா இருப்பார்? அவருக்கு எத்தனை கரங்கள் உண்டு. அவரது உருவம் எப்படிப்பட்டது என்று இயேசுநாதரும், வேறு கிறிஸ்தவ தீர்க்கதரிசிகள் யாரும் கூறியிருப்பதாக இல்லை. 48

இஸ்லாமியத் திருமறையான திருக்குரானில் இறைவன் பாதையில் முற்றாய்த் தன் வாழ்க்கையை அர்ப்பணம் செய்து அவனுக்கே முற்ற அடிபணிந்து திருமறையின் முக்கிய அத்தியாயமான பாத்திஹா என்ற பிரார்த்தனையை இடைவிடாது ஓதிவரும் அடியார் அல்லா

Koviloor Digital Library

ஹீத்தாலாவின் திருமுகத்தைக் காண்கிறான். என்று பெறப்பெற்றிருக்கிறது. காணக்கூடிய திருமுகம் உண்டு என்றால், ஆண்டவனுக்கு உருவம் உண்டு என்பது பெறப் படுகின்றதே தவிர, அத்திரு உருவம் எப்படிப்பட்டதென்று அதில் கூறப்பெறவில்லை. 49

ஆனால், கிறிஸ்துவர்களும், இஸ்லாமியர்களும் இந்துக் களின் உருவ வழிபாடு தவறு என்று சொல்லுகிறார்கள். இதிலிருந்து இவர்கள் கூறுவது மேற்கண்ட கருத்தை மறுப் பவர்கள் போலல்லவா தெரிகிறது. இதைப் பொது மக்கள் நீங்களே தெரிந்து கொள்ளுங்கள் உருவ வழிபாடு தேவையில்லை என்றால் சிலுவைக் குறியும், முஸ்லிம்கள் வழிபடும் இடங்களில் பிறைநிலவும், கைவிரல்களும் எதற்காக? 50

இயேசு நாதரை அரசன் பிலாத்து கட்டளைப் படி சிலுவையில் அறைந்த பின்பு, அந்த வழியாய் நடந்து போனவர்களும், பிரதான ஆசிரியரும், வேதபோதகரும், மூப்பரும் இயேசுவை நோக்கி "தேவாலயத்தை இடித்து மூன்று நாள்களுக்குள்ளே கட்டுகிறவனே! உன்னை நீயே ரட்சித்துக்கொள். நீ தேவனுடைய குமாரனானால் சிலுவையிலிருந்து இறங்கிவா" என்று பரிகாசம் பண்ணி, மற்றவர்களை இரட்சித்தான். தன்னைத்தான் இரட்சித் துக் கொள்ளத் திராணியில்லை. இவன் இஸ்ரேல் இராஜாவானால், இப்பொழுது சிலுவையிலிருந்து இறங்கி வரட்டும். அப்பொழுது இவனை விசுவாசிப்போம் தன்னைத் தேவனுடைய குமாரனென்று சொல்லித் தேவன் மேல் நம்பிக்கையாய் இருந்தானே, அவர் இவன் மேல் பிரியமா யிருந்தால், இப்பொழுது இவனை இரட்சிக்கட்டும்' என்றார்கள். (மத்தேயு அதிகாரம் 27 வசனம் 29-43) 51

பொதுமக்கள் இவ்வளவு சவால்விட்ட பின் ஏசுநாதர் ஒன்பதாம் மணி நேரத்தில். ஏலீலாமா சவக்தானி (இதற்கு

Koviloor Digital Library

'என் தேவனே, என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்' என்று அர்த்தம்) என்று மிகுந்த சப்தமிட்டுக் கூப்பிடவும், அங்குள்ளவர்கள் ''எலியா இவனை இரட்சிக்க வருவானோ? பார்ப்போம்'' என்று பொறுத்திருக்க இயேசு மறுபடியும் முன்போலவே மகா சப்தமாய்க் கூப்பிட்டு, ஆவியை விட்டார், என்றே நான்கு சுவிசேஷங்களும் கூறுகின்றன. 52

இவ்விதமாய் இயேசுநாதர் சிலுவையில் ஆவி துறந்து மரிக்க நேர்ந்தது அரசனின் கட்டளையின் பேரால் நிகழ்ந்திருக்க, அவர் மற்ற மனிதர்களுக்காக மரித்தார் என்று கிறிஸ்தவர்கள் சொல்லுவதில் நியாயம் ஏதும் இருக்கிறதா? அவருடைய மரண வாக்குமூலம் அதற்கு ஏதும் சான்று தருகிறதா?—என்று பார்த்தால், அது அதற்கு மாறான சான்றுதான் தருகின்றது. 53

அவராகவே மரித்திருந்தால் சிலுவையில் அறையப் பட்டபொழுது, ''என் தேவனே, என் தேவனே, என் தேவனே!! ஏன் என்னைக் கைவிட்டீர்?'' என்று மிகுந்த சப்தமிட்டுக் கூப்பிடத் தேவையில்லையே? அப்படியிருக்க, மற்றவர்களுக்காக மரித்தார் என்பதில் வேறு ஏதும் அர்த்தம் இருக்கிறதா? பரமண்டலத்திருக்கிற பிதாவினால் கைவிடப்பட்டு மரித்த இயேசு நாதர் ஒருவரே தேவ குமாரன், கடவுள் சர்வேஸ்வரன் என்றெல்லாம் சொல்லுவதில் ஏதாவது நியாயம் இருக்கிறதா? 54

அந்நாளில் வேள்வி என்ற பெயரால் பசு, மாடு, ஆடு இவைகளைப் பிராமணர்கள் கொன்று தின்று சோமபானம் (மது) அருந்தி வந்தார்கள். இது சிறு உயிர்களைக் கொன்று (ஆடு, கோழி) மது அருந்தி சாமியாரும் பூசாரிகளைப் போலும், இஸ்லாமியர்கள் நோன்பு காலத்தில் (ரம்ஜான்) ஆட்டுக்கு மந்திரம் ஓதினால் அது கொலை இல்லை. அது அல்லாவைச் சேரும் என்று சொல்வது, நினைக்கும்போது

Koviloor Digital Library

நம் உள்ளம் துடிக்கின்றது. அப்படி ஆண்டவன் கறியைக் கேட்டுத் திருப்தி அடைய நினைத்தால் தன் வீட்டார் ஒருவரின் கறியைச் சமைத்து ஆண்டவருக்குப் படைக்கலாமே? பாவம் மற்ற உயிர்கள்தாம் கிடைத்ததா? தான் பயன் அனுபவிக்க. 55

கடவுள் இல்லவே இல்லை, கடவுள் இல்லவே இல்லை.
கடவுளைக் கற்பித்தவன் அயோக்கியன்
கடவுளைக் கும்பிடுகிறவன் முட்டாள்.
''தமிழ்மொழி ஒரு காட்டு மிராண்டி.''
(ஈ. வெ. ரா. பெரியார் அவர்கள்)

உலகத்தார் உண்டுஎன்பது இல்என்பான் வையத்துள்
அலகையா வைக்கப் படும்.
(திருக்குறள் 850)

உலகத்தார் (மெய்யறிவுடையோர்) கூறுவது மெய்ப் பொருள் இறைவனை இல்லையென்று கூறுவாரை உலகத்தில் அறிவில்லாப் பேயாகக் கருதப்படும் என்பது திருவள்ளுவப்பெருமானார் திருவாக்கு!

''ஒன்றே! குலம் ஒருவனே தேவன்''

இந்த திருமூலர் வாக்கை அப்படியே! ஏற்றார் அறிஞர் அண்ணா, அவர்கள்.

ஈ.வெ.ரா. பெரியார் அவர்கள் இந்நாட்டில் தோன்றிய புனித சமயத்தைப் புழுதி வாரி இறைத்தார். இதனால் இறக்குமதியான இஸ்லாமிய கிறித்தவ மதங்கள் உண்மை ஒன்றும் தெரியாத பாமர மக்கள் வெள்ளையன் காலத்தில் அவன் மதத்தில் சேரலாயினர். ஏசுநாதர் யார், அந்த மதம் எப்படிப்பட்டது என்று நன்றாகத் தெரிந்து இருந்தால் மதி மயங்கி கல்பானையில் விழுவதைப் போல் நம் அறிவுடைய தமிழ் மக்கள் அங்கே சரணாகதி அடைந்திருக்க

Koviloor Digital Library

மாட்டார்கள். புதிய ஏற்பாட்டையும் பழைய ஏற்பாட்டையும் நன்றாகப் படித்துப் பார்த்தால் அந்த மதத்தின் மத வெறிபிடித்த அலங்கோலத்தன்மை புரியும். யார் இந்த ஏசுநாதர், இவன் உடன் பிறந்தவர்கள் யார் என்று புரிந்து இருக்கும். இந்திய நாட்டில் தோன்றிய தெய்வ நூல்களை எரிக்கத்தான் இவர்களுக்குத் தைரியம் இருந்ததே ஒழிய மற்றைய நூல்களின் மடத்தனமான மூட நம்பிக்கையைத் தீயை வைத்துக் கொளுத்த முடியவில்லை; அதே நேரத்தில் பெரியார் அவர்கள் சீர்திருத்தாவிடில் நாடு மோஸமாகத் தான் இருக்கும். அதற்காகவாவது, நன்றி சொல்லித்தான் ஆகணும். இன்று தமிழன் தலைதூக்கி நடக்கிறான் என்றால் அதற்கு ஈ. வெ.ரா. பெரியார் தான் காரணம். மற்றும் பல பெரியார்கள். ஆவர். 56

Koviloor Digital Library

17. மதங்கள்

1. புறப்புறச் சமயம்

உலோகாயதம். (புத்தம்) சௌத்திராந்திகம், யோகாசாரம், மாத்யபிகம், வைபாபிகம். ஆருகதம் என்பன.

2. புறச் சமயம்

தர்க்கம் மீமாம்சை, ஏகான்மவாதம், சாங்கியம், யோகம், பாஞ்சராத்திரம் என்பன.

3. அகப்புறச் சமயம்

பாசுபதம், மகாவிரதம், கனாமுகம், வாமம், வைரவம், ஐக்கிய வாதம் என்பன.

4. அகச் சமயம்

பாமாணவாத சைவம், சாங்கிராந்தவாத சைவம், அலிகாரவாத சைவம், நிமித்தம் காரண பரிணாமவாதம், சுத்த சைவம் என்பனவாம்.

இங்ஙனம் கூறிய எல்லாச் சமயங்களையும் தன்னகத்தே கொண்டு சமய அரசாம் தனக்குரிய கொள்கை பிறிதொரு சமயத்திலே இல்லாததாகி எல்லாச் சமயங்களுக்கும் தாயகமும், நாயகமுமாகி நிற்பது ‘‘வைதிக சுத்தாத்துவித சித்தாந்த சைவம் ஒன்றேயாம். இந்தச் சமயம் சிவபெருமானால் அருளிச்செய்யப் பட்டதாகலின் ‘‘சைவம்'' எனவும்

Koviloor Digital Library

முடிந்த முடிபாதலின் ''சித்தாந்தம்'' எனவும், வேதத்தின் பரமதாற்பரியமாகிய சிவபெருமானைப் பரம் பொருளாகக் கொண்டதாகலின் 'வைதீக சைவம்'' எனவும் பெயர் பெறும். இந்தச் சமயத்தினியல்பைப் பெரிய புராணமும், ஸ்ரீதாயுமான சுவாமிகள் பாடலும் பின்வருமாறு கூறியமை பற்றி நன்கு தெரிந்துணர்ந்து கொள்ளப் பெறும்.

''புத்தியினால் அவருரைத்த பொருளின் தன்மை
பொருளன் ரும்படியன்பர் பொருத்தக் கூற
மந்தவுணர்வுடையவரை நோக்கிச் சைவ
மல்லாது மற்றொன்று மில்லை யென்றே
அந்த மில் சிர் மறைகளாக மங்களேனை
யகில கலைப் பொருளுணர்ந்தாரருளிச் செய்யச்
சிந்தையினில் அது தெளிந்து புத்தர் சண்பைத்
திரு மறையோர் சேவடிக் கீழ்சென்று தாழ்ந்தார்''

''அன்றவர்க்குக் கவுணியர் கோன் கருணை நோக்கம்
அணைதலினால் அறிவின்மையகன்று நீங்கி
முன்தொழுது
விழுந்தெழுது சைவரானார் முகைமலர் மாரியின்
வெள்ளம்
பொழிந்ததெங்கும் நின்றனவும் சரிப்பனவும்
சைவமேயாம்
நிலைமை அவர்க்கருள் செய்து சண்பை வேந்தர்
சென்று சிவனார் பதிகள் பணிய வேண்டித்
திருக்கடவூரதன் மருங்கு சேரவந்தார்.''

''செப்பரிய சமயங்களெல்லாந் தந்தம் தெய்வமே
தெய்வமெனுந் தன்மையான அப்பரிசா ளருமஃதே
பிடித்தாலிப்பால் அடுத்த வந்நூல்களும் விரித்தேயநூ-
மானாதி ஒப்பவிரித் துரைப்பர்; இங்ஙன்
பொய்மெய்யென்ன-
ஒன்றினையொன் றெனப்பார்ப்ப தொவ்வா தார்க்கும்
இப்பரிசாம் சமய முமா யல்ல வாகி
யாது சமயமும்வணங்கு மியல்ப தாகி''

Koviloor Digital Library

"இயல்பென்றுந் திரியாமல் இயம மாதி
யெண்குணமும் காட்டியன்பா லின்ப மாகிப்
பயனருளப் பொருள்கள் பரிவாரமாகிப்
பண்புறவுஞ் சௌபாணபக்ஷங் காட்டி.
மயலறு மந்திரஞ்சிக்ஷை சோதி டாதி
மற்றங்கநூல் வணங்க மௌன மோலி
அயர்வறச் சென்னியில் வைத்து ராஜாங்கத்தில்
அமர்ந்ததுவைதிக சைவ மழகி தந்தோ"

"அந்தோவீ ததிசயம் இச்சமயம் போலின்
றறிஞரெல்லா நடுவறிய வணிமா வாதி
வந்தாடித் திரிபவர்க்கும் பேசா மோனம்
வைத்திருந்த மாதவர்க்கு மற்று மற்றும்
இந்திராதி போக நலம் பெற்ற பேர்க்கும்
இது வன்றித் தாயகம் வேறில்லை யில்லை
சந்தான கற்பகம் போல் அருளைக் காட்டத்
தக்கநெறி யிந்நெறியே தான் சன்மார்க்கம்"

"சைவசமய மேசமயம் சமயா தீதப் பழம் பொருளைக் கைவந்திட வேமன்றுள் வெளிகாட்டு மிந்தக் கருத்தை விட்டுப் பொய்வந் துழலுஞ் சமயநெறி புகுத வேண்டா முத்தி தரும் தெய்வ சபையைக் காண்பதற்குச் சேர வாருஞ் சகத்தீரே."

Koviloor Digital Library

18. மற்றைய மதங்கள்

உங்கள் அறிவுக்கு ஆய்வு செய்யவிருக்கிறோம்! முடிவு உங்களுடையதே!

இஸ்லாம் மதத்தைப் பரப்பும் பொருட்டு அரபு நாட்டவர் கிறிஸ்தவ நாடாகிய ஸ்பெயின் நாட்டின் மீது படையெடுத்தனர். இதனால் பல குழந்தைகள், பல கன்னிப் பெண்களையும் சூறையாடினர். இதைக் கண்டு தட்டிக் கேட்ட சிலருக்கு இது அல்லாவின் ஆணை. அல்லாவே தனது மதத்தை நிலை நாட்டச் சொன்னார் என்று கூறினார்கள். பின்பு ஸ்பெயின் நாட்டிடம் அரபு நாடு தோற்றது. அதைப்போன்று இந்தியாவுக்குள் நுழைந்த பின் டில்லியை ஆண்ட சுல்தான்கள் ஒரு கையில் குரானும் மற்றுமொரு கையில் வாளும் வைத்துக்கொண்டு குரான் வேண்டுமா, இல்லை உன் தலை கொய்ய வேண்டுமா என்று கூறி, பலாத்காரம் செய்து வந்ததுதான் இந்த மதம். இதுதான் சகோதரத் தத்துவமதமா? பலாத்காரமாகி வந்து இறக்குமதியானதுதானே இஸ்லாம் மதம்.

நபிகள் நாயகத்தின் வாழ்க்கையை எடுத்துக் கொள்வோமேயானால் முதலில் இருந்து கடைசிவரை போர் என்ற புழுதிதான் இருக்கும். அங்கு இரக்கம், நீதி என்ற சொல்லுக்கே இடமில்லாமல் ஆக்கினார். இவர் தொடுத்த போரில் வீர மரணம் அடைந்த வீரர்களின் மனைவிமார் ஒன்பது பேரை தனது மனைவி ஆக்கிக் கொண்டார்.

Koviloor Digital Library

அதைக் கேட்டால், விதவைப் பெண்ணுக்கு மறுவாழ்வு அளித்தேன் என்று கூறினார். அது உண்மைக் கூற்று என்றால் கோடிக் கணக்கான விதவைப் பெண்கள் இருந்தனர். அவர்களுக்கெல்லாம் மறுவாழ்வு அளித்திருக்க வேண்டுமல்லவா? இன்றைக்கும் அரபு நாட்டில் இந்து தெய்வங்களை வணங்க நினைத்தாலே சுட்டுப் பொசுக்கிக் கடலில் தூக்கி எறியப்படுகிறார் அப்பாவி இந்து. அங்கு ஒரு இந்துவை நாடாளுமன்ற உறுப்பினராகவோ சட்ட மன்ற உறுப்பினராகவோ இருக்க விடுவதில்லை. அதே சமயம் நமது இந்தியாவில் பஞ்சாப் மாநிலத்திற்கும், பாகிஸ்தானுக்கும், பஞ்சாபியர்களுக்கும் இனக்கலவரம் ஏற்பட்டது அப்பொழுது இஸ்லாமியர்கள் பல பஞ்சாபியப் பெண்களைக் கற்பழித்தனர்.

இதனால், ஆத்திரம் அடைந்த பஞ்சாபியர் இஸ்லாமியரைக் கொல்ல முற்பட்டனர். அதற்காக காந்தியடிகள் அவர்களைத் தடுத்து நிறுத்தி அவர்களும் மனிதர்கள்தாம் என்று உண்ணாவிரதம் இருந்தார். இவரல்லவோ அகிம்சாவாதி. சொல்லில் மட்டும்தான் அகிம்சை. ஆனால், செயலிலோ இரத்தக் காட்டேறி இனம். இதுதான் வரலாற்று உண்மை. நான் இப்போதுள்ள இஸ்லாமிய சகோதரர்களை அல்லது கிறிஸ்தவ அன்பர்களையோ கூறவில்லை. இன்னும் கடந்த கால குப்பைகளை எழுத என் எழுதுகோல் நாணப்படுகிறது.

அல்லா, ஒருவனுக்கு நான்கு மனைவியர்கள் இருக்கலாம். ஆனால், ஒருபெண் ஒரு கணவனைத் தான் கட்டிக் கொள்ளவேண்டும். ஆணுக்கு ஒரு நீதி பெண்ணுக்கு ஒரு நீதி. முகமது நபி ஒன்பது மனைவிமார்களைக் கட்டிக் கொண்டார். அல்லா சொன்னது 4. மேலும் 5 மனைவியரைத் திருமணம் செய்துகொண்டார். இவர் அல்லாவின் கட்டளையை மீறிவிட்டாரே, அல்லா இவருக்கு தண்டனை கொடுத்து இருக்கலாமல்லவா? ஏன் அல்லா கொடுக்கவில்லை.

Koviloor Digital Library

அல்லாவை நாம் கடவுளாக ஏற்றுக் கொள்வோமாகின் அண்டைய நாடுகளில் தோன்றிய ஒரு லட்சத்து ஏழாயிரம் நபிகளை (ஞானிகளை) மட்டும்தான் கூறுகிறார். அதில்கடைசி நபிதான் முகமது நபி என்றும் அல்லா கூறிஉள்ளார். பிறகு ஈசாப் நபி என்று ஏசுகிருஸ்துவை கூறுகிறார். ஆனால் கிருத்துவ மெய்யன்பர்களோ ஏசுகிருஸ்து அவர் தேவ குமாரன் என்றும் மற்றொரு சிலர் அவரேதான் கடவுள் என்றும் கூறுகின்றார்கள். அல்லா கடவுள் என்றால் நம் இந்திய நாட்டில் இருந்த சித்தர்களையும் ஞானியர்களையும் குறிப்பிட்டிருக்கலாமல்லவா. குறிப்பாக பழனி மலையில் வாழ்ந்த போகர் ''ககணமணி'' என்னும் மகா சக்தி படைத்த மணியைக் கொண்டு உலகையே வலம் வந்தார். பிறகு பாம்பாட்டி சித்தர் கொங்கணையர், சிவவாக்கியர், அகத்தியர், நக்கீரர் புலிப்பாணி, மாணிக்கவாசகர், புத்தர், மஹாவீரர் இன்னும் பலருடன் எத்தனையோ சித்தர்கள், ஆழ்வார்கள், நாயன்மார்கள் இருந்தும் அல்லா ஏன் குறிப்பிடவில்லை. ஞானி என்றும் அவர் எல்லோரையும் கூறி இருக்கலாமல்லவா? ஏன் இந்தப் பாரபட்சம். இவர் கடவுளா என்று உங்கள் ஆய்வுக்கே விடுகிறோம்.

அல்லாவின் படைப்பிலேயே நான்கு பிரிவுகள் லப்பை. ராவுத்தர் மரைக்காயர் இன்னும் பலர். இதைப் போலவே கிருத்துவத்திலும், ரோமன் கத்தலிக், புரோட்டஸ்டன், இலங்கை பெண்டிகாஸ்டு என்றும் பல பிரிவுகள். இப்படி ஆளுக்கு ஒரு நீதி, ஆளுக்கொரு சமயம் என்று கூறவே தான் சர்ச்சைகள் பல ''ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' என்று கூற முடியவில்லை. ''தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!'' எந்நாட்டவர்க்கும் இறைவனான 'குகசிவத்தை'' வழிபட்டுக் கடைத் தேர்வீர்களாக.

நம் தமிழகத்தில் வேலூரில் நவாப்புகள் வேலூர் கோட்டையில் உள்ள சிவன் கோயிலில் உள்ள லிங்கம்,

Koviloor Digital Library

அம்மன், சிவன்,விஷ்ணு, பிரம்மா போன்ற தெய்வச் சிலைகளைச் சின்னாபின்னம் செய்தனர். காஞ்சிபுரம் ஏகாம்பர நாதர் கோவில் மற்றும் பல. மதுரை மீனாட்சி கோவிலில் உள்ள சிவலிங்கத்தை இஸ்லாமியப் பிரபுக்கள் உடைத்தனர். பின் அங்கிருந்த சிலைகளைத் திருடினர். சிவன் கோவிலில் உள்ள பிரும்மா விஷ்ணு, ஆகிய தெய்வ பஞ்ச லோக சிலைகளைத் திருடி விற்றனர். நவரத்தின மாலைகளைக் களவு செய்தனர். நம் சமயத்தையும், பண்பாட்டையும் அழிக்க வந்த துரோகிகள் தானே இஸ்லாமியர்கள். இன்னும் எத்தனையோ சதிகள் செய்துள்ளனர். மேலும், இதுபோன்ற குப்பைகளைக் கிளற என் எழுதுகோல் நாணுகிறது.

கிறித்துவம் :

ரோமன்காத்தலிக், வெசிலியன், லூதரின், பிராட்டடஸ்டண்ட், மெதடிஸ்ட், பாப்டிஸ்ட், யூனிட்டேரியன் முதலிய பிரிவுகளையுடைய இந்தக் கிறிஸ்து மதமானது; கர்த்தர் ஆவியாயிருக்கிறார் அதனால் அவர் அரூபி. பிதாகுமாரன் பரிசுத்த ஆவியென்று மூறையே ஒன்றிற்கொன்று குறைவாயெண்ணப்படும். மூன்றும் ஒன்றுள்ளே திரித்துவமும் அவரே. அவராற் சமஸ்த ஜீவாத்மாக்களும் ஆதாமுக்குப் பின் உதரத்தின் கண் புதிது புதிதாயுண்டாக்கப்பட்டு வருகின்றன. மரம் செடி முதலியதும் மனிதரல்லாத ஜந்துக்களும் ஜீவாத்மாக்களல்ல, ஒருவகை உயிராகும். அவை கண் மரித்தவுடன் நசித்துப் போம் ஜீவாத்மாக்கள் முன்னிருந்து இப்பொழுதுண்டானதுமில்லை. இறந்த பின் இனிப் பிறப்பதுமில்லை. நியாயத் தீர்ப்பு நாளாகி உலக முடிவில் இஞ்ஞான்று செய்துள்ள பாவ புண்ணியங்கட்குத் தேவனுடை இடது பக்கத்திலும் வலது பக்கத்திலுமுள்ள ஒழியா நரகமுஞ் சுவர்க்கமுமே மனிதர்கட்கு லபிக்கும். அதனால், இரக்கம் வைத்து மனிதர்கள் செய்த பாவங்களைத் தீர்க்கும்; செய்யும் பாவங்களனைத்திற்கும்

Koviloor Digital Library

மனுவாய்ப் பிறந்து தாமே பலியாகியிருக்கிறார். அவரே மரியாள் புத்திரனாகிய நாசரேத்தும் யேசுக் (இரட்சகர்) கிறிஸ்துவும் தேவனுடைய குமரனும் அவருடைய புதிய ஏற்பாட்டின்படி ஞான ஸ்நானம் பெற்று பழைய ஏற்பாட்டில் ஏகோவாவாகிய தேவனால் அருளப்பட்ட பத்துக் கற்பனைக் கட்டளை; [1] இசரவேலரை எகிப்தியருடைய அடிமைத் தனத்திலிருந்து மீட்டுக் கொண்டு வந்த கடவுளாகிய நம்மைத் தவிர வேறொரு தெய்வமில்லையென்றறிவாயாக. [2] வானத்திலும் பூமியிலுமுள்ள யாதொரு வஸ்துவின் ரூபத்தைப்போற் செய்து [வணங்காதிருப்பாயாக.] [3] என்னுடைய நாமத்தை வீணில் வழங்காதிருப்பாயாக. [4] ஏழாம் நாளில் ஓய்ந்திருப்பாயாக. [5] தன்னுடைய மாதா பிதாவை கனம் பண்ணுவாயாக. [6]கொலை செய்யாதிருப்பாயாக.[7] விபசாரம் பண்ணாதிருப்பாயாக [8] களவு செய்யாதிருப்பாயாக. [9] பிறனுக்கு விரோதமாகப் பொய்ச் சாக்ஷி சொல்லாதிருப்பாயாக. [10] பிறனுடைய சொத்தை இச்சியாதிருப்பாயாக.'' இயேசு கட்டளைகட்குடன்பட்டுப் புதிய ஏற்பாட்டின்படி கிறிஸ்துவின் மூலம் தேவனை வழிபட்டுச் செத்துவிட்டால் நியாயத் தீர்ப்பு நாளில் தங்களைப் புதைகுழியிலிருந்து எழுப்பப்பட்டு இரட்சகரோடு சுவர்க்கத்திலிருக்க லபிக்குமென்று சில கிறிஸ்தவர்களும், இயேசு தேவனுடைய குமாரனல்ல; தேவனுடைய குமாரன் இனிமேல் பிறப்பாரென்று சில கிறிஸ்தவர்களுஞ் சொல்லும் முடிவாயிருக்கும்.

நிகழ்த்தியவாறு பலபிரிவினையாய் இம்மதத்தவர் பேசுவதனாலும் இவர் வேதமென்கிற பைபிலிலுள்ள மேற்சொன்ன பத்துக் கற்பனைகளில் ஆகுசமாகிய மாமிசத்தையும், சாராயம் முதலிய லாகிரி (போதைவஸ்து)களையும், பகிஷ்காரமாய் விலக்காத படிற்றொழுக்கம், பூண்டதனாலும் யேசுவினுடைய குணானுபவங்கள் மனுஷீகத்தையே காட்டுவதனாலும் சர்வ ஜீவாத்மாக்களுடைய

Koviloor Digital Library

பாவங்களையும் அவர் பொறுத்துக் கொள்ளச் சர்வாத் மகமாய் விளங்கத் தகாதென்றும், கடவுளுக்கு அன்பர்க ளெல்லாங் கடவுளைப் பிதாவென்றுந் தங்களைக் குமாரர் களென்றுஞ் சொல்லிக் கொள்ளுங் கிரமமிருப்பதை யனுசரித்து குமாரனென்று சொல்லிக் கொண்ட இவர் நேரே தேவனுடைய குமாரனாகாரென்றும், இயேசுவை அறியலாம். ஆனால், அவர் தகுதியான, சாந்தமான பக்தரென்றும் அவர் சரித்திரத்திற் சொல்லுகிறபடி அவர் செய்த சித்திகள் உண்மையாயின் அவைகளைக் கடவுள் தயவுடையார்கள் செய்யத் தகுமென்றும் செய்யுஞ் சித்தி கள் அனந்தமுடையார்கள் இந்து மதத்தில் அதிக முண் டென்று முணரலாம்.

ஆனால், அந்த இயேசுவானவர் தேவகுமாரனுமல்ல யாவ ருடைய பாவத்துக்கும் பலியானவருமல்ல வெனினும் பைபி லென்னும் நூலிலுள்ள பழைய ஏற்பாட்டின்படி தேவனைப் பூசித்து ஆராதித்தாலென்னையெனிலோ? அதுவும் ஒவ்வாத காரியமே. எப்படியேல் மோசேயெழுதிய மூன்றாம் ஆகமத்தில் "காள்ங்கன்றுகளையும் ஆடுகளையும் பறவை களையும் ஆரோன் குமாரர்களாகிய பூசாரிகள் மூலமாய்த் தேவாலயத்திற்கு கொண்டு வந்து குரல்வளைகளை [கழுத் தை] யறுத்துப் பலி கொடுத்து அந்த இரத்தத்தைப் பலி பீடத்தின் மேற்றெளித்தும் அறுத்த மாமிசங்களைத் தனக்குத் திருப்தி பண்ணிச் சருவாங்க தகனபலி முதலா னவைகளைச் செலுத்தும்படிக்கும் அவைகள் கர்த்தராகிய தமக்கு ஆற்றுகிற வாசனையாயிருக்குமென்றும், குண்டிக் காய்களைப் பிளந்து படைக்க வேண்டுமென்றும், சார முள்ள கொழுப்புகளையும் இரத்தத்தையும் நீங்களுண்ணக் கூடாது நமக்கே திருப்தி பண்ண வேண்டுமென்றும மாக்களாற் செய்யும் பலகாரங்கள் புளிப்பில்லாமல் எண்ணெய்யில் வெந்ததாயுள்ளதையும் வாட்டிய பசுங்கதிர் களையும் தேவாலயத்திற்றமது முன்பு படைக்க வேண்டு மென்றும், காணிக்கைகளைச் செலுத்தலாமென்றும்

Koviloor Digital Library

யேகோவாகிய தேவன் சொன்னதாக எழுதப்பட்டிருப்பது போல்வன பலவே. இந்த நியாயத்தைக் கொண்டே நியாய முணராமல் கிறிஸ்தவர்களும் முகம்மதியர்களும்எள்ளளவும் ஜீவகாருண்யமற்று ஆடு, மாடு முதலிய பல ஜெந்துக்களை வதைத்து இரத்தம் விலக்கி ஊனுண்கிற பெருந்தீனியர் களாயிருக்கிறது? சித்தம். பத்து கற்பனை (கட்டளை)யில் உயிர்களைக் கொல்லக்கூடாது என்று கூறுகிறார். ஆனால், பின்பு உயிர்க் கொலை செய்து தனக்கு அப்பம் செய்ய வேண்டும் என்று ஆவல் உறுகிறார் என்னே! ஏமாற்று வித்தை.

மேலே சொன்ன பலி மாமிசப் படைப்பு முதலான பல விஷயங்கள் பேய் ஆராதனைக்குரியதே யொழியப் பரிசுத்த ஈஸ்வர உபாசனைக்கு எள்ளளவேனும் பொருந்தத் தக்கதாவென்றும், இதைப் பரிசுத்த தேவன் எப்படித்தான் திருவாய் திறந்து மோசேய்க்கு மொழிந்தாரென்றும் மனிதருடைய பாவத்தைத் தீர்க்கவென்று மிகவும் ஏழைகள் போற்றுகின்ற விலங்குகளையும் பறவைகளையும் எள்ளளவும் ஜீவகாருண்ய மற்றும் பலியிடச் சொல்வது. கடவுளுக்கு நீதியாம்? விவேகிகள் கவனித்தால் உண்மை யுதிக்குமன்றோ?

இவைகளெல்லாம் பழைய ஏற்பாடு. ஏசுவானவர் செய்த புதிய ஏற்பாட்டில் இல்லையென்று சொல்ல வெனிலோ? அதிலும் பழைய ஏற்பாடுகளுண்டென்பதாய் மாற்கு 1-ம் அதிகாரம், 21-ம் வசனம் ''இயேசு அவர்களை நோக்கி வேண்டுதலினாலும், உபவாசத்தினாலுமேயன்றி மற்றொரு வகையாலும் அந்தப் (பிசாசு) இனத்தைத் துரத்தக் கூடா'' தென்றார். லூக்கா 5-ம் அதிகாரம் 16-ம் வசனம் ''உன்னை ஆசாரியனுக்குக் காண்பித்து ஜனங் களுக்குச் சாட்சியாய் விருத்த சேதனமுள்ளவர்களுக்கு ஊழியக்காரரானார். (என்று நான் சொல்லுகிறேன்)'' எனவும் வெளியாகின்றன. இந்த வாக்கியங்கள் மூலம் பலி,

Koviloor Digital Library

உபவாசம் காணிக்கை சன்னதாகிய விருத்தசேதனம் என்பவைகள். பழைய[ஏற்பாட்டின் படியே]ஏசுவானவரும் அவருடைய சிஷ்யர்களும் நடத்தி வந்ததுண்டென்றும் பகிஷ்காரமாகவே அறியலாம். இப்படியே நைவேத்தியம் அபிஷேகம் அலங்காரம் தீர்த்தம் தேவாலய தரிசனம் முதலியனவும் நடந்து வந்ததாய் அப்புத்தகங்களிற் காணலாம்.

ஆனால், யோவானெழுதிய சுவிசேஷம் முதலாம் அதிகாரம் 16-ம் வசனம், ''நியாயப் பிரமாணம் மோசேயினாற் கொடுக்கப்பட்டது. கிருபையும், சத்தியமும் யேசு கிறிஸ்து மூலமாயுண்டாயின'' என்று துலக்கியபடி நியாயப் பிராமணத்தை விடுக்க வென்னிலோ, அந்த நியாயப் பிரமாணம் யாத்திராகமம்,26-ம் அதிகாரம் 42-ம் வசனம், உங்களுடனே பேசும்படி நானுங்களைச் சந்திக்குமிடமாகிய சபையின் ஆசார வாசலில் யோகோவாவின் சன்னதியில் உங்கள் ''தலைமுறை தலைமுறையாக எப்பொழுதும் நீங்கள் செலுத்த வேண்டிய தகன பலிகளிவைகளே'' என்றிருப்பதற்கிணங்க புதிய ஏற்பாட்டிலுள்ள மத்தேயு 5-ம் அதிகாரம், 18-ம் வசனம் மோசே நியமித்தபடியே நீ சுத்தமானதைக் குறித்து பலி செலுத்து என்று ஏசு கட்டளையிட்டார்.'' மத்தேயு 6-ம் அதிகாரம், 13-ம் வசனம்; ''பலியிலும் இரக்கத்தை விரும்புகிறேனென்பதின் அருத்தத்தை நீங்கள் போய்க் கற்றுக் கொள்ளுங்கள்.'' மத்தேயு 23-ம் அதிகாரம் 23-ம் வசனம்; ''நீங்கள் துளசியிலும், வெந்தயத்திலும், சீரகத்திலும், பத்திலொரு பாகத்தைக் கொடுத்தும் வேகத்திலுள்ள பரமானவைகளாகிய நீதியையும் இரக்கத்தையும் விசுவாசத்தையும் விட்டுவிட்டீர்கள். இவைகளைக் காத்து நடப்பதும் இவைகளை மீறாமல் நிற்பதுமே உங்கள் கடமை.'' யாக்கோபு 2-ம் அதிகாரம், 26-ம் வசனம் ''நம்முடைய பிதாவாகிய ஆபிரகாம் வேதிகையின் மேல் தன் புத்திரனாகிய ஈசாக்கை பலியிட்ட பொழுது [கிரியைகளினாலல்லவா] நீதிமானாக்

Koviloor Digital Library

கப்பட்டான்.'' அப்போஸ்தலர், 16-ம் அதிகாரம், 3-ம் வசனம்; ''அவனைப் பவுல் தன்னுடனே கூடப் புறப்பட வேண்டுமென்று விரும்பி அவனுடைய தகப்பன் கிரேக்கனென்று அவ்விடங்களிலிருக்கிற யூதர்களெல்லாரும் அறிந்தபடியால் அவனுக்கு . விருத்தசேதனம் பண்ணினான்.'' உரோமர் 15-ம் அதிகாரம், 8-ம் வசனம்; ''பிதாக்களுக்குப் பண்ணப்பட்ட வாக்குத்தத்தங்களை உறுதியாக்கும்படி பராபரனுடைய சத்தியத்தினிமித்தம் யேசு கிறிஸ்து, ''மரணமானது ஆதாம் முதல் மோசே வரைக்கும் ஆதாமின் மீறுதலுக்கு ஒப்பாய்ப் பாவஞ் செய்யாதவர்களையும் ஆண்டு கொண்டது. அந்த ஆதாம் பின்பு வந்தவருக்கு அடையாளமானவன்.'' மேற்படி 18-ம் வசனம் ''ஒரே மனிதனுடைய தப்பிதத்தினாலே எல்லா மனிதர்க்கும் ஆக்கினைக்கு வேறதுவான தீர்ப்பு உண்டானது.'' என்றும் எரேமியர், 31-ம் அதிகாரம் 26 30-ம் வசனங்கள் ''பிதாக்கள் புளிப்புள்ள திராக்ஷக் காய்களைத் தின்றார்கள். பிள்ளைகளின் பற்கள் கூசுகின்றன வென்று அக்காலத்தில் ஒரு பொழுதுஞ் சொல்லார்கள். அவனவன் தன்தன் பாவத்தினிமித்தம் சாவான். புளிப்புள்ள திராட்சைக் காயைத் தின்கிறவனெவனோ அவனுடைய பல்லு கூசுமென்று யோகோவோ சொல்லுகிறார்.'' என்று எழுதியிருப்பதில் ஒரு மனிதனாலே எல்லா மனிதருக்கும் பாவமும் அதன் சம்பளமாகிய மரணமும் வந்ததென்றும், அதற்கு நேர் விரோதமாய் அவனவன் செய்த பாவம் அவனவனுக்கே யுண்டென்றும் வெளியாகிறது. இந்து இடத்தில் மேற்சொன்ன இரண்டு காரணத்தில் எதினாலேயாவது யேசுவானவருக்கு நேரிட்ட மரணமும் பாவத்தின் சம்பளமென்று அருத்தம் பண்ண இடமுண்டாகும். லூக்கா-22-ம் அதிகாரம், 57-56-ம் வசனங்களில் ''யேசுவை நானறியேன்; அவனுடனிருந்தவன் நானல்ல'' வென்றும் தனக்குத் துன்பமில்லாதிருக்கும் பொருட்டு பேதுரு பொய் சொன்னதாகவும் வெளியாகிறது. யேசுவானவருக்குப் பிரதான

Koviloor Digital Library

டனாகிய அந்தப் பேதுரு தேசாபிமானத்தாலும் ஜீவாபிமானத்தாலும் இப்படிப் பொய் சொல்லுவதென்றால் அவர் முதலாயினோர் எழுதி வைத்தவைகளை எப்படி மெய்யென்னலாமெனவும் இங்கே சந்தேகிக்க இடமுண்டாகிறது.

அப்போஸ்தலர் 7-ம் அதிகாரம், 46-55-ம் வசனங்கள் ''இவை யெல்லாவற்றையும் என்னுடைய கையுண்டாக்கவில்லையா? என்று பராபரன் திருவுளம் பற்றினார். பராபரனுடைய மகிமையையும் வலது பாரிசத்திலே நிற்கிற யேசுவையும் கண்டு வெளிப்படுத்தப்பட்ட வாக்கியம் 4-ம் அதிகாரம், 2-ம் வாக்கியம் ''வானத்திலொரு சிங்காசனம் ஸ்தாபிக்கப் வீற்றிருந்தார். வீற்றிருந்தவர் கண்ணுக் குரவைக் கல்லும் பத்திராக ரத்தினமும் போலத் தோன்றினார் (யேகோவா) என்ற வசனங்களாற் பராபரனுக்கு உருவ முண்டெனவே வெளியாகிறது.

அப்போஸ்தலர் 16-ம் அதிகாரம், 6-ம் வசனம். ''ஆசியா தேசத்திலே அவர்கள் சுவிசேஷ வசனத்தைச் சொல்லாத படிக்கு பரிசுத்த ஆவியினாலே தடை பண்ணப் பட்டு'' என்ற வசனத்தால் ஆசாரம், புனிதம், தருமம் முதலியன சிறந்த ஹிந்துக்களுள்ள தேசத்தில் மேற்கண்ட நூலும், பிரசங்கமுஞ் செல்லாதென்றும் அவை அனாசாரம் அதருமம் முதலியன சிறந்த அந்நாட்டிற்கே செல்லுமென்றும் ஏற்பாடா யிருக்கிறதாக வெளியாகிறது.

இந்துக்களுள்ள தேசமென்றால் ஹிந்து நதிப் பாய்ச்சலுள்ள பூமிக்கு இந்து தேச மென்று பெயர். அத்தேசம் ஹிமோர் பர்வதத்திற்குத் தெற்காகவும 3-வது வியாசம் 53-ம் வினாவுத்தரத்தில் விளக்கியதாயுமுள்ள குமரித் தீவாகுமென்றும், அங்கு வசித்து அங்குள்ள வேதாகம நெறி நின்றவர்கள் இந்துக்களென்றும் அறிக.

Koviloor Digital Library

கிறிஸ்து மார்க்க ஆதியாகமம் 1-ம் அதிகாரம் 20-ம் வசனம்; ''ஜலத்தில் நீந்தி வாழும் ஜந்துக்களுக்கும் ஜீவாத்மா இருக்கிறது'' என்றும், அதே யாகமம் 30 வாக்கியம்; பூமியிலிருக்கிற ஒவ்வொரு மிருகத்திற்கும் ஆகாயத்திற் பறக்கும் ஒவ்வொரு பட்சிக்கும் நிலத்திலூரும் ஒவ்வொரு புழுவுக்கும். ஜீவாத்மாவிருக்கிறது.'' என்று எபிரேயுப் பாஷையிலுஞ் சொல்லப்பட்டிருக்கிறது. இவைகளால் எல்லாவுயிரும் ஜீவாத்மாக்க ளென்றறிவிக்கப்பட்டிருக்கிறபடி அவைகளைக் கொன்றுண்ணற்கு நியாயம் பிறக்கா தென்றறியலாம். மேற் சொன்ன திருஷ்டாந்தத்திற்கிணங்க ஹரிஸ்டாட்டில் என்னும் இங்கிலிஷ் தத்துவ சாஸ்திரியாரும். ''ஒவ்வொரு மனுஷருக்கும் ஜீவாத்மா விருப்பதைப் போலவே ஒவ்வொரு பிராணிக்கும், பிராணாத்மாவும், ஒவ்வொரு புல்பூண்டு கந்தமூலத்திற்கும் முளைப்பிக்குஞ் சக்தியாகிய ஆத்மாவுமிருக்கிறது'' என்பதற்காக எழுதியிருக்கிறார்.

மேரியைக் கன்னிமேரி என்று கூறுகிறார்கள். அதைப் பற்றி நமது கவனத்தைச் சற்று கூர்ந்து நோக்குவோமாக. மார்க்கு-20 அதிகாரம்-6 வசனம்-3 அதில் கூறப்படும் உண்மைகளாவன:அவ்வூர் மக்கள் இவன் தச்சன் (ஆச்சாரி) அல்லவா? மரியாளுடைய குமாரன் அல்லவா? யாக்கோபு யோசா-யூதர்- சிமோன் என்பவர்களுக்குச் சகோதரன் அல்லவா? இவன் சகோதரிகளும் இங்கே நம்மிடத்தில் இருக்கிறார்கள் அல்லவா? என்று சொல்லி, அவரைக் குறித்து இடறலானார்கள். மேல் குறித்த வாசகத்தில் இருந்து சகோதர சகோதரிகள் இருக்கின்றார்கள் என்பது தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது அல்லவா. அப்படி இருக்க அவள் எப்படிக் கன்னிமரியாளாக இருக்க முடியும். நம் தமிழகத்தில் இன்றும் பார்க்கிறோம். அவள் ஒரே குழந்தையை மட்டும் கையில் வைத்துக் கொண்டு வேசம் போடுகிறார்கள். ஐயகோ இது என்ன ஓர் வஞ்சக செயலல்லவா? அந்தோ பரிதாபம்.

Koviloor Digital Library

ஏசுநாதரைப் படைத்த கர்த்தர் கூறுகிறார், உருவமே கிடையாது என்று தனது பைபிலில். அப்படி இருக்க ஏசு நாதரைச் சிலுவையில் அறைந்தார் போலும், மதச் சிலைகளும் மதத் தேவதைகளையும் வைத்து வழிபடுவது கர்த்தரை அவமதிப்பதல்லவா.

பிலாத் என்னும் மன்னன் ஏசுநாதரைச் சிலுவையில் கட்டிவைத்து அடித்து இவன் உண்மையான ஞானியாக இருந்தால் உயிர் பெற்று வரட்டும் என்று சிலுவையில் வைத்து அடித்தார்கள். அந்த வழியாய் நடந்து போகிறவர்கள் தங்கள் தலைகளைக் குலுக்கி,தேவாலயத்தை இடித்து மூன்று நாளைக்குள்ளே கட்டுகிறவனே, ''உன்னை நீயே ரட்சித்துக் கொள்ளத் திராணியில்லை,'' இவன் இஸ்ரவேலின் ராஜாவானால் இப்பொழுது இவனை விசுவாசிப்போம். தன்னைத் தேவனுடைய குமாரனென்று சொல்லி தேவன் மேல் நம்பிக்கையாய் இருந்தானே. அவர் இவன் மேல் பிரியமாயிருந்தால் இப்பொழுது இவனை இரட்சிக்கட்டும் பார்க்கலாம் என்றார்கள். அவரோடே கூடச் சிலுவைகளில் அறையப்பட்ட கள்ளரும் அந்தப்படியே அவரை நிந்தித்தார்கள். ஆறு மணி நேர முதல் ஒன்பதாம் மணி நேரம் வரைக்கும் பூமியெங்கும் அந்தகாரம் உண்டாயிற்று. ஒன்பதாம் மணி நேரத்தில் ''இயேசு ஒலீ! ஒலீ! லாமா சபக்தானி. என்று'' மிகுந்த சத்தமிட்டுக் கூப்பிட்டார்; அதற்கு கடவுளே ஏன் என்னைக் கைவிட்டீர் என்று அர்த்தமாகும் தன்னையே காப்பாற்றும் திறன் இல்லா இவர் மற்றவர்களை எவ்வாறு காப்பாற்றுவார் என்று அருகில் நின்றவர்கள் அறைகூவல் விடுத்தனர். ஆனால்,தமிழகத்தில் சைவ குறவர், திருத்தொண்டர், திருநாவுக்கரசு அடிகளை உயிர் கொல்லாமை என்று தம்பட்டம் அடித்து கொண்டிருந்த சமணமத வெறியர்கள் திருநாவுக்கரசரை யானை விட்டு மிதிக்கச் சொன்னார்கள். அதற்கு சிவசிவா என்று சொல்லியபடியே உயிர் பெற்று எழுந்தார். சைவர் என்ற காழ்ப்புணர்ச்சியால் சுண்ணாம்புக் காளவா

Koviloor Digital Library

யில் போட்டு! நீத்தினர். அவர் அதற்கும் சிவசிவா என்று கூறி உயிர் பெற்றெழுந்தார். பின்னர் கல்லில் கட்டி நடுக் கடலில் எறிந்தனர். நாவுக்கரசர் கல்லால் கட்டி கடலில் போட்டாலும் நல்லாவது நமச்சிவாயவே என்னும் திரு மந்திரத்தைக் கூறி உயிர் பெற்றெழுந்தார். இவரல்லவோ மகான் இவரல்லவோ சுத்த ஞானி! இவரல்வவோ சித்தர். அப்படி இருக்க ஏசு ஒரே அப்பத்தைப் பலருக்குப் பங்கிட்டுக் கொடுத்தார் என்றும் கூறுகிறார்கள். இன்றும் தெரு வித்தைகள் செய்கிறார்கள். அதற்காக அவ ரைக் கடவுள் என்றோ சித்தர் என்றோ ஞானி என்றோ கூற முடியாது. அவர் ஒரு வித்தைக்காரரர் என்றே கூறு கிறோம். இதில் இருந்து பகுத்தறிவு பெற்றவர்களே நீங் களே சிந்தித்துப் பாருங்கள் இக் கூற்றை. உங்களின் பேரறி வின் தீர்ப்பிற்கே விட்டுவிட்டேன். இடைக் காலத்தில் பல ஆண்டுகள் ஏசுநாதர் காணவில்லை. அந்த 20 ஆண்டு காலங்களில் இந்தியா வந்து நம் சித்தர் இடை பலஞான நூல்கள் பயின்று இருக்கலாம் என்று பல அறிஞர்களின் ஆய்வு; எது உண்மையோ? உண்மையை ஒரு போதும் எவ ராலும் மறைக்க முடியாது என்பது அறிஞர்கள் கூற்று.

★

Koviloor Digital Library

18. சாதி

கோழி பல வண்ணங்களில் இருக்கலாம், ஆனால், அது இடும் முட்டை ஒரே நிறம்தான். பசு பல வண்ணங்களில் இருக்கலாம். அதன் பால் ஒரே நிறம்தான். அதைப்போல் நாம் பலதரப்பட்டவராக இருந்தாலும் நாம் எல்லோரும் இறைவனுடைய குழந்தைகள்தாம். அவன் முன் உயர்வு என்றும் தாழ்வு, என்றும் கிடையாது. 1

கடவுள் சாதிகளைப் படைத்ததாகச் சில நூல்கள் கூறுகின்றன. அது உண்மையாக இருக்குமானால் அப்படிப் பட்ட கடவுளும் நமக்குத் தேவையில்லை — அப்படிப்பட்ட நூல்களும் நமக்குத் தேவையில்லை. 2

இந்து மதத்திலிருந்து மக்கள் வேற்று மதம் மாறுவதற்கு மூல காரணம் என்ன? பிரம்மாவின் முகத்திலிருந்து வந்ததாகச் சொல்லிக் கொள்ளும் உயர் ஜாதியினர், மற்றவர்களைத் தாழ்வுபடுத்தி நடத்துவதாலேயே இந்த இழி நிலை உண்டானது. இந்த நிலை மாறினால் மதம் மாறும் நம் மக்களும் மனந்திருந்தி விடுவார்கள். 3

தோன்றிய மொழிகளுக்கும், தோன்றும் மொழிகளுக்கும், தோன்றா மொழிகளுக்கும் (மௌனம்), தோன்றிக்கொண்டு (அல்லது) தோன்றப்போகும் மொழிகளுக்கும் — அனைத்துக்கும் அவனே (இறைவனே) தலைவன். அவனுக்குத்

Koviloor Digital Library

தெரியாத மொழியும் இல்லை—புரியாத மதமும் இல்லை. அப்படியிருக்க இறைவனைத் தன் இனத்திற்கும் மொழிக்கும் மட்டுமே உரிமை என்று சொல்லிக்கொள்வதை எவ்வாறு ஏற்றுக்கொள்ள முடியும்? அதுதான் சரியாயின் தமிழர் களால் கட்டப்பட்ட கோவிலையும், அவர்களால் செதுக்கப் பட்ட இறைவனையும் நீங்கள் தொடுவது மிகமிகப் பாவ மாகும். 4

இறைவன் படைப்பில் சாதி பேதங்கள் இல்லவே இல்லை. சில பிரிவினர்கள் தங்கள் வயிற்றுப் பிழைப்புக் காகத் தங்களை உயர் சாதியென்றும், மற்றவர்களைத் தாழ்ந்த சாதிக்காரர்கள் என்றும் கூறிக் கொள் கிறார்கள். 5

சாதியென்பது குலத்தால் இல்லை அது உயர் குணத் தால் அமைவது. உயர்ந்ததோர் குணம் கொண்டால் ஒப் பற்ற சாதியென்போம்-தாழ்ந்ததோர் குணம் கொண்டால் —தரங்கெட்ட சாதியென்போம். 6

வர்ணாஸ்ரமத்தைக் கடைப்பிடிக்காத காரணத்தால் தான் நம்நாடு துன்பப்படுகிறது. என்று சில பெரியவாள் சொல்கிறார்கள். அப்படியென்றால் உச்சிக் குடுமியும், தர்பைப் புல்லும் வைத்தும் ஆண்டாண்டுதோறும் யாசகம் அல்லவா எடுக்க வேண்டும். இப்போது பெரிய பெரிய அதி காரியாகக் கடவுள் நமக்கு வாழ்வு கொடுத்ததை நினைத்து மகிழ்ந்து மற்றவர்களுக்கும் உதவியாக இருந்தால் அல்லவா? இறைவன் கைவிட மாட்டான். இறைவனிடம் இருந்து வந்ததுதான் இந்த உலகம். இறைவன் எந்த சாதியோ அந்த சாதிதான் இந்த உலகம். 7

Koviloor Digital Library

19. வறுமை

வறுமையென்பது ஒரு கொடிய பெரு நெருப்பு. அதில் வீழ்ந்து கருகாத பொருள்களே கிடையாது. எவ்வளவு பெரிய அறிவுடையவராயிருந்தாலும் எல்லாம் இழந்து இரந்து நிற்பர். 1

உடலுக்கு உயிரைக் கொல்லுகின்ற எந்த நோய் வேண்டுமானாலும் வரலாம். ஆனால், வறுமை மட்டும் யாருக்கும் வரவே கூடாது. அது எவ்வளவு பெரிய அறிவாளியையும் கூட மழுங்க வைத்துவிடும். 2

வறுமையை அடியோடு ஒழிக்க வேண்டுமாயின் தோல்வியோடு தோல்வி வந்தாலும் விடா முயற்சியோடு செயல்பட வேண்டும். 3

கடுமையான, கனலான பாலைவனத்தில்கூட 100 மைல்கள் நடந்துவிடலாம். ஆனால், கொடுமையான வறுமையுடன் வாழ்க்கையின் அடிச்சுவட்டில் ஒரு அடி கூட எடுத்து வைக்க முடியாது. 4

வரவுக்கு மீறிச் செலவு செய்வது படுபாதாளத்திற்குப் போவதற்குத் தானே குழி வெட்டிக் கொள்வதற்கு ஒப்பாகும். 5

மிகப் பெரிய வலிமை வாய்ந்த சிங்கம் கூட சர்க்கஸ் காரனிடம் எப்படி அடங்கிக் கிடக்கிறதோ, அதைப் போல் எவ்வளவு பெரிய ஆற்றல் மிக்கவராயிருப்பினும்

Koviloor Digital Library

வறுமையினால் செல்வரிடம் சிறுமைப்பட்டுக் கிடக்கின்றனர். 6

தேவைக்கு மேல் செல்வம் சேர்த்து வைப்பவர்கள் திருடர்களை விட மிகக் கொடியவர்கள். 7

தேவைக்கு மேல் வைத்திருப்பதைப் பொது உடைமையாக்குபவர்களுக்கு இவ்வுலகிலும் உயர்வு உண்டு; அவ்வுலகிலும் உயர்வு உண்டு. 8

பறவையும், மிருகமும் கூடத் தம் குழந்தைகளுக்கு வேண்டிய உணவைத் தேடித் தந்துவிடுகின்றன. ஆனால், நமது நாட்டில் இருக்கும் பலருக்கு அது கூட முடியவில்லையே. எத்தனையோ பிள்ளைகள் தெருவில் பிச்சை எடுப்பதையும், பலர் வறுமையால் தற்கொலை செய்து கொள்வதையும் உலகில் பார்க்கிறோம். 9

பசுமைப் புரட்சி எதுவென்றால் ஓர் அடி நிலங்கூடத் தரிசாகவோ, வீணாகவோ நம் நாட்டில் இருக்கக் கூடாது. அப்போதுதான் வறுமையென்னும் பேயை நம் நாட்டை விட்டு வெளியேற்ற முடியும். 10

மானமுள்ள மாந்தர்களுக்கு வறுமை வரினும், கீழ் மக்களிடம் இரந்து செல்லார். பணியார். நாய்க்குப் பசி வந்துவிட்டால், எதையும் உண்ணும். ஆனால், சிங்கம் பசித்தால் தனக்குரிய உணவை மட்டுமே உண்ணும். 11

உல்லாச உப்பரிகை மாளிகையில் சல்லாபம் புரிந்து கொண்டு இருக்கும் கோடீஸ்வரனுக்கு ஒரு வேளை உணவுக்கில்லாமல் தவிக்கும் ஏழையைப் பற்றிச் சொன்னால் என்னவென்றே தெரியாது. அதைப்போல் புத்திகெட்ட ஒருவனுக்குப் பக்தியைப் பற்றி எடுத்துரைத்தால் சற்றேனும் புரிந்து கொள்ள மாட்டான். 12

மிளகு சிறியதானாலும் அதன் காரம் குறையாது. அறிவுடையோர் வறுமை புகினும் மானம் இழக்கார். 13

Koviloor Digital Library

20. நாடு

சில அரசியல்வாதிகள் தங்களின் சுயநலத்திற்காகப் பாமர மக்களை ஏவிவிட்டு, பொதுவுடமையாகிய நம்முடைய சொத்துகளின் அழிவிற்குக் (பேருந்து, புகை வண்டி) காரணமாக இருப்பதுடன் அல்லாமல் நம்முடைய உடன்பிறப்புகளில் சிலர் உயிரிழக்கும் சூழ்நிலையையும் உண்டாக்கிவிடுகின்றனர். இதன் மூலமாகச் சிலர் பயன் அடைகின்றனர். இது எதுபோல் உள்ளது என்றால் அந்நியர் (வெள்ளையர்) நமது நாட்டைப் பிடிக்க, சகோதரர்களாகிய நம்மிடம் பகை உணர்ச்சியை உண்டு பண்ணி, நமக்குள் நாமே சண்டையிடுமாறு செய்து அதை வைத்து அவர்கள் நமது பாரத நாட்டை அடிமை யாக்கிக் கொண்டதற்குச் சமமாகும். 1.

போராட்டம் என்பது என்ன எழுச்சிகளைப் பிறருக்கு எடுத்துக் காட்டுவதே யொழியே மிருக்கத்தனமாய் நடப்பதன்று. 2

மக்களின் தேவையான, உண்மையான குறைகளின் கோரிக்கைகளைக் கேட்டறிந்து. ஆவன செய்யவேண்டுமே தவிர, காவலர்களையும், குண்டர்களையும் ஏவிவிட்டு, நல்லோராகிய பொதுமக்களைக் கொடுமைப்படுத்துவார்களானால் ஏழையின் கண்ணீர், கூரிய வாளாகி அந்த அரசு கவிழ்வதற்கு அந்த வாளே காரணமாகிவிடும். 3

Koviloor Digital Library

ஒரு மன்னனை வைத்து அந்த நாட்டைத் தீர்மானித்து விடலாம்; நாட்டை வைத்து அந்நாட்டு மன்னனைத் தீர்மானித்துவிடலாம், புகை வண்டியில் எஞ்சின் முன் செல்ல, அதைத் தொடர்ந்து வரிசையாகச் செல்லும் பயணிகளின் பெட்டிகளைப்போல்... மன்னனும் இருந்து மக்களும் பேரறிவு பெற்றிருந்தால்தான் ஒரு நாடு உருப் படியாக முடியும், 4

வாக்க்ளிக்கும் உரிமை மட்டும் இருந்தால் நமக்குப் போதாது; வாக்களித்துத் திறமையுள்ளோரைத் தேர்ந் தெடுக்கும் ஆற்றலும், அறிவும் நமக்குத் தேவை. 5

உயர்ந்த கருத்துகளைச் சொல்லும்பொழுது தீய வர்களிடம் இருந்லு சில எதிர்ப்புகள் வரத்தான் செய்யும். அதற்குப் பயந்து அஞ்சி, ஒடுங்கி, நடுங்கி அயர்ந்துவிடக் கூடாது, அப்படி நாம் உற்சாகம் இழந்து விடுவது, ஒரு விவசாயி எலிக்குப் பயந்து விவசாயமே செய்யாமல் போவதற்கு ஒப்பாகும். 6

எதிர்க் காற்றில்தான் பட்டம் உயரத்தில் பறக்கும். எதிர்ப்பிற்கு இடையில்தான் வாழ்க்கையில் வெற்றி பெற முடியும். 7

சில அரசியல் ஏமாற்றுக்காரர்களின் பசப்பு மொழி களை நம்பிப் பல காரியங்களில் ஈடுபடுவது—பெரும் மழைக்குச் சிறு குடையை நம்பிச் செல்வதற்கு ஒப்பாகும். 8

தீயவர்களின் தொடர்பு, தீயைவிடக் கொடியதாகும். அது எப்படியென்றால், காட்டில் தீப்பிடித்தால் சாதாரண மரங்கள் எரிவதோடு, விலை உயர்ந்த சந்தன மரம், வேங்கை மரம் முதலியவைகளும் எரிந்து சாம்பலாகி விடுவதைப்போல் ஆகும். 9

Koviloor Digital Library

அளவிற்கு மீறிக் குழந்தைகளைப் பெறுவது வரம்பிற்கு மீறி மது அருந்தி இறப்பதற்கு ஒப்பாகும். 10

ஒருவனுக்கு இரண்டு கண்களுக்கும் அதிகமாக இருப்பதாகக் கேள்வியுற்றதில்லை. எனவே, நமக்கு இரண்டு குழந்தைகளே போதுமானது. இரண்டு பெற்று வளமோடு வாழ்வதனால் நமக்கும்; நாட்டிற்கும் நன்மை உண்டாகும். இரண்டையும் இரண்டு கண்களாகப் போற்றி வளர்க்கலாம். 11

அதிகமாகக் குழந்தைகளைப் பெற்றுக்கொள்வதனால் நாமும் சுமை சுமப்பதல்லாமல் இந்த நாட்டையும் வீண் சுமையைச் சுமக்க வைக்கிறோம். 12

இந்திய நாட்டில் பிறந்து வளர்ந்து இந்திய மக்களின் நன்மைகளை அனுபவித்து வரும் சிலர், ''சில சட்ட திட்டங்கள் (குறிப்பாகக் கருத்தடைச் சட்டம்) எங்கள் மதத்திற்கும் இனத்திற்கும் மாறுபட்டது. நாங்கள் அதை ஏற்றுக்கொள்ள முடியாது.'' என்று கூறுகிறார்கள். இது இந்திய மக்களை ஏமாளிகள் என்று நினைத்துக் கொண்டு இந்தியச் சட்டத்தையே இழிவுபடுத்துவதற்கு ஒப்பாகும். 13

சிங்கம் ஒரு குட்டிதான் போடுகிறது. பன்றி பல குட்டிகள் போடும். அறிவுள்ள மக்கள் ஒன்றைப் பெற்றாலே போதும், அறிவில்லாத மக்கள் ஆயிரம் பெறினும் யாது பயன்? 14

தவ வாழ்க்கையை ஏற்கவிரும்பும் ஒருவரை உலக வாழ்க்கையில் மாட்டச் செய்வது, தவத்திற்குச் சென்ற அர்ச்சுனனைப் பேச்சு வன்மையால் மயக்கி தன் உறவினர்களையே தன்கையால் கொல்லச் சொன்னதற்கு ஒப்பாகும். 15

Koviloor Digital Library

இந்த உடல் 96 தத்துவங்களைக் கொண்டது. அதில் 36 தத்துவம் கிழ்த்தரமானது. 36 தத்துவங்களை நீக்கி னால் ஒருவன் ஞானி ஆகலாம். இந்த 36 தத்துவங்களை நீக்குவதற்குச் சரியான ஆசானை நாடிச் செல்ல வேண்டும். ஒரு குருடன் மற்றொரு குருடனுக்கு வழிகாட்ட முடியாது. ஒரு ஊமை மற்றொரு ஊமைக்கு மொழியால் எடுத்துச் சொல்ல முடியாது, அதுபோலவே ஒரு முடவன் மற்றொரு முடவனை வழி நடத்திச் செல்ல இயலாது. அதைப்போல் ஒன்றும் தெரியாத ஒருவன் ஞானத்தைக் கற்பிக்க முடியாது. குருடனும் குருடனும் குருட்டாட்டம் ஆடிக் குழியில் விழுந்த கதைபோல்தான் ஆகும். 16

உனக்குப் பகைவர்கள் வெளியில் இல்லை. உனக்குள் இருக்கின்றார்கள். காமம் என்னும் பகைவன், கோபம் என்னும் பகைவன், தற்பெருமை காரணமான பகைவன் இப்படி இருபத்து ஏழு பகைவர்கள் உன்னுடன் போராடிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், நீ அவர்களு டன் போராடித் தோல்வியுற்று அவர்கள் காலடியில் வீழ்ந்து அவர்கள் அழைத்துப்போகும் வழியில் சென்று வீணாகி ஒரு கோழையாகி வாழ்க்கையைப் பாழாக்கிக் கொண்டு கடை மக்களைப் போல் ஆகாமல் நீ சித்தனாக வேண்டுமாயின் உன்னுடன் இருக்கும் பகைவர்களுடன் போராடி வெற்றி பெற்று நீ ஒரு சித்தனாகி நிர்விகற்ப (இரண்டறக் கலத்தல்) சமாதிக்குச் சென்றால் உனக்குள் இருக்கும் இறைவனைக் காண்பாய். அதுவரையில் நீ இறைவனைக் காண்பதரிது. 17

பாமர மக்களைப் பணம் கொடுத்துச் சலுகைகள் காட்டி மதம் மாறச் செய்வது, சிறு அரசியல்வாதிகளை எல்லாம் பெரிய அரசியல்வாதி பணம் கொடுத்து, பாவப் பங்கு கொடுத்து அடிமைகளாக்கிக் கொள்வதற்கு ஒப்பாகும். 18

Koviloor Digital Library

ஓட்டுக்காகச் சில அரசியல்வாதிகள் நாங்கள் ஆட்சிக்கு வந்தால் ரூபாய்க்குப் பத்துப்படி அரிசி போடுவோம். ஏழை மக்களை அப்படி வாழ வைப்போம் இப்படி வாழவைப் போம் என்பதெல்லாம் எப்படி இருக்கிறதென்றால், கிருஸ்த்தவ மதத்தைப் பரப்புவதற்காக வெளி நாட்டி லிருந்து வெட்கமில்லாமல் பல கோடி ரூபாய்களைப் பெற்றுக் கொண்டு பாவமில்லாத அப்பாவீ மக்களிடம் "நாங்கள் செவிடர்களைக் காதுகேட்க வைப்போம்: ஊமை களைப் பேச வைக்கிறோம்" என்று கூறி பாமர மக்களை மதம் மாற்றுகிறார்களே, உண்மையிலே, அவர்கள் கூறும் அந்தக் கடவுள் சக்தியால் ஊமைகளைப் பேசவோ அல்லது செவிடர்களைக் காது கேட்கவோ வைக்க முடி யுமா? அப்படிச் செய்து காட்டினால் அவர்கள் என்ன சொன்னாலும் அதற்கு நான் அடிமை. அப்படி நடக்கா விட்டால் அவர்கள் இந்த நாட்டை விட்டே வெளியேறு வார்களா? அவர்கள் சர்ச்சுக்கு முன்னால் எத்தனை ஊனமுற்றோரைப் பார்க்கிறோம்? இது அவர்கள் கண்ணுக் குத் தெரியவில்லையா? 19

மூடன் ஒருவன் தனக்குப் பிடிக்காத நல்லவர்களைக் கூட இகழ்ந்து விடுவான். இது எப்படி என்றால் ஒரு கட்சி தேர்தலிலே வெற்றி பெற்றவுடன் நம் ரத்தத்தின் ரத்தங்கள், நம்மின் உடன்பிறப்புகள், நம் தந்தையர்கள் தாய்மார்கள் மிக தெளிந்த அறிவுடன் ஓட்டுப்போட்டு இந்த ஆட்சியைத் தேர்ந்தெடுத்துள்ளார்கள் என்று பாராட்டுவார்கள். அதே மக்களால் அவர்கள் தோற் கடிக்கப்படும்போது அவர்களுக்குக் கிடைக்கும் பட்டம் முட்டாள்கள் ஏதோ ஒரு மயக்கத்தில் ஓட்டுப் போட்டு விட்டார்கள் என்றும் இன்னும் எத்தனையோ இழிவுத் திட்டுகள் எல்லாம் கிடைக்கும். தனக்கு வாக்களிக்கும் போது உயர்ந்தவர்கள் தனக்கு வாக்களிக்காத பொழுது தாழ்ந்தவர்கள் ஆகிறார்கள், என்னே அரசியல் வாதிகள் அறிவுத்தன்மை! 20

Koviloor Digital Library

கட்சி விட்டுக் கட்சி தாவும் அரசியல்வாதி உண்மையான ஆண்மகனாயிருந்தால் என்ன செய்ய வேண்டும்? இது எந்தக் கட்சியின் மூலம் பதவி பெற்றார்களோ அந்தப் பதவி அனைத்தையும் துறந்து? விட்டல்லவா கட்சி மாறவேண்டும். மனமார ஒருவனுக்கு ஒருத்தி என்று சொந்தமான பின்பு (மனைவி) இன்னொருவனிடம் ஆசைப்படுவதைப் போலுள்ளது. 21

ஏழைத் தாய்மார்களின் தாலியை வட்டிக் கடையில் சிறை வைப்பது எது வென்றால் சிறு முதலீட்டில் பெரும் கொள்ளை லாபமடிக்கும் கலப்படச் சாராயம்தான். 22

முஸ்லிம் மதத்தில் ஒருவன் நான்கு மனைவிகள் கட்டிக் கொள்ளலாம் என்று முஸ்லிம் சட்டத்தில் இருக்கிறது. ஒரு பெண் நான்கு பேரை ஒரே நேரத்தில் திருமணம் செய்துகொள்ள அந்தச்சட்டம் இடம் தருமா? மதத்தி லேயே ஆணுக்கு ஒரு நீதி! பெண்ணுக்கு ஒரு நீதியா? 23

இந்திய நாட்டில் உள்ளவர்கள் அனைவருக்கும் ஒரே சட்டம்தான் இருக்கிறது. ஆனால், ஒரு கிறிஸ்துவர்க்கோ, முஸ்லிம்க்கோ கருத்தடை செய்வதற்கு இந்த இந்திய அரசு தயங்குகிறது. ஏன்? ஓட்டுகள் போய்விடும் என்ற அச்சமா? இல்லை ஆட்சி கவிழ்ந்து விடும் என்று அச்சமா? ஏன் இந்தப் பாகுபாடு? இந்திய நாட்டில் மதத்திற்கு ஒரு சட்டமா? அந்தோ பாவம் தன்மானம் இழந்தவர்கள் இந்துக்கள் தானா? 24

''தேவர் அனையர் கயவர்'' என்ற திருவள்ளுவரின் பொன்மொழிகள் எதற்கு உவமை என்றால், இப்பொழுது இருக்கும் அரசியல்வாதிகள் தான். ஏனென்றால், எதையும் சாதிக்கும்வலிமைதேவர்களைப்போல் அவர்களுக்குத்தான் உண்டு! 25

Koviloor Digital Library

தேர்தல் நேரத்தில் வீட்டுக்கு வீடு சென்று ஓட்டுக் கேட்பதைப்போல் மாதம் ஒரு முறையாவது வீட்டுக்கு வீடு சென்று குறைகளைக் கேட்கவேண்டும். ஏனென்றால், ஏழை மக்கள் உங்களைக் காண்பது கடினம். அது பணக் காரர்களுக்கு மட்டும் திறந்திருக்கும் மதனமாளிகை. ஆனால், எல்லோருக்கும் தொண்டு செய்யும் அறமாளிகை யாக வேண்டும். 26

இந்த நாட்டில் எந்தத் தகுதியும் இல்லாமல் பணம் சேர்க்க இரண்டு வேடம் உண்டு. ஒன்று போலிச் சாமியார், இன்னொன்று மக்களைச் சுரண்டி ஏமாற்றும் அரசியல்வாதி. ஆனால், உண்மையான சித்தர்களோ? மக்களுக்காகத் தியாகம் செய்வர், அரசியல் வாதிகளோ? அப்படி அல்ல! 27

இந்த நாட்டில் ஒரு வேலையைச் செய்து முடிக்க வேண்டுமென்றால் பணத்தால்தான் முடியும். 28

ஒரு கட்சி விட்டு மாற நினைக்கும் ஒருவர் அந்தக் கட்சியின் மூலமாய்க் கிடைத்த பதவி பட்டம் சுகம் எல்லாம் துறந்து வேறு கட்சிக்குப் போவதுதான் தன்மான முள்ள செயலாகும். 29

Koviloor Digital Library

21. நூல்களும் ஏடுகளும்

உயர்ந்த நூல்களால் இந்த உலகம் உய்கின்றது. அந் நூலை வெளியிட்டோர் தாமும் புகழடைவதல்லாமல் இவ் வுலகமும் நன்மையடையச் செய்த சான்றோராகின்றனர். ஆனால், சிலர் பணத்தின் பொருட்டு, அறத்திற்குப் புறம் பான ஆபாசமான, அலங்கோலமான நூல்களை உலகிற்குத் தருவதனால் தற்காலிமாக இன்பக் கடலில் குளித்து மூழ்கலாம். இதில் தாமுங் கெடுவதல்லாமல் இந்த உலகத் தோரையும் கெடுக்கின்றனர். விரைவில் அதன் பலனை அனுபவிப்பார்கள். 1

பத்திரிகைகளில் சில ஆபாசமான படத்தையும், கருத் தையும் எழுதிப் பணம் சம்பாதிக்கலாம் என்று நினைப்பது 'வேசி' ஒருத்தி தன் உடலழகை எந்நேரத்திலும் எவ்விடத் திலும், எப்படியும் காட்டி, ஏமாந்தவர்களின் பொருள்களை அபகரிப்பதற்கு ஒப்பாகும். 2

சில பத்திரிகைக்காரர்கள் பணத்தின் பொருட்டும், பகட்டின் பொருட்டும் ஆபாசமான படங்களைத் தேடி அலைகிறார்கள். அப்படி ஆபாசமான படங்கள் கிடைக் காமல் போகுமேயாயின், தம் குடும்பத்துப் பெண்களின் ஆபாசமான படங்களைக்கூடப் போட்டு, விற்கத் தயங்க மாட்டார்கள், பணத்திற்காக. 3

ஒரு பத்திரிகையோ புத்தகமோ நாட்டின் அறியாமை என்னும் இருளை நீக்க வந்த கதிரவனாகக் காட்சிதர வேண்டுமேயொழிய மனிதன் அறிவைச் சிறிது, சிறிதாக

Koviloor Digital Library

மழுங்க வைக்கும் அறிவீனமான புத்தகமாகவும், பத்திரிகையாகவும் இருக்கக் கூடாது. 4

நூல் என்பது மனிதனின் மனக்கோட்டத்தைத் திருத்துவதனால் நூல் என்றுபெயர் பெற்றது. கட்டடத்தைச் சரியாகக் கட்டுவதற்கும், கோணலான மரத்தைச் சரியாக அளவு பார்த்து அறுப்பதற்கும், கல்லில் இருக்கும் கோட்டத்தைச் சரிபார்த்து உடைத்து எடுப்பதற்கும் நூலே பயன்படுகிறது. பல நூலிழைகள் சேர்ந்து ஒரு ஆடையாகி மனிதனின் மானத்தையும் காப்பாற்றுகிறது. அதேபோல் நூலுக்கு நிகர் நல்லநூலே. 5

பைத்தியக்காரர்கள் வேண்டுமென்றால் ஆடையில்லாமல், தெருவில் திரியலாம். ஆனால், அறிவுள்ளவர்கள் ஆடையின்றித் தெருவில் திரியலாமா? அறிவில்லாதவர்கள் சிறந்த நூல்களைக் கற்காமலும் அவ்வழியில் நடக்காமலும் போகலாம். அது ஒன்றும் அதிசயமில்லை. ஆனால் மானத்தைக் காப்பாற்றிப் போற்றும் நூலை அறிவுடைய சான்றோர்கள் கற்காமலோ, அவ்வழியில் நடக்காமலோ, இருக்கலாமா? 6

பத்திரிகையோ, நூலோ ஒரு சாராரைப் (தகுதி இல்லாதவர்களை) புகழ்பாடும் நூலாக இருக்கக்கூடாது. எந்த நீதியையும், எந்நேரத்திலும் துணிந்து சொல்லக் கூடியவனே சிறந்த புலமை பெற்ற ஆண்மகனாக—எழுத்தாளனாக ஆகிறான். 7

வீரம் என்பது ஆயுதங்களைக் கொண்டு போர் புரிவதன்று. ஆயுதப்போர் பல உயிர்களைப் பலி கொள்ளுமே தவிர வேறு பயனளிக்காது. ஆனால். ஒரு சீர்திருத்தப் புலவனின் எழுதுகோலோ தீமையை அகற்றி அவர்களை நல்லவர்களாக வாழ வைக்கும் அமிர்தமாகிறது. 8

நூல் என்பது கடவுளைப் புதிதாக உண்டாக்க வந்ததன்று. கடவுளின் சிறப்பியல்புகளை நவில வந்ததே நூலாகும். 9

Koviloor Digital Library

22. கோயில்கள்

இந்திய நாட்டில் படித்துப் பட்டம் பெற்றுவிட்டு வேலையில்லாமல் எத்தனையோ பேர் திண்டாடிக்கொண்டிருக்கும் இந்நாளில் எந்தவிதமான கல்வியும் கற்காமல், திருமுறையையும், நெறிமுறையையும் முறையாகக் கற்றுணராத சிலர், கோயில்களில் குருக்களாய் அமர்ந்து பணிபுரிகிறார்கள். இவர்கள், அதை இறைவன் கொடுத்த பிச்சை வாழ்க்கை என்பதை உணராமல் புரியாமல், தெரியாமல் வழிபாட்டுக்கு வருபவர்களிடம் சாதாரண அலுவலகங்களில் நடப்பதுபோல், கோயில் பிரசாதங்களைத் தருவதற்குக் கையூட்டை (லஞ்சம்) எதிர் நோக்குகிறார்கள். என்னருமை இந்து மதத்தைக் காக்கும் குருக்கள்மாரே! மற்ற மதத்தினர்களின் கோயில்களில் (குறிப்பாக கிறித்தவர், முகமதியர், சமணர், புத்தர்) இந்து மதக் குருக்களைப்போல் தன் சொந்த வீட்டுச் செலவிற்காகக் கோயில் பணத்தை எதிர்பார்ப்பதில்லை. இந்த உயரிய பண்பாட்டை நாம் அவர்களிடமிருந்தா கற்றுக் கொள்ள வேண்டும்? உங்களுக்குப் பணம் தேவையென்றால் அரசிடம் ஊதிய உயர்வை வேண்டுங்கள்; தட்டுகளில் வரும் பணத்தை உண்டியலில் சேர்ப்பியுங்கள். தேவ மொழியான சமஸ்கிருத வேதங் கற்ற பெரியோர் களல்லவா நீங்கள்? 1

கோயில்கள் புனிதத்தின் உறைவிடமாகும். அங்கு நுழைந்தவுடனே பயமும், பக்தியும் தாமாகவே தோன்ற

Koviloor Digital Library

வேண்டும். மாறாக சில குருக்களின் போக்கைக் கண்ட வுடன், கொஞ்ச நஞ்சமிருக்கும் பக்தியும் இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிடுகிறது. நான் பல முறை. பல கோயில்களுக்குச் சென்று உள்ளேன். அங்கே சில கோயில் களில் சில குருக்கள் உரையாடியதைக் கேட்டால், (அரசியல், சினிமா, அடுத்தவர்கள் குடும்பச் சங்கதிகள் சில விரசமான கதைகள்) கொஞ்சநஞ்சம் இருக்கும் பக்தி கூடக் காற்றில் பறந்து விடும்போல் உள்ளது. 2

கோயில்களில் குருக்கள் வேலைக்கு முறையான சில தகுதிகள் உள்ளன. அப்படி அல்லாதவரை அந்த வேலைக்கு அமர்த்துவது, பன்றி—குதிரை—கழுதை இவை களைக் கொண்டு வந்து கத்தச்சொன்னால், அவை எப்படி ஹா—ஹா—ஹீ—ஹீர்—ஷர்—ஸர்—இப்படி மூச்சுப் போக கோயில்களில் கனைத்தால், கத்தினால் எப்படி இருக்குமோ அப்படியே உள்ளது. இப்படியிருந்தால் எப்படி மெய்யன் பர்கள் இறையருளை உணரமுடியும்? 3

கோயில்களில்—அருட் பெரும் ஜோதி இராமலிங்க வள்ளலார் அவர்கள் கூறியது போல் பன்னிரண்டு வயதுக் குட்பட்ட சிறுவர்களும், எழுபத்திரண்டு வயதுக்கு மேற் பட்ட பெரியவர்களும், பொருள்-இடம்-போகம் முதலிய வற்றில் இச்சை சிறிதும் இல்லாதவர்களாய், உண்மை யான தெய்வ பக்தி உள்ளவராய், யாரிடமும் அன்புள்ள வராய் இருத்தல் வேண்டும். திருமறை, திருமுறைகளை முறையாகக் கற்றுணர்ந்தவர்களாயும், அவ்வழியே நடக்கும் ஆற்றல் உள்ளவர்களாயும் அமர்த்தப்பட வேண்டும். அப்போதுதான் நம் கோயில் தர்மங்கள் பிழைக்கும். இல்லையெனில் கோயிலும், ஒரு சாதாரண அலுவலகமாய் ஆகிவிடும். குலத்தால் (சாதி) அல்ல பிறப்பு; உயர் குணத்தால் அமைவதே மனிதப் பிறப்பு, குணமல்லாத பிறப்பெல்லாம் மனிதப் பிறவி (சாதி)

Koviloor Digital Library

அல்ல: மிருகப் பிறப்பு (சாதி). ஆகையால், மனிதர்களாய் உள்ளவர்களே இறைவன் தொண்டுக்குச் சரியான வர்கள். 4

எல்லாப் பணிகளுக்கும் பயிற்சி, பாடம், தேர்வு என்று இருக்கிறது. ஆனால், எல்லாவற்றிற்கும் மேலான கோயில் திருப்பணிக்கு மட்டும் ஏன் அப்படி ஒரு பாட முறை இல்லை? அப்படி ஒரு ஒழுக்கப் பாடமுறை இருந் தால் சிலர் கோயில்களில் முறையாக மந்திரம் சொல்லி முறையாகப் பக்தர்களிடம் நடந்து கொள்வார்கள். கோயில் தர்மங்களும் உயிர் பிழைக்கும். 5

கோயில்களில் இருக்கும் சிலையைப் பக்தர்கள் எல்லாம் கடவுளாக நினைத்து, பயந்து வழிபாடு செய்கிறார்கள். ஆனால், அந்த இறைவனைத் தொட்டுக் கழுவுவதாலோ என்னவோ சில குருக்கள்மார் கல்லென்றும்...........மிகச் சாதாரணமாக நினைக்கிறார்கள். அப்படி இல்லையென் றால் இறைவனின் தரகர்களாக (ஏஜெண்டுகள்) இருக்கும் அவர்கள் இவ்வளவு பூசை செய்ததன் பயனாகப் பெரும் ஞானிகளாக அல்லவா மாறி இருக்க வேண்டும்? 6

எங்கோ ஒரு சில இறைமெய்யன்புள்ள குருக்கள்மாரும் வேலையாள்களும் இருப்பதால், அவர்களின் பொருட்டே இறைவன் கோயில்களிலும் உறைகிறான். அந்த மெய்யன் பர்களுக்காக அடியேன் தலைவணங்கி, அவர்கள் மேலும், மேலும் அவ்வாறு அருளியலில் உயர இறைவனை வேண்டிக்கொள்கிறேன். 7

''சிவன் சொத்து குலநாசம்'' என்பது பழமொழி. ஆனால், அந்தப் பழமொழி இப்பொழுது சிலரிடம் ''சிவன் சொத்து குல குடும்ப உயர்வு'' என்றாகிவிட்டது. சில கோயில் நிலங்களும், சில கோயில் பொருட்களும் வீணாகச் செலவழிக்கப்படுகின்றன. கோயிலில் இருக்கும் இறை

Koviloor Digital Library

வனை வெறும் கற்சிலை என்று நினைத்துவிடாதீர்கள். அது தண்டிக்க ஆரம்பித்தால் நம்மால் தாங்கிக்கொள்ள முடியாது. 8

இறைவனுக்குத் தொண்டு செய்ய எவ்வளவு புண்ணியம் செய்திருக்க வேண்டும். அந்த வாய்ப்புக் கிடைத்ததும் கடைத்தேற, அதைப் பயன்படுத்தாது போனால் கண்ணில்லாத ஒருவன் கண் ஒளி பெற்றபின், சிலநாள் கழித்துத் தன் கண்ணையே தானே குருடாக்கிக் கொண்டதற்கு ஒப்பாகும். 9

Koviloor Digital Library

23. பொது

சந்தனக் கட்டையை உரசிப் பார்த்தால் அதன் மணம் தெரியும். அதைப் போல் சிலரை நெருங்கிப் பார்த்தால் தான் அவர்களது உயர்ந்த குணங்கள் தெரியும். 1.

ஒரு புகைப்படக் கருவி, எப்படி எந்தப் பொருளையும் பதிவு செய்து விடுகின்றதோ, அதைப் போன்றே ஒரு புலவனின் இதயத்தில் அவன் பார்க்கும் பொருளனைத்தும் பதிந்துவிடுகிறது. 2.

பாம்பின் நஞ்சு உயிரைக் கொல்லவும் செய்யும். சில நோய்களைக் குணப்படுத்தும் மருந்தும் ஆகும். அதைப் போல் சில கொடியவர்களை அன்பினால் நல்லவர்களாக்க முடியும். 3

துப்பாக்கியிலிருந்து பாயும் குண்டு, உடலை எந்த அளவுக்குத் துளைத்து விடும் என்று முடிவு செய்து விடலாம். ஆனால், மனிதனின் வாயிலிருந்து வரும் சொல்லம்பு, எந்த அளவுக்கு உயிரைத் துளைக்குமென்று யாராலும் சொல்ல முடியாது. 4.

சேற்றில் இருக்கும் மூடனைக் காப்பாற்ற நினைத்தால் மூடன் கரையிலிருப்பவனைச் சேற்றுக்குள் இழுக்கத்தான் முயற்சி செய்வான்; அவன் கரைக்கு வர முயலான். இதனால், நல்லவரும் சேற்றில் அமிழ்ந்து சீரழிய வேண்டி வரும். 5.

Koviloor Digital Library

காலணி (லாடம்) இல்லாத மாடு கரடு முரடான பாதைகளில் நடக்க முடியாது. மனக் காலணி (ஒழுக்கம்) இல்லாதவன்—வாழ்க்கை என்னும் மேடு பள்ளத்தில் பயணம் செய்ய முடியாது. 6

புலால் உண்ணாத சைவப் புலியைக்கூட ஒருவேளை காணலாம். ஆனால், ஆதாயம் இல்லாத அரசியல் வாதிகளைக் காண இயலாது. 7

சில மடாதிபதிகளும், பீடாதிபதிகளும் திமிங்கலங்களைப் போன்று, மக்களின் சொத்துகளைத் தின்றுவிட்டுத் தம்மைச் சார்ந்தவர்களுக்கே உதவியாக இருக்கின்றனர். இவர்களால் உலகிற்கு என்ன பயன்? இவர்கள் திருந்துவது எந்நாளோ? 8

உயிர் காக்கும் தோழர்களும் உண்டு உயிர் கேட்கும் தோழர்களும் உண்டு. 9

ஒரு நாட்டின் சாபக்கேடு எதுவென்றால், எண்ணற்ற மதங்களும், எண்ணற்ற கட்சிகளும்தாம். இவையெல்லாம் ஒழிந்து 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்', 'மக்கள் நலனே மகேசுவரன் தொண்டு' என்று நினைக்கும் காலமே நாட்டின் பொற்காலமாகும். 10

பலாமரம் பூக்காமலே பலன் தருகிறது. அதேபோல் விளம்பரமின்றியே பல நன்மைகள் செய்யும் உயர்ந்தோரும் உண்டு. 11

சில மரங்கள் பூக்கும்—ஆனால், காய்க்காது. அதைப் போல் சிலர் வாயால் தர்மம் செய்வதாகத் தம்பட்டம் அடித்துக் கொள்வார்கள். ஆனால், செயலில் ஒன்றும் நிகழாது. 12

Koviloor Digital Library

எண்ணெய் காயாவிட்டால் கடுகு வெடிக்காது; காய்ந்துவிட்டால் உடனே வெடிக்கும். அதுபோல் மாந்தர்கள் கோபமில்லாதபோது அறிவுரை சொன்னால் ஏற்றுக்கொள்வார்கள். கோபம் பொங்கியெழும்போது அறிவுரை சொன்னால் சீறி விழுவார்கள். 13

வாழ்க்கையில் குறுக்கு வழியில் பணம் சம்பாதிப்பவர்கள் பின்னால் கிறுக்கர்களாக மாறித் திரிவது திண்ணம். 14

சில எழுதுகோல்களும், சில தாள்களும், தமிழும் சில எழுத்தாளர்களின் கையில் அகப்பட்டுக் கொண்டு, ஐயகோ! மற்றவர்களை விரசமாக வஞ்சித்து, பொய் புளுகி ஆதிசங்கரரைப் போல், தகாத காம சூத்திரங்கள் எழுதி நமது பொன்னான பிறப்பை இழிபிறப்பாக்குகின்றன. தீய எழுத்தாளர்களே, 'நீங்கள் மறுபிறப்பில் நாங்கள் விடும் கண்ணீர் போல் குமுறிக் கதறிப் பரதவிக்கக்கடவீராக' என்று அவை ஓலமிடுகின்றன. 15

கோழியைப் போல் இருக்கும் எழுத்தாளர்கள் நமக்குத் தேவையில்லை. அது நெல்லை அப்படியே விழுங்கிவிடும். ஆனால், கிளியோ நெல்லைக் கொரித்து அரிசியை மட்டுமே உண்ணும். சிறந்த எழுத்தாளர்களும், தீமைகளை நீக்கி உயர்ந்த உண்மைகளையே மக்களுக்கு எடுத்துரைப்பர். 16

தேர்தலில் நிற்பது குதிரைப் பந்தயத்தில் பல்லாயிரம் ரூபாயைப் பணயம் வைத்துப் பல இலட்சத்தை எதிர்பார்க்கும் சூதாட்டத்திற்கு ஒப்பாகும். அதில் வெற்றியும் பெறலாம்; கட்டிய பணம் பறிபோய்க் கட்டிய மனைவியின் தாலியும் பறி போகலாம். 17

காட்டிலிருக்கும்எந்த உயிரேனும்நாட்டிற்குவந்து எந்த மனிதரையும் வேட்டையாடிச் சாப்பிடாத நிலையில் நாம்

Koviloor Digital Library

மட்டும் காட்டிற்குச் சென்று, ஏன் உயிரினங்களை வேட்டையாடிச் சாப்பிட வேண்டும்? 18

கடிகாரங்கள் அடிக்கடி சாவி கொடுத்தால்தான் ஓடும். அதைப் போல் சிலர் அடிக்கடி பிறர் சொல்லிச் சொல்லித் தான் செயல்படுவார்கள். சில நேரங்களில் தாமாக இயங்கும் ஆற்றல் பலருக்கு இருப்பதில்லை. 19

துர்நாற்றமெடுத்த மீனைச் செத்துப் போனாலும் சில மக்கள் கருவாடாகப் பயன்படுத்துகிறார்கள். ஆனால், துர்நாற்றமுள்ள இந்தவுடல், உயிர் நீங்கியதும் யாருக்கும் பயன்படுவதில்லை. 20

ரோசாப்பூ மாலையின் இடையில் யாரும் காகிதப் பூவை வைத்துக் கட்டமாட்டார்கள். அதைப்போல் சான்றோர்கள் நடுவில் கயவர்கள் கலக்க முடியாது. 21

எருமை மாட்டினிடமிருந்து இனிய குரலை எதிர் பார்க்க முடியாது. கரடு முரடான உள்ளத்தில் இருந்து கனிவான சொல்லை எதிர்பார்க்க முடியாது. 22

நல்லவர்கள் அமைதியாக வாழ வேண்டுமாயின் தீயவர் கள் தண்டிக்கப்பட்டுத் திருத்தப்படவேண்டும். 23

பருவ காலத்தில் பயிர் செய்; வாய்ப்பு உள்ள காலத் திலே அறிவை வளர்த்துக்கொள். 24

இந்நாட்டில் உண்மையாய் உழைத்து முன்னேறியவர் களைவிட, பேச்சால் மக்களை மயக்கி ஏமாற்றி, வாழ்ந்த வர்கள், வாழுபவர்களே அதிகம். 25

Koviloor Digital Library

திறமையற்றவனின் பேச்சை நம்பி அவனைத் திறமையுடையவனாக மதிப்பது, புலியைப் பார்க்காத ஒருவன் காட்டுப் பூனையைப் புலியென்றும், யானையைப் பார்க்காத ஒருவன், யானைக்கால் நோய் உள்ளவனை யானை என்றும் எண்ணி ஏமாறுவதற்கு ஒப்பாகும். 26

தாய் மதம் விட்டு மாறிய சிலரை நான் காணுகின்றேன்—அவர்கள் தமது தாய் மதத்தின் தத்துவத்தையோ அல்லது புதிதாக ஏற்றுக்கொண்ட மதத் தன்மையையோ அறிந்தவர்களாகத் தெரியவில்லை. ஏதோ சில சலுகைகளின் பொருட்டு மாறியதாகத் தோன்றுகிறது. இதைவிட இன்னொரு மதம், சலுகை கொடுக்குமாயின்-இதை விட்டு அதைத் தாவிப் பிடித்துக் கொள்ளவும்கூடும். அது லாப நஷ்டம் பார்க்கும் அரசியல்வாதியின் கொள்கைகள் போன்று உள்ளது. 27

'வெள்ளையனே வெளியேறு' என்று சொன்ன நம் பெரியோர்கள், அவன் கொள்கையை வெளியேறச் சொல்லவில்லை போலும். அதனால்தான் அவன் கொள்கைகளில் சில இன்னும் நம் நாட்டில் அப்படியே வேரூன்றி உள்ளன. 28

தூங்கும்போது எல்லோரும் நல்லவர்களாகத்தான் தோன்றுகிறார்கள். நெஞ்சுக்குள் பரமாத்மா மட்டும்தான் தெரிகிறது. ஆனால், தூங்கி எழுந்ததும்தான் ஒவ்வொருவருடைய உண்மைச் சொரூபமும் தெரிகிறது. நல்லவர்கள் நல்லவர்களாகவும் கெட்டவர்கள் கெட்டவர்களாகவும் காட்சியளிக்கிறார்கள். 29

நான் தெரியாமல் தவறு செய்து விட்டேன் என்பதெல்லாம் பொய். ஒரு சிலர் புலன் அடக்கம் இல்லாமல் தவறுகள் செய்கிறார்கள். இரண்டு வயதுக் குழந்தை

Koviloor Digital Library

வேண்டுமானால் துணி கட்டாமல் இருக்கலாம். வயது வந்தவர்கள் அப்படி இருக்க முடியுமா? 30

எண்ணெய் காயாமல் கடுகு வெடிக்காது. இதயம் கொந்தளிக்காமல் முகம் சுளிக்காது. 31

உலகில் நாம் பயன்படுத்தும் காரோ, மோட்டார் சைக்கிளோ, பலவிதமான இயந்திரங்களோ பழுதடைந்தால், அந்தந்த வாகனத்தின் நிறுவனத்திற்குச் சொல்லி சிதைவுற்ற உறுப்புகளைப் பெற்று அதைச் சீராக்கி விடலாம். ஆனால், நம் உடம்பில் உள்ள எந்த உறுப்பு பழுதடைந்தால் எந்த நிறுவனத்திற்குச் சொல்லி சீராக்க இயலும்? உலகத்தில் இறைவனால் படைக்கப்பட்ட நம் உறுப்புகள் எந்தக் கடைகளிலும் கிடைக்கும் விலைப் பொருளல்ல. 32

மனமடங்கக் கல்லாத கல்வியெல்லாம் பல மடங்கு துன்பத்தில் ஆழ்த்தும். 33

தவளை, மீன், ஆம்பல் இன்னும் சில, ஒரே குளத்தில் பிறந்தாலும், எல்லாம் ஒன்றாகி விடமுடியாது. ஒரே குடும்பத்தைச் சார்ந்தவர்கள் ஆயினும் எல்லாரும் ஒரே மாதிரியானவராக இரார்! குணத்திற்கேற்ப மாறுபாடுகள் உண்டு. 34

அத்திமரம் பெரியதாய் இருந்தாலும் அதன் காய்கள் சிறியவையாகவே இருக்கும். அதேபோல் சிலர் பெரியவர்களாக இருந்தாலும் அவர்களுடைய கருத்துகள் சிறியவையாகவே இருக்கும். 35

உலகில் பல மதங்களையும், அவற்றின் கொள்கைகளையும் நினைக்கும்போது, வயிற்றுப் பிழைப்புக்காக உலகில் பல அரசியல் கட்சிகள் தோன்றுவதைப் போல் அவை தோன்றியதாகவே கருதவேண்டியுள்ளது. 36

செயல்படுத்த முடியாத திட்டங்களை வகுப்பது ஒன்றுமில்லா ஆண்டிகள் கூடி மடங்கட்டுவதற்கு ஒப்பாகும். 37

Koviloor Digital Library

குற்றமில்லா மனைவியை அடிப்பவன் பேடிக்கு ஒப்பாவான். 38

மெய்யைப் பொய்யாகவும், பொய்யை மெய்யாகவும் மாற்றும் ஆற்றல் பேச்சுத் திறமையுடையவர்களுக்கு மட்டும்தான் உண்டு. இது எப்படியென்றால் இராமாயணம், மகாபாரதம், சிலப்பதிகாரம் இம்மாதிரியான காவிய நூல்களைப் பற்றிப் பட்டிமன்றங்கள் ஊர்தோறும் நடத்துவார்கள், கும்பகர்ணன், வாலி இராவணன், விபீடணன், இராமன், இலட்சுமணன் இப்படிக் காவியத்தில் வரும் பலதரப்பட்டவர்களைப் பற்றி அவர்களின் வீரத்தையும், உயர்ந்த குணங்களையும் பற்றிக் காரசாரமான வாக்குவாதம் நடக்கும். நடுவர் (நீதிபதி) ஒருவர் இருப்பார். இரு கட்சிக்காரர்களும் ஒருவருடன் ஒருவர் சண்டையிட்டுக் கொள்வதைப் போல் பேசிக் கொள்வார்கள். பட்டிமன்ற முடிவில் நடுவர், பாத்திரத்தில் வரும் ஒருவரைச் சிறந்த வீரராகவும், உயர்ந்த பண்புடையவராகவும் தேர்ந்தெடுப்பார். அதே நடுவர் மற்றோர் ஊரில் நடக்கும் பட்டிமன்றத்தில் அக்காவியத்தில் வேறொருவரைச் சிறந்தவராகத் தேர்ந்தெடுப்பார். அந்த ஊரில் பேச்சு ஆற்றலில் யார் வெல்லுகிறாரோ, அவர் ஆதரித்த பாத்திரத்தையே சிறந்த வீரன் என்று தீர்ப்பு வழங்கப்படுகிறது. இது எப்படியென்றால், மாவட்ட நீதிமன்றத்தில் தோற்றுப்போன வழக்கு உயர்நீதிமன்றத்தில் வெற்றியடைவதும், மாவட்ட நீதிமன்றத்தில் வெற்றி பெற்ற வழக்கு உயர்நீதிமன்றத்தில் தோல்வியடைவதும் போல் இருக்கிறது. இந்த வெற்றி தோல்விகள் எல்லாம் வழக்கறிஞர்களின் திறமையைப் பொருத்தே உள்ளன. காவியத்தில் வரும் பாத்திரம் என்னவோ ஒன்றுதான். பல ஊர்களில் நடக்கும் பட்டிமன்ற நடுவரும் ஒருவர் தான். ஆனால், ஊருக்குகந்தவாறும், மன்றங்களுக்குத் தகுந்தவாறும் தீர்ப்பளிப்பதால் மக்களுக்கு எது உண்மை

Koviloor Digital Library

என்றே தெரிவதில்லை. எனவே, சில பேச்சாளர்கள் தங்கள் பேச்சுத்திறமையால் மக்களை மயக்கி விடுகிறார் கள். ஆனால், உண்மை ஒருபோதும் இறப்பதில்லை. 39

இந்த நாட்டில் ஒரு ஏழைக் குடிமகன் வழக்கறிஞ ராகவோ (Lawer) மருத்துவர் (Dr) பொறியாளர் (En) மற்றும் இதர பட்டதாரிகளாவது மிகக் கடினமான செய லாகும். ஆனால்,ஒரு செல்வந்தர் எதை வேண்டுமானாலும் சாதித்துவிடலாம். ஒரு வேளை அந்த இறைவனே ஆட்சி நடத்த வந்தாலும் அவரும் இந்தநிலைக்குத்தள்ளப்பட்டா லும், ஆளாக்கப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஏனெனில், எந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும் உண்மை எங்கே! என்று தேடிப் பார்க்க வேண்டியதுள்ள தாக இருக்கிறது. 40

இன்பம் ஆரம்பத்தில் இனியதாகத் தொடங்கும். முடிவில் மாபெரும் துன்பமாக முடியும். அதைப் போல் துன்பம், ஆரம்பத்தில் மிகவும் வருத்தமாகத் தொடங்கும். முடிவில் மிகவும் சாந்தியாகவும் இன்பமாகவும் இருக்கும். இது எதைப் போல் என்றால் ஒரு உழவன் எப்படி ஆரம்பத் தில் கஷ்டப்பட்டு உழைத்து உழுது பயிரிட்டு அறுவடையின் போது எப்படி இன்பமாக உள்ளானோ அதைப் போல் தான். 41

இந்த நாட்டில் கட்சிக் கொடிகள் போலவே மதங் களின் கொடிகளும் பெருகிவிட்டது. ஒரே மதத்தில் சில சாதிப் பிரிவுகளும் அந்தச் சாதிப் பிரிவுகளுள் பல சமயப் பிரிவுகளும் புல் பூண்டு போல் கண்ட இடத்தில் முளைக்க லாயிற்று. 42

இறைவன், சாதிகளையும். சமயங்களையும் வைத்துப் போராடவோ வயிற்றுப் பிழைப்பு நடத்தவோ சொல்

Koviloor Digital Library

வில்லை. தன்னைத்தான் உணர்ந்து தலைவன் (கடவுள்) தாள் சேர்வதற்கே மதங்கள் இருக்க வேண்டும். 43

நல்லவர்கள் தீயவர்களாகவும், தீயவர்கள் நல்லவர் களாகவும் ஆக்கப்படுகிறார்கள். இது எப்படி என்றால், மீன் தண்ணீரில் இருக்கும் போது மீனாகவும், அதுவே தண்ணீரில் இருந்து வெளியில் வரும்போது கருவாடா கிறதோ அதைப் போல்தான். 44

புறக் கண்களை மூடி பூனையைப்போல் இருந்தால் ஞானி ஆகிவிட முடியாது. மனக்கண்கள் ஆசை என்னும் அலை கடலில் இருந்து மீண்டால் ஒழிய ஞானம் பெற முடியாது. 45

''மதப் பெரியோர்களே''! உங்களுடைய சொற்களும் எழுத்துகளும் மக்களை ஒற்றுமைப்படுத்த இருக்க வேண் டுமே ஒழிய மக்களைப் பல கூறுகள் போடுவதற்காக உங்களை இறைவன் படைக்கவில்லை. 46

சமய நூல்களும், பெரியோர்களும் மக்களுக்குச் சுமை யாக இருக்கக் கூடாது. மக்களின் சுமைதாங்கிக் கற்களாக இருக்க வேண்டும். 47

சில மாட்டு வண்டியில் பூட்டப்பட்ட சுமைகளை இழுக்கும் மாடுகளைப் பார்த்து இருக்கலாம். அவைகளின் கழுத்தில் இருக்கும் புண்களைப் பார்த்தும் மாட்டு வண்டிக் காரன் மாட்டை இரத்தம் சொட்டச் சொட்ட அடித்து அடித்து இழுத்துச் செல்வான். இது எதுபோல் என்றால், வரிமேல் வரி போட்டு ஏழையை நசுக்கும் அரசாங்கத் திற்கு ஒப்பாகும். 48

Koviloor Digital Library

நியாயமான வரிகளைக் கட்டாமல் வசதிகளை மட்டும் எதிர் பார்ப்பது,கிணறு தோண்டாமலே தண்ணீரை எதிர் பார்க்கும் முட்டாளுக்கு ஒப்பாகும். 49

இத்தனை கோடி மக்களையும், உருவங்களையும், குணங்களையும், விதவிதமாகப் படைத்த கலைஞனை என்னென்று சொல்வது? ஒருவரின் கட்டை விரலில் உள்ள ரேகைக் கோடுகள் மற்ற கட்டை விரலில் இல்லை என்பது போலீஸ்காரரின் தீர்ப்பு. இதில் இருந்து பார்க்கப்போனால் எத்தனை கோடி மக்களின் கட்டை விரலில், கோட்டினை மாற்றிய முறையை எண்ணிப் பார்க்கும்பொழுது, அவர் கணக்கில் எவ்வளவு பெரிய வல்லுனர் என்று தெரிய வருகிறது. எல்லோரும் ஒரே மாதிரியாக இருந்துவிட்டால் தாய் என்றும், தந்தை என்றும், மகள் என்றும், மகன் என்றும், நண்பர் என்றும், உறவினர் என்றும் தெரியாமல் போய்விடும் என்று ஒவ்வொருவரையும் வித்தியாசமாகப் படைக்கின்றான். இதில் இருந்து அவன் கருணைத் தரத்தை என்னென்று பாராட்டுவேன். என்னே அவன் கலை வண்ணம்! யாருக்கும் ஒப்பிலாக் கலைஞன். 50

கர்ப்பப்பையில் இருக்கும் உயிருக்கும், கல்லுக்குள் இருக்கும் தேரைக்கும், உயிர், உணர்வு, உணவு கொடுத்து வளர்ப்பதை நினைத்தால் வியப்பாக இருக்கும். 51

இந்த உலகத்தில் எவ்வளவோ விஞ்ஞானிகள் இருக்கிறார்கள். இந்த உடலைப் போல ஓர் உடலோ அல்லது இந்த உயிரைப் போல் மற்றொரு உயிரோ படைக்க முடியவில்லை. நிச்சயம் எத்தனை கோடி ரூபாய் கொடுத்தாலும் அது நடக்காத காரியம். 52

உலகத்தில் உள்ள பல விஞ்ஞான அறிஞர்களின் முடிவு விஞ்ஞானத்தின் பிறப்பிடமாகிய மெய்ஞ்ஞானமாகிய

Koviloor Digital Library

கடவுளின் தீர்ப்பால்தான் இவ்வுலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது என்பது எள்ளளவும் மறுக்க முடியாத தீர்ப்பு. 53

கார் காலத்தில் மழையும், கோடைக் காலத்தில் வெய்யிலும், வசந்த காலத்தில் தென்றலும், சூரியன் குறிப்பிட்ட நேரத்தில் உதிப்பதும், மறைவதும் அவன் ஆணைக்கு உட்பட்டது. அது தடம்புரண்டால் ஒரு வினாடியில் இந்த உலகம் தவிடு பொடியாகிவிடும் என்பது சாதாரண மனிதருக்கும் தெரிந்த உண்மை. 54

எந்த விஞ்ஞானியாலும், உதிக்கின்ற சூரியனை மறைய வைக்கப் பார்த்ததில்லை. மறைந்திட்ட சூரியனை உதிக்க வைத்துப் பார்த்ததில்லை. எல்லாம் அவன் சித்தப்படி தானாகவே இயங்கிக் கொள்கிறது. 55

சில பள்ளிகளில் சாதாரண L. K. G., U. K. G., யில் ஏழைப் பிள்ளைகளைச் சேர்க்க வேண்டும் என்றால் கூட அரசியல்வாதிகள் அல்லது சில பெரிய மனிதர்களின் சிபாரிசுக்கடிதம் தேவைப்படுகிறது. சிபாரிசு இல்லை எனில் அதற்குரிய பணம் தேவைப்படுகிறது, இந்த நிலை இவ்வாறே நீடித்தால் இனி ஏழைக் குழந்தைகள் பள்ளிக்கூடம் பக்கமே தலை வைத்துப் படுக்காது. இது திண்ணம். 56

சில பள்ளிக்கூடங்களில் நன்கொடை மற்றும் அவர்கள் பள்ளிகளிலே சீருடை தைத்தாக வேண்டும் என்று கட்டாயம் இருக்கிறது. ஆனால், நாம் கொடுக்கும் பணத்திற்கு ஏற்ற துணி கொடுப்பதில்லை. பழைய நைந்த துணியைத் தான் கொடுக்கிறார்கள். இதிலிருந்து தையல், ஒப்பந்தக் காரர்களுக்கும், இவர்களுக்கும் ஏதோ இருக்கிறது என்று சந்தேகப்பட இடமுண்டு. இதனால், ஏழையின் பணம் எவ்வாறு வீணாக்கப்படுகிறது என்று அறியலாம். 57

Koviloor Digital Library

உலகத்தில் குற்றம் செய்யாதவர்கள் இறைவனைத் தவிர வேறு யாருமில்லை. மனம் திருந்த திருந்த அவன் மாணிக்கமாகிறான். இதுதான் மனித தத்துவத்தின் உண்மை. 58

மாயை (குற்றம்) கலக்காமல் மனிதப் பிறவி எடுப்ப தில்லை. மனிதப் பிறவி என்றாலே முன் செய்த நல்வினை, தீவினைக்கேற்றவாறு வாழ்க்கை அமைகிறது. ஆகையால், தீமையில்(ஆசை, மாயை)இருந்து விடுதலையாகிப் புனிதம் பெற்று இறைவனை அடைவதே இப்பிறப்பின் குறிக்கோ ளாக இருக்க வேண்டும். 59

வேண்டாதவர்கள் மீது ''பொய் சாட்சி'' ஜோடித்து தண்டனை வாங்கித்தருவதால் இவர்கள் அடையும் லாபம் தான் என்ன? தெற்கே அடிக்கும் காற்று மேற்கே அடிக்காது என்பதற்கு என்ன உத்திரவாதம்? நீதிக் கடவுளை ஏமாளி யாக்கும் சட்டங்களை நினைக்கும்பொழுது எனக்கே ஆச்சரியமாக இருக்கிறது. 60

ஒரே இந்தியாவில் மாநிலங்களுக்கு மாநிலம் சட்டங் கள் வேறுபட்டு உள்ளது. குறிப்பாக மதுப் பிரச்சினை, குடியுரிமைப் பிரச்சினை, காஷ்மீரைப் போல் அதிக அதிகாரங்கள். அவ்வளவு தூரம் ஏன் போவானேன்,தமிழ் நாட்டை எடுத்துக்கொண்டால், நினைத்த உடனே மது விலக்கு, மறுநாளே மதுவிலக்கு தளர்த்தப்படுகிறது. ஆந்திராவிற்குப் பயணிகள் பேருந்தில் (டூரிஸ்ட்)செல்வதா னால் ஒரு சட்டம், பாண்டிச்சேரி செல்வதானால் ஒரு சட்டம். இப்படிப் பல துறைகளை எடுத்துக் கொண்டால் மாபெரும் வித்தியாசம் காணப்படுகிறது. இதுதான் இந்தியாவின் சட்டங்கள். 61

ஆதிபராசக்தியைப் பார்த்து ஒருவன் கேட்டானாம் ''நீயின்றி நான் இல்லை, நானின்றி நீ இல்லை'' ஆகா!

Koviloor Digital Library

என்ன அருமையான சினிமா வசனம். காதலன் காதலியை அழைப்பது போல இருக்கிறது. இவ்வுலகத்தையே ஆட்கொள்ளக் கூடியவள் ஆதிபராசக்தி, அவளில்லாமல் இவன் இல்லாமல் போகலாம், ஆனால் இவன், இல்லாமல் அவள் இல்லாமற் போவது என்ற கூற்று, எப்படிப்பட்ட பைத்தியக்காரக் கூற்று என்று அறிவுடையவர்களே புரிந்து கொள்வீர், இதை ஆணவமலம் என்று கூறுவார்கள் பெரியவர்கள். 62

ஆணவமும், செருக்கும், அகந்தையும் விரைவில் அழிந்து போவதற்கே ஏதுவாகும். இது எதைப் போன்று என்றால், ஆற்று வெள்ளம் அடித்துச் செல்லும் போது திமிர் பிடித்து நிற்கும் மரங்கள், செடிகள் வெள்ளத்தோடு வெள்ளமாக வேருதூறுடன் அடித்துச் செல்வதற்கு ஒப்பாகும். ஆனால், நாணல் (புல், தர்ப்பை) மட்டும் வெள்ளத்திற்கு அடிபணிந்து, அது சென்ற பின் தலை நிமிர்ந்து நிற்கிறது. 63

தண்ணீர்ப் பஞ்சம் தாண்டவமாடும் இந்நேரத்தில் எந்தப் பராசக்தியும் பாராமுகமாய் இருக்கவே மாட்டாள். இங்கே நான் கடவுளைக் குறை சொல்ல வரவில்லை. கடவுள் பெயரால் நடக்கின்ற அக்கிரமங்களால்தான் இப்படி ஏற்படுகிறது என்று சுட்டிக்காட்டுகின்றேன். 64

சில பக்தகோடிகள் திருப்பதிமலை, ஆதிபராசக்தி கோவில், சபரிமலை, பழனி கோவில், இன்னும் சில தலங்களுக்குச் செல்லும் வண்டி சொர்க்கலோகத்திற்கே சென்று விடுகிறது. இவைகளையெல்லாம் பார்க்கும் பொழுது இது இறைவனுடைய குற்றமா அல்ல இது மனிதனின் குறையான மடத்தனமே. 65

உடல் உயிரை விட்டுப் போனால் எந்தச் சொந்தமும் நம் பின் வராது. நாம் செய்யும் நன்மை, தீமையே நம்

Koviloor Digital Library

பின் வரும். அதைப் பொருத்தே அடுத்த மறுபிறவி உயர் வாகவோ அல்லது தாழ்வாகவோ அமைகிறது. 66

கறுப்புக் கோட்டு அணிந்தவர்கள் நிரபராதிக்கு மட்டும் வாதாடுவது இல்லை. குற்றவாளிக்கும் சட்டத்தின் ஓட்டைகளைச்சாதகப்படுத்திப்பிழைப்புநடத்துவது,அது அவர்களின் தொழில் திறமை. ஆகமொத்தம் வழக்கு மன்றத்தில் திறமைசாலிகளும், சாணக்கிய அறிவுள்ளவருமே வெற்றி பெற முடியும். இதற்காக பல ஆண்டுகள், பல ஆயிரம் செலவு செய்து படிக்க வேண்டியுள்ளது. 67

உங்களுடைய கல்வி எதுவாக இருந்தாலும். மக்களுக்கு நேர்மையாக உதவி செய்யக் கூடியதாக இருக்க வேண்டும். 68

காதல், நாவல், காமநூல்கள், கணிதம், கதை, புராணம் மற்றும் கவிதை, தெய்வீக இலக்கண நூல்கள் எல்லாமே ஒரே அச்சகத்தில்தான் அச்சாகிறது. அதனால், அந்த அச்சுக் கூடத்தைத் தவறு சொல்ல முடியுமா? அந்தக் கூடத்தை இயக்குபவரைப் பொருத்தே எல்லாம்! அதே போல், நாம் நம்மை எப்படி இயக்கிக் கொள்கிறோமோ, அதைப் பொருத்தே எல்லாம் நடக்கிறது!

''அறிவது செம்மையானால
அநியாயம் நடக்காது''. 69

செடியில் உள்ள மலரில் தேனிருக்கும் வரை வண்டுகள் மொய்க்கும். அது கீழே வீழுந்தவுடன் உறவும், ஒற்றுமையு மற்றுப் போய்விடும். வண்டுகள் உடனே ஓடிவிடும். அதே போல் தான் மனித நிலையும். 70

சிலர் செவ்வாய், வெள்ளி, சனிக்கிழமைகளிலும், புரட்டாசி முழுவதும் அசைவம் சாப்பிடமாட்டேன் என் பார்கள். மற்ற நாட்களில் அசைவம் சாப்பிட்ட நாக்கு

Koviloor Digital Library

தானே வெள்ளி, சனிக் கிழமைகளிலும், புரட்டாசி மாதமும் சைவ உணவு சாப்பிடுகின்றது. அந்த நாக்கு அந்நாட்களில் அறுந்து வேறு நாக்கா சாப்பிடுகிறது. பாவம் ஆடு, கோழி, புறா மற்றும் பல ஜீவராசிகள் எல்லா நாட்களுமே செவ்வாய், வெள்ளி சனிக் கிழமைகளாகவும், புரட்டாசி மாதமாகவும் இருக்கக் கூடாதா என்று ஏங்கித் தவிக்கின்றன. 71

சில குற்றவாளிகளை விட்டு வைப்பது நல்ல பயிரைக் கெடுக்க வந்த களை (புல், பூண்டு) மாதிரியாகிவிடும். ஆகையால், நல்ல பயிர் தழைக்க வேண்டுமாயின், தீய பயிரைக் களைந்து எறிய வேண்டும். 72

யோகா என்பது ஒருவகை உடற்பயிற்சியாகும். அது நூற்றுக்கு மேற்பட்ட பயிற்சியாகும். சர்க்கஸ்க்காரர்கள் செய்யும் பயிற்சிகள் போன்றது யோகாசனம். அது உடலுக்கும், உள்ளத்துக்கும் வலிமை கொடுக்குமே ஒழிய, அதைச் செய்வதனால் இறைவனை அடைய முடியாது. இறைவனைக் காண்பது உண்மையாக இருக்குமாயின், அதைக் கற்றுக் கொண்டவர்கள் நிர்விகல்ப சமாதியில் ஏன் நிற்கவில்லை? இறைவனை ஏன் காணவில்லை? அப்படி யாராவது நிர்விகல்ப சமாதியில் நின்றிருந்தால் என்னிடம் தெரிவிக்குமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன். 73

''விபச்சாரிகள் நிறைந்து விட்டார்கள், நிறைந்து விட்டார்கள்'' என்று அங்கலாய்த்துக் கொள்கிறீர்களே இந்த விபச்சாரிகளை உண்டு பண்ணியவர்கள் யார்? ஆண்களாகிய நீங்கள்தானே. 74

பெண்களாகிய அவர்களிடம் போகாமல் இருந்தால் அவர்களின் புனிதத்தன்மை கெடாமல் இருக்கும். அவர்களிடம் பல ஆண்கள் சென்று அவர்களின் புனிதத் தன்

Koviloor Digital Library

மையைக் கெடுத்தது மட்டுமல்லாமல் வேசி என்ற பட்டமும் கட்டி விடுவதா? அவர்களின் ஏழ்மை நிலைமை மீது உங்களுக்கு உண்மையான இரக்கம் இருந்திருந்தால் பணம் கொடுத்து உதவியிருக்கலாமே? பல உதவிகள் செய்திருக்கலாமே? உங்கள் உடற்பசிக்கு அவர்களைப் பலியாக்குவதா? அவர்கள் மேலும் தவறுசெய்யாமல் இருக்க நீங்கள் அவர்களைத் திருத்தியிருக்கலாம் அல்லவா? ஆகவே, இந்த நாட்டில் எந்தக் குற்றவாளியையும் திருத்தி புனர்ஜென்மம் கொடுக்க வேண்டும் என்று யாருக்கும் அக்கறை இல்லை. இதுதான் நடுவுநிலைமையா? 75

தொடர்ந்து பிரச்சாரம் ஜோடனையுடனும், நடிப்புடனும், சொல் வன்மையுடனும் செய்து கொண்டிருந்தால் உண்மையைப் பொய்யாக்கலாம்; பொய்யை உண்மையாக்கலாம். இது பசப்பர்களுக்குக் கைவந்த கலை. 76

நம் நாட்டில் மூலைக்கு மூலை ஏதேதோ சிலைகளையும். மன்றங்களையும் பார்க்கிறோம். ஆனால் மக்களுக்காகப்பாடுபட்டசித்தர்களின் சிலையையோ அல்லது மெய்ஞ்ஞானிகளின் சிலையையோ வீதி தோறும் வைத்து மாணவர்களுக்கு மெய்ப்பிக்காததை நினைத்து வருந்துகிறோம். 77

கோவில்களில் நாம் அர்ச்சனை டிக்கட்டுகளை வாங்குகிறோம். அதில் சில கோவில்களில், டிக்கட்டுகள் மூலம் கிடைக்கும் பணத்தில் மூன்றில் ஒரு பங்கு கோவிலுக்கும், சில கோவில்களில் நாலில் ஒருபங்கு கோவிலுக்கும் மற்றது அர்ச்சகர்களுக்கும், பட்டாசாரியார்களுக்கும் சேருகிறது. இது அல்லாது

Koviloor Digital Library

அவர்களுக்கு (அர்ச்சகர்களுக்கு) தட்டுகளிலும் காசு கிடைக்கிறது. கோவிலைவிட இவர்களுக்குத் தான் அதிக வருமானம் கிடைக்கிறது. இதை யோசித்துப் பார்த்தால் மாவட்ட ஆட்சியாளர் களின் சம்பளத்தைவிட அதிகம் கிடைக்குமென நினைக்கிறேன். நாம் வாங்கும் அர்ச்சனை டிக்கட் டுகளுக்கு அஷ்டோத்திரம் என்றால் அதற்கேற்ற 108 மந்திரங்களை அவர்கள் சரியாகச் சொல்வ தில்லை. திரிசதி (முன்னூறு) டிக்கட்டுகளை வாங்கினால் அதற்குரிய மந்திரங்களைச் சரியாக சொல்வது இல்லை. சஹஸ்ரநாம அர்ச்சனைக்கு வேண்டிய டிக்கட்டை வாங்கினாலும் அதற்குரிய மந்திரங்களையும் சரியாக சொல்வதில்லை. அதில் பாதியை இவர்களே விழுங்கி விடுவார்கள். இப்படி இவர்கள் செய்வதனால் நம் மனம் திருப்தி அடை வதில்லை. நாம் நேரடியாகவே இறைவனிடம் விண்ணப்பித்துக் கொள்ளலாம். அல்லவா? இதற்கு இடைத் தரகர்கள் ஏன்? இவர்கள் செய்யும் வேலை அரைகுறை முடியை வெட்டி விட்டுக் கூலி கேட்கும் சவரத் தொழிலாளிக்கு ஒப்பாகும். 78.

Koviloor Digital Library

24. குலமகள்

விலைமகள் என்பவள் பெண்களின் கைகளில் இருக்கும் கண்ணாடி வளையல் போன்றவள். ஆனால், குலமகளோ தங்க வளையல்களுக்கு ஒப்பானவள். விலைமகள் கண்ணாடி வளையல்போன்று உடைந்து விடக்கூடியவள். குலமகளோ தங்க வளையல்களைப் போன்று என்றும் ஒளிபெற்று விளங்குபவள்; அவள் எளிதில் உடைந்து விடக் கூடியவள் அல்லள். 1

கற்புள்ள பெண் விரும்புவது கணவனின் அன்பு; அவள் விரும்பாதது மாற்றானின் நோக்கு. 2

பசுவின் பாலுக்கு இருக்கும் வரவேற்பு, பன்றியின் பாலுக்குக் கிடையாது. அதைப் போல் குலமகளுக்கு இருக்கும் வரவேற்பு—மக்களிடையே கற்பிழந்த ஒருத்திக் குக் கிடையாது. 3

இல்லறம் என்பது ஆணுக்குப் பெண்ணோ, பெண்ணுக்கு ஆணோ அடிமையாகும் வாழ்க்கையல்ல. இருவரும் ஒரே சுமையைத் தாங்கும இரு கற்றூண்கள். இரண்டில் எது பெரிது? எது சிறிது? 4

அன்பும் அறமும் இல்லாக் கணவனுடன் வாழ்க்கை நடத்துவது பொன் விலங்கு மாட்டிக்கொண்டு சிறையில் வாழ்வதற்கு ஒப்பாகும். 5

Koviloor Digital Library

ஒரு நல்ல கணவனிடம் முறையாக நடக்காத மனைவி, நனைந்து சுமந்த கழுதைக்கு ஒப்பாவாள் 6

கற்புடைய மகளிர் வாழ்க்கையில் எவ்வளவு புயல் வீசினாலும், அவள் உள்ளம் பிளவுபடாது. இது, நீரை எத்தனை முறை கத்தியால் குத்திக் கிழிப்பினும் தடியால் அடிப்பினும் பிளவுபடாததற்கு ஒப்பாகும். 7

கற்புள்ள ஒரு மனைவி, தன் கணவனுக்கு நோய் தீர்க்கும் மருந்தாகவும், தங்கத் தேராகவும் காட்சி தருவாள். ஆனால், கற்பிழந்த மனைவி கணவன் உடலை அணு அணுவாகச் சிதைக்கும் நோயாகவும், முடிவில் உயிரைக் கொல்லும் எமனாகவும் காட்சி தருகின்றாள். 8

மாடப்புறா தன் இணைப்புறா இறந்தவுடன் மற்றொரு மாடப்புறாவைத் தேடாமல் ஊண், உறக்கமின்றி எட்டுத் திங்கள் அதன் நினைவாகவே இருந்து இறந்து விடும். அதைப் போன்றே ஒரு நல்ல பெண் தன் கணவன் இறந்த பின்னும் தன் கற்பை யாருக்கும் இரையாக்கி விடாமல் காப்பாற்றிக் கொள்வாள். 9

கற்புடைய மகளிரைத் தேவர்களும் கண்டு அஞ்சி வழிபடுவார்கள். ஆனால், கற்பிழந்த காரிகையைக் கழுதை கூட மதிக்காது. 10

இன்னும் கொஞ்சநாள் போனால் "கற்பு கிலோ என்ன விலை?" என்னும் நிலை வந்தாலும் ஆச்சரியம் இல்லை. 11

கற்பு என்பது உள்ளத்தால் உணர்வால் உடலால் கட்டுப்படுத்துவது. இது இறைவிக்குச் சமம்; சொன்னது அப்படியே நடக்கும். 12

Koviloor Digital Library

25. பெண்களில் சிலர்

உலகத்தில் எந்தப் பொருளுக்கும் அளவு கண்டறிந்து விடலாம். ஆனால், மங்கையின் மனத்தைமட்டும் அளவிட முடியாது........... 1

சேப்பங்கிழங்கு எவ்வளவு பெரிய அளவுடன் இருக்கும் என்பதை அதன் செடியை வைத்துக் கொண்டு எடை போடமுடியாது. அதன் கீழே உள்ள மண்ணைத் தோண்டிப் பார்த்தால்தான் அறிய இயலும். அதைப் போன்றே பெண்களைப் பார்த்தவுடன் அவர்களைப் பற்றி அறிய இயலாது. அவர்களின் மனத்தை ஆழ்ந்து பார்த்தால்தான் அவர்களைப பற்றி இயலும். 2

மற்றவனைப் பார்த்து ஒருத்தி இளிக்காமல் இருந்தால் அவள் கற்பும் காக்கப்படும். அவளின் கற்பும் பறி போகாது. 3

கணவனை ஏமாற்றி மாற்றானிடம் சல்லாபம் புரியும் மங்கை, எங்கும் காட்சிப் பொருளாக மறைந்திருக்கும் இறைவன் கண்ணில் இருந்து தப்ப முடியுமா? 4

காகிதப் பூவும், கற்பிழந்த பெண்ணும் ஒன்றே! 5

கடற்கரை அருகிலிருக்கும் கண்ணகி சிலை, அங்கு வரும் பல மாதர்களைப் பார்த்துக் கண்ணீர் வடிக்கிறது.

Koviloor Digital Library

அந்தோ! என் சிலைக்கு அருகிலா இப்படியும் பல மாதர்கள் கண்டவனுடன் கொஞ்சிக்குலாவவேண்டும் என்று! 6

வேசிகள், காசளவில் தான் பசப்புவார்கள். ஆனால், அது யாரையும் ஆபத்தில் கொண்டுபோய் விடாது. வேசியர்கள் ஆழம் தெரிந்த ஒரு குட்டை நீர்தான், சாதி மத பேதமின்றிப் பன்றியைப்போல் பலரைப் பதம் பார்க்கும் சில'பத்தினித் தெய்வங்களை' யாராலும் ஆழம் காண முடியாது. அவர்களை நம்பியவர்கள் ஒன்று தூக்குக் கயிற்றில் தொங்க வேண்டும் அல்லது பைத்தியக் காரனாய்த் தெருத் தெருவாய் அலைந்து திரிய வேண்டும்.7

ஒழுங்கீனமான பெண்களைக் கண்டவுடன் இந்த உலகைப் படைத்த பிரம்மா இப்படிப்பட்ட உடல்களை நாம்தான் படைத்தோமா? ஒருத்திக்குப் பல பேரா? அதுவும் தமிழ் நாட்டிலா? என்று பிரமிப்பார். பிரம்மா வுக்கே தலைசுற்ற ஆரம்பித்துவிடும். 8

காகம் எவ்வளவு உயர்ந்த தானியமாக இருந்தாலும் அதை ஒதுக்கிவிட்டு அழுகிய பொருள்களையே தின்னும். அதுபோல் சில பெண்கள் தமக்குச் சிறந்த இணை (கணவன்) இருந்தும், தகுதி இல்லாத இளைஞர்களோடு சல்லாபம் புரிந்து அழிந்து போவது அவர்களின் மதியெழுத்து போலும். 9

நல்லவனை ஒழுக்கங்கெட்ட பெண்ணோடு வாழ வைத் தோமானால், அது முள்ளில் படுக்கை விரித்து, கட்டெறும் பைக் காதில்விட்டுத் தேம்பாவணி பாடித் தாலாட்டு வதை ஒக்கும். பாவம், அவனுக்குத் தூக்கமா வரும்? தூக்குக் கயிறுதான் நினைவுக்கு வரும் 10

அறிவுள்ள ஒருவன் ஒழுக்கங் கெட்டவளின் வலையில் விழ்வது விளக்கைப் பிடித்துக் கொண்டு படுபாதாளத்தில் விழ்வதற்கு ஒப்பாகும். 11

Koviloor Digital Library

ஒருவன் அமைதியாக வாழ வேண்டுமாயின் முக்கியமாகச் சொல்வேன்—மறந்தும்கூட மற்றொரு பெண்ணைக் கனவில்கூட நினைக்கக்கூடாது. அது தேளை மடியில் கட்டிக்கொண்டதற்கு ஒப்பாகும். தேள் "கொட்டுகிறதே கொட்டுகிறதே" என்று கதறினால் யாதுபயன்? 12

அத்திப்பழம் வெளியில் அழகாகத்தான் இருக்கும். அதைப் பிட்டுப் பார்த்தால் அத்தனையும் சொத்தையாக இருக்கும். அதுபோல்தான் ஒழுக்கங் கெட்டவளின் வாழ்க்கை. 13

பாவம் செய்தவளோடு வாழ்க்கை நடத்துவது படிகாரத்தைக் கற்கண்டு என்று சுவைப்பதற்கு ஒப்பாகும். 14

வேம்பு, வேரிலிருந்து நுனிவரை கசக்கும். அதுபோல் ஒழுக்கங்கெட்ட பெண்ணோடு வாழ்க்கை நடத்தினால் முதலில் இருந்து முடியும்வரை போராட்டம்தான். 15

உலகத்திலேயே தன்னை அணு அணுவாகக் கொல்லக் கூடிய நஞ்சு இருக்குமாயின் அது ஒழுக்கங் கெட்டவளின் பசப்பு மொழிகளைத் தவிர வேறொன்று இருப்பதாகத் தெரியவில்லை. 16

பூனை கண்ணை மூடிக்கொண்டிருந்தால், அது தவம் செய்கிறது என்று பொருளல்ல. அதைப்போல் ஒழுக்கங் கெட்டவள் ஊமைபோல் அறமொழிகளைக் கேட்டுக் கொண்டிருந்தால் அவள் திருந்தியவள் என்று அர்த்தமன்று. கருவாடு வாசனையைக் கண்ட பூனையைப்போல், பழைய வாசனையைக் கண்டவுடன் ஒழுக்கங் கெட்டவளின் உண்மைச் சொரூபம் தலைவிரித்து ஆடஆரம்பித்துவிடும். 17

Koviloor Digital Library

வெண்மையான வாத்துகளைப் பார்த்தால் அவை அன்னத்தைப் போலவே தோன்றும். அதைப் போன்றே சில விலைமாதர்களைப் பார்த்தால் கண்ணகி போலத் தோன்றுவார்கள். ஆனால், அவர்கள் கண்ணகியாகிவிட முடியாது. 18

மிக வேகத்தில் செல்லுகின்ற ஒரு வண்டியில் நிறுத்தும் சாதனம் (பிரேக்) சரியாக இல்லையென்றால் அந்த வண்டிக்கு விபத்து ஏற்பட்டு அதில் செல்பவரின் உயிருக்கே ஆபத்து ஏற்பட்டுவிடும். அதைப் போன்றே குடும்பம் என்ற வண்டிக்கு மனைவி என்ற நிறுத்தல் (பிரேக்) சரியான முறையில் இல்லையென்றால், அந்தக் குடும்பம் அதோகதிக்கு ஆளாகிச் சுக்கு நூறாகிவிடும். 19

கற்புள்ள பெண்களுக்கு ஒரு மஞ்சள் கயிறே போதும்; கற்பிழக்கும் பெண்களுக்கு எத்தனை இரும்புச் சங்கிலி இருந்தும் என்ன செய்யும்? 20

'ஒட்டுப் புல்' அழுக்குள்ள துணியானாலும், அழுக்கில்லாத துணியானாலும் ஒட்டிக் கொள்ளும். அதுபோல் சில பெண்கள் எந்த ஆடவரைக் கண்டாலும், நல்லது கெட்டது என்று நோக்காமல் உயர்வு தாழ்வு என்ற வேறுபாடு இன்றி உள்ளத்தால் ஒட்டிக் கொள்வர். 21

தாவிப்படரக் கொழுகொம்பு இன்றித் தவிக்கும் கொடியொன்று அருகில் எந்தக் கொம்பு இருந்தாலும் உடன் பற்றிப் படருவதுபோல், சில கன்னியர்கள் அண்மையிலிருக்கும் ஆடவன் எவனாயிருந்தாலும் தாவிப் பிடித்துப் பற்றித் தராதரமின்றி அணைத்துச் சுற்றித் திரிந்து கெட்டுப் போவார்கள். 22

Koviloor Digital Library

நீண்ட நாள் பாதுகாக்கப்பட்டுச் சேமிப்பிலிருக்கும் தேன் கூடும். அதிக நாள் பாதுகாத்த கண்ணாடியும் ஒரு நொடியில் ஒரே கல்லில் அடிபட்டால் உடைந்து உருத்தெரியாமல் போய் விடுகின்றன. அதைப்போல பலநாள் பாதுகாத்து வைத்து இருக்கும் கற்பைப் பெண்கள் சபலத்தின் காரணமாக இழக்க நேரிட்டால் அவர்கள் வாழ்வே உருத்தெரியாமல் சிதைந்து போய்விடுகிறது. 23

வேசி ஒருத்தியை ஒருவன் பத்தினியாக்க ஆசைப்பட்டான். இது எப்படியென்றால் ஒருவன் நாய் வாலை நிமிர்த்த முற்பட்டதற்கு ஒப்பாகும். நாய் வாலை எப்படி நிமிர்த்த முடியாதோ அதைப் போன்றே வேசியைப் பத்தினியாக்க இயலாது. 24

சுட்ட உடலை உயிரோடு எழுந்து நடக்க வைக்க முடியும் என்று ஒருவன் சொன்னால் அதுகூட எனக்கு அதிசயமாகத்தோன்றாது. ஆனால், ஒரு ஒழுங்கீனமான பெண்ணை ஒருவன் திருந்த வைப்பேன் என்று சொன்னால் அதுவே எனக்கு அதிசயமாகத் தோன்றும். 25

நாகம் இறைவன் தலைமீதுதான் இருக்கும் என்பார்கள். ஆனால், சில பெண்களின் உள்ளங்களிலும் அது இருப்பதுண்டு. அது சில ஆண்களுக்கு விஷமாகவும், சில ஆண்களுக்கு அமுதமாகவும் பொழிவதுண்டு. 26

பலரைப் பதம் பார்க்கும் ஒருத்தியிடம் உண்மையான அன்பை எதிர்பார்ப்பது சேவல் முட்டையிடும் என்று நம்பிக்கொண்டிருக்கும் ஒரு முட்டாளின் செயலுக்கு ஒப்பாகும். 27

மயிலைக் கண்டால் பாம்பு பயப்படும். சிங்கத்தைக் கண்டால் யானை பயப்படும். கற்புடைய மகளிரைக் கண்டால் காளையர் நடுங்குவர். ஆனால், பல்லிளிக்கும் பாவையைக் கண்டாலோ பக்கத்தில் ஓடிவருவர் அறிவிலிகள். 28

Koviloor Digital Library

சில பெண்களுக்குத் தாலிக் கயிறு பூ மாலை போலவும் சில பெண்களுக்குத் தாலிக் கயிறு மாட்டிற்குக் கட்டப் பட்ட மூக்கணாங்கயிறு போலவும் தோன்றுகிறது. 29

இனிய ராகத்திற்குத் தகுந்த தாளம் சேராவிடில் இன்னிசை இனிப்பதில்லை. அதுபோல் அமைதியான கணவனுக்கு ஆரவாரமான மனைவியால் நிம்மதி கிடைப்பதில்லை. 30

தண்ணீரில் துள்ளித் திரியும் சில மீன்கள் தரையிலே காத்துக்கிடக்கும் கொக்கைத் தங்கள் காவலர் என்று கருதிப் பெருமைப்பட்டுக் கொள்ளும். வாடி இருக்கும் கொக்கோ நாடி அருகாமையில் வந்த மீனை 'லபக்' என்று பிடித்துக் கொள்கிறது. அது போல்தான் காவலாயிருப் பேன் என்று கூறிக்கொண்டே சில காளையர்கள் பல பெண்களின் கற்பைச் சூறையாடிவிடுகிறார்கள். மீண்டும் மீண்டும் மீன்கள் கொக்கிடம் பலியாகியும் மீண்டும் கொக்கை நாடிச் செல்லும் மீன் இன அறிவீனத்தை என்னென்று சொல்வது யாதென்று உரைப்பது!!! 31

கணிகையொருத்தி கவிஞன் ஒருவனிடம் சென்று தன்னைப்பற்றிச் சில பாக்களைப் பொழியச் சொன்னாள். புற அழகில் மயங்கிய அவன், அவளைக் கார் குழலாள் பிறை நுதலாள், கனி இதழாள், தேன் மொழியாள், என்று பலவாறு புகழ்ந்துரைத்தான். அவளோ பூரிப்பில் மிதந்தாள். பின்னர் அறநெறிப் புலவன் ஒருவனை அணுகித்;தன் ஆவலை வெளியிட்டாள். அவள் உள்ளத்தை ஊடுருவிப் பார்க்கும் அந்த ஞானக் கொழுந்தோ அவளை அழுகிய பிணம்; அவலத்தின் பிறப்பிடம், உயிரை உறிஞ் சும் காலன் என்று இடித்துரைத்து உள்ளதை உள்ள வாறே உரைத்தான். தன்புற அழகில் பெருமை கொண்டி ருந்த அந்தப் பேதையோ சிறுமைப் படுத்தும் அந்த அறிஞனின் உரை கேட்டுப் பேதலித்து நின்றாள். 32

Koviloor Digital Library

நல்ல பாம்பு யாரைக் கண்டாலும் சீறிப் பாயும் ஆனால், மகுடியின் முன்னே மதி மயங்கிவிடும். அதுபோல் சில கன்னியர்கள், காமுகர்களைக் கண்டவுடன் கருத்திழந்து அவர்கள் மடியில் மயங்கிக் கிடப்பார்கள். 33

பைபிளில் திருமணம் பரம பிதாவால் நிச்சயிக்கப் படுகிறது என்று சொல்கிறார்கள். ஆனால், மாந்தரில் பலர் ஒருவனுக்கு ஒருத்தி என்று இல்லாமல், பல திருமணம் புரிந்து வாழ்கிறார்கள். இந்தத் திருமணங்கள் எந்தப் பரலோகத்தில் நிச்சயிக்கப்படுகின்றனவோ யாமறியோம் பராபரமே! 34

ஊஞ்சல் நடுவில் நிலையாய் நிற்பதில்லை; இப்படியும் அப்படியும் ஆடிக் கொண்டு இருக்கும். அதுபோல் சில பேதையரின் நெஞ்சமும் நன்னெறியிலும், தீ நெறியிலும் மாறி மாறி ஊசலாடிக் கொண்டிருக்கும். ஆசை என்னும் நான்கு கயிறுகள் அறுந்தால்தான் ஆடிக்கொண்டிருக்கும் ஊஞ்சல் ஓயும். 35

வேசி விரும்புவது மற்றவர்களின் அணைப்பு. அவள் விரும்பாதது அறிவுடையோரின் நல் உரைப்பு. 36

அரசப்பறவை தன் ஜோடிப் பறவையைத் தவிர மற்றப் பறவையைப் பக்கத்தில் நெருங்க விடாது. ஆனால், பகுத்தறிவுடையவர்களான சில இழி மாந்தர்கள் பசிக்கு எதுதரினும் பரவாயில்லை என்று ஏற்று இன்புறுவார்கள். ஓரறிவு உள்ள பறவை எங்கே? ஆறு அறிவு பெற்ற மனிதன் எங்கே? 37

குரங்கு கொம்பைக் கண்டால்தான் ஆடும், கோமாளியைக் கண்டால் அது ஏமாற்றிவிடும். அதுபோல் சில பெண்கள் ஏமாளிகளை ஏமாற்றிவிடுவார்கள். 38

வைரக் கற்கள் இருக்கும் இடத்திற்குச் சாதாரண கூழாங்கற்கள் வரமுடியாது. அதுபோல் கற்புடைய மாந்தர்கள் சபையின் நடுவே கற்பில்லாத பெண்கள் அரியாசனத்தில் அமர முடியாது. 39

Koviloor Digital Library

ஒழுக்கங்கெட்ட பெண்ணோடு வாழ்வது, இறந்து போன உடலின் எலும்புக் கூட்டோடு வாழ்வதற்கு ஒப்பாகும். 40

ஒழுக்கங்கெட்டவளின் வாய்மொழிகள் எதுபோல் இருக்குமெனின் ஒரு பெரிய மாங்கனியைப் பத்துக் கிளிகள் கொத்திச் சென்றுவிடும், மீண்டும் ஒரு கிளி வந்தால், தான் யாராலும் கொத்தப்படாத கனியென்று சொல்லும். அந்தோ பாவம்! அந்த மடக்கிளியும் அதனை யாரும் தின்னாத கனியென்று மகிழ்ந்து உண்ணுமாம்; என்னே மதியீனம், என்னே அறிவீனம்! 41

பெட்ரோலும், கற்பூரமும் காற்றில் திறந்து வைத்தால் எப்படிக் காற்றோடுகாற்றாய்க் கரைந்து அழிந்துவிடுமோ அதைப்போல் பெண்கள் தாங்கள் காத்து வைத்திருக்கின்ற கற்பை ஒரு சிறிய மனச் சஞ்சலத்தில் மாட்டிக் கொண்டு இழந்துவிட்டால் தொடர்ந்து மானம், மரியாதை, வாழ்க்கை இவையனைத்தும் கரைந்து போய்விடும். 42

திருமணம் ஆகாமல் கள்ளத்தனமாய்க் கருத்தரிக்கும் பெண்களுக்குக் கருச்சிதைவு செய்துகொள்ள மருத்துவர்கள் உடந்தையாய் இருக்கிறார்கள். இதனால், இவர்கள் மேன்மேலும் தவறுகள் செய்ய மருத்துவர்கள் உடந்தை யாக்கப்படுகிறார்கள். வயது வந்த பெண்கள் பயமற்று எவரிடமும் தவறு செய்யத் துணிந்துவிடுகிறார்கள். எனவே அரசு கவனம் கொண்டு அவ்வாறு திருமணம் ஆகாத பெண்களுக்குக் கருச்சிதைவு செய்யாமல் எந்த ஆடவனுக்கு கருவுற்றாளோ, அவனுக்கே அவளைத் திருமணம் செய்து வைத்து நமது பண்பாட்டைக் காக்கச் சட்டத்தில் இடமளிக்க வேண்டும். 43

திருமணம் ஆகாத சில பெண்களுக்குக் கருச்சிதைவு மாத்திரைகளும், ஊசி மருந்துகளும், மருத்துவர்களும் உடந்தையாக இருப்பதால், அவர்கள் செய்யும் தவறுகளில் இருந்து விடுபட்டு மக்களிடையே கற்புள்ள பத்தினிப் பெண்களைப் போல் வயிறு பெருக்காமல் காட்சியளிக்கிறார்கள். இப்படிச் செய்வது நமது இந்தியப் பண்பாட்டைச் சவக்குழி தோண்டிப் புதைப்பதற்கு ஒப்பாகும். 44

Koviloor Digital Library

26. காமம்

வாழை மரத்தை வெட்ட வெட்ட அது வளர்ந்து கொண்டுதான் இருக்கும். அதன் ஆணிவேரை வெட்டி அழிக்கும் வரை அதன் சகாப்தம் முடிவதில்லை. நெஞ்சத்தில் தீய எண்ணங்களைக் கொண்ட காமுகர்கள் ஆசையை விட்டோம் என்று சொல்லிக்கொண்டு இருந்தால் மட்டும் அந்த எண்ணங்கள் அழிவதில்லை. அது வளர்ந்து கொண்டுதான் இருக்கும். அந்தத் தீமைகளின் ஆணி வேராகிய தீய எண்ணங்களை ஒழித்துக்கட்டும் வரை அந்தக்காம எண்ணங்கள் அழிவதில்லை. 1

குளத்திலிருக்கும் செந்தாமரையை வெளியில் பார்க்க அழகாகத்தான் இருக்கும். ஆனால், அது எங்கிருந்து உருவாகிறது என்று பார்த்தால் மிக அருவருப்பாக இருக்கும். அது போன்று ஒழுங்கீனமான கணிகையின் உடல் காண்பதற்கு மிக அழகாக இருக்கும். ஆனால், உள்ளம் செந்தாமரை பிறந்த இடத்தினைப் போன்றிருக்கும். 2

காம எண்ணங்களுக்கு ஆரம்பத்தில் இடம் கொடுப்பவர்கள் தம் வீட்டு வைக்கோல் போருக்குத் தாமே தீ வைத்துக் கொள்வதற்கு ஒப்பாகும். 3

அம்மி மிதித்து, அருந்ததி பார்த்து, ஆயிரம் பேர் மத்தியில் பல்லாயிரம் ரூபாய் செலவில் ஒருவன் ஒருத்தியை மனைவியாக்கிக் கொள்கிறான். ஆனால், அந்நியன் ஒருவன் அரைக்காசு செலவில்லாமல், தன் ஆசைக்கு அவளை விருந்

Koviloor Digital Library

தாக்கிக் கொள்கிறான். அந்தோ பரிதாபம்! இப்படிச் சிலரின் வாழ்க்கை! 4

கல்லுக்கும் கழுதைக்கும் சேலை கட்டினால், காம முறும் கயவரும் உண்டு இவ்வுலகில். 5

கழுதையும், நாயும் தாம் கண்ட இடத்தில் 'காம முறும். இதைவிட அறிவில் சிறந்த சில பெரிய மனிதர் களும் மோசமாக நடப்பது உண்டு நம் நாட்டில். 6

கதிரவனைக் கையால் தொட்டாலும் தொட்டுவிட லாம். ஆனால், காம நெருப்பில் விழுந்தவரைக் காப்பாற்ற முடியாது. 7

கோடரியால் ஒரு மரத்தை வெட்ட, இன்னொரு மரமே கோடரிக் காம்பாய்ப் பயனாவது போல் தன் காமமே தன்னை அழித்துவிடும். 8

சிப்பிக்கு அழிவு என்பது தன்னிடம் உள்ள முத்தினால் தான்; அதுபோல் தான் அழிவதற்குத் தன் காமமே வினை யாய் முடிகிறது. 9

பனிக்கட்டியைக் கையில் வைத்தவுடன் சிறிது நேரத் தில் கரைத்து நீராகிவிடுகிறது, அதுபோல் சில காமுகர் களின் உள்ளமும் காமத்தினால் சிலரைப் பார்த்தவுடனே கரைந்துவிடுகிறது. 10

கடல் நீரைக்கூட ஒருவேளை வற்றச் செய்து விடலாம். ஆனால், காமத்தில் விழுந்தவரைக் கடைத்தேற்றுவது இய லாத செயல். 11

அன்பால் முடியாத காரியம் உலகில் எதுவும் இருப்ப தாகத் தெரியவில்லை. ஆனால், அந்த அன்பு, வேசியரிடம் செல்லுவதில்லை. 12

கழுதையின் கத்தலே கழுதைக்கு இனிமையாக இருக் கும்; குயிலின் ஓசை அதற்கு இனிக்காது. அதுபோல்

Koviloor Digital Library

அறமொழிகளெல்லாம் காமுககர்களுக்கு வேம்பாக இருக்கும். காமுகரின் பசப்பு மொழிகளே இனிமையாக இருக்கும். 13

எவ்வளவு பெரிய இரும்புத் தண்டவாளத்தையும் ஒரு சிறிய உருக்கு அரம் அறுத்துவிடும். அதுபோல் எல்லாவற்றிலும் இரும்பாக இருப்பவர்கள், காமத்திற்கு அடிமையானால், எல்லாவற்றையும் இழந்து, சிறியவர்களிடம் சென்று, தங்களைச் சிறிது சிறிதாகத் துண்டாக்கிக் கொள்வார்கள். 14

சிட்டுக் குருவிக்குக் கொஞ்சம் நெற்கதிர்கள் போட்டால் போதும்; புறாவுக்கு அதைவிட அதிகமாகவும், மானுக்கு இன்னும் சற்று அதிகமாகவும் இரை போட்டால் போதும். ஆனால், யானைக்கு எவ்வளவு போட்டாலும் கட்டாது. அதைப்போன்று காமுகர்களுக்கு எவ்வளவு போட்டாலும் ....? 15

நல்ல பாம்பைக்கூட வீட்டில் வைத்து வளர்க்கலாம். ஆனால், காமுகர்களுக்கு வீட்டில் இடம் கொடுத்தால் ....? 16

பட்டாம்பூச்சி ஒரு மலரிலே இருக்காது. பல மலர்களைத் தேடிச்செல்லும். அதைப் போன்றே சில ஆண்கள் ஒரே மனைவியிடம் வாழ்வதில்லை. பலரைத் தேடி அலைகின்றனர் ; சில பெண்களும் அப்படியே ! 17

மேகத்தைக் கண்டவுடன் மயில், தோகை விரித்தாடும். அதுபோல் சில பெண்கள், காளையரைக் கண்டவுடன் காம வெறிபிடித்து ஆடுவார்கள். 18

நீரிலிருக்கும் முதலை பசி வந்தவுடன் வாயை "ஆ" வென்று திறந்து எந்த உணவாவது கிடைக்காதா என்று ஏங்கித் தவிக்கும். அதுபோல் சில பெண்கள் காமப்பசியை ஆற்ற எந்த ஆடவராது நாடி வரமாட்டாரா என்று ஏங்கித் தவிப்பார்கள். 19

Koviloor Digital Library

அட்டைகளில் பெண் அட்டை மட்டும் தான் இரத்தத்தை உறிஞ்சும் என்பதல்ல. ஆண் அட்டையும் இரத்தத்தை உறிஞ்சும். அதைப்போன்றே வேசிகள் பெண்களில் மட்டும் இல்லை; ஆண்களிலும் உண்டு. 20

எட்டிக்காயும் வேப்பங்காயும் கசப்பில் ஒன்றை ஒன்று விஞ்சிவிடும். அதுபோல் காமநோயுள்ளவரும், கள்ளுண்டவரும் போதையில் ஒருவருக்கொருவர் சளைத்தவரில்லை. அதனால் வரைகடந்து செல்வதில் வியப்பில்லை. 21

இயல்பாகக் கனிந்து தான் வெடிப்பதுண்டு. ஆனால், பல காயிலே வெடித்துவிடுகின்றன. இன்னும் சில இளம் பிஞ்சாய் இருக்கும்பொழுதே வெடித்துவிடுகின்றன. 22

நல்ல கணவனிருந்தும் கண்டவருடன் சல்லாபம் புரிவது தித்திக்கும் மாங்கனியை விட்டு, எட்டிக்காயைச் சுவைப்பதற்கு ஒப்பாகும். 23

ஒழுக்கங் கெட்டவள் கையில் உணவு உண்பது ஒரே இலையில் ஒருபக்கம் வடை, பாயசத்தையும், மறுபக்கம் மலத்தையும் வைத்துச் சாப்பிடுவதற்கு ஒப்பாகும். 24

ஆசான் என்பவன் தந்தைக்குச் சமமானவன். அவன் தன் மாணவிகளை ஆசைநாயகியாய் ஆக்கிக் கொள்வதும், மகளாகிய மாணவி, அப்பனாகிய ஆசானை ஆசைநாயகனாய் ஏற்றுக் கொள்வதும், தன்னிடம் அடைக்கலமான உயிரைத் தானே கழுத்தறுத்துத் துடிதுடிக்க வைப்பதற்கு ஒப்பாகும். 25

உலகத்தையே படைத்து ஆட்டி வைக்கும் இறைவனுக்கே மூன்று கண்கள்தாம். ஆனால், வேசிகளுக்கு எத்தனை கண்களோ ? யாமறியோம் பராபரமே ! 26

உலகத்தில் விலை மதிக்க முடியாதது எது என்றால் அது வேசியரின் சொற்கள்தாம். 27

Koviloor Digital Library

சில காமுகர்கள் 'நான் யாரையும் ஏறெடுத்தும் பார்ப்பதில்லை' என்று சொல்வது, கொக்கு மீனைத் திரும்பிக் கூடப் பார்க்க மாட்டேன் என்பது போல உள்ளது. 28

காட்டிலுள்ள மூங்கில்கள் ஒன்றோடோன்று உராயும் போது தீப்பற்றி எரிந்து, அழிந்து சாம்பலாகிவிடும். அதைப் போன்றே ஓர் ஆணும் பெண்ணும் நெருங்கும் போது காமமென்னும் தீயின் பாதிப்பால் அழிந்து விடுகிறார்கள். 29

அஜந்தா குகையின் அலங்கோலச் சிலையும், அம்பிகையின் அருட் சிலையும் காமுகர்களின் கண்களுக்கு ஒன்றாகவே தெரியும். 30

முரட்டுக் குதிரைக்கு முகமூடியில்லாவிட்டால் பல திசைகளில் கவனம் திரும்பி வண்டியை ஒரே சீராய் இழுத்துச் செல்லாது. அதைப்போல் விழிகளைப் பல திசைகளில் சுழற்றிச் செல்லும் பெண்களுக்குச் சரியான 'ஜாக்கி' (ஓட்டிச் செல்பவன்) அமையாவிடில் அவனையே பள்ளத்தில் தள்ளிவிடுவர். 31

இரதியைப் போல் மனைவியிருந்தாலும் குரங்கைப் போல் ஒரு காதலியைத் தேடுவது தாகத்திற்கு இனிமையான ஊற்றுத் தண்ணீர் இருந்தும் கைப்பான கழனித் தண்ணீரை நாடுவதற்கு ஒப்பாகும். 32

வானத்தில் உள்ள நட்சத்திரங்களை வேண்டுமானாலும் எண்ணி விடலாம். ஆனால், பசப்பிகளின் ஆசை வார்த்தைகளை அளவிட்டு எண்ண முடியாது. 33

நான் ஒருமுறை மாமல்லபுரத்தில் உள்ள சிற்பங்களைச் சுற்றிப் பார்த்துக் கொண்டிருந்தபோது, உடன் வந்த வெளி நாட்டுச் சுற்றுப்பயணிகள் குழுவினரில் ஒருவன் வழிகாட்டியிடம் (கைடு) திரௌபதியின் சிலையைக்

Koviloor Digital Library

காண்பித்து "Who is she?" (யாரிவள்) என்று வினவ, அதற்கு அந்த வழிகாட்டி, "இவள் ஐந்து கணவன் மார்களைக் கொண்டு வாழ்ந்த பத்தினித் தெய்வம்" என்றான். இதைக் கேட்ட வெளி நாட்டவன் மிகவும் வியப்புடன். 34

"What! An Indian lady having five hnsbands and that too by Draupadi who is considered to be the most virtuous lady. Of course these things happen in many countries, but in India, the land of spiritual upholdings for centuries, it has been considered so, it is unbelievable and disquesting to have had such things in the history of Indian culture."

"என்ன! பத்தினித் தெய்வம் என்று கருதப்படும் திரௌபதிக்கு ஐந்து கணவன்மார்களா? அதுவும் இந்திய மண்ணிலா? வேறு பல நாடுகளில் இது ஒரு சர்வ சாதாரண நிகழ்ச்சியாக இருக்கலாம். ஆனால், பல்லாயிரம் ஆண்டுகளாய்த் தத்துவங்களை வழிவழியாய்ப் போற்றி வரும், பண்பு மிக்க பாரத நாட்டின் இதிகாசத்தில் இப்படி ஒரு அருவருப்பான கதை இருப்பதை என்னால் நம்ப முடியவில்லையே" என்றான். 35

மாற்றான் மனைவியின் மடியில் மகிழ்வோடு குலவும் மடையா! உன் மனைவி மடியில் மற்றொருவன் இருந்தால் எப்படி இருக்கும் என்று யோசித்துப் பார். 36

உடற்பசிக்காகச் சில மாந்தர்கள் கண்ட வழியில் சென்று தங்களை மாசுபடுத்திக் கொள்வது, எருமை மாடு குளிப்பதற்காகக் கண்ட இடங்களில் உள்ள சாக்கடைகளிலும் குட்டைகளிலும் படுத்துப் புரண்டு எழுவதற்கு ஒப்பாகும். 37

காமமும் சொலையும் ஒன்றே. இது கடும் சிங்கமும் புலியும் போன்றே என்பதற்கு ஒப்பாகும். 38

Koviloor Digital Library

கலை உலகில் பகலெல்லாம் அண்ணன், தங்கை, அக்காள் என்ற உறவு, இரவெல்லாம் எப்படி எப்படியெல்லாம் ஆகின்றது. இதை நினைக்கும்போது அப்படிப்பட்டவர்களெல்லாம் கண்ணகி வேடம் போட்டு நம்முன்னால் நடிப்பது நமக்குச் சிரிப்பாகவல்லவா இருக்கிறது. 39

வறுமை காரணமாக இருக்கும் ஒரு பெண்ணை இந்நாட்டில் விபசாரத்திற்குக் கட்டாயமாகப்பயன்படுத்துவது எதற்கு ஒப்பாகுமென்றால், ஒன்றும் தெரியாத ஒரு குழந்தையைக் கத்தியால் குத்திக்கொல்வதற்குச்சமமாகும். 40

ஆண்கள் கற்புக்கும் பெண் கற்புக்கும் சிறந்த நாடு நம் தாயகம். அதுவும் சைவ நன்னெறியே! அதற்கு எடுத்து காட்டாக வாழ்ந்த ஓர் அருள் மாணிக்கம் கதையைச் சொல்கிறேன். அவர் கி.பி. (1706 முதல் 1744 வரை வாழ்ந்தவர்.

பதினெட்டாம் நூற்றாண்டில் தோன்றிய தாயுமானவர் சுவாமிகள் ஒரு அரசனிடம் திருச்சிராப்பள்ளியில் அமைச்சராக வேலைக்கு அமர்ந்தார். மிகவும் அழகும், ஆற்றலும் கொண்ட இவரை அரசரும், அவரது துணைவியாரும் செல்லப்பிள்ளைகாக வளர்த்தார்கள். திடீரென்று அரசர் ஒருநாள் மரணம் அடைந்தார். அவருடைய மரணத்திற்குப் பிறகு இளமையும் அழகும் வாய்ந்த தாயுமானவரைப் பார்த்து ராணி அம்மையார் காமமுற்றார். தன் எண்ணத்தை அமைச்சராகிய தாயுமானவரிடம் கூறலானார். அமைச்சர் அதைக் கேட்டவுடன் இடியுண்ட நாகம் போல் நெஞ்சம் பதைக்கலானார். ''அம்மையீர், நீர் வயதிலும் தாய்க்கு நிகரானவர். நீரும் உங்கள் கணவரும் எனக்கு அன்பு காட்டி அன்புத்தாய் தந்தையைப்போல் அன்பாக இருந்தது. தாங்கள் என்னை நினைப்பது மகனை ஏற்பதற்கு ஒப்பாகும்.'' என்று சொல்லி அன்றே அமைச்சர் பதவியைத்துறந்து, கோவணம் கட்டித் துறவியானார். துறவியான பின்பும் அந்த அம்மை

Koviloor Digital Library

யார் திருந்தாமல் மீண்டும் இவருக்குத் தொந்தரவு கொடுக்கலானார். இவர் அந்த நாட்டை விட்டே வெளியேறினார். வெளியேறும்பொழுது அம்மையாரிடம், உமது செல்வங்கள் அனைத்தையும் ஏழை எளியவர்க்குச் செலவழித்துப் பல அறச் செயல்களைச் செய்து கணவரையும் கடவுளையும் நினைத்து நோன்பிருந்து குலமகள் பட்டியலில் இடம் பெற முயற்சி செய்வீர். இறைவன் உங்களை ஏற்றுக்கொள்வார். அதை விடுத்து இந்த அற்பமான செயலை நினைக்காதீர்கள் என்று புகன்றார்.

இதைப்போல் ஒரு நிகழ்ச்சி வெளி நாட்டில் நிகழ்ந்ததைக் கூறுகிறேன். கடல் கடந்த சகாரா பாலைவனத்தில் ஒரு கோடீஸ்வரர் இருந்தார். அவரிடம் ஒரு 25 வயது இளைஞன் வேலைக்கு அமர்ந்தான். கோடீஸ்வரரும், அவருடைய துணைவியாரும் (வயது 40) இவரை மிக அன்பாக நன்றியுடன் வளர்க்களாயினர். ஒரு நாள் திடீரென்று கோடீஸ்வரர் மரணமானார். இளமைப் பருவமுள்ள அந்த வேலைக் காரனும், நாற்பது வயதாகிய கோடீஸ்வரன் மனைவியும் கூடிக் கொஞ்சி குலாவி தனிக்குடித்தனம் நடத்தி வரலாயினர். உண்ட வீட்டுக்கு துரோகம் செய்த இவர்களை, இறைவன் செல்வத்தையெல்லாம் பறித்துப் பிச்சைகாரர்களாக அலையவிட்டார். நீதி தேவன் அந்த ஊரை விட்டு அவர்களை விரட்டினார். பரதேசியாக ஊர் ஊராகச் சுற்றிப் பல மனைவிகளைக் கட்டினான். இந்த இரண்டு நிகழ்ச்சிகளையும் ஒப்பிட்டுப் பாருங்கள். எந்த நாட்டில் பிறந்த சான்றோர்கள் நீதியை நிலைநாட்டினார்கள். இந்தியாவில் குறிப்பாக தமிழகத்தில் பிறந்த பல சான்றோர்கள் நீதியை நிலை நாட்டியுள்ளார்கள். இந்நாட்டில் பிறப்பதற்கு நாம் கொடுத்து வைத்திருக்கவேண்டும். இந்நாட்டில் பிறந்து நன்னெறிகளைக் கடைப்பிடிக்கா விட்டால் அது நமது தவறே கடவுளின் தவறு அல்ல.

Koviloor Digital Library

அருட்கவி அருள்வாக்கு
திருப்புகழடிமை சண்முகதாசனார்

Koviloor Digital Library

அருட்கவியின் இசைப்பாட்டு

1

வாழ வைத்த முருகனுக்கு வாழ்த்து சொல்லுவேன்
—என்னை
நாடி வந்த பக்தருக்கு நன்றி சொல்லுவேன்
சூழ வரும் துன்பம் அனைத்தும் ஓடச்செய்குவான்-என்னை
சூழ்ந்து வரும் புகழனைத்தும் சொந்தமாக்குவேன்

உனக்குச் சொந்தமாக்குவேன்
முருகா உனக்கேச் சொந்தமாக்குவேன்

ஆளவந்த பேர்களெல்லாம் நிலை நின்றதில்லையே
—என்றும் நீ
ஆட்சியாக சாட்சியாக புவியில் வாழுகின்றாயே
ஆளவைப்பதும் வீழவைப்பதும் உன்னருள் அல்லவா—சிலர்
ஆணவத்தால் அழிந்து போவது அவர்கள் ஆசையல்லவோ

ஞானம் வந்த பின்பு இந்த நாடு எதற்கு—என்னை நீ
ஆள வந்த பின்பு இந்த ஞாலம் எதற்கு
வீழ வைக்கும் மாயைக்கு உன் வேல் எமன் அல்லவோ
—உன்னடியில்
வீழ்ந்து விட்டால் யாருக்கும் மோட்சம் அல்லவோ!

முருகா என்றும் மோட்சம் அல்லவோ!

2

செவ்வேளின் திருவருளை நாடுங்களேன்—எங்கள்
சிவராஜனின் புகழ் பாடுங்களேன்
திண்டாடும் துன்பங்கள் ஓடுங்களேன்—எங்கள்
திருநாதன் திருப்புகழைக் கேளுங்களேன் (செவ்)

Koviloor Digital Library

அடியாரின் துயர்தீர்க்க கந்தன் வருவான்—மெய்
அடியாரின் புகழ்வளர்க்க தன்னைத் தருவான்
மிடியாவும் பொடியாக்க வேலை விடுத்தான்—அடியார்
மிடியாவும் பொடியாக்க (திருப்)புகழைத் தந்தான்! (செவ்)

திருப்போரூர் தன்னில் அவன் திகழ்கின்றவன்
திருப்புகழோடு உலகத்தை ஆள்கின்றவன்
திருவேரகத்தில் அவன் அருள்கின்றவன்
ஸ்ரீ அங்கத்தில் பள்ளி கொள்கின்றவன்—வள்ளி
ஸ்ரீ அங்கத்தில் பள்ளி கொள்கின்றவன்! —உண்மை
அடியார் அங்கங்களில் பள்ளி கொள்கின்றவன்!

நினைவெல்லாம் நினக்கென்று சொந்தமாக்கினேன் என்
நெஞ்சத்தை உனக்கென்று தஞ்சமாக்கினேன் (முருகா)
உறவெல்லாம் உனக்கென்ற உரிமையாக்கினேன்—என்
உடல் ஆவிபொருள் யாவும் பந்தமாக்கினேன் (செவ்)

3

இதய சுமை கனக்குதய்யா முருகா...
இதை எவரிடத்தில் எடுத்துரைப்பேன் தலைவா!
இமைக்கு முன்னே கோடி துன்பம் இறைவா—நீ கண்
இமைத்தால் பறந்து விடும் அழகா! (இதய)

கானகத்தில் வள்ளி போல
கம்பன் கண்ட சீதை போல
நானகத்தில் புலம்புகின்றேன் நாயகா—இங்கு
நாதியற்றுத் தவிக்கின்றேன் ஏனைய்யா இது ஏனைய்யா

வேதத்தின் நாயகன் நீ
வேடிச்சீ க்காவலன் நீ
பாவத்தில் பக்தர் துடிப்பதோ—இதைப்
பார்த்து நீ சும்மா இருப்பதோ

Koviloor Digital Library

நாதத்தின் பொருள் அல்லவோ நீ—அந்த
நால்வர்க்கும் தலைவ னல்லவோ நீ
ஞாலத்தின் குருவல்லவோ நீ
நாய்க்கும் குருவல்லவோ நீ—இந்த
சண்முகதாச சேய்க்கும் குருவல்லவோ நீ!

4

எட்டி உதைத்தாலும் கட்டி அணைத்தாலும்
எங்கு செல்வேன் நான் இந்த நாய் எங்கு செல்லும்
திட்டியே நான் விட்டாலும் எட்டியே சென்றாலும்
விட்டு நீ விடுவாயோ கெட்டு இனி விடுவேனோ
(எட்டி)

சிட்டுப் பறவை போல் சிறகடிக்க வைத்த நீ
பட்டுப் புழுப் போலே பதற நீ வைப்பதோ
கெட்ட கனவு போல் கெடுதிகள் ஒழிந்து
சுட்ட திருநீறு போல் சுகமாய் வாழ வைப்பாய்
(எட்டி)

இஷ்ட தெய்வமே என்னுயிர் நாயகமே
துஷ்ட கிரகம் என்ன செய்யும் துணையாய் நீ இருக்க
கஷ்ட காலம் கடுகளவும் அணுகாமல் உன்
இஷ்ட அடிமையை என்றும் நீ காத்திடுவாய் (எட்டி)

5

அடியார்க்கு வழி காட்டும் திருப்புகழே—என்
அண்ணலின் புகழ் போற்றும் அருட்புகழே
கடையார்க்கும் கடையானேன் கந்தவேளே (உந்தன்)
கடைக்கண் பார்வையிலே சொந்தமானேன்
(அடியார்)

போராட்ட விதி தீர்க்க போரூர் வந்தேன் (இறைவன்)
தேரோட்டம்தனைப் பார்க்க வேறூர் எதற்கு
பாராட்டி உனைப் போற்ற பாவலனுக்கு—அன்பு
தாலாட்டி எனை வளர்த்த தாயல்லவோ (அடியார்)

Koviloor Digital Library

யார் யாரோ வந்தார்கள் சதமானதோ பாட
யார் யாரோ வந்தார்கள் நிலையானதோ
யார் யாரோ வருவார்கள் போவார்கள் நிலையாகுமோ
யார் யாரோ வந்தாலும் சென்றாலும் முனியாகுமோ
அருணை முனியாகுமோ (அடியார்)

6

சிந்தையிலே இருப்பவனே—முன்
செய்தவினை தீர்ப்பவனே—அடியார்
முந்தை வினை ஒழிப்பவனே—எங்கள்
முருகனெனும் வேலவனே (சிந்தை)

விந்தையிலும் விந்தையாம் வேலவன் விளையாட்டு
சொந்தமும் பந்தமும் சுப்பிரமண்யன் திருப்பாட்டு
வந்ததும் சென்றதும் விதியின் விளையாட்டு இங்கே
வாழ்வதும் தாழ்வதும் உந்தனின் திருக்கூட்டு (சிந்தை)

எண்ணமெல்லாம் உனக்கே சொந்தமாக்கி—இசை
வண்ணமெல்லாம் உனக்கே பந்தமாக்கி
நெஞ்சமெல்லாம் உனக்கே உரித்தாக்கி—அடிமை
தஞ்சமென சரணடைந்தேன் இசை தமிழாக்கி (சிந்தை)

7

ராகமாலிகை ஸிந்து பைரவி

அடியார்க்கு வழிகாட்டும் அருளாலயம்—அன்பர்
மிடியாவும் பொடியாக்கும் குகனாலயம்
படியார்க்கும் படித்தார்க்கும் பண்பாலயம்—ஏழை
குடியாவும் வினையாடும் குணமாலயம். (அடியார்)

(ஹிந்தோளம்)

வருவோர்க்கும் போவோர்க்கும் நடுவாலயம்—நெறி
வழுவார்க்கு வரனளிக்கும் வடிவாலயம்
உருவாக்கும் புவியாவும் உனதோவியம்—அடியார்
உருவாக்கும் நூல் யாவும் கலைக் காவியம்

Koviloor Digital Library

(சுபந்து வராளி)

திருவாக்குத் திருப்புகழ் ஞானாலயம்—எவரையும்
திருவாக்கும் திருப்பாக்கள் ஞானோதயம்
கருவாக்கும் வினைபோக்கும் கடலாலயம்—பிறவி
கரை சேர்க்க கடைத்தேற கருணாலயம். (அடியார்)

(ரஞ்சனி)

எனைத்தூற்றும் வினை போக்கும் மறை நாயகம் குறிஞ்சி
மலைபோற்றும் நிறையோச்சும் விதி நாயகம்
உனைப் போற்ற அறிவேது அடியேனுக்கு உலகம்
உனைப் போற்ற குறைவேது திருவாலயம். (அடியார்)

8

கடந்த கால ஞானிகள்
காலம் உணர்ந்த யோகிகள்
நினைத்திடும் நினைவுகள்
நெஞ்சையள்ளும் உணர்வுகள் (கடந்த)

அலையிலாடும் வேலவன்
அருளில் வல்ல காவலன்
நிலையில்லாத வாழ்வினை
நெருங்கிப் பார்த்தால் லாபமோ
உள்ளம் உன்னைக் கண்டு—அதில்
ஒளியில் தான் உண்டு
உருகிடும் உணர்வுகள்
ஒன்றாய்ச் சேரும் கனவுகள் (கடந்த)

வினையில் வேகும் மார்ந்தர்கள்
விரும்பிச் செல்லும் போகங்கள்
சரியில்லாத பாதையில்
ஜனங்கள் விரும்பி போகுதே அம்-மம்-மோ

Koviloor Digital Library

சொன்னால் என்னைக் கண்டு அதில்
வெறுப்புத் தான் கொண்டு
வழுக்கிடும் கொள்கைகள்
வாழ்வில் என்றும் பதிவுகள் (கடந்த)

9

என் உள்ளம் தானறியும் தங்கமே தங்கம்
உன் உள்ளம் நான் அறிவேன் சிங்கமே சிங்கம்
நம் உள்ளம் யாரறிவார் நாயகா கந்தா
உன் உள்ளம் அடைவதற்கே ஒரு கோடி தவமிருந்தேன்.
(என் உள்ளம்)

எத்தனை பிறவிகள் நான் எடுத்துமே வந்தாலும்
அத்தனை பிறவியிலும் அடியேன் உளம் இருப்பாய்
பித்தனாய் உலகு என்னைப் பேசி இகழ்ந்தாலும்
சித்தனாய் செழித்திருப்பேன் செவ்வேள் அருளாலே
(என் உள்ளம்)

துன்பத்தில் துடித்து நான் துவண்டு புலம்பினாலும் பக்தி
இன்பத்தில் என்றும் நான் மிதந்திருப்பேனே
உன் பதம் அடைவதற்கே ஓய்வின்றி தவிக்கின்றேன்
என் விதத்தை என் சொல்லி எவரிடம் நான் அழுவேன்
(என் உள்ளம்)

10

அழைக்கின்ற அடியார்க்கு அன்புத் தாயானவன் அன்பால்
குழைகின்ற பேருக்கு உறவானவன்
இளைக்கின்ற பிழை நீக்கும் இன்ப இறையானவன்-நீதி
தழைக்கின்ற பழநியில் நின்றாடும் வேலானவன்
(அழைக்)

Koviloor Digital Library

இணையற்ற இன்னிசைத் திருப்புகழ் பித்தானவன்-பக்தர்
இனமுற்றும் கும்பிட எங்கும் சித்தானவன்
வினையற்ற வாழ்வு தரும் செந்தில் முத்தானவன்-முந்தை
வினைப்பற்று வீழ்ந்திட முக்திக்கு வித்தானவன்
(அழை)

காமமும் கோபமும் கயமைத் தோட்டத்தில் காயானவன்
அவனை
ஏமமும் சாமமும் போற்றிட இன்பச் சேயானவன் முருகன்
நாமங்கள் குன்றிட மனிதன் ஆசைப் பேயானவன்-அவன்
நாமத்தைப் போற்றிட நெஞ்சில் பூவானவன்
(அழை)

வருகின்ற துன்பத்தைத் தீர்க்கின்ற வளமானவன்-பாம்பன்
தருகின்ற பைந்தமிழில் மகிழ்கின்ற மதியானவன்
பெருகுகின்ற நீர் விழியில் பெருந்தகை குருவானவன்
அடியார்
உருகுகின்ற பாசத்தில் கலந்தாடும் ஒளியானவன்
(அழை)

11

(கெஜல்)

யாத்திரை பாதயாத்திரை புனித யாத்திரை
போரூர் நாடிப் புனித யாத்திரை

(பல்லவி)

கதிரவன் உதிக்க மறந்தாலும் கந்தா
கார்த்திகை நடக்க நாங்கள் மறந்ததில்லை
கதியிவன் கழலென்றே நம்பி வந்தோம் போரூர்
விதியென்றே தஞ்சமென்று சரணடைந்தோம்
(கதிரவன்)

Koviloor Digital Library

இரவென்றும் பகலென்றும் ஏதும் பாராமல்
உறவென்றும் பகையென்றும் ஏதும் கூறாமல்
மழையென்றும் வெயிலென்றும் மனம் நொந்து போகாமல்
விழையொன்றே பொருள் என ஓடி வந்தோம் உன்னை
நாடிவந்தோம் (கதிரவன்)

விதி என்ன செய்யும் வேல் ஒன்று இருக்க-தீய
சதி என்ன செய்யும் மயிலென்று சொல்ல-நல்ல
மதி தந்து விதி தந்து எமைக் காப்பாய்-போரூர்
பதி என்று நம்பி வந்தோம் மாணிக்க வேலே
(கதிரவன்)

நம்பி நடந்தவர் எவரும் தாழ்ந்ததில்லை
வெம்பி வறுமையில் இனி நாங்கள் வீழ்வதில்லை
கும்பிட்டு குழைந்திட்டு குமரனைப் பாடுவோம்
நம்பிட்டு வந்தவரை நாயகன் மறுப்பதில்லை
வெறுப்பதிலை (கதிரவன்)

12

ஆறுமுகம் திருப்புகழ் அழைக்கின்றது-அது
அடியவர் துயரறுக்க நினைக்கின்றது முருகா- (ஆறு)
ஏறு மயில் எந் தந்தை இருக்கின்றது-அது
ஏழையின் நெஞ்சினில் நிலைக்கின்றது முருகா- (ஆறு)
வீறு படு மாயையில் நான் வீழ்ந்திடவோ-அதை
விளையாட்டாய் நீ பார்த்து மகிழ்ந்திடவோ
யாரிட்ட சாபமோ நான் துடிக்குகின்றேன்-என்
போரிட்ட வாழ்க்கையை நீ புனிதம் செய்வாய் ஐயா!
(ஆறு)

கூப்பிட்ட குரலுக்கு ஓடிவந்து-என்
குறைகளைக் களைந்திட தேடி வந்து
யாண்டும் துன்பம் இல்லை அவனருளால்
யாவையும் பெற்றிடலாம் அவன் கழலால்
முருகா (ஆறு)

அழைக்கின்றது
நினைக்கின்றது
துடிக்கின்றது

Koviloor Digital Library

13

புழுவாகிப் பிறந்தாலும் புலையாகித் திரிந்தாலும்
புரியாத நிலை மாறுமோ-விதி
மாறாத நிலை மாறுமோ உன்னை
மறவாத நிலை ஏகுமோ முருகா! (புழு)

அழியாகி அழிந்தாலும் அறமாறிச் சென்றாலும்
சிலையாகி நீ நின்று சிரிப்பாகி
நான் தாழ்ந்து போவதோ
புரியாத நிலை மாறுமோ-முருகா
உன்னை மறவாத நிலையேகுமோ!- (புழு)

நாயென்றும் பேயென்றும்
நடுகாட்டில் விட்டு விட்டால்
பேயாக அலைந்து பிழையாகி நொந்து
நான் வீழ்ந்து போவதோ !

தாயாகி வந்து தமிழ் தன்னைத் தந்து
சேயாக நான் வாழ சீரான வழி தன்னைத் தாராய்
எனக்கு மேலான குருவாக வாராய் !- (புழு)

14

உனைத் தேடி நாளெல்லாம்
உலகெல்வாம் நான் அலைந்தேன்
எனைத்தேடி உணரும் போது
எனக்குள்ளே நீயிருந்தாய் முருகா...

வினை தேடி நாளெல்லாம்
வீணாக அழிய வேண்டாம்
பணந்தேடி பாவத்தில்
பாவியாய் விழ வேண்டாம்

குணம் நாடி உனைப் பாடி
குறையோடி நிறைவோடு
தினம் பாடி மகிழ் வோடு உன்னை மறவாது
தினம் பாடி நான் வாழ அருள்வாயே

Koviloor Digital Library

குறை கோடி செய்தாலும் குணமொன்றே எடுத்தாண்டாய்
வரை கோடு தாண்டியதால் வனமொன்றே சிறையானாள்
வரை கடந்த வாழ்வெல்லாம் வலை மீனாய் ஆகிவிடும்
நிறையடைந்த தாளினிலே சரணடைந்தேன் எனைக்
காப்பாய் முருகா

15

கோடிக் கரங்களிலே கொடுக்கும் கரம் எந்த கரம்
கொஞ்சும் தமிழ் ஏட்டினிலே குளிர்ந்த தமிழ் எந்த தமிழ்
தேடிச் செல்வோர் இதயமெல்லாம் திகழும் முகம் ஆறுமுகம்
தேவாதி ஞானியெல்லாம் தேடிச் செல்லும் ஞான மலை

இதய மலை மா மதியே குமரைய்யா
ஏழையின் குடிவாழும் ஞானய்யா ஐயா (இதய

அருள் மிகு சங்கமம் அருள் நெறி சங்கம்
அய்யா உமது மங்கள சிங்கங்களே (இதய)

கார்த்திகை நன்னாளில் போருடன் எந்நாளை
ஊருடன் நகையாட ஏனைய்யா (இதய)

பாடி நான் உயர்ந்தாலும் பாவலனை மறவேன்
தேடிய வினை தீர நான் வருவேன்

மங்குதல் நிலை மாறி மன்னனின் கழல் நாடி
எங்குமே உனை நாடிப் பாடுவேன் (இதய)

சித்தர் தலைவனை முக்திக் கடவுளை மறவேன் நான்
மறவேன்
பித்துக் கடலென சித்தம் உருகிட வருவேன் நான்
வருவேன்

அடியவர் திருவருளே
அறியவர் திருமகளே

T - 390
Koviloor Digital Library

கேட்டதெல்லாம் அது உனது புகழ் அது வீறு புகழ்
காண்பதெல்லாம் எனது மனம் உருகுது நெஞ்சம்

அருள் நதியே திருவருளே
திருபரனே சரவொளியே

உடலது உணர்வது ஒளிர்வது
வருவது அருள்வது தருவது மிளிர்வதை
மறவேன் நான் மறவேன்
சண்முகதாசன் வணங்கும் இதயமலை !

(முருகையா)

அன்பர்களின் கருத்துகளை ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்
வாழ்க நீடு! வளர்க நன்னெறி!

கோவிலூர் ஆதீனம்
2076
R65
கோவிலூர்-630 307

Koviloor Digital Library

Koviloor Digital Library



அருட்கவி அருள் வாக்கு சித்தர்

திருப்புகழடிமை சண்முகதாசன்

WRAPPER PRINTED AT ALANGAR PRESS. MADRAS-24.